கம்பன் கவி அமுதம்



சென்னைக் கம்பர் கழகம்

கம்பன் மலர்

(சென்னைக் கம்பர் கழக வெளியீடு)

கட்டுரையின் பெயர்	எழுதியவர்
1. முன்னுரை	மகாமகோபாத்தியாய பண்டித மணி மு. கதிரேசஞ் செட்டியார்
2. கம்பன்	கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை
3. கம்பர் காட்டும் ஒழுக்க நெறிகளிற் சில	நாவலர் பண்டித ந. மு. வேங்கட சாமி நாட்டார்
4. கம்பனும் தமிழும்	ராவ்சாஹேப் எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.
5. மாருதியின் சீரிய மாண்பு	ராவ்சாஹேப் மு. ராகவையங்கார்
6. இருவர் சாட்சி	ரா. பி. சேதுப் பிள்ளை பி. ஏ., பி. எல்.
7. நவரஸ நடனத்தில் கம்பன்	சுவாமி சுத்தானந்த பாரதியார்
8. ரம்பையா மேனகையா ?	டி. கே. சிதம்பரநாத முதலியார் பி.ஏ., பி.எல்.
9. கம்பர் அழகுக்கு அழகு கண்ட முறை	கோவை கிழார்
10. இராமாயணத்தின் இரு திருப்பு மையங்கள்	ஈ. த. இராஜேசுவரி எம். ஏ., எல். டி.
11. உயிர்நிலைப் பாட்டு	தெ. பொ. மீனாக்ஷிசுந்தரனார் எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல்.
12. அறிமுகம் செய்தல்	மு. அருணாசலம், எம், ஏ.
13. ராமாயணப் பெண்மையும் கம்பர் எடுப்பும்	மோ. ஸ்ரீ. செல்லம் பி. ஓ. எல்., எல். டி.
14. கம்பன் கலைக்கோயில்	தொ. மு. பாஸ்கரத் தொண்டமான்
15. கம்பனும் பாடபேதங்களும்	பி. ஸ்ரீ.
16. "அவன்".	கி. வா. ஜகந்நாதன்
17. நான் கண்ட கம்பன்	ரா. பா. மு. கனி, பி. ஏ.
18. கம்பன் திருநாள்	நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

295

K. Somasundaram

கம்பன் கவியமுதம்

தனித்தனி ஆசிரியர் எழுதிய

தமிழ்நாட்டுச் சிறுகதைத் தொகுதிகள்

1. மங்கையர்க்கரசியின் காதல்
2. நீலமணி
3. கன்யா குமாரி
4. சந்தனக் காவடி
5. சக்ரவாகம்
6. கனகாம்பரம்
7. தோட்டியை மணந்த அரச குமாரி
8. பவழ மாலை
9. வெண்தாமரை
10. அழகி
11. லக்ஷ்மீ கடாக்ஷம்
12. ஜடாதரன்
13. குழலோசை
14. வாடா விளக்கு
15. குழந்தையின் மனம்
16. பிள்ளை வரம்
17. தேவகி
18. சக்தி வேல்
19. மோகினி
20. போகும் வழியில்
21. வஸந்தா
22. ஆலமரத்துப் பிள்ளையார்
23. பட்டுப் புடைவை
24. பட்டாசுக் கட்டு
25. வைர மோலக்

ராஜன் எலக்ட்ரிக் பிரஸ், சென்னை.
Q. H. M. S. 109—April-46

கம்பன் கவியமுதம்

சென்னைக் கம்பர் கழக வெளியீடு

விற்பனை உரிமையாளர்:

அல்லயன்ஸ் கம்பெனி

மயிலாப்பூர் :: சென்னை

மலிவுப் பதிப்பு ரு. 2-8-0
உயரிய பதிப்பு ரு. 3-0-0

பரிசுபெற்ற கட்டுரை. கட்டுரையைப் படித்து முடிவைத் தெரிவித்த அன்பர்களுக்கும் கழகத்தின் நன்றியறிவு உரியது.

"கம்பன் கவியமுதம்" இப்போதேனும் வெளியாவதற்கு முக்கிய காரணம் மயிலாப்பூர் அல்லயன்ஸ் கம்பெனியாராகும். அதன் உரிமையாளராகிய ஸ்ரீ குப்புஸ்வாமி ஐயரவர்கள் இந்தத் தொகுதியை வெளியிடுவதற்குரிய எல்லாப் பொறுப்புக்களையும் ஏற்றுக்கொண்டார். அவருக்குக் கழகம் என்றும் கடப்பாடுடையது.

இத்தகைய வெளியீடுகளை ஆதரிக்கும் தமிழ் நாட்டினருடைய உத்ஸாகம் பாராட்டுதற்குரியது. இலக்கியச் சுவை நுகரும் மனப்பான்மை இப்பொழுதுதான் தமிழர் உள்ளத்தில் உதயமாகியிருக்கிறது. அந்த இயல்பை மேலும் மேலும் வளர்ப்பதற்கு இதைப் போன்ற வெளியீடுகள் துணையாகும்.

கம்பன் புகழ் வாழ்க!

10-4-46
ஸ்ரீராம நவமி

கி. வா. ஜகந்நாதன்.
க. சோமசுந்தரம்.

கம்பன் கவியமுதம்

1. கம்பர்

[எம். ராதாகிருஷ்ண பிள்ளை பி.ஏ., பி. எல்.]

உலக மகா காவியங்களுள் இராமாயணம் போல் எல்லோருடைய உள்ளத்தையும் கொள்ளை கொள்ளும் காவியம் வேறு ஒன்றுமில்லை. இதற்கு முக்கிய காரணம் ஒருபால் காவியத் தலைவனும், மற்றொருபால் அக்காவியம் இயற்றிய புலவரும் ஆவர். மக்களுக்கு இருக்கவேண்டும் எல்லா நலன்களும், பெருமைகளும் திரண்ட ஒருருவமே காவியத் தலைவனாகிய இராமபிரான். அவனிடம் மனிதத் தன்மை மட்டுமன்றித் தெய்வத்தன்மையும் உள்ளது. காவியம் என்றும் அழியாது நிலைபெறுவதற்கு இராமன் எங்ஙனம் இன்றியமையாதவனோ அங்ஙனமே வால்மீகியாரும் இன்றியமையாதவர் ஆவார். வடமொழிப் புலவர்களுள் மேம்பட்ட வால்மீகியார் எல்லோருடைய உள்ளத்தையும் செவியையும் எக்காலத்தும் கொள்ளை கொள்ளும்படி எளிய இனிய கம்பீரமான நடையில் இராம கதையைப் பொறித்துள்ளார். இக்காவியம் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, பக்தி சிரத்தையோடு பாராயணம் செய்யப்பட்டு வருகிறது. துளசிதாசரும் கம்பரும் வட

மொழி இராமாயணத்தை மொழிபெயர்க்குங்கால் பிற நூல்களில் காணாத பல புதுமையான கருத்துக்களைக் காவியத்துள் புகுத்தியிருக்கின்றார். இவருடைய மொழிபெயர்ப்பு "மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல்" உடைய வழி நூலாகத் தோன்றாமல் முதல் நூலாகிய கலையோவியமாகவே திகழ்கின்றது. வால்மீகியார் ஒரு முனிவர். இயற்கைக் காட்சிகள் நிறைந்த காடுகளில் திளைந்தவர். எனவே இயற்கைப் பொருள்கள், மலைகள், ஆறுகள், வனப்பு மிக்க இடங்கள் ஆகியவற்றைப் பற்றிய அவருடைய வருணனைகள் மிகவும் பாராட்டற்குரியன. கம்பர், நாட்டில் வளர்ந்தவர்; எனவே நாடுகளைப் பற்றியும் அவற்றின் ஆட்சியைப் பற்றியும் அவற்றில் வாழ்ந்த மக்களின் இன்ப வாழ்க்கையைப் பற்றியும் வருணிப்பதில் அவர் ஒப்புயர்வற்றவரானார்.

தமிழ் நூல்களுள் கம்பராமாயணம் தலை சிறந்து விளங்குதலால் அதன் ஆசிரியருக்குக் கவிச்சக்கரவர்த்தி என்ற சிறந்த பட்டப்பெயர் ஏற்படலாயிற்று. திருவள்ளுவர், திருத்தக்கதேவர், இளங்கோவடிகள் போன்ற நூலாசிரியர்கள் இயற்றிய நூல்களால் தமிழ் மொழி வளமும் பெருமையும் அடைந்தது. அது பெருமையின் உச்சியை எட்டியது கம்பராமாயணம் பாடப்பட்ட பிறகே ஆம். காவியப் பண்பிலும் கவிதைச் சிறப்பிலும் கம்பராமாயணம் ஈடு எடுப்பு அற்ற ஒரு பெரு நூலாகும். பல்வேறு மொழிகளின் காவியங்களை எல்லாம் பயின்ற காலஞ்சென்ற வ. வே. சு. ஐயர் அவர்கள் அவற்றைச் சீர் தூக்கிப் பார்த்துக் கம்பராமாயணம் தலைசிறந்த காவியங்களுள் ஒன்றாக வைத்து எண்ணும் மதிப்புடையது என்ற முடிவிற்கு வந்திருக்கிறார்.

கம்பர் காலத்தில், இராம கதை மக்களெல்லாரிடையிலும் பெரிதும் வழங்கி வந்தது. வால்மீகி ராமாயணம் வடமொழியில் இயன்றதாதலால் அதைத் தென்னிந்தியாவில் ஒரு சிலரே அறிந்திருக்க முடியும். தொல்காப்பியம் போன்ற நூல்களின் உரைகளில் வரும் எடுத்துக் காட்டுகளால் கம்பர் காலத்துக்கு முன்பே, பல்வேறு ஆசிரியர்கள் இராமாயணத்தைத் தமிழில் இயற்றியுள்ளார்கள் என்பது வெளிப்படை. ஆனால் அவைகள்

முற்றும் கிடைக்கவில்லை. இங்கொன்றும் அங்கொன்று மாகச் சில பாடல்களே கிடைக்கின்றன. கம்பர் காலத்தி லேயே அந்த நூல்களெல்லாம் மறைந்துபோயின. கம்பர் ஓர் இராம பக்தர். ஆழ்வார்களின் அடித்தொண்டர். இராமாயணத்தைத் தமிழில் இயற்றவேண்டும் என்று அவருடைய உள்ளம் நெடுநாட்களாக அவரைத் தூண்டி வந்தது. தமிழ் மக்களும் இராமாயணத்தைத் தமிழில் படித்து இன்புற விரும்பினர். எனவே கம்பர் தம்முடைய உள்ளத்தையும் பிறருடைய கருத்தையும் இன்புறுத்த வேண்டி இராமாயணத்தைத் தமிழில் பாடினார். தம்மு டைய நூலுக்கு ஆதி கவியான வால்மீகியார் இயற்றிய இராமாயணமே முதல் நூலென்று கம்பர் உடன்படுகிறார். ஆனால் முதல் நூற் கருத்தோடு இன்றியமையாத தம்மு டைய தமிழ்நாட்டு நாகரிகமும் பிறவும் கலந்தும், வேண் டாதனவற்றை நீக்கியும் செப்பம் செய்து கம்பர் காவியம் இயற்றியது அவருடைய பேரறிவை உள்ளங்கை நெல்லிக் கனிபோல் உணர்த்தி நிற்கின்றது. இவ்வாறு கூட்டியும், குறைத்தும் திருத்தி அமைத்தது அந்நூலை ஒரு சிறந்த முதல் நூலாகவே செய்துவிட்டது.

முதல் நூலிலிருந்து மாறுபடும் இடங்களிலெல்லாம் அவர் முதல் நூலிலுள்ள கதையிலிருந்து மாறுபடவில்லை என்பதைப் படிப்போர் அறியுமாறு மிகவும் விழிப்போடு நூலை இயற்றி இருக்கிறார். என்றாலும் புதுக் கருத்துக்களை யும் கற்பனைகளையும் மிக்க துணிவுடன் தம் நூலில் ஆண் டுள்ளார். கம்பராமர் வால்மீகி ராமரைவிட வேறுபட்ட வர். வால்மீகிராமர் சர்வ லக்ஷண சம்பன்னரான ஒரு தலைமகனார். கம்பராமர் தெய்விகமும் நிறைந்த ஒருவர். கம்பருக்கு அகலிகையும் மாசிலாக் கற்புடையவள். கும்ப கருணன் போன்ற அரக்கர்களும் மக்கள் தன்மை யுடையவர்களாகக் கம்பர் நமக்குச் சித்திரித்துக் காட்டு கிறார். அவர்களுங்கூட நம்முடைய பிரிவிற்குப் பாராட் டிற்கும் உரிமையுடையவர்களாகின்றனர். விபீடணன் அவர் கருத்திற்குத் தன்னலமுடையவனாகத் தோன்ற வில்லை; அறவேட்கையுடையவனாகத் தோன்றுகிறான். சுயம் வர மணத்தை அறியாதவர்களான தமிழர் வழக்கத்திற்கு ஏற்ப, இராமனையும் சீதையையும் சுயம்வரத்திற்கு

முன்பே, ஒருவரை யொருவர் காணுமாறு கம்பர் செய்திருர். யுத்த காண்டத்தில் வரும் மாயா ஜனகப் படலமும் இரணியன் வதைப் படலமும் கம்பருடைய நவினப் படைப்புகள்; முதல் நூலில் காணப்படாதவை. அவைகள் கம்பராமாயணத்தில் சுவையுடைய சிறந்த பகுதிகளாக யாவராலும் பாராட்டப் பெறுகின்றன.

கம்பரைப் பற்றி வழங்கும் வரலாறுகளுள் பெரும்பான்மையானவை பொய் வரலாறுகளே. அவை முரண்பட்டனவாகவும் பொருத்தமற்றனவாகவும் உள்ளன. அவருடைய வாழ்க்கையின் முற்பகுதியைப் பற்றிய உண்மை வரலாறு அறியவே முடியாததாக உள்ளது. அவர் உவச்ச மரபினைச் சேர்ந்தவரென்றும் காளிகாதேவியிடமிருந்து ஆசுகவி பாடும் பேரறிவு பெற்றவரென்றும் வழங்குவர். அவர் வறியவர். அங்ஙனம்இருந்தும் அவருடைய பேரறிவு அவரை யாவரும் அறிந்து போற்றுமாறு செய்துவிட்டது. திருவெண்ணெய் நல்லூர்ப் பெருஞ் செல்வரான சடையப்ப வள்ளல் அவரை அன்போடும் ஆதரவோடும் காப்பாற்றிவந்தார். அக்காலத்தில் கம்பர் தமிழில் இருந்த நூல்களையெல்லாம் நன்கு பயின்று தெளிவு பெற்ருர். ஐயந்திரிபறக் கற்ற நூல்களுள் தலைசிறந்ததான திருக்குறளுக்கு வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம், அவர் விரிவுரை நிகழ்த்தி இருக்கிருர். இங்ஙனமே, பிற நூல்களுக்கும் அவர் உரை கண்டிருக்கிருர். அவை எல்லாம் பல பல பாடல்களாகக் கம்பராமாயணத்தில் இடம் பெற்றுத் திகழ்கின்றன. சிந்தாமணி ஆசிரியராகிய திருத்தக்க தேவர், கம்பர் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தவர். ஆழ்வார்களுடைய நாலாயிரத் திவ்ய பிரபந்தங்கள் அவரைத் தம் வசப்படுத்திவிட்டன.

ஆழ்வார்களுள் நம்மாழ்வாரிடம் கம்பருக்குத் தனிப்பட்ட பயபக்தி உண்டு. அவர்மீது சடகோபரந்தாதி என்ற ஒரு பிரபந்தம் கம்பரால் பாடப்பெற்றுள்ளது. கம்பர் வடமொழியையும் நன்கு பயின்றவர். கல்வி அறிவுள்ள ஒரு சிலரிடத்து மாத்திரம் அடைபட்டுக் கிடவாது எல்லோரிடத்திலும் சென்று நிலவுமாறு எளிய நடையில் இயற்றப்பட்டுள்ளது அவர் நூலுக்குள்ள ஒரு சிறந்த பண்பாம். அவர் நூலை அறிவதற்கு விரிவுரைகள்

வேண்டா. தாம் பாடலை இயற்றுதற்குக் கம்பர் சொற்களுக்காகத் தயங்கி நின்றாரில்லை. "யானே முன்; யானே முன்" என்று ஒவ்வொரு சொல்லும் ஏற்ற இடத்தில் வந்து பொருந்தி அவருடைய கருத்தை மிக எளிதில் நிறைவேற்றியது. சேக்ஸ்பியரைப் போன்று கம்பரும் சொற்களைக்கொண்டு விநோதம் செய்யும் ஓர் இந்திர ஜாலக்காரர். கம்பராமாயணம் கி. பி. 887-இல் ஸ்ரீரங்கம் கோயிலில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. கீர்த்தி மிக்க வைணவ ஆசாரியர் நாதமுனிகள் என்பவர் அதுபோழ்து தலைமை பூண்டார். கம்பர் தாம் பாடிய பாடல்களைப் படித்து விரிவுரை நிகழ்த்தியபோது நாட்டின் எல்லாப் பகுதிகளிலுமிருந்து ஆயிரக்கணக்கான தமிழ்ப் புலவர்கள் வந்திருந்து சித்திரப்பாவை போல் அவருரையைக் கவனித்துக் கேட்கலாயினர். அதுபோழ்து நிகழ்ந்ததாக ஒரு வரலாறு வழங்குவதுண்டு. இரணியன் வதைப் படலத்திலிருந்து,

"*திசைதிறந் தண்டங் கீறிச் சிரித்தது செங்கட் சீயம்*"

என்ற அடியைக் கம்பர் வாசித்தபோது கோயில் கோபுரத்தின் மேலிருந்த நரசிம்ம சுவாமி உருவம் அம்மண்டபம் முழுவதும் எதிரொலி உண்டாகுமாறு சிரித்ததோடு நில்லாமல் கம்பருடைய பேரறிவுடைமையைப் போற்றுவதாகத் தன் தலையையும் ஆட்டியது என்பர். இரணிய வதைப் படலம் வால்மீகி ராமாயணத்தில் இல்லை. கதைக்கும் அதற்கும் ஒரு தொடர்பும் இல்லை. கதையின் தொடர்ச்சிக்கு யாதோர் ஊறுபாடும் நேராதவாறு அதனை அறவே நீக்கிவிடலாம். கம்பர் விபீஷணனைக் கொண்டு இக்கதையை இராவணனுக்குக் கூறுமாறு செய்கிறார். கம்பராமாயணமாகிய ஒரு நவரத்தின மாலையில் முடிமணியாக விளங்குவது இப்படலம். கம்பராமாயணத்தில் துறை போயவரெல்லோரும் இப் படலத்தில், கம்பர் தம் அறிவுத்திறன் முழுவதையும் கையாண்டிருக்கிறார் என்று ஒருமனதாகத் தம் ஆராய்ச்சியின் முடிவாகக் கூறுகின்றனர். கம்பர் நரசிம்ம சுவாமி உபாசகர். கம்பத்திலிருந்து தோன்றியதால் நரசிம்ம சுவாமிக்குக் கம்பர் என்ற பெயர் பொருந்துவதாம். உபாசனையின் சிறப்பால் நரசிம்ம சுவாமியின் பெயரையிட்டுக் கவிச் சக்கரவர்த்தி

யார் கம்பர் என்று பெயர் வழங்கப் பெற்றார். அந்த உபாசனையே யுத்த காண்டத்தில் இரணியன் வதைப் படலத்தை நிலை பெறுத்தியது என்பது இப்போது நன்கு விளங்கும்.

நாதமுனிகள் கம்பராமாயணத்தைத் திவ்யப் பிரபந்தங்களோடு ஒன்று சேர்க்க விழைந்தார். கடவுள் சம்பந்தமான நூலில் நரஸ்துதி இருப்பது பொருந்தாததால் சடையப்ப வள்ளலைப்பற்றிய பாடற் பகுதிகளை நீக்கிவிடுமாறு கம்பரிடம் தெரிவித்தார். நன்றி மறவாக் கம்பருக்கு இது முடியாத காரியம். எனவே நாதமுனிகள் விருப்பத்திற்கு அவர் இணங்கவில்லை. ஆகவே நாதமுனிகளும் கம்பராமாயணத்தைப் பிரபந்தங்களோடு சேர்க்க முடியாது போயிற்று. எனினும் திவ்யப் பிரபந்தங்களுள் இரண்டு பாடல்கள் கம்பர் பாடல்களாக உள்ளன. விரிவுரையாசிரியர்களின் சக்கரவர்த்தியாகிய பெரியவாச்சான் பிள்ளை தம் உரையில் கம்பராமாயணத்திலிருந்து பல இடங்களில் மேற்கோள் காட்டுகிறார். அவர் கம்ப ராமாயணத்தைக் கம்ப நாடகம் என்று குறிக்கிறார். கம்பர் பல இடங்களில் மகா விஷ்ணுவின் பரத்துவத்தை நிலை நாட்டுகிறார்.

"நீணெறி, சென்று மீளாக் குறிசேரச் சேர்த்திடு
தன்திருநாமத்தைத் தானும் சாத்தியே"

என்ற அடிகளால் ஸ்ரீ வைணவர்களின் திருவெண்காப் பணியும் வழக்கத்தை அவர் குறிப்பிடுகிறார். நாகபாசப் படலத்தில் கம்பர் பகவானைத் துதித்திருப்பது ஆழ்வார்களுடைய துதியினும் சாலச் சிறந்து விளங்குகின்றது. தாம் ஒரு வைதிக வைணவராயிருந்தும், வைணவர்க்கும் சைவர்கட்கும் நேரும் சமயப் பூசல்களைக் குறித்துக் கம்பர் வெறுப்புக் கொண்டவர்.

"எங்கள் சமயமே சிறந்த சமயம்" என்று வாய்ப் பறை அறைந்து திரியும் சமய வெறியர்களுக்கு அவர் சிறிதும் ஆதரவு காட்டுவதில்லை. உலகத்தில் சமய குரவர்களான பெரியார்கள் வேறு வேறானவர்கள் ஆயினும், அவர்கள் கருத்துக்கள் வேறுபட்டவை எனினும், அவர்கள் செய்துவந்த பிரசாரங்கள் மாறுபட்டன எனி

னும், பேரின்ப வெள்ளத்தின் பிறப்பிடமாகிய வீடு குறித்துச் செல்வதில் அவர்களெல்லோரும் ஒன்றுபட்டவர்கள் என்று கம்பர் நமக்கு உணர்த்துகிறார். தங்களுடைய கருத்து வேற்றுமைகளை விடுத்துச் சமயப் பிரசாரகர்கள் யாவரும் ஒரு பொதுச் சமயத்தையே பிரசாரம் செய்ய வேண்டும் என்பது கம்பர் விருப்பம். கம்ப ராமாயணத்தின் புகழ் வட இந்தியாவிலும் செல்லலாயிற்று, வாரணாசியிலுள்ள காசிமடத்தில் குமரகுருபர சுவாமிகள் கம்ப ராமாயண விரிவுரைகள் ஹிந்தி மொழியில் நிகழ்த்தினாரென்றும் அவைகள் துளசிதாசரை இராமாயணத்தில் மிகவும் ஈடுபடும்படி செய்துவிட்டன என்றும் கூறுவர். கம்பருக்கும் துளசிதாஸருக்கும் உள்ள ஒற்றுமைகளை ஆராய்ச்சியாளர் எடுத்துக் காட்டுகின்றனர்.

கம்பர் தம்முடைய மனக்கண்ணுக்குமுன் குறை சிறிதுமில்லாத திருந்திய நாட்டையும், அரசையும், அரசாங்கத்தையும் அமைத்து அவ்வித நாடும் அரசும் அரசாங்கமும் நடைமுறையில் இருக்கமுடியும் என்ற எண்ணத்தில் அழுந்தி நின்றவர். கல்வி கேள்வி அறிவு ஒழுக்கங்களில் சான்றவர். தீர்க்கதரிசியாய் வாழ்ந்து வந்தவர். அவர் கோசல நாட்டைப்பற்றி விவரித்துக் கூறுங்கால் தம் மனக் கண்ணிற்கு முன்பு காவிரியையும் அது பாயும் சோழ நாட்டையும் காணுகின்றார். மக்களுடைய அறவாழ்க்கை அவர்களுடைய சுவையுணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுகிறது. கோசலநாட்டு அழகிய நங்கையர்களெல்லாம் எல்லாக் கலைகளிலும் துறை போயவர்களாக உணர்த்தப் பெறுகின்றனர். அயோத்திமா நகரத்தில் இரத்தலும் ஒறுத்தலும் இல்லை. ஆண்டுக் குற்றம் ஒன்றுமே நிகழ்வதில்லையாகையால் தண்டித்தலுக்கும் இடம் ஏற்படுவதில்லை. இரப்போர் இன்மையால் ஈவோர் இல்லை.

"வண்மை யில்லையோர் வறுமை யின்மையால்" என்று கம்பர் கூறுகின்றார். ஆண்டு எல்லாரும் எல்லாப் பொருளும் இயற்கையாகவே பெற்றுள்ளனர். எனவே ஒன்றுமில்லாதவர் ஒருவருமில்லை. இல்லாதவர் என்ற சொல்லே இல்லையாகையால், உடையார்கள் என்ற சொல் நிகழ்வதற்கும் இடமில்லை.

"எல்லாரும் எல்லாப்பெருஞ் செல்வமு மெய்த லாலே
இல்லாரும் இல்லை, உடையார்களு மில்லை மாதோ"

என்ற கம்பர் வாக்கால் ஒவ்வொருவரும் ஒரே மாதிரி எல்லாவற்றையும் பெற்றுள்ளார் என்பது தெளிவாகின்றது. இதனுல் இன்று ருஷியாவில் நிலவும் பொதுவுரிமைப் பண்பிற்குக் கம்பர் அடிகோலியவர் அல்லது வழி காட்டியாய் நின்றவர் என்று சொல்லலாம். ஆனுல் அவருடைய சமவுரிமைப் பண்பு பகைமையிலோ பலாத்காரத்திலோ நிலை பெருமல் தூய சகோதரப்பான்மை ஆகிய அறவுணர்ச்சியில் நிலைபெற்றது. அயோத்தியில் யாவரும் கல்வியறிவு உடையவர்களாகவே இருந்தபடியால் ஒருவராவது அறிவில்லாதவரென்று சொல்வதற்கில்லை. அறிவில்லாதவரே இல்லையாகையால் அறிவுடையார் என்று வழங்குதற்கும் இடமில்லை. அறிவுடையார் அறிவில்லார் என்ற பேச்செல்லாம் ஒன்றையொன்று பற்றிக் கொண்டு நிகழும் பேச்சு. ஆதலால் அறிவிலார் இல்லாத போது அறிவுடையாரும் இல்லை என்று கம்பர் கூறுவது நுட்பமாக அறிந்து இன்புறத்தக்கதொன்று. கம்பர் நம்முடைய சமூகத்தைக் கேவலம் பொருளில் மாத்திரமன்றி கல்வி வாய்மை ஆகிய இவற்றிலும் சமவுரிமைப் பண்பைக் கொண்டு எழுப்புகிருர்.

இன்றைய உலகில் அரசுகளும் அரசாங்கங்களும் ஏதோ ஒருவகையான பலாத்காரத்தைத் துணையாகக் கொண்டு தம்முடைய அதிகாரத்தால் நாடுகளை ஆளுகின்றன. ஆனுல் கம்பர் கருத்துப்படி, அரசுகள் ஆளுவதற்காக ஏற்பட்டனவல்ல. குடிகளுக்குத் தொண்டு புரியவே ஏற்பட்டன. அவைகள் யாவருக்கும் தொண்டு புரிவன. ஆதலால் அவற்றினிடத்தில் குடிகளுக்குப் பயபக்தியும் பணிவும் உண்டாகின்றன.

"என் கடன் பணிசெய்து கிடப்பதே; அன்பே கடவுள்" என்பன அரசுகள் மேற்கொள்ளும் பொன்மொழிகள். ஒரு மைந்தன் தன்னுடைய பெற்றோர்களுக்குப் பணி புரிதல் போலவும், ஒரு தாய் தன் குழந்தையைக் காப்பது போலவும், அறிவு கல்விக்குத் துணை நிற்பது போலவும், ஓர் அரசன் குடிகளுக்குப் பணிபுரிந்தும் காத்தும் துணை

நின்றும் நாட்டை ஆளவேண்டும். குடிகளுடைய உரிமைக்கும் அரசர்களுடைய உரிமைக்கும் முரண்பாடு நிகழ்தலாகாது. அரசன் ஒவ்வோர் உயிரையும் தன்னுயிர்போல் பாவித்தல் வேண்டும். அரசன் உடலாகக் குடிமக்களெல்லாம் அவனுடலில் அமைதியுடன் வாழ்தல் வேண்டும். இவையெல்லாம் இலக்கணங்களால் நிறைவுடைய ஓர் அரசனின் இயல்புகள் என்பது கம்பருடைய கருத்து என்று சுருங்கக் கூறலாம்.

என்றும் அழிதலில்லாத கம்பருடைய நூலாகிய கம்பராமாயணம் யாவர் எம் முயற்சி கொண்டு அழிக்க விரும்பினும் அஃது அழியவே அழியாது. 'அதனை அழித்துவிடுவேன்' என்று பேசும் பேச்செல்லாம் உழைப்பையே ஒன்றும் அறியாத சோம்பேறிகள் பேசும் பேச்சாகும். கம்பர் தம்முடைய நூலில் ஆரியர் உயர்வை நிலை நாட்டி இருக்கின்றார் என்று சிலர் கூறுவது தவறு; பொருந்தாது; மனத்தைப் புண்படுத்துவது ஆகும். கம்பர் இராம கதையைத் துணையாகக்கொண்டு தம்முடைய பேரறிவின் பெருமையைப் புலப்படுத்தியுள்ளார் எனவே, அவர் நூலைச்சிதைக்கவோ அழிக்கவோ செய்ய முற்படாது கலைக்கண் கொண்டு நோக்கி, கலையழகில் ஈடுபட்டு, கலையை ஓதுதல் கலையை உணர்தற்கே என்று அதனைப் பாராட்டுதல் நம் கடமையாகும்.

2. கம்பர் கடவுட் கொள்கை

[ராவ்சாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G. B. V. C.]

கடவுள் வாழ்த்து

உலகம் யாவையுந் தாமுள ஆக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே.

கொண்டுகூட்டு*: உலகம் யாவையும் தாமும் உள ஆக்கலும் நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா(த) அலகிலா(த) விளையாட்டு(ஆக) உடையாரவர் தலைவர். அன்னவர்க்கே நாங்கள் சரணம்.

பொருள்: நாம் வாழும் பூமியை உள்ளிட்டதும் சூரியனை நடுவாக உடையதுமான அண்டத்தையும், அது போலவே மற்றைய எல்லா அண்டங்களையும் தோன்றச் செய்தலும், தோன்றியவைகளை நிலைக்கச் செய்தலும், நிலைத்தவைகளை ஒடுங்கச் செய்தலும், ஓயாத அளவில்லாத விளையாட்டாக உடையவரே, எல்லா உலகங்களுக்கும் அவைகளில் உள்ள உயிர்களுக்கும் முதல்வராவர். அவருக்கே நாம் அடைக்கலம்.

'யாவை தாமும்' எனக் கூட்டித் 'தாம்' என்பதைப் பகுதிப் பொருள் விகுதியாக்கிப் பொருள் கூறப்பட்டது. 'தாம்' என்பதற்குத் 'தாமே' (அசகாய கர்த்தாவாய், வேறு துணை வேண்டாராய்) என்று பொருள் கூறலும் பொருந்தும். அசகாய சூரன் என்பதைக் கம்பர் மொழி பெயர்த்துக் 'கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவன்' என வாலி வதைப் படலத்தில் அழகாகக் கூறியிருப்பதை நோக்குக.

உள ஆக்கல் - உள்ளன ஆகச் செய்தல்; படைத்தல். நினைவுறுத்தல் நினைவுறச் செய்தலெனவும், பயமுறுத்தல் பயமுறச் செய்தலெனவும் பொருள்படல் போல, 'நிலை பெறுத்தல்' நிலைபெறச் செய்தல் (-காத்தல்) என்று

---

*கொண்டுகூட்டு - அந்வயம்; உரைமுறை (Prose order)

பொருள்பட நின்றது. 'ஜீவேச்வர ஜகத்' என வைணவரும், 'பசு பதி பாசம்' எனச் சைவரும், உயிர் ஈசுரன் உலகம் என்னும் முப்பொருள்களும் சிருட்டிக்கப்படாமல் என்றும் உள்ளன என்னும் கொள்கையுடையோராதலால், 'உலகம் உள ஆக்கல்' என்றது சூக்கும நிலையிலிருந்த உலகத்தைத் தூல நிலையை அடையச் செய்தலெனவும், 'நீக்கலும்' என்றது திரும்பச் சூக்கும நிலையை அடையச் செய்தலெனவும் கொள்க. இது, 'உள்ளது போகாது, இல்லது வாராது' என்னும் சற்காரிய வாதம்*; சூனிய வாதத்துக்கு மறுதலை.

நீங்கலா - இடையறாத. அலகிலா - அளவில்லாத. நீங்கலா அலகிலா விளையாட்டுடையார் - (சிருட்டியாதி முத்தொழில்களையும்) இடையறாமலும் அளவில்லாமலும் செய்யும் விளையாட்டாக உடையவர். 'நீங்கலா அலகிலா விளையாட்டுடையார்' என்பதற்கு, (மேற்கூறிய முத்தொழில்கள்) நீங்கலாக அளவில்லாத (வேறு) விளையாட்டுக்களை உடையவரென்றும் பொருள் கூறுவர். அவர், 'ஆக்கலும் நிலைபெறுத்தலும் நீக்கலும்' என விளையாட்டு மூன்று என்றதனால், அவைகளையே அளவிலா விளையாட்டு என்று கூறல் பொருந்ாது என்பர். ஆக்கல், நிலைபெறுத்தல், நீக்கல் என்றதனால் விளையாட்டுக்கள் மூன்று வகை என்றும் ஒவ்வொன்றும் அளவில்லாதது என்றும் கொள்ளலாம்.

விளையாட்டு உடையார் - விளையாட்டாக உடையவர். 'ஆக' தொக்கு நின்றது. 'நிச்சயமாக முறுகி' என்பது, 'நிச்சயம் முறுகி' எனக் காஞ்சிப் புராணத்தில் நகரப் படலத்து முதற் பாட்டில் வருதல் காண்க.

இறைவனுக்குச் சிருட்டியாதித் தொழில்கள், 'இஃது இவ்வாறாக' என்ற சங்கற்ப மாத்திரையானே நிகழ்வனவாம். அத்தொழில்களை விளையாட்டு என்றார். 'விளையாட்டென்றது, ஐங்கலப் பாரம் பொறுத்தல் சாத்தனுக்கு

* சற்காரிய வாதம்-முன்பில்லாதது இடையே தோன்றாது என்றும், காரியம் அழிந்த காலத்தும் காரிய வடிவம் காரணத்தில் அழியாது சூக்குமமாய் நிலைத்திருக்குமென்றும் வாதித்து நிலைநாட்டுவது.

விளையாட்டு என்பது போல, அத்துணை எளிதிற் செய்யும் ஆற்றலுடைமை பற்றியே.'* அன்றிச் சிறுவர் தட்டாடல், பெரியர் சீட்டாடல்போன்றதன்று; வீண் தொழிலுமன்று. ஆன்மாக்கள் தனு கரண புவன போகங்களைப் பெற்று அவற்றைக் கொண்டு அடையும் அநுபவத்தால் படிப்படியாகப் பக்குவமடைந்து முத்தி பெறும் பயன் கருதிச் செய்யப் படுவதாம்.

'விளையாட்டுடையாரவர் தலைவர்', 'விளையாட்டுடையாரேவர் தலைவர்' என, இரண்டு பாடங்கள் காணப்படுகின்றன. 'விளையாட்டுடையாரவர் தலைவர்' என்ற பாடங்கொண்டார், விளையாட்டுடையாராகிய அவர் தலைவர் என, 'ஆகிய' என்னும் சொல் வருவித்துப்பொருள் உரைத்தார். 'விளையாட்டுடையா ரேவர் தலைவர்' என்ற பாடங்கொண்டார், விளையாட்டுடையார் எவரோ அவரே தலைவர் என, 'அவர்' என்ற சொல் வருவித்துப் பொருள் உரைத்தார். 'விளையாட்டுடையாரவர்' என்பதில் உள்ள 'அவர்' என்பதைச் 'சிவனவனென் சிந்தையு ணின்ற வதனால்'† என்பதில் உள்ள 'அவன்' போலப் பகுதிப்பொருள் விகுதியாகக் கொண்டு, 'விளையாட்டுடையாரவர்' என்பதற்கு இங்கே ஒரு சொல்லும் வருவியாமல் பொருள் கூறப்பட்டது. ஆரணிய காண்டக் காப்பில் 'ஆதிதேவரவர்' என்பதிலுள்ள 'அவர்', இந்த 'அவர்' போன்றது.

'அவர்' என்பதனால் கம்பர் கடவுளை அவர்க்குரிய இயற்கைப் பெயர்ச் சொல்லாலன்றிச் சுட்டுப் பெயர்ச் சொல்லாற் குறித்தாரெனவும் கொள்ளலாம். குற்றாலத் தலபுராணத்தில் 'ஆலத்தை யவர்க்கமு தாக்கினனை' என்ற பாட்டில் 'அவர்' சிவனைக் குறித்தல் காண்க. 'அவன் அசையாமல் அணு அசையாது', 'எல்லாம் அவன் செயல்', 'எல்லாம் அவர் செயல்' என்னும் உலக வழக்கில் 'அவன்' 'அவர்' என்பனவ பலர் அறி சுட்டுப்பெயராய்க் கடவுளை உணர்த்தல் காண்க. இவ்வாறே, 'அது நீ ஆனாய்' என்ற மகாவாக்கியத்தில், 'அது' என்ற சுட்டுப்பெயர் பரம்பொருளைக் குறித்தலையும் நோக்குக.

* சிவஞான பாடியம், 2-ஆம் சூத்திரம், 1-ஆம் அதிகாரம்.

† திருவாசகம்.

சரணங்களே என்றும் பாடம். அதில் 'கள்', 'ஏ': அசைகள்.

கம்பர், இப்பாட்டில் கடவுளது பொது இலக்கணம் கூறி, அடுத்த 'சிற்குண' என்ற பாட்டில் 'மூன்றனுள் முற்குணத்தவரே முதலோர்' எனச் சாத்துவிக குண முடையவரென்னும் விட்டுணுவே முதற் கடவுளெனக் குறிப்பாகப் புலப்படும்படி கூறி, இறுதிக் கடவுள் வாழ்த்துக் கவியாகிய 'ஆதி அந்தம் அரி' என்னும் பாட்டில் 'அரி' என்று விட்டுணு நாமத்தை வெளிப்படையாகக் கூறி, 'அவன் பாதமல்லது பற்றலர் பற்றிலார்' என்றார். பல மதத்தினரும் உள்ள சபையில் தம் நூலை அவர் அரங்கேற்றத் தொடங்கும்போது, அவர்கள் எல்லாரும் ஏற்றுக் கொள்ளும்படி பொதுத் தெய்வ வழிபாடாக முதற் பாட்டை மொழிந்தாரென்றும்; எல்லாச் சமயிகளும் தம் தம் கடவுள் முக்கியாம்சத்தில் சாத்துவிக குணச் சிறப் புடையவர் என்பதுபற்றியும், வைணவர் தம் கடவுளே சாத்துவிக குணமுடையவர் என்பதுபற்றியும் ஆராய்ந் தறிந்து இரு திறத்தாரும் ஒப்பும்படி இரண்டாம் பாட்டை இயம்பினரென்றும்; கதாநாயகனுக அவதரித்த விட்டுணுவை வணங்குதல் எல்லா நூல்களுக் கும் முறை என்று உய்த்துணரும்படி அவ்வணக்கத்தை 'ஆதி அந்தம் அரி' என்னும் மூன்றும் பாட்டின் வாயிலாக இசைத்தாரென்றும் கொள்ள, இந்நூற் கடவுள் வாழ்த்துக்கவிகள் இடம் தருகின்றன.

தமிழ் நாட்டிலே, அச்சுப்பாட புத்தகங்கள் ஏற்படு முன்னே, பிள்ளைகள் வித்தியாரம்ப காலத்தில் படித்த அரிச்சுவடி என்ற நெடுங்கணக்கு அலெச்சுவடியா யிருந் தது. அது, 'அரி நமோத்து சிந்தம். அ(ன), ஆ (வன்ன) என்று ஆதியில் அரியெனத் தொடங்கி, அந்தத்தில் 'ளொள (வன்ன), (இ)ன் (என்ன), அரி ஓம் நன்ருக; குருவே துணை' என்றெழுதி முடிக்கப் பட்டிருத்தல் தவருத முறை யாயிருந்தது. நெடுங் கணக்குக்கு, அரிச்சுவடி, அரிவரி என்ற பெயர்கள் அந்த முறைபற்றி ஏற்பட்டவை.

வைணவச் சிறுவர் மட்டுமன்றிப் பிறமதப் பிள்ளைகளும் அரிச்சுவடி படிக்கும்போது 'ஆதி அந்தம்

அரியென ஓதினார்.' இக்காலத்தும் பிள்ளைகளுக்கு முதல் முதலாகக் கல்வி கற்பிக்கத் தொடங்கும்போது உபாத்தியாயர், ஓலையில் 'அரி நமோத்து சிந்தம்' எனத் தொடங்கி, 'அரி ஓம் நன்றாக; குருவே துணை' என்றெழுதி முடித்து, மஞ்சள் பூசிச் சித்தமாக வைத்திருக்கும் ஓலை அரிச்சுவடியைப் பிள்ளைகள் கையில் வைத்து முதலில் 'அரி நமோத்து சிந்தம், அ (னா), ஆ (வன்னா)' என்றும் முடிவில் 'அரி ஓம் நன்றாக; குருவே துணை' என்றும் தாம் சொல்லிக் கொடுத்துப் பிள்ளைகளைச் சொல்லச் செய்தல் முற்றும் ஒழிந்துவிடவில்லை.

முதலாகப் படிக்கும் அரிச்சுவடியைப்போலவே, முடிவாகப் படிக்கும் வேதத்தையும் 'அரி'யெனத் தொடங்கி, 'அரி'யென்று முடித்தல் பிரசித்தம். முதலும் முடிவுமான நூல்களை 'அரி'யென்று தொடங்குதலால், இடைப்பட்ட எல்லா நூல்களையும் அவ்வாறே தொடங்குதல் முறை என்பது சொல்லவேண்டியதில்லை.

அன்றியும், அரிச்சுவடி முதலான எல்லா நூல்களுக்கும் காப்பு ஆகப் பரக்கடவுள் ஆகிய திருமாலைப் பிரார்த்தித்தல் இயல்பே. ஆதலால், அரங்கேற்றச் சபையிலுள்ள எல்லா மதத்தினரும் இராமாயண கதாரம்பத்தில் கதாநாயகனாக அவதரித்த அரியை வணங்குதல் முறையாமென உய்த்துணரச் செய்து அவர்கள் யாவரும் தடையின்றி ஒப்புக்கொள்ளும்படி 'ஆதி அந்தம் அரி' என்ற மூன்றாம் பாட்டைக் கூறினார்.

'ஆதி அந்தம் அரியென' என்றும் பாடமுண்டெனச் செல்வகேசவராய முதலியார் 'கம்பர்' என்ற புத்தகத்திற் கூறியிருக்கின்றார். கோவிந்தராஜையங்கார் தாம் பிரசுரித்த 'கம்பநாடர்' என்ற பத்திரிகையில், 'கம்பராமாயணக் கவி' என்ற பகுதியில் அந்தப் பாடத்தையே பாடமாகக் கொண்டிருக்கிறார். அந்தப் பாடங்கொண்டால், மேலே விவகரித்த மூன்று கடவுள் வாழ்த்துக் கவிகளுமே நாத்திகரொழிய எம்மதத்தினரும் சம்மதித்திடும் பொதுத் தெய்வ வணக்கமாம்.

கிட்டுணு கம்பராமாயணத்துக்கு ஏற்புடைக் கடவுளாவதன்றி, நூலாசிரியர்க்கு வழிபடு கடவுளுமாவ

ரென்று கொள்வதற்கு ஆதாரமாகப் புறச் சான்றுகள் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. அகச்சான்று* உண்டோ என்பதை ஆராய்வாம்.

பாலகாண்டம், திரு அவதாரப் படலத்தில்,

> கருமுகில் தாமரைக் காடு பூத்துநீ
> டிருசுடர் இருபுறத் தேந்தி யேந்தலர்த்
> திருவொடும் பொலியவோர் செம்பொற் குன்றின்மேல்
> வருவபோற் கலுழன்மேல் வந்து தோன்றினான்.
> எழுந்தனர் கறைமிடற் றிறையுந் தாமரைச்
> செழுந்தவி சுகந்தவத் தேவுஞ் சென்றெதிர்
> விழுந்தனர் அடிமிசை விண்ணு ளோரொடும்
> தொழுந்தொறுந் தொழுந்தொறுங் களிது ளங்குவார்.

என்ற பாட்டுக்களில் விட்டுணுவுக்குப் பரத்துவம் கூறி, அக்கடவுளே தம் வழிபடு கடவுளெனக் கம்பர் புலப்படுத்தினர் என்பர் ஒரு சாரார். அதனை ஆட்சேபிப்போர், 'கறைமிடற்றிறை'† என்பது தப்பான பாடமென்றும், அப்பாடம் உண்மையானதா யிருந்தால், கம்பராமாயணம் ஆதி சைவ சிரேட்டராகிய தில்லைத் திட்சிதர்களால் அங்கீகரிக்கப்பட்டிராதென்றும், 'கம்பர்' என்ற பெயர் கம்ப நாடுடையார் கம்ப ரென்பதாக இருப்பதன்றிக் காஞ்சிபுரத்துச் சிவன் பெயராகிய 'கம்பர்'‡ ஆகவும் இருப்பதனாலும், கம்பர் மகன் பெயர் அவர் பெயர்போலக் கவர்படு பொருள் மொழியாயில்லாமல் தெளிவாகச் சிவநாமமாகிய 'அம்பிகாபதி'யாக இருப்பதனாலும், சைவருக்குத் திருமால் பெயரிடுவது வழக்கமாயினும் வைணவர் சிவநாமம் பூண்பது மரபன்றாதலாலும், கம்பர் இயற்றிய 'ஏரெழுபது' என்னும் நூலில் விநாயக தோத்திரம் செய்திருப்பதனாலும், சைவரெனத் துணிதற்பாலராகிய கம்பர் சிவனை இழித்துக் கூறியிராரென்றும்; ஆதலால் 'கறையடிக்

---

* அகச்சான்று - நூலின் உள்ளே உள்ள சாட்சி; புறச்சான்று - வெளியே சரித்திரம், கன்ன பரம்பரை வரலாறு முதலியவற்றில் உள்ள சாட்சி.

† கறைமிடற்றிறை - சிவன்.

‡ 'பணைக்கொள் பாம்பணி கம்பன்'. காஞ்சிபுராணம், நாட்டுப்படலம், 1.

இறை'* என்றுள்ள பாடமே சரியானதென்றும்; வான்மீகி ராமாயணத்தில்†, இந்தச் சந்தர்ப்பத்தில் கூடிய பிரமாதி தேவர்களின் கூட்டத்தில் சிவன் இருந்ததாகக் கூறப்படவில்லை என்றும்; கம்பராமாயணத்தில் இன்னும் இரண்டோரிடங்களில் சிவனை விட்டுணுவுக்குத் தாழ்த்திக் கூறும் பகுதிகள் தப்பாக மாற்றப்பட்டவை அல்லது இடைச் செருகல்களென்றும் கூறுவர்.

மேற்கூறிய அமயத்தில் சிவன் விட்டுணுவுக்குச் செய்த வணக்கம், அக்கடவுள் தன் குமாரக் கடவுளை ஒரு தருணத்தில்‡ வணங்கினதாகக் கூறப்படும் வணக்கம் போலவும், விட்டுணுவே தன் அவதார காலங்களில் தாய் தந்தை குரு முதலியோரை வணங்கல் போலவும், பிரபுக்கள் சாதாரண காலத்தில் தம்மைக் கும்பிடும் பூசாரிகளை அவர்கள் சாமி கொண்டாடுங் காலங்களில் தாங்கள் கும்பிடுதல் போலவும், காவடியெடுக்கும் சிறியோரைப் பெரியோர் வந்திக்கும் வந்தனை போலவும், இக்கால வழக்கத்தில் ஒரு சபையில் தலைமை வகிப்போரை வாகனத்தில் பவனிவரச் செய்து அவருக்குத் தாழ்ந்தோரே யன்றிச் சமமானோரும் உயர்ந்தோரும் பாதசாரிகளாய்ச் சென்று கௌரவிப்பது போலவும், விட்டுணு தேவ சபைத் தலைமை வகித்த சமயத்திற் செய்த உபசாரமே யென்று கூறலாம்.

பிரபலமான 'கறையிடற்றிறை' என்ற பாடமே சரியான பாடமாகக் கொண்டு, நம் ஆராய்ச்சியை மேல் நடத்துவாம்.

'ஓரேனந் தனைத்தேட ஒளித்தருளும் இருபாதத் தொருவன்'§ எனச் சிவனை விட்டுணுவினும் உயர்த்தியும், 'கடவுட் கங்கைநீர் முடித்தான் இரவொழித்த நீ'¶ என விட்டுணுவைச் சிவனினும் மேம்படுத்தியும், அவ்வவ்

---

* இந்திரன்.

† பண்டித நடேச சாஸ்திரி வால்மீகி ராமாயண வசனம், பால காண்டம், 61-3-ஆம் பக்கங்களைப் பார்க்க.

‡ அப்போது சிவபெருமான் சிஷ்யனாகவும், குமரக்கடவுள், குருவாகவும் இருந்த சமயம். உபதேச காலத்தில், சிஷ்யன் காலில் விழுந்து வணங்குதலும், குரு திருவடி தீக்ஷை செய்தலும் மரபு,

§ பாரதம், அருச்சுனன் தவநிலைச் சருக்கம், அஎ.

¶ ஷை, கிருட்டிணன் தூதுச் சருக்கம், கடு.

சமயத்துக்கேற்றவாறு இருபெருங் கடவுளரில் ஒருவரை ஏற்றமாகப் பல விடங்களிற் கூறும் வில்லிபுத்தூரர் பாரதம்போலக் கம்பராமாயணமும் சைவ வைணவ பாரபட்சமில்லாத இதிகாசமென்பது அதனை முற்றப் படிப்போர்க்குத் தெற்றெனப் புலப்படும். மேற்கூறிய 'ஆதி அந்தம் அரி' யென்னும் பாட்டில் கம்பர் விட்டுணுவை உயர்த்திக் கூறியவாறே, பாலகாண்டம், தாடகை வதைப் படலம், 3-ஆம் பாட்டில், சிவன் யோகிருந்த காமனாச்சிரம வருணனையில்,

> பற்றவா வேரொடும் பசையறப் பிறவிபோய்
> முற்றவா லுணர்வுமேல் முடுகினோர் அறிவுசென்
> றுற்ற வானவன்

எனச் சிவனை மேம்படுத்துக் கூறியுள்ளார். அங்கே சிவனுக்குப் பரத்துவம் கூறப்பட்டிருத்தல்போல, பாலகாண்டம், வேள்விப் படலம், 16-ஆம் பாட்டில்

> எங்கள்பால் மறைக்கும் தேவர் அறிவிற்கும் பிறர்க்கும் எட்டாச்
> செங்கண்மால்

என விட்டுணுவுக்குப் பரத்துவம் கூறப்பட்டிருத்தல் காண்க. ஈரிடத்தும் இரு மூர்த்திகளையும் யோக நிலையில் இருந்தாராகக் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

மேற்கூறிய இரண்டிடங்களில் விட்டுணுவை ஓரிடத்தும், சிவனை ஓரிடத்தும் சிறப்பித்துக் கூறிய கம்பர், சிவ விட்டுணுக்களைப்பற்றிப் பொதுப்படக் கூற நேர்ந்த சமயங்களில்,

> அரன்அதிகன் உலகளந்த அரிஅதிகன்
> என்றுரைக்கும் அறிவி லார்க்குப்
> பரகதிசென் றடைவரிய பரிசேபோல்* என்றும்
> யாரினும் உயர்ந்த மூலத் தொருவராம் இருவர்†

* கிட்கிந்தா காண்டம், நாடவிட்ட படலம், 24. இப்பாட்டுப் பகுதிக்கு வெளிப்படையான செம்பொருளுக்கு விரோதமாக வைணவ சமயவாதிகள் '(விட்டுணுவே பரம்பொருளென்பது நிச்சயமாயிருக்கவும்) அரன் அதிகன் . . . பரிசேபோல்' என்றும், சைவ சமயவாதிகள் 'அரன் அதிகன்; (இவ் உண்மைக்கு மாறாக) உலகளந்த அரி அதிகன் . . . பரிசேபோல்' என்றும் பொருள் கூறுவர்.

† பால காண்டம், பரசுராமப் படலம், 28.

என்றும், இரு மூர்த்திகளையும் சமமாகக் கூறுவர். ஆகவே, சைவ வைணவ சமயங்களை ஏற்றத் தாழ்வில்லாத இரண்டு கண்கள்போலக் கம்பர் கருதினர் என்னலாம்.

கம்பர், பிறப்பினலோ, வளர்ப்பினலோ, பிறப்பு வளர்ப்பிரண்டினலுமோ, வைணவரா யிருந்திருக்கலாம்; அல்லது சைவராயிருந்திருக்கலாம்; அல்லது வேறு சமயியா யிருந்திருக்கலாம். அவர், எச்சமயத்தினராயிருந்தாலும், அச்சமய சம்பிரதாயங்களைத் தழுவி யொழுகி, அச்சமயி கள் பலரோடு ஒருவராய் அவரோடு பொருந்த இருந் திருப்பார் என்பதிலும் தடையில்லை.

மிக மிகப் பலரான கண்ணில்லாரும் மிக மிகச் சில ரான கண்ணுள்ளாரும் சேர்ந்த ஒரு பெருங் கூட்டத்தில், பிந்திய சிலரே சூரியனைக் காணுதல்போல, மக்கட் பரப் பில் ஏகதேசமாகப் பரஞானக் கண் படைத்த ஒரு சிலரே பரம்பொருளென்னும் கடவுளைப் பார்ப்போராய்க் கடவு ளுண்மையை நேராக அறிந்தவராவர்; மற்றைய சாதாரண சனங்களெல்லாம் கடவுள் உண்மையை அறியாதவரா யிருப்பதன்றி, அவ் வறியாமையை உணராராய்க் கடவு ளில்லாரா யிருக்கின்றனர்.* கம்பர், பரஞானக் கண் படைத்தவராய்ப் பரம்பொருளைப் பார்த்து அநுபவித் தவரா யிருந்தாலும் இருக்கலாம்; அக்கண் ணில்லாமை யால் பாராதவரா யிருந்தாலும் இருக்கலாம். அவர், சார் பால் எச்சமயத்தவராயினும், அநுபவ ஞானத்தாலோ ஆராய்ச்சி ஞானத்தாலோ, அவ் இருவகை ஞானங்க ளாலுமோ, கடவுள் சமயங்களெல்லாவற்றையும் கடந்த பரம் பொருளென்றும் கடவுளின் ஓரோர் அம்ச பூதரே ஒவ்வொரு சமயக் கடவுளுமென்றும் கொண்ட கொள்கையுடையவராகக் கரு தற்பாலர். அதை நிறுவ, அவரியற்றிய இராமாயணத்தில் அகச் சான்றுகள் மிகுந்துள்ளன.

---

*'With the exception of those who have rare spiritual gifts, the generality of men, without their knowing it, are, Godless,' — RABINDRANATH TAGORE'S *Presidential Message to the Parliament of Religions*, Calcutta, 26th January, 1929. (*Vide* The Visva Bharathi Quarterly, Vol. VII, p. 3.)

கம்பர் மேற்கூறிய மேலான கொள்கை உடையவராதலானன்றோ, அவர், விட்டுணுவின் அவதாரமான 'காசில் கொற்றத் திராமன் கதை'யில்,* இராமனைப் புகழ்தற்குரிய இடங்கள் இயல்பாகப் பலவா யுள்ளவைகளில், அவனைப் புகழு முகத்தால் விட்டுணுவைப் பரம்பொருளாகக் கொள்ளும்படி பலமுறை கூறியிருப்பது போல, அக்கதையில் இயல்பாக ஏகதேசமாகச் சிவனைப் பற்றிக் கூற நேர்ந்தபோது சிவன் பரம்பொருளெனக் கருதும்படி கூறியிருக்கிறார்.

பற்றவா வேரொடும் பசைஅறப் பிறவிபோய்
முற்றவா வுணர்வுமேல் முடுகினர் அறிவுசென்
றுற்றவா னவன்†

என்றதை நோக்குக. இன்னும், கம்பர் சிவனைப் பற்றிப் பேச நேரும்போது எவ்வளவு பத்தி பரவசராகின்றார் என்பதற்கு அடியில் வரும் பாட்டு ஓர் எடுத்துக் காட்டாம்:

ஆயதன் வடக்கிற் பாகத் தாயிரம் அருக்கர் ஆன்ற
காய்கதிர் பரப்பி அஞ்சு கதிர்முகக் கமலங் காட்டித்
தாயபே ருலகம் மூன்றும் தாவிய மலரிற் சூழ்ந்த
சேயிழை பாகத் தெண்தோள் ஒருவனை வணக்கம் செய்தான்.‡

சீதை, 'செங்கண்மால் நான்முகன் சிவனென்றேகொலோ - எங்கள்நா யகனையும் நினைந்த தேழைநீ'§ என இராவணனை நோக்கிக் கூறியது இங்கே ஆராய்தற்குரியது. செங்கண்மாலின் அவதாரமான இராமனைச் செங்கண்மாலென நினைந்தாயோ என்பதன் பொருள் இராமன் திருமாலினும் அதிகன் என்பது தெளிவாம். இவ்வாறு கூறியதில் கம்பர் கருத்து யாதோ வெனில், பரம்பொருளின் அமிசம், இராமாவதார காலத்தில், திருமாலையுள்ளிட்ட மும்மூர்த்தியர் எவர்பாலினும் அதிகமாக இராமன்பால் இருந்தது என்பது.

---

* கம்பராமாயணம், சிறப்புப்பாயிரம், 4

† தாடகை வதைப்படலம், 3. இந்நூல் 44-ஆம் பாட்டு

‡ யுத்த காண்டம், மருத்துமலைப் படலம், 50

§ சுந்தர காண்டம், நிந்தனைப் படலம், 49

ஒரு பெரு நதி மூன்று கிளைகளாகித் திரும்பவும் ஒன்று சேர்ந்து ஒரே நதியானதொப்ப, 'யாரினும் உயர்ந்த மூலத் தொருவராம்* ஏக மூர்த்தி, செங்கண்மால் நான்முகன் சிவனென்'னும் திரிமூர்த்திகளாகி 'ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும் [வீற்றிருந்து, அவ் இருக்கைகளை] விட்டு [இராமனென்னும் ஒரு மூர்த்தியாகி] அயோத்தி வந்தான்'† என்றதனாலும், இராமனைத் திரிமூர்த்திகளில் ஒரு மூர்த்தியும் தனித்து ஒப்பாக மாட்டார், ஒன்றுசேர்ந்தால் மட்டும் ஒப்பாவாரென 'முளரிமேல் வைகுவான் முருகற் றந்தஅத் தளிரியல் பாகத்தான் தடக்கை ஆழியான் - அளவிஒன் றுவரே யன்றி ஐயமில் - இளவியர் தனித்தனி இடைப்பரோ துணை?'‡ என்றதனாலும், கம்பர் கருத்து, பரம்பொருள் திரிமூர்த்திக ளெவர் பாலினும் அதிகமாக இராமன்பால் முனைந்து நின்றதாம் என்பது வலியுறுதல் காண்க.

எச்சந்தர்ப்பத்தில் யார்பால் பரம்பொருள் முனைந்து நிற்கின்றதோ, அச் சந்தர்ப்பத்தில் அவரைப் பரம்பொருளெனக் கம்பர் உபசரித்துக் கூறுவர். உதாரணமாக, அநுமானைப் பற்றி இராமன் 'என்றும் - நாட்படா மறைகளாலும் நவைபடா ஞானத்தாலும் - கோட்படாப் பதமே, ஐய குரக்குருக் கொண்ட தென்றுன்'§ என்பதைக் காண்க.

கம்பர் உயிருக்குயிராகவும், உணர்வுக்குணர்வாகவும் ஒப்புயர்வற்றதாகவும் கொண்ட கடவுள், எவ்வெத் தொழிலையும் நடத்துவோரையும் நடத்துவிக்கும் முழுத் தனி முதற் கடவுளாய்ச் 'சமய வாதிகள் தத்தம் மதங்களில் - அமைவதாக அரற்றி மலைந்தனர்'¶ ஆகும்படி செய்து நின்ற சமயாதிதப் பழம் பொருளான பரமபதியே யாம்.

— கம்பராமாயண சாரம்.

---

* பால காண்டம், பரசுராமப் படலம், 28

† சுந்தர காண்டம், பிணிவீட்டுப் படலம், 80

‡ கிட்கிந்தா காண்டம், கலன்காண் படலம், 16

§ கிட்கிந்தா காண்டம், அனுமப் படலம் 36. [நாட்படா-நாள் செல்லாத- இளமை மாறாத. நவைபடா - குற்றப்படாத - குற்றமற்ற கோட்படா. (அறிந்து) கொள்ளப்படாத. பதம்-பொருள், - இலக்கியச் சொல்சாதி.]

¶ திருவாசகம், போற்றித் திரு அகவல், 52-3

3. கம்பராமாயணக் காவிய அமைப்பு

[ஏ. வி. பால் நாடார்.]

கம்பராமாயணக் காவிய அமைப்பில் ஆராய்ச்சியாளர் இன்னும் அதிகக் கவனம் செலுத்தவில்லை. காலஞ்சென்ற கல்வியிற் சிறந்த வ. வே. சு. ஐயர் முதலியோர் பால காண்டத்தை ஓர் மாளிகையின் முன்புறப் பூஞ்சோலை மண்டபமாகவும், அயோத்தியா காண்டம் முதல் யுத்த காண்டம் இறுதியாக உள்ளவை அம்மாளிகையாகவும் கருதுகின்றனர். அயோத்தியா காண்டத்திற்கும் யுத்த காண்டத்திற்கும் ஒரே சம்பந்தந்தான் இருக்கிறது. அயோத்தியா காண்டத்தில் தசரதன் கோரி, கைகேசியால் தடைப்பட்ட இராம பட்டாபிஷேகம் யுத்த காண்ட முடிவில் நிறைவேறுகிறது. அதற்கு இடையிலுள்ள சூர்ப்பநகை காதல், சீதை சிறை, இராவணன் வதம் முதலிய பெருங்கட்டங்கள், இராமனின் முடிசூட்டுக்காவது கைகேசியின் சூழ்ச்சிக்காவது சம்பந்தம் இல்லாமல் இருக்கின்றன. அப்படியானல் மாளிகை ஒன்றல்ல; பல மாளிகைகள் ஆகின்றன. அப்படிக் கருதுவது காவியத்தின் ஒற்றுமைப் பாட்டிற்கும், காம்பீரியத்திற்கும் பொருத்தமாக இல்லை.

பஞ்ச தந்திரக் கதைகள்போல், ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத பல கதைகளுக்குத் தொடர்பு உண்டாக்கிக் கொள்ளுவது காவியத்திற்குச் சுவை அளிக்காது. தசரதன் இராமனுக்கு முடிசூட்ட விரும்புகிருன். கைகேசியின் மனத்தைக் கூனி திரிக்கிருள். கைகேசி, தன் மகன் ஆளவும், இராமன் காட்டுக்கேகவும் வழி செய்கிருள். பரதன் யாவற்றையும் மாற்றிவிடுகிருன். காடுபோன அண்ணன் பாதுகையை முடிசூட்டி, அண்ணன் வரவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிருன். காட்டில் சூர்ப்பநகை இராமன்மேல் காதலுறுகிருள்; பயன்படவில்லை; மான பங்கம் அடைகிருள். இராவணனுக்குச் சீதைபால் மோகத்தை மூட்டுகிருள். சீதையை இராவணன் தூக்கிச் செல்லுகிருன்; சிறை வைக்கிருன். அனுமன் தேடிக் கண்டுபிடிக்கிருன். பின்னர், இராவணனேடு இலங்கையும் நாசமுறுகின்றது. வனவாசத்திற்குக் குறித்த காலம்

நிறைவேறுகிறது. இராமன் அயோத்தி வர, முடிசூட்டு வைபவம் நடக்கிறது. இத்தொடர்புக் கதைகள் ஒன்றுக்கொன்று நெருங்கிய சம்பந்தமில்லாமல் இருக்கின்றன. ஆயினும், இத்தனை சம்பவங்களுக்கிடையே, எத்தனை கிளைக் கதைகள்! உடைத்தாலல்லாமல் பிரிக்கக்கூடாத கூட்டாகவல்ல, பெருமணலை ஒருங்கே குவித்தாற்போலிருக்கிறது. வார்த்துச் சேர்த்து ஒன்றாக்கின பொருள் போல், எல்லாச் சம்பவங்களும் முக்கிய நோக்கத்திற்குச் சாதகமாயிருக்கச் செய்வதுதான் காவியத்திற்கு மொத்தத்தில் சுவைகொடுக்கும். விவகார ரீதியாக, இரசாயன முறையில் அவைகளை ஒன்றாய்ச் சேர்க்கவேண்டுமானால், கூனியாவது கைகேசியாவது, சூர்ப்பநகையின் காதலுக்காவது அல்லது இராவணன் மோகத்திற்காவது, அல்லது சீதை சிறைக்காவது காரணமாயிருக்கவேண்டும். மேல் நாட்டான் ஒருவன் இக்காவியத்தைச் செய்வானானால், நிச்சயமாய் அவ்விதமே செய்வான். கம்பன் வழியோ அது அல்ல. கைகேசியை அவ்விதத் துரோகத்திற்கு விடமாட்டான். "தெய்வக் கற்பினள்" கைகேசியின் திரிபைக் கூடப் பாராட்டுகிறான் :—

அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க நல்லருள் துறந்தனள்மொழி தூமடமான்
இரக்க மின்மையன் றோவின்றிவ் வுலகங்க ளிராமன்
பரக்குந் தொல்புக ழமுதினைப் பருகுகின் றதுவே.

— மந்தரை, 78.

அரக்கர் பாவமும், அரக்கர் அல்லாதவர் செய்த அறமுந்தாம் கைகேசியின் மனந்திரியத் தூண்டினவாம். இரக்கமில்லாமல் அவள் இராமன் முடிசூட்டைத் தடுத்ததனால் அல்லவா இராமனுடைய புகழாகிய அமிர்தத்தை இன்று உலகமெலாம் பருகுகின்றன என்பது கவிக்கூற்று.

கதைப் போக்கையும், பாகுபாடுகளையும் முதல்நூலிற் கண்ட பிரகாரமே கம்பன் ஆளுகிறான். சிற்சில இடங்களில் தமிழர் நாகரிகத்திற்கேற்பக் கதையைத் திருத்திச் சிற்சில பாத்திரங்களை மாற்றியிருக்கிறான். கதாநாயகனையே பரம்பொருளாக்கி விடுகிறான். அது காரணமாக, கம்பனது ராமகாதை புதுக்காவியமாகிறது.

சில ஆராய்ச்சியாளர் இராமனைக் கடவுள் என்பதால், கம்பன் கலைக்குப் பங்கம் ஏற்பட்டுவிட்டதாகக் கருதுகின்றனர். தன்மதிப்பாளர்களில் ஒரு சாரார் தமிழர் நாகரிகத்திற்கும், பெருமைக்கும் அது பொருத்தமாயில்லை என்று நினைக்கிறார்கள். யதார்த்தத்தில் காவியக் கலைக்குப் பங்கமும் இல்லை; தமிழர் பெருமைக்குக் கெடுதியும் இல்லை. ஆழ்ந்து ஆராய்ச்சி செய்வோருக்கு, அது கலைக்கு எவ்வாறு சாதகமாயிருக்கிறதென்பதும், தமிழர் பெருமைக்கு அது எப்படிக் காரணமாயிருக்கிறதென்பதும் தெரியவரும்.

கம்பன் கண்ட கனு ஒரே பொருள். அப்பொருள் தான் இராமன். அவ் விராமனைக் காவிய லோகத்தின் மத்தியஸ்தானத்தில் வைக்கிறுன். சூரிய மண்டலாதிக்கத்தில் சூரியன் இருக்கும் ஸ்தானத்திற்கு அதை ஒப்பிடலாம். அது, தன்னுடைய ஆகர்ஷண சக்தியால், கிரகங்களையெல்லாம் தன் வசமே இழுத்துக்கொள்ளுகிறது. அதனுல் கிரகங்களெல்லாம் சூரியனைச் சுற்றித் தன் வழியே ஒன்றோடொன்று மோதிக் கொள்ளாமல் ஓடுகின்றன. சூரிய வெளிச்சமும் வெப்பமும் இல்லையானுல் எந்த ஜீவராசியும் பிழைக்காது. புற்பூண்டு விருட்சங்கள் யாவும் தளிர்க்கா. கம்பன் கவிதைப் பாத்திரங்கள் யாவும் இராமனுடைய சக்திக்கு உள்ளாகின்றன. ஆயினும் அவரவர் சுயதரும நெறியில் நடக்கிறுர்கள். எல்லோரும் இராமன் பாலுள்ள அன்பினுல் பிணிக்கப்பட்டு ஒருவருக்கொருவர் சமரசமுடையவர்களாகிறுர்கள். இதுதான் காப்பிய ஒற்றுமையின் மர்மம்.

அப்படியாயின் இராமன் தன்மை யாது? இராமன் உத்தம புருடன்; மானிட இலக்கு எனலாம். ஆயினும் மானிடனே! சுக்கிரீவன் முதல் முதலாக இராமனைப் பார்த்ததும் என்ன நினைக்கிறுன்?

> ஆறுகொள் சடிலத் தானும் அயனுமென் றிவர்க ளாதி
> வேறுள குழுவை யெல்லாம் மானிடம் வென்ற தன்றே.
>
> —மராமரம், 57

சிவன், பிரமா முதலிய தேவர்களையெல்லாம் மானிடம் வென்று விட்டதாம். இம்மானிடப் பெருமைதான்

என்ன! ஆயினும் நம்மைப்போல் பாடுள்ள மானிடன் தான். அம்மானிடனுக்கு நம்மைப்போல் பசி, தாகம் உண்டு; நம்மைப்போல் காமம், வெகுளி, மயக்கம் உண்டு. இன்பம், துன்பம், கவலை, துக்கம் உண்டு. வனவாச ஜீவியத்தில் பட்ட துயர்தான் என்ன! சீதையை நினைத்து, மணத்திற்கு முன்னும் பின்னும் பட்ட அவஸ்தைதான் என்ன! வெகுளிதான் என்ன! சீதையைக் காணாத கோபத்தால் கோதாவிரி, அதைச் சேர்ந்த குன்றுகள், மான் வருக்கம் இவைகளைச் சுட்டெரிக்கும்படியான சினந்தான் என்ன! இச்சினத்தை ஆற்றுபவன் இளையவன். சீதை பிரிவாற்றுமல்.—

> துயில்வில னென்பது சொல்லற் பாலதோ
> உயிர்நெடி துயிர்ப்பிசை யூச லாடுவான். — அயோமுகி, 95

இந்திரசித்து எய்த பிரம்மாஸ்திரத்தால் இலக்குமணன் இறந்தானென்று இராமன் எண்ணியபோது வந்த மயக்கந்தான் என்ன!

> இளையவன் இறந்தபின் எவரும் என்? எனக்கு
> அளவறு சீர்த்தியென்? அறிவென்? ஆண்மைஎன்?
> கிளையுறு சுற்றமென்? அரசென்? கேண்மையென்?
> விளைவுதான் என்?மறை விதியென்? மெய்ம்மைஎன்?
>
> — மருத்துமலை, 77

இத்தன்மையான மானிட இயற்கையும் உணர்வும் ஒரு புறம் இருக்க, இன்னொரு புறம் தெய்விகத் தன்மை காண்கிறது.

> விண்ணி னிலத்தினில் விகற்பவுல கிற்பேர்
> எண்ணினி லிருக்கினி லிருக்குமென யாரும்
> உண்ணினை கருத்தினை யுறப்பெறுவ னலென்
> கண்ணினி லெனக்கொடு களிப்புறு மனத்தான்.
>
> — அகத்திய, 42

தேவலோகத்திலும், பூவுலகத்திலும், மற்றும் பல உலகங்களிலும், அவ்வுலகங்களில் உள்ளவர்களுடைய பெரிய உள்ளங்களிலும், இருக்கு வேதத்திலும் எப்பொழுதும் உள்ளதாகுமென்று யாவரும் உள்ளத்தில் நினைக்கிற தியானப் பொருளே இராமனாக உருவெடுத்துத்

தம் கண்முன் தோன்றுவதாக நினைத்து நினைத்து மகிழ்கிறார் தமிழ்முனிவர்.

குலகுரு வசிஷ்டர் தீர்க்க தரிசனம் காண்கிறார் :

பிறத்தி யாவையுங் காத்தவை பின்னுறத் துடைக்கும்
திறத்து மூவருந் திருத்திய திருத்தமைத் திறலோன்.

— மந்திரம், 37

உலகங்கள் யாவையும் நிறைமையாகப் படைத்துக் காத்து அழிக்கின்ற முத்தேவர்கள் செய்தவைகளையும் நிறைமையாய்த் திருத்தி அமைக்க வல்லவனும் இராமன்.

பொதுமக்களில்,

கற்றவர் கற்றிலா தவரும், உண்ணுநீரினும்
உயிரினு மவனையே உவப்பார். —மந்திரம், 40

"அன்பின் வழியது உயிர்நிலை" என்பது திருவள்ளுவர் வாக்கு. தந்தை தசரதனுக்கு உயிர் இராமன். விசுவாமித்திரர் வசம் இராமனை ஒப்புவித்ததும் பிரிந்த உயிர், பின் மிதிலையில் சந்தித்தபோதுதான் உடம்போடு வந்து ஒன்றினதாம். அவன் காட்டுக்கு ஏகினான் என்று கேள்வியுற்றபோது உயிர் துறக்கிறான். "மைந்தனலாது உயிர் வேறிலாத மன்னன்" என்பது மூத்த குமாரன் சம்பந்தப் பட்ட மட்டில்தான். மூத்த குமாரனோ,

தம்பியர் அல்லது தனக்கு வேறுயிர்
இம்பரி னிலதென வெண்ணி யேய்ந்தவன். —வாலி, 26

இராமனும் இலக்குவனும் ஒருயிர் போன்றவர்கள். இராமனுக்கு இலக்குவன்பால் உள்ள அன்பை முன்னமே பார்த்தோம். இளையவன் இல்லையானால், இராமனுக்கு எவரும் வேண்டியதில்லையாம். கீர்த்தி, அறிவு, ஆண்மை, அரசு, கேண்மை, விளைவு, வேதம், மெய்ம்மை இவைகள் கூட வேண்டாவாம். கைகேசி போட்டி கட்டிவிட்ட பரதனின் உயிரும் அன்னதேயாம். மிதிலையில் இராமன் பரதனைச் சந்தித்தபோது,

உன்னுபே ரன்புமிக் கொழுகியோத் தொண்கணீர்
பன்னுதா ரைகடாத் தொழுதெழும் பரதனைப்
பொன்னின்மார் புறவணைத் துயிருறப் புல்லினான்
தன்னையத் தாதைமுன் தழுவினால் என்னவே.

— எதிர்கோட், 26

தசரதனுக்கு இராமன் எப்படியோ, அப்படியேதான் இராமனுக்குப் பரதன். பரதனும் இராமனை, "எந்தையும், எம்பிரானும், எம்முனும்" என்கிறான். பரதன் சேனை பரிவாரங்களுடன் சித்திர கூடம் சென்று இராமனை அயோத்திக்கு அழைக்கச் சென்றபோது இலக்குவன் பரதனைச் சந்தேகிக்கிறான். இராமனோ,

சேணுயர் தருமத்தின் தேவைச் செம்மையின்
ஆணியை யன்னது நினைக்க லாகுமே — கிளைகண்டு, 47

என்கிறான்.

உடன் பிறந்த சகோதரர்களல்லாமல், இராமன் புதிய சகோதரர்களைச் சேர்க்கிறான். குகன் ஓர் வேடன்; கங்கையில் ஓடம் ஓட்டுகிறவன்; மீன் பிடிப்பவன். ஆயினும், "அற்றநீத்த மனத்தினன்; அன்பினன்; தாயவன்; தாயின் நல்லான்." இராமன் வனவாசம் போகிறபோது மீனும், தேனும் கொண்டு பார்க்க வருகிறான். இராமன் அவைகளை ஏற்றுக்கொண்டு உட்காரச் சொல்லியும் உட்காராமல் நிற்கிறான். போய்விட்டு மறுநாள் வரச் சொல்லியும் போகான். ஊழியஞ் செய்யக் கூடவே இருக்க வேண்டுமென்று விரும்புகிறான். இராக்காதலனுகும் என்று நட்புக்கொண்டு இராமனும் தன்னோடு இருக்கும்படி ஏற்றுக்கொள்ளுகிறான். கங்கையைக் கடந்த பின்னரும், தானுங் கூட வருவதாக வற்புறுத்துகிறான். அதற்கு இராமன்,

அன்னவ னுரைகேளா அமலனும் உரைநேர்வான்
என்னுயிர் அனையாய்நீ இளவலு னிளையானிந்
நன்னுத லவணின்கேள் நளிர்கட னிலமெல்லாம்
உன்னுடை யதுநானுன் தொழிலுரி மையினுள்ளேன்
— கங்கை, 68

என்கிறான்.

குகன் இராமனுடைய உயிராம்; இலக்குவன் தம்பியாம்; சீதை அண்ணியாம்; இராம ராஜ்யமெல்லாம் குகனுடையதாம்; குகன் தொழிலும் இராமனுக்குச் சொந்தமாகிவிட்டதாம். இதுவன்றோ சகோதரத்துவம்! வெறும் அநுதாபமல்ல. பிறனும் தானும் ஒன்று என்ற உணர்ச்சியே உண்மையான சகோதரத்துவமாம். இருவர்

நட்புக்கொண்டு உறவு கொண்டாடுவது சருவசாதாரணம். உடன்படிக்கும் மாணவர்கள், ஒரே தொழிற் சகோதரர்கள், கேண்மை பூணலாம். ஊர்ருர் உறவினருடன் நெருங்கினுல் உறவும் கேண்மையும் பறந்துபோம். ஆனுல் இராமனின் சகோதரத்துவமோ அத்தகையதன்று.

அங்குள கிளைகாவற் கமைதியின் உளனும்பி
இங்குள கிளைகாவற் கியாருளர் உரைசெய்யாய்
உன்கிளை எனதன்றே உறுதுயர் உறலாமோ
என்கிளை இதுகாவென் ஏவலி னினிதென்றுன்

— கங்கை, 71

குகன் சுற்றத்தார் இராமனின் கிளைகளாம். அயோத்தியி லுள்ள சூரியகுலச் சக்கரவர்த்தி குடும்பம் குகனுடைய கிளைகளாம். அவைகளைப் பாதுகாக்கக் குகனுடைய தம்பியாகிய பரதன் இருக்கிருனும். குகன் வாழும் ஊரிலுள்ள இராமன் கிளைகளைப் பாதுகாக்க, குகன் அவசியம் இருக்க வேண்டுமாம். இப்படி முறை கொண்டாடுவது வெறும் உபசாரப் பேச்சல்ல. பரதனே கோசலைக்குக் குகனை, இராகவனின் இன்துணைவனென்றும, இலக்குவனுக்கும் சத்துருக்கனனுக்கும் தனக்கும் மூத்த சகோதரனென்றும் அறிமுகப்படுத்துகிருன். உடன் கோசலா தேவியார்,

நைவீர லீர் !மைந்தீ ரினித்துயரா னுடிறந்து நாடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவு நலமாயிற் ருமன்றே விலங்கற் திண்டோள்
கைவீரக் களிறனைய காளையிவன் றன்ருேடு கலந்து நீவிர்
ஐவீரும் ஒருவீரா யகலிடத்தை நெடுங்கால மளித்தி ரென்றுள்.

— குகன், 67

இராமனுக்கும் பரதனுக்கும் கைகேசி போட்டி போட்ட நாடு அகன்று விட்டதாம். இராமனும் இலக்குவனும் காடு போனதுகூட நலமாகிவிட்டதாம். கோசலா தேவியாருக்குக் குழந்தைகள் நால்வர் மட்டுமல்ல, இப்போது ஐவராகிவிட்டனராம். ஐவரும் ஒருயிராய் அரசாளவேண்டுமாம்.

சற்று வயிற்றெரிச்சலோடு பரதன் தன் அன்னை கைகேசியையும் குகனுக்கு, “என்னை ஈன்ருள்” என அறிமுகப்படுத்துகிருன்.

என்னக் கேட்டவ் விரக்க மிலாளையும்
தன்னற் கையின் வணங்கினன் முயென.

சக்கரவர்த்தி குடும்பத்தில் தானும் ஒருவனுய்ச் சேருகிறதற்கு மூலகாரணமாக இருந்தவள் கைகேசியே என நினைக்கிறான்போலும்!

சீதையை இராவணன் தூக்கிச்செல்ல, இராம லக்குமனர் காடுகளில் எங்கும் தேடி அலைகிருர்கள். சுக்கிரீவனைக் கண்டு தங்கள் துயரம் நீக்கிக்கொள்ளக் கருதி வந்ததாகத் தெரிவிக்கிருர்கள். சுக்கிரீவன் வாலியால் தனக்கு நேரிட்ட ஆபத்தைத் தெரிவித்து அடைக்கலம் கேட்கிருன்.

என்றவக் குரக்கு வேந்தை இராமனும் இரங்கி நோக்கி
உன்றனக் குரிய இன்ப துன்பங்க ளுள்ள முன்னுள்
சென்றன போக்கி மேல்வந் துறுவன தீர்ப்பல் அன்ன
வின்றன வெனக்கு மீற்கு மேரான மொழியு நேரா.

— மரா, 64

மற்றினி யுரைப்ப தென்னே வானிடை மண்ணி னின்னைச்
செற்றவ ரென்னைச் செற்ருர் தியரே யெனினு முன்னே
டுற்றவ ரெனக்கு முற்ருர் உன்கிளை யெனதென் காதற்
சுற்றமுன் சுற்றம் நீயே இன்னுயிர்த் துணைவ னென்ருன்.

— மராமரம், 65

சுக்கிரீவனை இன்னுயிர்த் துணைவனென்றும், அவன் கிளையைத் தன் சுற்றமென்றும், அவன் இன்ப துன்பங்களையெல்லாம் தன்னுடையன என்றும் சொல்லுவதெல்லாம் சரியே. ஆனல், "மண்ணில் உன்னைச் செற்றவர் செற்ருர்" என்றும், "தியரே யெனினும் உன்னேடு உற்றவர் எனக்கும் உற்ருர்" என்றும் கூறுவது ஆட்சேபத்துக்கு இடமாகிறது. ஒருவாறு ஆபத்தாகவே முடிகிறது. வாலி வதம் ஒருகால் அவசியமான தீமை என்று கொள்ளலாம். ஆனல் அவனேடு செய்த போர் முறை நேரான வழி அல்ல. ஒருகால் இராமனே அதை உணர்ந்தது போல் கம்பனும் காட்டுகிருன்.

இல்லறந் துறந்த நம்பி யெம்மனோர்க் காகத் தம்பி
வில்லறந் துறந்த வீரன் தோன்றலால் வேத நல்நூல்

இல்லறம் புரிந்து நின்ற நிலைகள் திரு மாற
நல்லறந் துறந்த நோன்பி னெனையுற னோற்ப லென்றான்.

— அரசியல், 43

வாலியை மறைந்து நின்று கொன்றது வில் அறம் துறந்ததாயிற்று. அத்தீமையைப் போக்க, நோன்பு செய்வது அவசியமாய்த் தோன்றிற்றுப் போலும்! இது, எவ்வாறு இருப்பினும், பகைமையை மேற்கொண்ட வாலி மனம் திரும்பச்செய்தது கவனிக்கற்பாலது. சுக்கிரீவன் பாலுள்ள கோபமெல்லாம் ஆறி, அவனுக்காக இராம னிடம் பரிந்து பேசவும் ஆரம்பித்து விடுகிறான் :

ஓவிய வுருவ நாயே னுளதொன்று பெறுவ துன்பால்
பூவியல் நறவ மாந்திப் புந்திவே றுற்ற போது
தீவினை யியற்று மேனு மெம்பிமேற் சீறி யென்மேல்
ஏவிய பகழி யென்னும் கூற்றினை யேவ லென்றான்.

— வாலிவதை, 127

இன்னுமொன் றிரப்ப துண்டா லெம்பியை யும்பி மார்கள்
தன்முனைக் கொல்வித் தானென் றிகழ்வரேற் றடுத்தி தக்கோய்
முன்முனே மொழிந்தா யன்றே யிவன்குறை முடிப்ப தையா
பின்னவன் வினையின் செய்கை யதனையும் பிழைக்க லாமோ ?

— வாலி, 128

வாலிக்குத் தன் தம்பியின் பலவீனம் தெரியும். தம்பி மதுபானத்தால் மாறுபட்டபோதும், இராமன் அவன் பால் பொறுமை காட்டவேண்டுமாம். தன்மேற் போட்ட பாணத்தை அவன்மேல் போட்டுவிடக் கூடாதாம். இது மட்டுமா ? அண்ணனைக் கொன்று தான் வாழ்ந்தா னென்று தன் தம்பியை, இராமன் தம்பியர் இகழ்ந்திடக் கூடாதாம். சற்று முன்னே சுக்கிரீவன் உயிரை வாங்க நினைத்த வாலிக்கு இப்போது தம்பியின் உயிரைப்பற்றி மட்டுமல்ல, மானத்தைப் பற்றியுங்கூட என்ன என்ன கவலைகளெல்லாம் வந்துவிட்டன ! இதுவன்றோ உண்மை யான சகோதரத்துவம்! வாலி மகன் அங்கதனும், தன் தந்தையைக் கொல்லக் காரணமாக இருந்த சிற்றப்ப னோடு உறவாடுகிறான்.

இராவணன் தம்பி விபீஷணனுக்கு, சீதையைக் கவர்ந்த தன் அண்ணனுடைய நடத்தை பிடிக்கவில்லை.

சீதையை விட்டுவிடுவதே வெற்றியாகும் என்றெல்லாம் அண்ணனோடு வாதாடுகிறான். அண்ணன் கேட்கும் வழியாக இல்லை. ஆகவே விபீஷணன் இராமனிடம் வந்து அடைக்கலம் புகுகின்றான். இராமனுடைய ஆலோசனையாளரில், அனுமன் நீங்கலாக மற்ற யாவரும் விபீஷணனைச் சேர்க்கலாகாதென்று வாதாடுகிறார்கள். ஆனால் இராமன் ஏற்றுக்கொள்ளுகிறான். அடைக்கலம் மட்டுமா? சகோதரனாகவே ஏற்றுக்கொள்கிறான்.

குகனொடு மைவ ரானேம் முன்புபின் குன்று சூழ்வான்
மகனொடு மறுவ ரானேம் எம்முழை அன்பின் வந்த
அகனமர் காத லைய நின்னொடு மெழுவ ரானேம்
புகலருங் கானந் தந்து புதல்வராற் பொலிந்தா னுந்தை.

— விபீடணன், 146

விபீஷணனுக்கும் தசரதன் தந்தையாம். மக்கட்பேறு இல்லாமல் தவித்துக்கொண்டிருந்த தசரதன் மக்களைப் பெற்றுக்கானகத்தில் இழந்தான். ஆனால் கானகத்திற்குப் போனது யோகமாகிவிடுகிறதாம்! நான்கு புதல்வர்களை யுடைய அவன் எழு புதல்வர்களை அடைகிறான். குகனோடு நால்வர் ஐவராகின்றனராம்; சுக்கிரீவனோடு அறுவராகின்றனராம்; இப்போது தன் மனையாளைத் தூக்கிச் சென்ற அரக்கன் தம்பியோடு எழுவராகின்றனராம்.

இராவணன் தம்பியர்களுள் கும்பகர்ணன் வீராதி வீரன்; மகாயோக்கியன், சிறந்த அறிவன். இலங்கையை அனுமன் சுட்டெரித்துவிட்டானென்று அவமானத்தாலே புழுங்கிக்கொண்டிருந்த அண்ணனைப் பார்த்து, "பிறனில் விழைவானுக்கு மானமேது?" என்று இடித்துரைக்கிறான்.

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றோ வான்ற வொழுக்கு

என்ற உண்மையை எவ்வாறு வற்புறுத்துகிறான்! இலங்கையில், "வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்" சீதை பொருட்டால் போகிறதே என்று கவலைப்படுகிறான். என்றாலும், அண்ணன்பால் உள்ள அபிமானத்தால் இராமனோடு சண்டைக்கு எழுகிறான். கும்பகர்ணனின் உண்மையான மனப்பான்மையைத் தெரிந்து, இராமன்

விபீஷணனை அழைத்துவரச் செய்கிறான். கும்பகர்ணன் இசையவில்லை. தன்னை வளர்த்த அண்ணனுக்காகத் தன் உயிரையும் கொடுக்கவேண்டுமாம். விபீஷணன் இராமனோடு சேர்ந்தது நலமாம். அது விபீஷணனுக்கு மட்டுமல்ல, இலங்கைக்கும் நலமாம். இவ்வாறு சொல்லி விபீஷணனை அனுப்பிவிட்டு இராமனோடு போர் புரிகிறான்; தோல்வி அடைகிறான். மரணம் சமீபிக்கவே, விபீஷணனைப் பற்றிய கவலை மேலிடுகிறது. இராமனிடம் தம்பிக்காகத் தானும் அடைக்கலம் வேண்டுகிறான். இராவணன், உடன்பிறப்பு என்கிற பயன் ஓராதவனும். விபீஷணனைக் காணில் கொல்லுவானும். ஆதலால்,

> உம்பியைத்தா னுன்னைத்தா னுமனைத்தா னொருபொழுதும்
> எம்பிபிரி யானாக வருளுதியான் வேண்டினேன்
>
> — கும்ப, 358

என்கிறான்.

இவ்வாறாக, கம்பன் காவியலோகத்தில் இராமன் அன்பெனும் ஆகர்ஷண சக்தியால் யாவரையும் இழுத்துக் கொள்ளுகிறான். அச்சக்திக்குள் அகப்படாதவர்கள் பரகதியடைகிறார்கள்; இருக்கிறவர்கள் யாவரும் சமரசமாய் இராமனுக்குள் ஒன்றுபடுகிறார்கள். இவ்வுண்மையை அடிப்படையாய்க் கொண்டு காவியம் அமைந்திருக்கிறது. இராமன் நேராகச் சம்பந்தப்படாத இடத்திலுங் கூட, இராமனுடைய ஒளியே வேலை செய்வதாகக் கம்பன் வருணிக்கிறான். சுந்தர காண்டம் முழுவதிலும் இராமனுடைய செய்கை இல்லை. ஆனால் சீதை நினைப்பதெல்லாம் இராமனைத்தான். அநுமன் வீரச் செயல்களுக்கெல்லாம் காரணம் 'உள்ளுறையும் அழகனே'. ஆகவே கதாநாயகனுடைய சிறப்பு எக்காவியத்திலும் அமையாத வண்ணம் அமைந்திருக்கிறது.

இதற்குச் சில ஆட்சேபங்கள் எழலாம். பரதனை, குகன் "ஆயிரம் ராமர் நின்கேழ் ஆவரோ" என்றும், கோசலாதேவியார், "எண்ணில் கோடி இராமர் நிகராவரோ" என்றும் சொல்லியிருப்பது கதாநாயகன் சிறப்புக்கு முரண்பாடாகத் தோன்றலாம். பரதனுடைய தியாகம், இராமனுடைய சிறப்புக்கு அடிப்படையாக

இருந்தபோதிலும், பரதன் இராமனுக்கு உட்பட்டவன்; பரதனுடைய தியாகத்திற்கெல்லாம் காரணம் இராமன் பாலுள்ள அன்பே. பதினன்கு ஆண்டுகள் கழிந்து இராமன் அயோத்திக்கு வருகிறுன் என்று கேள்விப் பட்டவுடனே பரதன் நிலைமை என்ன?

வேதியர் தமைத்தொழும் வேந்தனைத்தொழும்
தாதியர் தமைத்தொழுந் தன்னைத் தான்றொழும்
ஏதமொன் றுணர்குறு திருக்கு நிற்குமால்
காதலென் றதுவுமோர் கள்ளின் றேற்றமே.

— மீட்சி, 256

கைகேசி போட்டி கட்டிவிட்ட பரதன் நிலைமை இது.

அனுமனை,

செவிக்குத் தேனென இராகவன் புகழினைத் திருத்தும்
கவிக்கு நாயகன்

என்று கம்பன் சிறப்பிக்கிறுன். அதுவுமல்லாமல் இராமனே அனுமனை,

என்றும்,

நாட்படா மறைக ளாலு நவைபடா ஞானத் தாலும்
கோட்படாப் பதமே யைய குரக்குருக் கொண்ட தென்றுன்

என்கிறுன். என்றுமுள்ள வேதங்களாலும், குற்றமற்ற ஞானத்தாலும் அறியப்படாத வார்த்தைதான் குரங்கு உருவாகியிருக்கிறதாம். அவன், உலகுக்கெல்லாம் ஆணியாம்; வேதக்கடலின் காட்சியாம்; ஆயினும் அவனுக் குள்ளுறைந்து வேலை செய்வது இராமனேயாம்.

கம்பன் தமிழர் நாகரிகத்தையும், ஆரிய நாகரிகத் தையும் சமரசப்படுத்துகிறுன். தேவர்களை மானிடம் வெல்லும் முறையாக அவன் கண்டது அன்பும், உயிரினை யும் பிறனுக்கீயும் வழியமும் ஆம்.

ஆவுக் காயினு மந்தணர்க் காயினும்
யாவர்க் காயினு மெளியவர்க் காயினும்
சாவப் பெற்றவ ரேதகை வானுறை
தேவர்க் குந்தொழுந் தேவர்க ளாகுவார்.

— அகத்திய, 21

---

4. கம்பன் கனவு

[சா. கணேசன்.]

மகா கவிகளைப் போலக் கனவு காண்பவர்களை எங்குமே காண முடியாது. நம்முடைய அறிவுக்கெல்லாம் எட்டாத எத்தனையோ அற்புதமான கனவுகளை அவர்கள் கண்டுகொண்டே இருப்பார்கள். உலகிலே எங்கும் காணமுடியாத ஒரு மகோந்நதமான நாட்டை மகாகவிகள் தங்கள் காவியத்திலே உண்டாக்கி விடுவார்கள். கோடானுகோடி செலவில், நூற்றுக்கணக்கான தச்சர்கள் (Engineers) கூடி, பல்லாயிரக்கணக்கான வேலையாட்களைக்கொண்டு நிர்மாணிக்கிற பெரிய பெரிய நகரங்களும், அங்குக் காணப்படும் அழகோவியங்களும் சிதைந்து அழிந்து மறைந்து மண்ணோடு மண்ணாய்ப் போனாலுங் கூட, இந்தக் கவிதைத் தச்சர்கள் கட்டிய மாளிகைகளும், உயிர் ஓவியங்களும் அழியாத அமரத்துவத்தைப் பெற்று விடுகின்றன. ஆகவேதான், அறிஞர்களைப் பாராட்டுகிற உலகம் மேதைகளை வணங்குகிறது; புலவர்களை வாழ்த்துகிற உலகம் கவிகளை ஏத்துகிறது. இல்லையா?

உலகம் கண்ட மகா மேதைகளிலே, கவிகளிலே, சிறந்து விளங்குபவன் கம்பன். அதனாலேதான் மன்னாதி மன்னர்களும் அவனைக் கவிச்சக்கரவர்த்தி என்று மனமார, வாய் மணக்கப் போற்றி நின்றனர். அத்தகைய மகாகவி ஒரு நாட்டைப்பற்றிக் கனவு காணுகிறான். நாடு எல்லா வகையிலும் குறைவற்றதாய் இருக்கவேண்டும்; எவ்வகைப் பண்பாடுகளும் நிறைந்திருக்கவேண்டும் என்பது கவியின் ஆசை.

நாடு என்றால் எல்லா வளமும் இருக்கவேண்டும்; மக்களுக்கு முதற்படியான தேவை உணவு. உணவு முட்டின்றிக் கிடைக்க நிலவளம் சிறந்திருக்க வேண்டும். நீர்வளம் பெருகினாலன்றோ நிலவளம் சிறக்கும்? நீர்வளம் நிறைந்திருக்கவேண்டின் நாட்டின் எல்லாப் பாகங்களிலும் ஜீவ நதி ஓடவேண்டும். ஜீவ நதியைத் தருவதற்கு மரம் அடர்ந்த வானளாவிய மலைத்தொடர் வேண்டும். அப்பொழுதுதான் மேகம் கடல்நீரை மொண்டு கொண்டு

வந்து மலைமீது பொழியும்; மலையில் விழுந்த மழை நீர் ஆருய்ப் பெருகும்: இவற்றை எல்லாம் நன்குணர்ந்த கவி, தான் கனவு காணும் நாட்டை வருணிக்கத் தொடங்கு கிருன். முதலில், மேகத்தை நமக்குக் காட்டுகிருன்.

வெள்ளை வெளேரென்று வானம் முழுதும் பரந்திருக் கிற மேகம் கடலை நோக்கி ஓடுகிறது. கடலில் விழுந்து நீரை மண்டுகிறது. பிறகு கன்னங்கரேல் என்று திரும்பி வருகிறது. நாம் எல்லாம் எத்தனையோ தரம் பார்த்த சங்கதிதான். ஆனல், கம்பன், அழித்தற் கடவுளான சிவனைப்போலச் சென்ற மேகம், காத்தற் கடவுளான திரு மாலைப் போலத் திரும்புகிறது என்கிருன். நிறத்தால் மட்டும் அல்லாமல், குணத்தாலும் இந்த உபமானம் எவ்வளவு பொருத்தமாய் அமைந்திருக்கிறது?

இப்படியாக வரும் மழைமுகில், இடையிலே வழி மறித்தாற்போல ஓங்கி வளர்ந்து, பச்சைப்பசேல் என்ற தோற்றத்துடன் நிற்கும் மலைமீது பொழிகிறது மழை வெள்ளத்தை. கருமுகிற் கூட்டம் மலையைக் கவிந்து கொண்டிருப்பது கவிக்கு, கடலே மலையைச் சூழ்ந்து கொண்டு விட்டதாய்த் தோன்றுகிறது. அதற்கு ஓர் அழகான அற்புதமான காரணமும் கிடைத்துவிடுகிறது. கடலுக்கு மலை மாமன்முறை வேண்டுமாம். எப்படி? ஆறு ஒரு பெண். அது கடலை மணந்துகொள்ளுகிறது. இந்தக் கதை நமக்குத் தெரிந்ததுதான். ஆற்றைத் தந்தது மலை. மலையை ஆண் என்று சொல்லுவது நமது சம்பிரதாயம். எனவே, ஆற்றின் தந்தையாகிய மலை, ஆற்றை மணந்து கொண்ட கடலுக்கு, மாமன் முறை ஆகவேண்டும் என்பது சரிதானே?

காதலிமீதுள்ள அன்பின் பெருக்கினுல், மாமன் வெயி லால் வாடி வதங்கிவிட்டான் என்று எண்ணிக் குளிர்ந்த நீரினுல் மலையைக் குளிப்பாட்டுகிறதாம்.

> பம்பி மேகம் பரந்தது பானுவால்
> நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினுன்
> அம்பின் ஆட்டுதும் என்(று)அகன் குன்றின்மேல்
> இம்பர் வாரி எழுந்தது போன்றதே.

[பம்பி - நெருங்கி ; பானுவால் - சூரியனால் ; நம்பன் மாதுலன் - நம்பிக்கைக்குரிய மாமனர் ; அம்பின் - நீரினால் ; ஆட்டுதும் - முழுக்காட்டுவோம் ; இம்பர் வாரி - இவ்வுலகக் கடல்.]

மேகங்கள் ஒரு துளிகூடத் தங்களிடம் வைத்துக் கொள்ளாமல், பிரதி உபகாரத்தையும் எதிர்பாராமல், ஒரே அடியாய்க் கொட்டிவிடுகிற தன்மை, கவிக்கு எத்தனையோ தாதாக்களையும், அவர்களுடைய வள்ளன்மையையும் நினைப்பூட்டுகிறது. அதனாலேதான்,

உள்ளி, உள்ளஎல்லாம் உவந்(து) ஈயும் அவ்
வள்ளியோரின் வழங்கின மேகமே !

என்று வியப்படைகிறான். 'உள்ளி' என்றால் 'நாம் இப்படிக் கொடுப்பதால் இம்மையில் எவ்வளவு கீர்த்திப் பிரதாபமும், மறுமையில் எவ்வளவுக்கு ஸ்வர்க்கபோகமும் கிடைக்கும் என்று கணக்குப் போட்டுப் பார்த்து'' என்று அர்த்தம இல்லை. இப்படித் தருமத்தையே வியாபாரமாகக் கருதிச் செய்பவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள் என்பது வாஸ்தவந்தான். அதனாலேதான் அப்படி எண்ணிவிடப் படாது என்று சொல்லவேண்டியிருக்கிறது. 'உள்ளி' என்றால் 'இன்னும் வழங்குவதற்கு நம்மிடம் என்ன இருக்கிறது என்று துருவிப் பார்த்து' என்றுதான் பொருள் கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் கவியின் உபமானம் எவ்வளவு நயம்பட விளங்குகிறது என்பது புலப்படும். இந்தச் சந்தர்ப்பத்திலே,

இம்மைச் செய்தது மறுமைக்(கு) ஆம்எனும்
அறவிலை வாணிகன் ஆ(அ)ய் அல்லன்

என்னும் உறையூர் ஏணிச்சேரி முடமோசியாரின் வாக்கு நமக்கு நல்ல வழிகாட்டுவதாக அமைந்திருக்கிறது.

மழை ஏராளமாகப் பெய்துவிட்டால் போதுமா ? பாலைவனமானால் நிலம் உறிஞ்சக்கூடப் பற்றாது. மலை அல்லவா ? சேதமின்றித் தழைக்கிறது ; வளருகிறது என்று கூடச்சொல்லலாம். தினந் தினம் அளவாகத் தந்துகொண்டே இருக்கிறது. 'நீதிநெறி கடவாத செங்கோல் மன்னவன் கீர்த்தியா, அல்லது உண்மையை அறியும் அந்தணர்க்குக் கொடுத்த தானந்தானா ?' என்று வியக்

கிருன், வியப்படையச் செய்கிருன் கவி. அப்படித் தழைக் கிறது தண்ணீர்.

மானம் நேர்ந்(து) அறன் நோக்கும் மனுநெறி
போன தண்குடை வேந்தன் புகழ்என,
ஞானம் உன்னிய நான்மறை யாளர்கைத்
தானம் என்னத் தழைத்தது நீத்தமே.

[நேர்ந்து - குறிக்கொண்டு; மனுநெறி போன - மனித தருமப்படி நடப்பதிலே பெயர்போன; தண்குடை வேந்தன் - அன்போடு காக்கும் மன்னன்; ஞானம் உன்னிய - உண்மை அறிவில் கருத்தை ஊன்றிச் செலுத்திய; நீத்தம் - பெருநீர்; வெள்ளம்.]

விருப்பு வெறுப்பில்லாமல் சகல ஜீவன்களுக்கும் உதவு கிறது ஆறு. இப்படி ஓடி வருவது நமக்கெல்லாம் வெறும் நதிதான். கவியின் கண்ணுக்கு அது எப்படித் தோன்று கிறது? அது கேவலம் நதியல்ல; அதில் வருவது வெறும் தண்ணீரும் அல்ல. அது சர்வகோடி ஜீவர்களுக்கும் தாய்ப் பால் என்கிருன். பாட்டைப் பார்ப்போம்:

இரவி தன்குலத்(து) எண்ணில்பல் வேந்தர்தம்
பரவு நல்ஒழுக் கின்படி பூண்டது
சரயு என்பது தாய்முலை அன்ன(து)இவ்
உரவு நீர்நிலத்(து) ஒக்கும் உயிர்க்கெலாம்.

[இரவி - சூரியன்; பரவு நல் ஒழுக்கின்படி பூண்டது - எல்லோரும் புகழ்ந்து பாராட்டும் ஒழுக்கத்தைப்போலவே, தன்ருல் துன்பம்சேராமல் துயரம் துடைக்கும் தன்மையை மேற்கொண்டது; உரவு நீர் நிலம் - நீர் சூழ்ந்த நிலம்.]

தண்ணீரின் இன்றியமையாத தன்மையை ஆழமாக ஊன்றி நோக்கினல் இது அப்படியே சுத்தமான உண்மை என்பது தெளிவாகப் புலப்படும்.

மலைச் சிகரங்களுக்கு இடையிலேதான் உற்பத்தியா கிறது ஆறு. ஆனல் பல கிளைகளாகப் பெருகி ஓடுகிறது; அருவியாய் ஒழுகுகிறது. இறுதியில் கடலில் கலந்துவிடு கிறது. இவற்றை எல்லாம் நாம் காண்கிருேம். இந்த நிகழ்ச்சிகளை வைத்துக்கொண்டே கம்பன் உண்மைத் தத்துவத்தை நமக்கெல்லாம் உணர்த்திவிடுகிருன்.

மலையில் உற்பத்தியாகிக் கடலில் சங்கமமாகும் நதி எப்படி உண்டாயிற்று? எந்தக் கடலில் சங்கமமாகிறதோ, அந்தக் கடலின் நீர்தான் ஆவியாக மேகமாக மாறி, மழையாகப் பெய்து, கால்களாக ஓடி, அருவியாகக் குதித்து, நதியாகப் பெருகி, தான் சேரவேண்டிய இடத்தை நோக்கிப் பிரயாணம் செய்கிறது. முடிவிலே, தான் எங்கிருந்து வந்ததோ அங்கேயே, அந்தக் கடலிலேயே, ஒன்றிவிடுகிறது.

முதலில் கடல் என்று ஒன்றுயிருந்தது. பிறகு அது எத்தனை நாமத்தையும், ரூபத்தையும் அடைகிறது! அங்கு இங்கு என்று சொல்ல முடியாதபடி எங்கும் நீக்கமற விளங்குகிறதே! இது என்ன பெரிய மாயையாக அல்லவா இருக்கிறது? எவ்வளவோ சமயிகள் எல்லாம் என் தெய்வம், உன் தெய்வம் என்று சொல்லுகிறுர்களே; அந்தக் கற்பனையையும் கடந்த முழுமுதலான கடவுளைப்போல அல்லவா இருக்கிறது?-இவ்வாறு சொல்லிக் கடவுள் தத்துவத்தின் உண்மையை நமக்கும் புலப்படுத்திவிடுகிறுன். ஆம்! மிக மிகப் பொருத்தமான உபமானம். அகண்டமாயிருக்கிற பரமான்மாவின் சிறு சிறு பொறிகள்தாம் ஜீவான்மாக்கள். ஜீவான்மா பரமான்மாவிலிருந்துதான் வெளிப்படுகிறது, கடலிலிருந்து நீர் ஆவிரூபமாகக் கிளம்புவது போல. ஆனுலும் நாம் எல்லாம் எண்ணிக்கொண்டிருக்கிறேம்: உயிர் வர்க்கம் எல்லாம் தாயின் கருவிலிருந்துதான் உற்பத்தியாகின்றன என்று. மலையிலிருந்துதான் நீர் உற்பத்தியாகிறது என்று சொல்லுகிறேம் அல்லவா? அதைப் போல. எப்படி ஓடி வருகிற ஆற்றில் உள்ள எல்லா நீர்த்திவலைகளும் நேரே ஓடிக் கடலை அடையாமல், வாய்க்கால்களாய் ஓடி, குளங்கள், ஏரிகள், வயல்கள், தோட்டங்களில் சென்று பாய்ந்து மாய்ந்துவிடுகின்றனவோ, அப்படியே ஜீவான்மாக்களிலும் எவ்வளவோ, தாங்கள் அடைய வேண்டிய லட்சியத்தை நோக்கிச் செல்லும் நெறியை விட்டு விலகிச் சென்று, வேறு இடங்களில் மீளமுடியாதபடி சிக்கிக்கொண்டு விடுகின்றன. இந்த ஆழமான கருத்தெல்லாம் பொதிந்து விளங்கும் கவியைப் பார்ப்போம்:

கல்லிடைப் பிறந்து போந்து
கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையில் மறைக ளாலும்
இயம்(ப)அரும் பொருள்ஈ தென்னத்
தொல்லையில் ஒன்றே ஆகித்
துறைதொறும் பரந்த சூழ்ச்சி,
பல்பெரும் சமயம் சொல்லும்
பொருளும்போல் பரந்த(து) அன்றே.''

[கல்லிடை - மலையிடை; நீத்தம் - வெள்ளம்; மறை - வேதம்; தொல்லையில் - பழமையில், முதல்முதலில்.]

இந்த நீர் எங்கெல்லாம் எப்படி எப்படிப் பரந்து நிற்கிறது? உடம்பெல்லாம் உயிர் எப்படி விரவி நிற்கிறதோ, அப்படி நீர் இங்கெல்லாம் பரந்து கிடக்கிறது. ஒரே ஆன்மா பலவேறு தோற்றமும், அளவும், அமைப்பும், பெயரும் கொண்ட எண்ணற்ற உடல்புகளில் எப்படி விரவி நிற்க முடியும்? இந்த அற்புதமான உண்மையை ஒரே தண்ணீர் பலவேறு தோற்றமும், அளவும், அமைப்பும், பெயரும் கொண்ட எண்ணற்ற இடங்களில் விரவி நிற்கிற தன்மையைக் கொண்டே மிகத் தெளிவாக விளக்கி விடுகிறான். முன்னே கண்ட கவிக்கு மேலும் விளக்கம் கூறுவதுபோல அமைகிறது அடுத்த கவி. அதையும் பார்ப்போம் :

தாதுகு சோலைதோறும்,
சண்பகக் காடு தோறும்,
போ(து)அவிழ் பொய்கை தோறும்,
புதுமணல் தடங்கள் தோறும்,
மாதவி வேலிப் பூக
வனந்தோறும், வயல்கள் தோறும்,
ஓதிய உடம்பு தோறும்
உயிர்என உலயா(து)அன்றே.''

[தாது உகு சோலை - மகரந்தப்பொடி உதிரும் மலர் நிறைந்த மரங்கள் மண்டிய சோலை; போது அவிழ் பொய்கை - இதழ் விரியும் மலர் செறிந்த பொய்கை; புது மணல் தடம் - அவ்வப்பொழுது புதிய மணல் பரப்பப் படும் குளிக்கும் குளம்; பூகவனம் - கமுகந் தோட்டம்; உலாயது - சஞ்சரித்தது.]

நீர்வளம் மிகுந்திருக்க நிலவளம் எப்படிச் செழித்துள்ளது என்பதை வந்து காணுமாறு நம்மை எல்லாம் அழைக்கிறுன் கவி. கம்பன் அழைத்துவிட்டால் நம்மால் போகாமல் இருக்க முடியுமா? சென்று பார்க்கலாம். "இதோ பார்" என்று காட்டுகிறுன் கம்பன். பார்க்கிறேம். நாம் பார்ப்பது என்ன? வயலா இது? ஏதோ ராஜதர்பார் நடைபெறும் கொலுமண்டபம் போல அல்லவா இருக்கிறது! திகைப்போடு கம்பன் முகத்தைப் பார்க்கிறேம். நம்மையே நோக்கிக் கொண்டிருக்கும் கம்பன், "ஆம்! இது மகாராணி மருதாயி நாச்சியார் கொலுவீற்றிருக்கும் இடந்தான்" என்கிறுன்.

தண்டலை மயில்கள் ஆடத், தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க,
தெண்திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம்வீற் றிருக்கும் மாதோ.

[தண்டலை - சோலை; விளக்கம் - விளக்கு; கொண்டல்கள் - மேகங்கள்; முழவின் - மத்தளம் போல; தெண்திரை - தெளிந்த அலைகள்; எழினி - நாடகத்திரை; தேம்பிழி மகரயாழின் - மதுரகீதம் பொழியும் மகரயாழ் என்னும் வாத்தியத்தைப் போல; மருதம் வீற்றிருக்கும் - நன்செய் நிலம் கொலுவீற்றிருப்பதைப் போலக் கம்பீரமாக இருக்கிறது.]

வயலே இவ்வளவு கம்பீரமாக இருந்தால் இந்நாட்டு மக்கள் எவ்வளவு இறுமாப்போடு இருப்பார்கள்? ஏதோ ஒருவாறுய் நம் உள்ளம் ஊகித்துக் கொண்டு விடுகிறது. இருந்தாலும் நேரே சென்று கண்ணுலே காணவேண்டும் என்று ஆசை தூண்டுகிறது. நமது எண்ணத்தைக் கண்டுகொண்ட கம்பன், "நாட்டிற்குள் சென்று பாருங்கள்" என்று அனுமதி தருகிறுன். புறப்பட்டு விடுகிறேம். நாட்டிற்குள்ளே நுழைந்துவிட்டோம்.

இது என்ன? எங்கே பார்த்தாலும் ஒரே கொண்டாட்டமாயிருக்கிறது? திருமண விழா ஒரு பக்கம்; மற்றெருபுறம் நடப்பது சங்கீதக் கச்சேரியா? ஆகா! எப்படி இருக்கிறது? பருந்தோடு நிழல் செல்வது மாதிரி அல்லவா பாட்டோடு இசை இயங்கிச் செல்கிறது? அமுதத்தினும் சுவை மிக்க அரிய சொற்பொழிவுகளைக் கேட்டுக்

கொண்டு, அதிலே திளைத்திருக்கிறார்கள் ஒருபால். இன்னும் ஒரு பக்கத்திலே கோவில் திருவிழா நடைபெறுகிறது! என்ன குதூகலம்! என்ன நாகரிகம்! "வாழ்க்கை என்றால் வாழ்க்கை! இது அல்லவா வாழ்க்கை!" என்று ஆச்சரியப் படுகிறோம்.

பொருந்திய மகளி ரோடு வதுவையில் பொருந்து வாரும்
பருந்தொடு நிழல்சென்(று) அன்ன இயல்இசைப் பயன்துய்ப் பாரும்
மருந்திலும் இனிய கேள்வி செவிஉற மாந்து வாரும்
விருந்தினர் முகம்கண்(டு) அன்ன விழாவணி விரும்பு வாரும்.

[பொருந்திய மகளிர் - உடல், அறிவு, வயசு முதலியவற்றால் தமக்குப் பொருத்தமான பெண்கள்; வதுவை - கல்யாணம்; பருந்தொடு நிழல் சென்று அன்ன - உயரத்தில் பறக்கும் பருந்தின் அசைவுகளுக்கும் கதிக்கும் ஏற்க எப்படிப் பருந்தின் நிழலும் இயங்குகிறதோ, அதைப்போல; இயல் - பாட்டு; இசை - பாட்டிற்கு இசையும் ராக தாளங்கள்; இயலின் பயனையும், இசையின் பயனையும், அநுபவிக்கிறார்கள் என்பதை "இயலிசைப் பயன் துய்ப்பார்" என்று காட்டுகிறான்; மருந்திலும் - அமுதத்தைப்பார்க்கிலும்; செவி உற - காதில் பட; மாந்துவார் - ஆர்வத்தோடு கிரகித்துக்கொள்வார்.]

திருவிழாக் கொண்டாட்டத்தை அந்நாட்டினர் மிகவும் அநுபவிக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க வந்த கவி, 'விருந்தாளிகளை எவ்வளவு ஆசையுடன் வரவேற்பார்களோ அவ்வளவு ஆசையோடு' என்று கூறி அந்நாட்டாரின் பண்பாட்டை நமக்கு மிக நன்றாக விளக்கி விடுகிறான்.

ஊருக்குள்ளே நுழைந்து பொதுவாகப் பார்த்த நாம் ஒரு வீட்டிற்குள்ளாவது நுழைந்து அவர்களுடைய மனை வாழ்க்கை எப்படி இருக்கிறது என்று பார்க்க வேண்டாமா? இவ்வளவு நேரம் பார்த்தவையெல்லாம் வெறும் வெளி ஆடம்பரங்களா? அல்லது அவர்கள் உண்மையிலேயே மேலான பண்பட்ட வாழ்க்கை வாழுகிறார்களா? இதைத் தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா? வீட்டிற்குள்ளே நுழைந்து உண்டி முதலியவற்றைப் பார்த்தால் இவர்களின் உண்மை நிலை வெளிப்பட்டுப் போய்விடுகிறது. சரி ஒரு வீட்டிற்குள் போகலாம்.

என்ன, எல்லா வீடுகளும் ஒரே மாதிரியாக அல்லவா காணப்படுகின்றன? எளியவர், செல்வர் என்று இங்கே தாரதம்மியம் இல்லையா என்று சந்தேகம் உதிக்கிறது. சரி; எதிரே தெரிகிற அந்த வீட்டிற்குள் போகலாம். வீட்டிற்குள்ளே நுழைகிறோம். உள்ளே சென்றதும் திகைத்துப் போய்விடுகிறோம். "இது என்ன சத்திரமா? வீடென்று எண்ணித் தெரியாமல் நுழைந்துவிட்டோமா?" என்றெல்லாம் மலைக்கிறோம். அவ்வளவு பெயர் பட்டகசாலையில் இருக்கிறார்கள். ஒரு பெரிய மனிதர் வந்து, "எல்லாரும் சாப்பிட வாருங்கள்" என்று அழைக்கிறார். 'பேஷ்! ரொம்பச் சரியான நேரத்திலேதான் வந்திருக்கிறோம்!' என்று நம்மை நாமே மெச்சிக்கொள்ளுகிறோம்.

எல்லாரும் உள்ளே சென்று வரிசையாகப் போடப் பட்டிருக்கும் ஆசனங்களில் அமருகிறோம். ஒவ்வொருவருக்கும் முன்னே பெரிய பெரிய தலைவாழை இலை போடப்பட்டிருக்கிறது. உணவு பரிமாறப்படுகிறது. சாப்பாட்டைப் பார்த்தால் பெரிய கல்யாண விருந்தோ என்று சொல்லும்படி இருக்கிறது. மாம்பழம் முழுசு முழுசாய்க் கழுவித் துடைத்துப் போடப்பட்டிருக்கிறது. பலாச் சுளைகள் விதை எடுக்கப்பட்டுத் தேனில் ஒரு முழுக்கு முழுக்கிவிட்டு ஒன்றோடு ஒன்றாய்த் தழுவிக்கொண்டு கிடக்கின்றன. பொன்னிறமான தங்க வாழைப் பழம் தோலுரிக்கப்பட்டு உண்போரின் வாயைப் பார்த்துக் கொண்டு தவங்கிடக்கின்றன. எத்தனையோ விதமான வர்க்கான்னங்கள் பலவித நிறமும் மணமும் படைத்துப் பந்தி பந்தியாய்க் காணப்படுகின்றன. வர்க்கான்னம் என்றால் நாம் செய்கிறோமே, அதைப் போன்றதா? எவ்வளவோ சோற்றில் கொஞ்சம் தேங்காய்ப் பூவைத் தூவி விட்டு, ஒன்றிரண்டு முந்திரிப் பருப்பையும் காட்டிவிட்டு, சிறிது நெய்யையும் மேலாகத் தடவிவிட்டு அதைத் தேங்காயன்னம் என்று சொல்லுகிறோம். ஒரு சட்டிச் சோற்றில் ஆழாக்கு மோரையும் உப்பையும் போட்டுப் பிசைந்து விட்டு, கொஞ்சம் கடுகு மிளகாய் பெருங்காயம் கறிவேப்பிலையைத் தாளித்துக் கொட்டிவிட்டுத் ததியோதனம், பகாளபாத் என்றெல்லாம் தடபுடலான பெயர்களால் மயக்கிவிட முயல்கிறோமே! அப்படியா இருக்கிறது, இப்

போது நாம் பார்க்கும் வர்க்கான்னம்? மூக்கையும் கண்ணையும் திறந்துகொண்டு பாருங்கள். ஏராளமான பருப்பு வகைகளுக்கிடையில் வழிந்தோடும் நெய்யருவிக்கிடையில் ஏதோ சில சோற்றுப் பருக்கைகளும் காணப்படுகின்றன. தயிர்ச்சாதம் எப்படி இருக்கிறது என்று பாருங்கள். அதோ மூலையிலே இருக்கிறதே அதுதான் தயிர்ச் சாதம். நம் வீட்டுத் தயிர்ச்சாதத்தைப் போல வெள்ளையாக இல்லையே என்று சந்தேகப் படாதீர்கள். இங்கேயெல்லாம் தயிர்ச்சாதம் சிவப்பாகத்தான் இருக்கும். சோற்றையே காணுமே என்று சந்தேகப்படுகிறீர்களா? செந்தயிர்க் கட்டிகளுக்கிடையில் அங்கங்கே முத்துப் பதித்தது போலத் தெரிகிறதே, அதுதான் சோறு.

பாலை நன்றாக வற்றக் காய்ச்சிப் பிரை ஊற்றுவதாலேதான் தயிரின் நிறம் சிவப்பாகவும், ஏதோ அல்வாத் துண்டுகள்போல் மென்று தின்னக்கூடியதாகவும் காணப்படுகிறது. இப்படி நாம் பார்க்கும் இந்தச் சாப்பாடு நித்தியப்படி ஒவ்வொரு வீட்டிலும் நடைபெறும் சாதாரணச் சாப்பாடுதான் என்று தெரிந்துகொள்கிறோம்.

முந்துமுக் கனியில், நானு முதிரையில் முழுத்த நெய்யில்
செந்தயிர்க் கண்டம், கண்டம், இடைஇடை செறிந்த சோற்றில்
தந்தம்இல், இருந்து, தாமும் விருந்தொடும், தமரி னோடும்
அந்தணர் அமுதர் உண்டி அயில்வுறும் அமலைத்து எங்கும்.

[முந்து முக்கனி - முதல்தரமான மா, பலா, வாழைப் பழங்கள். நானுமுதிரை - பலவகைப் பருப்புகள்; முழுத்த - கொட்டிய; செந்தயிர்க் கண்டம் - சிவப்பு நிறமான தயிர்க் கட்டி; கண்டம் - கற்கண்டு; தமர் - சுற்றத்தார்; அயில்வுறும் - உண்ணும்; அமலை - ஓசை.]

சரி; இந்த நாட்டில் பெண்களின் நிலை என்ன? பெண்களைக் கொண்டல்லவா நாட்டின் சிறப்பை அளக்க வேண்டும்? அவர்களின் வாழ்க்கை முறை எப்படி இருக்கிறது? நாகரிகம் முதிர்ந்துவிட்டதாய்க் கொக்கரிக்கும் மேல்நாடுகளைப் போல, இந்த நாட்டாரும் மெல்லியரான பெண்களை முரட்டுத்தனமான சுரங்கத்தொழில் போன்றவற்றில் ஈடுபடச் செய்கிறார்களா? அல்லது ஆண்களின் ஏதேச்சாதிகாரத்தால் கல்வியறிவும், செல்வ உரிமையும்

இன்றி வெறும் போகப் பொருளாகவே ஆக்கியிருக்கிறார்களா? இதை எல்லாம் கண்டறிய வேண்டும் என்று உள்ளம் கருதுகிறது. இந்த விஷயத்தைப் பரிசிலனை செய்வதற்காக நூற்றுக்கணக்கான வீடுகளுக்குள் நுழைந்து சோதனை போடுகிறோம். ஒரே திகைப்பு, மலைப்பு. கண்ட காட்சி அப்படிச் செய்துவிடுகிறது.

பெண்கள் எல்லாம் உயிர் ஓவியம் என்று சொல்லும்படி அவ்வளவு அழகு நிறைந்தவர்களாக இருக்கிறார்கள். நல்ல, முறையான வழியிலே ஈட்டிய பொருள் அவர்கள் ஆட்சியில் குவிந்து கிடக்கிறது. தகுந்த கல்விச் செல்வத்திலும் நிறைந்தவர்களாக இருக்கிறார்கள். இந்த இரு பெரும் செல்வமும் குடத்துள் விளக்காய் ஒளி மழுங்கியா கிடக்கின்றன? இல்லை; மலர்ந்து எங்கும் மணம் பரப்பி யாவருடைய கருத்தையும் கவருகின்றன. எப்படி மலர்ந்து மணக்கிறது தெரியுமா? வந்தவர்க்கு இல்லை என்று சொல்லாது ஈவதன் மூலமும், சிறந்த விருந்துகள் நடத்தி அளவளாவுவதன் மூலமும் பொழுதைப் பயனுறக் கடத்துகிறார்கள்.

பெருந்த டம்கண் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்,
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே?

[பெருந்தடம் கண் - பெரிய விசாலமான கண்; பிறைநுதல் - பிறைச்சந்திரனென்னும்படி வடிவமும் அவ்வளவு ஒளியும் கொண்ட நெற்றி; பொருந்து செல்வம் - தீமையற்ற நல்ல வழியில் ஈட்டிய செல்வம்; வைகலும் - தினப்படியும்.]

"நல்ல காட்சிகளையே கண்டுவிட்டு ஒரேயடியாய் வியந்துகொண்டும், புகழ்ந்துகொண்டும் இருக்கலாமா? நாணயத்தின் இரு புறத்தையும் சோதிக்காமல் முடிவுக்கு வரமுடியுமா?" என்று நமக்குள் ஓர் அன்பர் தர்க்க சாஸ்திரம் படிக்கிறார். எனவே, மற்றொரு புறத்தையும் காண நமது உள்ளம் அவாவுகிறது. "இங்கே அகால மரண விகிதம் என்ன? தண்டனை பெறுவோர் தொகை எவ்வளவு? கோர்ட்டு, வக்கீல் ஐயா வீடு எல்லாம் எங்கே இருக்கின்றன? விபசார விடுதி, கள்ளுக்கடை, சூதாட்டக்

கூடம்-இவை எல்லாம் இருக்கும் இடம் எங்கே? இவற்றை எல்லாம் போய்ப் பார்த்தால் அல்லவா அங்கெல்லாம் மக்கள் எப்படிக் கெட்டழிகிறார்கள் என்பதை உணரலாம்? அதன் பிறகுதான் இந்த நாட்டின் உண்மையான தரம் எப்படிப்பட்டது என்று முடிவு செய்யலாம்'' என்று மற்றோர் அன்பர் விரிவுரை நிகழ்த்துகிறார்.

"ஆம்; அதுதான் சரி; அப்படித்தான் செய்யவேண்டும்," என்று எல்லோரும் ஏகமனதாய்த் தீர்மானித்துக் கொண்டு புறப்படுகிறோம். அழுகுரல் நமது காதிலே படவில்லை; டவாலிச் சேவகன் நிற்கும் எந்த மண்டபமும் நமது கண்ணில் படவில்லை; வக்கீல் ஐயாவின் பெயர் தொங்கும் பலகையையும் காண முடியவில்லை. ஒருகால் இந்த ஊரில் உள்ள வக்கீல் ஐயாக்கள் எல்லாம் பேர் போன வக்கீல்களாக இருப்பார்களோ என்று சந்தேகங் கூடத் தோன்றுகிறது. சூதாட்டக்கூடம் எதையும் காண முடியவில்லை. 'டவுன் கிளப்' என்ற நாகரிகப் பெயருடன் கூட ஒரு போர்டும் கண்ணுக்குப் புலப்படவில்லை. 'நம்பர்' போட்ட கள்ளுக்கடைகள் தாம் தென்படவில்லை என்றால் 'பார் ரூம்' அல்லது அந்த ஹோட்டல் இந்த ஹோட்டல் என்ற பெயருடன் கூடப் போர்டுகளும் காணக் கிடைக்கவில்லை. 'இது என்ன ஐயா ஆச்சரியம்! இந்த நாட்டில் விளம்பரம் இல்லாமலேயே காரியம் நடக்கிறதோ?' என்று நமது மனம் ஐயுறுகிறது. இப்படி எண்ணிக்கொண்டே சந்தியில் நிற்கிறோம்.

எதிரில் ஒரு பெரியவர் வருகிறார். இவரைக் கேட்டாவது தெரிந்துகொள்ளுவோம் என்று எண்ணி அவரை நெருங்கி, "நமஸ்காரம்'' என்று சொல்லுகிறோம். அவரும் பதில் வணக்கம் செய்துவிட்டு, "என்ன சங்கதி?'' என்று கேட்கிறார். நாம் நமது சந்தேகத்தை அவரிடம் கூறிக் கேள்வி மாரியைப் பொழிகிறோம். அவர் சொல்லுகிறார் - இல்லை - பாடுகிறார் :

கூற்றம் இல்லைஓர் குற்றம் இலாமையால்;
சீற்றம் இல்லைதம் சிந்தையில் செம்மையால்;
ஆற்ற நல்லறம் அல்ல(து)இ லாமையால்;
ஏற்றம் அல்லது இழிதக(வு) இல்லையே!

[கூற்றம் - எமன்; இங்கே, அகால மரணம்; சீற்றம் - கோபம் அல்லது தண்டனை ; ஆற்ற - செய்வதற்கு ; நல்லறம் அல்லது - நல்லறம் அல்லாத நியவழிகள் ; ஏற்றம்-உயர்வு ; இழிதகவு-பழிபாவம்.]

"அப்படியா? இவ்வளவு சிறப்பான நாட்டில் ஏன் அன்னசத்திரம் போன்ற அற நிலையங்கள் காணப்படவில்லை?"

வன்மை இல்லைஓர் வறுமை இன்மையால்.

"இது மட்டுந்தானா இல்லை? இன்னும் எங்கள் நாட்டில் இல்லாதவற்றையும் கூறுகிறேன் கேளுங்கள்" என்று மேலும் பாடுகிறார் :

திண்மை இல்லைநேர் செறுநர் இன்மையால்
உண்மை இல்லைபொய் உரையி லாமையால்.

என்று சொல்லிக்கொண்டே வரும்போது, நம்மில் ஒரு கிண்டல்காரப் பேர்வழி, "அப்படியானால் உங்கள் நாட்டில் கம்பனைப் போன்ற மகா மேதைகளுக்கும் இடம் இல்லையோ?" என்று கேட்கிறார்.

"ஆம்; ரொம்பக் கணக்காய்க் கேட்டுவிட்டீர்கள்; நீங்கள் நினைப்பது முற்றும் சரி; நூற்றுக்கு நூறு உண்மை" என்று சொல்லிவிட்டுக் கடைசி அடியைப் பாடுகிறார் :

ஒண்மை இல்லைபல் கேள்வி ஓங்கலால்.

பாட்டை முடித்துவிட்டு மேலும் பேசுகிறார் ; "ஓர் இடத்தில் ஒரு வள்ளல் இருக்கிறான் என்றால் அதன் அர்த்தம் என்ன? பல்லாயிரக் கணக்கான தரித்திரர்கள் இருக்கிறார்கள் என்பதுதான் ; இல்லையா? ஒரு பெரிய பயில்வான் இருக்கிறான் என்றால் எண்ணற்ற நோஞ்சல்கள், பலவீனர்கள் இருக்கிறார்கள் என்பதுதானே பொருள்? உண்மைக்கு ஓர் அரிச்சந்திரன் என்றால் மற்றவர்கள் எல்லாம் புரட்டர்கள்தாம் என்பது புலப்படவில்லையா? அறிஞன் ஒருவன் இருக்கிறான் என்று பெருமைப்படுவது எத்தனையோ அறிவற்ற முண்டங்களைப் பெற்றிருக்கிறார்கள் என்று சிறுமைப்படுத்தவில்லையா?" என்று சொல்லிவிட்டுப் பாட்டை மறுபடியும் எக்களிப்போடு பாடுகிறார் :

வண்மை இல்லைஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லைநேர் செறுநர் இன்மையால்
உண்மை இல்லைபொய் உரை இலாமையால்
ஒண்மை இல்லைபல் கேள்வி ஓங்கலால்.

[வண்மை-தாராளமான ஈகை; திண்மை-பேராற்றல்; செறுநர்-பகைமையால் சண்டை செய்வோர்; ஒண்மை-அறிவுப் பிரகாசம்; கேள்வி-சர்ச்சை அல்லது கேட்பது.]

"இந்த மாதிரியான சிறப்புக்கள் எல்லாம் வஞ்சனை அறியாத மக்கள் வாழும் கிராமங்களில் மட்டுந்தானா? அல்லது நகரங்களிலும் உண்டா?" என்று கேட்கிறோம் பெரியவரை. பெரியவர் சொல்லுகிறார்:

"கிராமங்களில் மட்டுமல்ல, தம்பிகளே! மேகமும் சமுத்திரமுங்கூட வெட்கப்படும்படி அவ்வளவு பலமாயும் தொடர்ந்தும் ஒலித்துக்கொண்டே இருக்கும் முரசுகளை உடைய நகரங்களில் வாழும் மக்களிடையிலும் இப்படித் தான். பெரிய நகரமாயிற்றே, அங்கெல்லாம் தெருக் காவல் உண்டா அல்லது வீட்டுக்கு வீடு தனிக்காவலாவது உண்டா? திருடன் இருந்தால் அல்லவா காவலுக்கு அவசியம்? திருடனும் இல்லை; காவலும் இல்லை. திருட்டுக்கூட ஏன் ஏற்படுகிறது? இல்லாமையினாலேதான். இரப்பதற்கும் இல்லாமைதானே காரணம்? இங்கே இரப்பவர்களே இல்லையாதலால், கொடுப்பவர்களையும் காண முடியாது.

தெள்வார் மழையும், திரைஆழியும் உட்க நாளும்
வள்வார் முரசம் அதிர்மாநகர் வாழும் மாக்கள்
கள்வார் இலாமைப் பொருள்காவலும் இல்லை யாதும்
கொள்வார் இலாமைக் கொடுப்பார்களும் இல்லை மாதோ.

[தெள்வார்-தெளிவாய்ச் சரம்போலத் தொங்கும்; திரை ஆழி-அலைகடல்; உட்க - அச்சம் அடைய; வள்வார் முரசம் - வளவிய வாரால் கட்டப்பட்ட முரசு; அதிர் - சப்திக்கும்; மாக்கள் - மக்கள்; கள்வார் - திருடுபவர்.]

"முற்றப் படித்து முடித்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் யாரும் எங்கள் நாட்டில் இல்லை; ஆனால் கல்வியறிவு இல்லாதவர்கள் என்று யாரையும் சொல்லி

விட முடியாது. எல்லாரும் மேலும் மேலும் படித்துக் கொண்டே இருக்கிறார்கள். இது தவிர, பொருட் செல்வம், பயிர்ச் செல்வம் முதலிய பல செல்வங்களிலும் எல்லோரும் குறைவற்றவர்களாய் இருக்கிறார்கள். கல்விச் செல்வம் மட்டுமல்ல, பொருட் செல்வங்கூட எங்கள் நாட்டிலே எல்லாருக்கும் பொது உடைமையாய் இருக்கிறது. ஆதலால் இந்த நாட்டிலே, உடையவர்கள் இல்லாதவர்கள், ஏழை பணக்காரன், உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பாகுபாடெல்லாம் காண முடியாது.

கல்லாது நிற்பார் பிறர்இன்மையின், கல்வி முற்ற
வல்லாரும் இல்லை; அவைவல்லர்அல் லாரும் இல்லை
எல்லாரும் எல்லாப்பெரும் செல்வமும் எய்த லாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ.

"இவ்வளவு மகோன்னதமான நாட்டை எப்படி ஐயா கம்பன் உண்டாக்கினான்?" என்று நாம் பெருமூச்சு விடுகிறோம். "எந்த நாட்டையும் இப்படிச் செய்துவிடலாம்; கம்பன் அதற்கும் வழி எழுதி வைத்திருக்கிறான்" என்று பெரியவர் சொல்லுகிறார். "என்ன வழி ஐயா அது?" என்று ஒரே ஆர்வத்தோடு கேட்கிறோம். பதில் சொல்லுகிறார் பெரியவர்:

"இதைப்போன்ற இன்பம் கனியும் நாட்டை, போக பூமியை, உண்டாக்க வேண்டுமென்றால், தம்பிமார்களே! நீங்கள் செய்ய வேண்டியது ஒரே ஒரு வேலை; அதுதான் கல்வி! ஆம், கல்வி! கல்வி ஒன்றுதான் அது! கல்வி என்ற ஒரே விதையை நீங்கள் விதைத்துவிட்டால் அது முளைக்கும்; வளரும்; வளர்ந்து 'கேள்வி' என்ற கிளைகளை நாலு திசையிலும் பரப்பும். அந்தக் கிளைகளில் 'நல்ல முயற்சி' என்னும் தளிர்கள் தளிர்க்கும். 'அன்பு' என்னும் மொட்டுகள் அரும்பும். அன்பாய், அரும்பிய மொட்டு அறமாய் மலரும். அற மலர் 'போக' க் கனியை, இன்பப் பழத்தை, கொடுக்கும். அந்த இன்பக் கனியின் மணத்தைத்தான் நீங்கள் இவ்வளவு நேரமாக அனுபவித்துக்கொண்டிருந்தீர்கள் தெரிந்ததா? ஒரு நாடு செம்மையடைய, பண்பாட்டை அடைவதற்கு, அடிப்படை கல்விதான். நாட்டு மக்களுக்கு எல்லாம் கல்வியை,

உண்மையான பயனுள்ள கல்வியைப் புகட்டிவிட்டால் எல்லா இன்பமும் எளிதாய்க் கிட்டிவிடும்'' என்று கம்பன் சொல்லுகிருன்.

ஏகம் முதற்கல்வி முளைத்(து) எழுந்து, எண்இல் கேள்வி
ஆக முதல்திண் பணைபோக்கி அருந்த வத்தின்
சாகம் தழைத்து அன்(பு) அரும்பித் தருமம் மலர்ந்து
போகம் கனிஒன்று பழுத்தது போலும் அன்றே!

[ஏகம்-ஒன்றே ஒன்று ; முதல்-வித்து ; எண்இல்-ஏராளமான - கேள்வி-சர்ச்சை அல்லது கேட்பது ; பணை-கிளை ; அருந்தவம் - நல்ல முயற்சி ; சாகம் - இலை ; போகம் - இன்பம் ; போலும் - போல இருக்கிறது.]

பாட்டை முடிக்கிருர் பெரியவர். "இதுதான் காந்தியடிகள் கனவு கண்டுகொண்டிருக்கிற சர்வோதய நாடா ?'' என்று வியக்கிறோம். நன்றியறிதலுடனும், வணக்கத்துடனும் பெரியவரைப் பார்த்து, "ரொம்ப நமஸ்காரம் ; நீங்கள் செய்த இந்தப் பேருதவியை நாங்கள் என்றும் மறக்கமாட்டோம்'' என்று சொல்லிவிட்டு, 'இனி நாட்டிலே அடிப்படையான கல்வியைப் புகட்டுவதே நமது திருப்பணி' என்று மனப்பூர்வமாய்ப் பிரதிக்ஞை செய்து கொண்டு திரும்புகிறோம் நாம். நம்மை அறியாமலே உள்ளம், "சபாஷ் கம்பன்" என்கிறது. வாயோ, "கம்பன் வாழ்க!'' என்று வாழ்த்துகிறது.

———

5. கைகேயி

[கே. ஞானம்பாள், எம். ஏ.]

பெருங் காப்பியங்களை இயற்றுவது எளிதல்ல என்று அறிவோம்; ஆனால் அவைகளைத் துய்ப்பதும் எளிதல்ல. கவியரசர்கள் பாத்திரம் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு புதிராக, விளக்க முடியாத புதிர்ப்பிண்டமாகச் சமைத்து விடுகிறார்கள். நுணுகி நுணுகி ஆராய்ந்து, ஒவ்வொரு பாத்திரத்தின் குணகுணங்களைத் தராசில் இட்டு, மதிப் பிட்டுப் படிக்கும் ரஸிகர்கள்கூடப் பொதுவாகக் கவி ஒரு நாடக பாத்திரத்தைச் சித்திரித்திருக்கும் முறையை அதிகமாக நோக்குவதேயல்லாமல், எவ்வெப் பண்புகள் அப்பாத்திரத்தை ஆக்கின என்பதைக் குறித்துச் சிந்திப் பது குறைவே. இதனால் ஏற்படுவது யாதெனில் காரியங் களைக் காரணங்களாகவும், பண்புகளை அவற்றின் பயனாக வும், நன்மையின் நிரிபைத் தீமையின் செயலென்றும் கொள் ளுகிறோம். ஒரு பாத்திரத்தின் பண்பு வளர்ச்சியையும் பெரு மையையும் கண்டு துய்த்து இன்புற்று மதிப்பிடக்கூடிய வரும், சிற்சில சமயங்களில் அப்பாத்திரத்தின் வாயிலாகக் கவி தெரிவிக்க விரும்பும் நீதியைத் தம் மனப் பார்வையி னின்றும் நழுவ விட்டுவிடுகிறார்கள். அச்சமயங்களில் ரஸிகர்கள், ஒரு பாத்திரத்தினது நலந்தீங்குகளின் அளவு நம் மனப்பான்மையைப் பொறுத்திருக்கிறது என்பதையும் மறந்துவிடுகின்றனர். நாம் எந்த அளவில் ஒரு பாத்தி ரத்தினிடம் அநுதாபம் கொள்ளுகிறோமோ, அந்த அளவுக்குத் தகுந்தாற்போல், அப்பாத்திரத்தினது நலந் தீங்குகள் விளக்கம் எய்துகின்றன.

இவ் வநுதாபந்தானும் நமது அறிவையும், உணர்ச்சி நிலையையும், பிற மன நலங்களையும் பொறுத்ததாகும். சிறந்த பண்புகளையுடைய பாத்திர விசேஷங்கள் உணர்ச்சி வேகங்களினால் பலபடியாக ஈர்க்கப்பட்டு, எவ்வகையான முடிவுகளை அடைந்துள்ளன என்று தெரிவது நமக்குப் பெரும் பயனைத் தருவதாகும். இம்முறையில் கைகேயி யின் பண்புகளை நோக்குவோம்.

துன்பியல் நாடகங்களுக்கு அடிப்படையான தோற்று வாய், பேருணர்ச்சிகளின் வாயிலாகப் பிறக்கும் சூழ்ச்சிகள்

அதுவும் உயர்ந்த பண்புகளின் பயனாக ஏற்படும் சூழ்ச்சிகளே ஆகும். எந்நாட்டிலும், எந்தக் கவியும் தன் பாத்திரங்களை முற்றும் தீயவர்களாக அமைப்பதில்லை. உலகியற்கையும் அவ்வாறு அமைந்திலது.

ஒருவன் அறிவானும் எல்லாம்யா தொன்றும்
ஒருவன் அறியா தவனும் - ஒருவன்
குணனடங்கக் குற்ற மிலானும் ஒருவன்
கணனடங்கக் கற்றானும் இல்.

- சிறுபஞ்ச. 31.

இந்த முறையை ஒட்டியே கம்பனும் தன் கதா பாத்திரங்களில் ஒருவரையாவது முற்றிலும் தீயவராகச் சித்திரிக்கவில்லை. தலைசிறந்த காவியங்களில் கவிகள் பெண்களின் பலபல இயல்புகளைப் பலபல சந்தர்ப்பங்களின் மூலமாக விளக்குகின்றனர். தென்னாட்டின் கவியரசனான கம்பன் பெண்மையின் மகோன்னத நிலையைச் சீதையின் வடிவில் சித்திரித்துக் காட்டினான். அதே சமயத்தில், பெண்மையின் சாதாரண லௌகிக தத்துவத்தைக் கைகேயியிடம் கண்டான். பொதுவாக, சோக நாடகங்களில் நாடக நிகழ்விற்கு ஒரு பெண் காரணமாக இருந்தால், அவளை மிகக் கோரமாக வரைவதுதான் ஆசிரியர்களின் இயல்பு. ஆனால் கம்பனுடைய கைகேயி அப்படிப்பட்டவள் அல்ல. சரித்திரம் ஆரம்பிக்கும்போது அவள் செம்மையும், சீர்மையும, அறிவும், அளியும் நிறைந்தவளாகவே தோன்றுகிறாள். இதுவே அவளது இயற்கைப் பண்பு.

அவளுடைய வெளித்தோற்றத்தைக் கூறும் கவி,

ஈாற்கடல் படுமணி களினம் பூத்ததோர்
பாற்கடல் படுதிரைப் பவள வல்லியே
போற்கடைக் கண்ணொளி பொழியப் பொங்கணை
மேற் கிடந்தாள்

என்றான். இனி இந்நிலையில் அவளது அகத் தோற்றத்தையும் காணுவோம். மந்தரை நஞ்சு தோய்ந்த தன் சொற்களால், "பிணங்குவான் பேரிடர் பிணிக்க கண்ணும், உணங்குவா யல்லை யுறங்கு வாயென்று" தூண்டிய

போது, சற்றும் கலக்கமின்றி, "என் சிறுவர்கள் தெவ்வடு சிலைக்கை யேந்தியவர்; மேலும் அறம் திறம்பாதவர்: ஆகவே எனக்கு வரும் இடர் யாதுளது?" என வினவுகிருள். ஒருகால் சிறுவர் என்ற நிலையில் பொதுவாக நால்வரையும், சிறப்பாகப் பரதனையும் குறித்துப் பெருமை கொண்டிருத்தல் கூடும். அவ்வையத்தை நீக்க,

பராவரும் புதல்வரைப் பயந்த யாவரும்
உராவரும் துயரைவிட் டுறுதி காண்பரால்
விராவரும் புவிக்கெலாம் வேத மேயன
இராமனைப் பயந்தவெற் கிடருண் டோவென்ருள்.

ஆகவே தெளிவாக மாற்ருளுடைய மைந்தனையும், தன் மைந்தனைப் போற்றிப் பெருமை கொள்ளும் பண்பு கோசலையிடம் இருந்தது போல, கைகேயியிடமும் இருந்தது. ஆயினும் இத்தகைய இனிமையை மூடக்கூடிய சில பண்புகளும் மறைந்து கிடந்தன. கூனி பலவகைகளில் அவள் உள்ளத்தைக் கலக்கும் மொழிகளை வெகு சாதுர்யமாகக் கையாண்டாள். முதல் முதலாக, "ராமன் முடிசூடுவதால் உன் நிலைக்கு இழுக்கு ஏற்படும்" என்ருள்; அதனுல் பயன் இல்லை. "உன் மாற்ருளான கோசலை 'எரியும் சிந்தனை' உடையவளாதலால் தன் மதியினுல் தனக்குப் பெரு வாழ்வைப் பெற்றுக் கொண்டாள்" என்ருள். அப்பொழுதும் கைகேயி தன் தன்மையைக் கைவிடவில்லை. கூனியை நோக்கி,

"எனக்கு நல்லையும் அல்லைநீ என்மகன் பரதன்
தனக்கு நல்லையும் அல்லையத் தருமமே நோக்கின்
உனக்கு நல்லையும் அல்லைவந் தூழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லினை மதியிலா மனத்தோய்"

என்று அவளை வெகுண்டு கூறினள். கூனி அதனேடு நிறுத்தவில்லை.

"புரியுந் தன்மக னரசெனிற் பூதல மெல்லாம்
விரியுஞ் சிந்தனைக் கோசலைக் குடைமையா மென்ருற்
பரியு நின்குலப் புதல்வற்கும் உனக்குமிப் பார்மேல்
உரிய தென்னவ ளுதவிய வொருபொரு ளல்லால்.'

பாலில் தயிர்த்துளி தெறித்தது. அது உறைவதில் இயற்கைக்கு மாருனது ஒன்றும் இல்லை. கைகேயி தசரத

னது தனி அன்பிற்கு உரியவளாய் இருந்து தன் அருளை மக்களிடத்துச் சொரிந்தவள். 'அரசிற் பிறந்து பின் அரசில் வளர்ந்து அரசில் புகுந்து பேரரசி' ஆனவள். அத்தகைய ஒருத்தி, தன் சிறப்பையும் தனிப்பதவியையும் இழந்து, பிறரிடமிருந்து ஒரு பொருளைப் பெறுவதென்றாலே அது முடியாததொரு செய்கை. அதிலும் தன் மாற்றாள், அவள் மைந்தன் இவர்களது முகத்தில் எப்பொழுது இன்னகை அரும்பும், அப்பொழுது அவர்களிடமிருந்து ஒரு தயவைப் பெறலாம் என்று காத்திருப்பது மனித சுபாவத்திற்கு இயற்கை ஆகுமா? ஆகாது. ராமன் அறத்தின் நாயகன்தான்; நீதியின் வடிவந்தான்; அருளின் இருப்பிடந்தான். ஆயினும் அரசுரிமை பெற்ற பின் அவனிடத்துக் கைகேயிக்குத் தசரதனிடத்து இருந்த செல்வாக்கைப் பெற முடியுமா? மேலும் தன் கணவனது செய்கையால் ஏற்படும் ஒரு நன்மையைக் கொண்டு, பெருமையடைந்து, கோசலை தன்னை எள்ளி நகையாட மாட்டாள் என்பது என்ன உறுதி? இயற்கையில் மிருதுவான சுபாவம் உள்ளவளாதலால் கூனி அவளைச் சவுக்கால் அடிப்பது போன்ற சொற்களால் தன் நிலையை உணரச் செய்கிறாள். "பரியு நின்குலப் புதல்வற்கும் உனக்குமிப் பார்மேல் உரியதென்? அவள் உதவிய பொருளல்லால்" என்பன கடுஞ் சொற்கள் அல்லவா? இக்கடுமையான நிலையைக் கைகேயி மனத்தால் கண்டு நடுங்கினாள். ஒரு பெண், அதுவும் பெருமையும் செல்வமும் கர்வமும் உள்ள பெண், கண்டு அஞ்சும் நிலைதான் இது.

இவ்வச்சத்தைத்தான் ஷேக்ஸ்பியர், கிளியோபாட்ரா வாயிலாகக் காட்டினார். கிளியோபாட்ரா கடைசி நிலையை அடைந்தபோது அவள் தனது சுதந்தரம் போனதைக் குறித்து வருந்தவில்லை. கைதியாக ரோமாபுரியின் தெருக்களில் தன்னை இழுத்துச் செல்லும்போது, தன் மாற்றாளான ஆக்டேவியா இகழ்ச்சியுடனும் பெருமையுடனும் தன்னை நோக்கும் பார்வையைத்தான் அஞ்சினாள். உடனே அதைக்காட்டிலும் எகிப்தில் ஒரு சாக்கடையே மேலென்று துணிந்தாள். கைகேயியும் பலவிதங்களில் கிளியோபாட்ராவைப் போன்றவளே. மன்னனது மனத்திற்கு உகந்த மனைவியாக விளங்கியவள்; மக்களின் உள்ளத்தைத்

தன்னெளியால் தன் அடிமை ஆக்கியவள்; அவள் அத்தகைய நிலையை இழந்து, மாற்ருனுடைய தயவை நாடி நிற்க வேண்டுமென்ருல் அது முடியும் காரியமா? கிளியோபாட்ரா தன் உயிரை இழக்கத் துணிந்தாள். கைகேயி தன் உயிரினும் சிறந்த அறத்தை இழக்கத் துணிந்தாள். அம்முடிவில் மனித இயற்கைக்கு மாறுபட்டது ஒன்றும் இல்லை. ஆயினும் உண்மை நிறையும் அருளும் உடைய சுபாவமாக இருந்தால், இப்பரீக்ஷையில் அது வெற்றி பெற்றிருக்கும். சாதாரண மனப்பான்மையாதலால் அது சோதனையில் தோற்றுவிட்டது,

இதற்குப் பின் ஏற்படும் மாறுதல்தான் வியக்கத் தக்கதாக இருக்கிறது. மென்மையும் இனிமையும் நீங்குகின்றன. காரியமே உயிர் என்ற மனப்பான்மை ஏற்பட்டு விடுகிறது. தற்பெருமையும் பதவிமோகமுமே உச்சத்தில் இருப்பினும், இவற்றுக்கு அநுகூலமான பல குணங்கள் ஒன்ருேடு ஒன்று கலந்து மின்னி மறைந்து மயிற்ருேகையின் நிறங்களை ஒத்துத் தோன்றி மறைகின்றன. நாமும் வியந்து வருந்தி நிற்கிருேம். பவளவல்லியேபோல் ஒரு முறை தோன்றிய கைகேயி,

> கவ்வி வீழ்ந்தென நாடக மயில்துயின் றென்னக்
> கவ்வை கூர்தரச் சனகியாங் கடிகமழ் கமலத்
> தவ்வை நீங்குமென் றயோத்திவந் தடைந்தவம் மடந்தை
> தவ்வை யாமெனக் கிடந்தனள் கைகயன் தனயை.

அரசனும் தன் கண்ணினும் சிறந்த ராமன் முடிசூடப் போகிருன் என்ற களிப்பில் அவளை அடைகிருன். அவள் கோலத்தைக் கண்டு மனம் வெதும்பி, அவளைச் சமாதானம் செய்கிருன். அவள் கேட்ட வரங்களைக் கொடுப்பதாகக் கூறுகிருன். கைகேயியும், "இரண்டுவரங்களில் ஒன்றினுல், என்சேய் உலகாள்வது; மற்ருென்றினுல் சீதை கேள்வன் போய் வனமாள்வது" என்று கூறினுள். எத்தகைய மாறுதல்! 'இராமனைப் பயந்தவெற்கிடருண்டோ' என்று கூறியவள் அவன் பெயரையும் சொல்ல மனமின்றிச் சீதை கேள்வன் என்று குறித்தாள். இது வெறுப்பினுல் ஏற்பட்டதா? அவள் தன் செயலின் தன்மையையும், பயனையும் தானே அறிந்து அவற்றைக் கண்டு கூசினுளா?

யாரால் சொல்ல முடியும்? வரங்களைப் பெற்ற பின் கைகேயியினது உள்ளத்தில் ஒரே ஓர் எண்ணந்தான் குடிகொண்டது; தன்னலம் என்பதுதான். எவ்விதத்திலும் தன் எண்ணத்தை நிறைவேற்றி, ஆசையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற தீர்மானம் ஏற்பட்டு விட்டது. ஆகவே தன் வாழ்க்கையில் சிறந்தவொன்றைப் பலியிடவும் துணிகிறாள். மன்னன் இறைஞ்சி, "பெண்ணே, வண்மைக் கேகயன் மானே, பெறுவாயேல் மண்ணே கொள் நீ, மற்றையதொன்றும் மற' என்று கெஞ்சியும் அவள் மனம் நெகிழவில்லை. தன் வீட்டில் அதிதியாக வந்த மன்னனை, அரசுரிமைக்காகக் கொலை செய்யத் துணிந்த லேடி மாக்பெத்கூட அவ்வரசன் தன் தகப்பனைப் போல இருந்ததால், அவனைத் தன் கையால் கொல்லவில்லை. தன் இருதயத்தில் வீற்றிருப்பதாகக் கூறப்பட்ட மன்னன், தன்னுடைய இயற்கையான பெண்மைக்குரிய கருணையையும், தான் பிறந்த குலத்தினது தந்தையினது கருணையையும் நோக்கி, 'வண்மைக்கேகயன் மானே' என்று மன்றாடிய போதும் அவள் மனம் இரங்கவில்லை. காரணம் யாதோ?

ஒருகால் கைகேயி மனம் இரங்கி ராமன் காட்டிற்குப் போக வேண்டாம் என்று கூறியிருப்பாளேயாயின், பரதன் நாடாள்வது முடிவதொன்றா? அயோத்தி மக்கள் பரதனது ஆட்சிக்கு அடங்கி வாழ இசைந்தாலும், "இட்டாத வேற்கண் சிறுதாய் இளர் ஞாலத்தை ஒரு வரத்தால் தனக்கு மீட்டாள்; மற்றொரு வரத்தால் தன் முன்னவனுக்கு வனத்தை அளித்தாள்" என்று கேட்டபோது, 'யாவராலும் மூட்டாத காலக் கடைத்தீயென மூண்டெழுந்தவன்' பேசாமல் இருப்பானா? எனவே கைகேயியினது கொடுமையிலும் முறை இருக்கிறது. லேடி மாக்பெத் அரசுரிமைக்காகத் தன் கணவனது மனச்சாந்தியை மட்டும் பலியிட்டாள். கைகேயியோ கணவனது உயிரையே பலியிட்டாள். பண்பு வளர்ச்சியில் லேடி மாக்பெத் சாதாரணப் பெண்ணினின்றும் அதிகமாக உயர்ந்தவள் அல்ல; ஆனால் கைகேயியோ உச்சியில் நின்றவள். உயர்ந்த பண்புகளால் ஊக்கப்படும் இத்தகையதொரு பாத்திரம் தன்னிலையிலிருந்து நெகிழ்ந்து

விழ ஆரம்பித்தால், அது சென்று நிற்பது மிகத் தாழ்ந்த நிலையில்தான். அத்தகைய பாத்திரங்களுக்கு வீழ்ச்சியில் இடைநிலை என்பதே இல்லை. சம்பரனுடன் தசரதன் நடத்திய போரில், தன் உயிரையும் பொருட்படுத்தாமல் கணவனுடன் போர்வீரனைப்போல் நின்று அவன் உயிரைக் காப்பாற்ற உதவியதொரு வீரமகளின் மனோதிடம், இச்சமயத்தில் தன் முடிவினின்றும் தயங்காமல் இருப்பதற்கு உதவியது. ஆனால் வேறொரு முடிவிற்காகச் சம்பரனுடன் நடந்த போரில் எந்த உயிரைக் காப்பாற்ற முயன்றாளோ, அதே உயிரை இன்று தானே போக்கும் கருவியும் ஆனாள். அன்று தியாகத்தினால் புகழின் உச்ச நிலையை எய்தினாள். இன்றோ பதவிமோகத்தினால் பழியின் கோரமான அடிநிலையை அடைந்தாள். இத்தகையோர் எந்நாட்டிலும் எந்நாளிலும் உளராவர். வசிட்டர் கடிந்து கூறி இனி என்ன பயன்? ஒரு பழிக்கு இடம் கொடுத்த பின் ஒவ்வொரு பழியாகச் சேரவேண்டியது தானே? ராமனை நோக்கி,

> "ஆழிசூ ழுலக மெல்லாம் பரதனே ஆள நீபோய்த்
> தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு
> பூழிவெங் கான நண்ணிப் புண்ணியத் துறைகளாடி
> ஏழிரண் டாண்டின் வாவென் றியம்பின னரசனென்றாள்."

இதற்கு ஈடாக எதைச்சொல்லுவது? கம்பனுடைய சிருஷ்டியின் திறன் மிகவும் உயர்ந்துவிட்டது. கைகேயியைப் பொய்யும் பழியும் நிறைந்த பேயென்று தள்ளவும் முடியவில்லை. தான் செய்வது இன்னதென்று அறியாத பேதை என்று ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை. தன் எண்ணம் நிறைவேறுவதற்காக லேடி மாக்பெத்தைப் போல இவளும் மீண்டும் மீண்டும் தீமையில் மூழ்குகிறாள். அவள் தன் கணவனைத் தூண்டி அரசனைக் கொல்லுமாறு செய்தபோது, எவ்வாறு சுற்றமும் உறவும் பெற வேண்டிய எல்லா உரிமைகளையும் தன் வஞ்சனையாலும், மோசத்தாலும் கொன்றாளோ, அதைப்போலவே இவளும் தனது எண்ணம் நிறைவேறுவதற்காகத் தன் குலமும், வாழ்வும், தானும் காட்ட வேண்டிய சிறப்பியல்புகளை மறந்து, சாகசத்திலிருந்து பொய் கூறவும் துணிந்தாள். இருந்தபோதிலும், கடைசியில் தன் செய்கையால் அவள்

பெற்ற பயனை நோக்கும்போது, நமக்கு அவளிடம் இரக்கமே தோன்றுகிறது. ஏனெனில் அவள் கொடுஞ் செயலுக்கும் சொல்லுக்கும் காரணமாயினும் தன்னளவில் முற்றும் தீயவள் அல்ல. அவளது கூரிய அறிவும், தளராத சிந்தையும், கலக்கம் இல்லாத துணிவும் அவளைப் பயங்கரமானதொரு தேவதையாகக் காட்டுகின்றன. அவளது செயலையும், உள்ளத்தின் போக்கையும் நோக்கும் போது நமக்கு நடுக்கம் ஏற்படுகிறது. ஏனெனில் அவள் எவற்றைத் தியாகம் செய்து, எத்தீமைகளைப் பெற்றாளோ அத்தீமைகள் மனித சுபாவத்திற்கு நெருங்கிய தொடர்புடையன. பொறாமை, தன்னலம் ஆகியவை யாரைத்தான் விட்டன? இவ்வளவுக்கிடையிலும், இறுதிவரையில் அவள் பேதைப் பெண்ணாகவே இருக்கிறாள்.

பரதன் நியாயத்தின் வடிவந்தான். சகல நன்மைகளையும் விட்டு, அரசைப் பெற்றுத் தந்ததற்கு அவள் பெற்ற கைம்மாறு, "நோயீரல்லீர்! நுங்கணவன் தன்னுயிர் உண்டீர்! பேயீரே! நீர் இன்னம் இருக்கப் பெறுவீரே! மாயீர் மாயா வன்பழி தந்தீர்" என்னும் பழிமொழியே. கூசாமல் படுக்கையில் படுத்திருப்பவனைக் கொல்லுமாறு ஊக்கியதொரு மனம் உடைந்து நித்திரையின்றி, இரவும் பகலும் ஓய்வில்லாமல் விழித்திருந்து, சித்தப் பிரமையுடன் நடக்கும் லேடி மாக்பெத்திடம் நம்மையும் அறியாமல் இரக்கம் தோன்றுவது போல, பரதனது சொல்லம்புக்கு இலக்காகி நிற்கும் பேதைக் கைகேயியிடமும் நமக்கு இரக்கம் தோன்றுகிறது. 'உன் கொடுமையும் பழியும் இதற்காகவா?' என்று சொல்லவும் வாயெடுக்கிறோம். நமது உணர்ச்சியும் யாதொரு கட்டிற்கும் அடங்காமல், அப்பாத்திரத்துடன் ஒரு வழி சென்று முடிகிறது. முடிவை அடைந்த பின்தான் அச்சூழ்ச்சியின் அளவும், அப்பாத்திரத்தினது கோரமும், பேதைமையும் நம்மைப் பிரமிக்கச் செய்கின்றன. பல உணர்ச்சிகளின் வேகமும், உள்ளத்தின் கடும்புயலும், அடங்கிய பின் கண்ணீரும் சோர்வுமே எஞ்சுகின்றன.

---

6 இராமன் தண்மையும் இலக்குவன் வெம்மையும்

[வித்துவான் கா. நயினர் முகம்மது]

கம்பராமாயணத்தில் சிற்சில இடங்களில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட சுவைகள் ஒத்து இயங்கக் காண்கின்ளேம். இராமபிரான் இயற்கையில் சாந்தமாம் தண்மை உடையவன். இலக்குவனே வெகுளியாம் வெம்மை படைத்தவன். தண்மையில் வெம்மை அடங்கிவிடுதல் போன்று இலக்குவனின் சீற்றமாம் வெம்மை, ராமனது சாந்தமாம் தண்மையில் அடங்கிவிடுகின்றது. இப்பண்பை விளக்கும் கட்டங்கள் மூன்று காட்டுவோம்.

மும்மைசால் உலகுக்கெல்லாம் மூல மந்திரத்தை முற்றும் அருளிய பெருமான் முடிசூடுதற்கு, வசிட்டமாமுனிவர் மந்திரச் சடங்குகளை ஆற்றினர். சிற்றன்னை பெற்ற வரத்தால் முடிசூடுதல் தலைப்பட்டது. இதை வசிட்டன் அயோத்தியில் உள்ளவர்க்கு அறிவித்தான். அதைக் கேட்டு,

ஆவும் அழுத ;அதன் கன்றழுத ; அன்றலர்ந்த
பூவும் அழுத ;புனற் புள்ளழுத ; கள்ஒழுகும்
காவும் அழுத; களிறழுத; கால்வயப்போர்
மாவும் அழுதன.

மாக்களின் அழுகை யொலியும், மக்களின் அங்கலாய்ப்பும் இலக்குவன் செவியில் விழுந்தன. சிற்றன்னை, தான் பெற்ற வரத்தால் அரசுரிமையைப் பெற்ருள். தன் தமையனுக்கு வனத்தை அளித்தாள் என்பதைக் கேட்ட இளையவன், பிரளய காலத்து நெருப்புப் போன்று கனன்று எழுந்தான். இலக்குவனின் கட்கடையிற் கோபத் தீ தெறித்தது. நெற்றியிற் புருவம் மேலேறிற்று. மெய்யில் வியர்வை அரும்பிற்று. பெருமூச்சு வெளிப்பட்டது. இவ்வுக்கிரத்தின்முன், விண்ணிற் செல்லும் இளஞ் சூரியனும் விலகிச் சென்ருன்.

கண்ணிற் கடைத் தீயுக நெற்றியிற் கற்றை நாற
விண்ணிற் சுடருஞ் செடு வெம்மையில் நீர் விரிப்ப
உண்ணிற்கும் உயிர்ப்பெனும் ஊதை பிறங்க நின்ற
அண்ணற் பெரியோன் தனதாதியின் மூர்த்தி யொத்தான்

என்று கவிஞர் வெகுளியின் ஓவியத்தை அமைக்கின்றார். விழிகளில் கோபத் தீ விளங்குவதும், புருவம் நெரிந்து நெற்றியில் ஏறுவதும், உடம்பில் வியர்வை மிகுதியாகத் தோன்றுவதும், உண்ணின்று உயிர்ப்பு எழுவதும் வெகுளியின் மெய்ப்பாடுகள். இம்மெய்ப்பாடுகளைக் கொண்ட இலக்குவன்வாயில் வெம்மை நிறைந்த சொற்கள் வெளிப்படுகின்றன. "ஓ, எனது சிற்றன்னை, சிங்கக் குட்டிக்கு இடுகின்ற ருசியுள்ள இறைச்சியை ஓர் அற்ப நாய்க்குட்டிக்கு இட நினைத்தாள் போலும்! இவள் அறிவின் திறம் அழகிது!" என்று கைகொட்டிச் சிரித்து ஆரவாரித்தான்.

சிங்கக்குருளைக்கிடு தீஞ்சுவை ஊனை நாயின்
வெங்கட்சிறு குட்டியை ஊட்ட விரும்பினாளால்
நங்கைக்கு அறிவின்றிறம் நன்றிது நன்றி தென்னாக்
கங்கைக் கிறைவன் கடகக்கை புடைத்து நக்கான்.

ஆரவாரித்த ஐயன் அரையில் உடைவாள் அசைத்தான். வில்லை ஏந்தினான். வீரக்கழலை வீக்கினான். அம்பறாத் தூணியை ஆர்த்தான். ஊழிக் காலத்து உருமேறு என்று சொல்லுமாறு வில் நாண்தொனி செய்து, "எம்பெருமானுக்கு முடி சூட்டுதற்குப் பகையாய் எவர் வரினும் அவர்களைக் கொன்று, அவர்களின் உடம்புகளைப் பெருங் குவியலாகக் குவித்து எம் அண்ணனுக்கு இன்றே முடி சூட்டுவேன், என் செயலைத் தடுக்க எவர் வரினும் வருக" எனப் போர்க்கு அறைகூவினான்.

புவிப்பாவை பரங்கெடப் போரில்வந் தோரை யெல்லாம்
அவிப்பானும், அவித்தவர் யாக்கையை அண்ட முற்றக்
குவிப்பானும், இன்றே என் கோவினைக் கொற்ற மௌலி
கவிப்பானும் நின்றேன்இது காக்குநர் காமின் என்றான்.

இங்ஙனம், போர்க்கு அறை கூவும் இலக்குவன் விண்ணவரும் மண்ணவரும் வித்தியாதரரும் இருக்க, முத்

தொழில் புரியும் மூவரே வந்து கைகேயியின் கருத்தை முற்றுவிக்க முயன்றாலும் அதற்கு இடங் கொடேன் என்று பாற்கடல் நடுவண் பர்வதம் சுழல்வது போன்று, அயோத்தியின் நடுவே சுழன்று திரிந்தான்.

இலக்குவனது வில் நாண் தொனி இராமனது செவியிற் பட்டது. பெருங்காற்று வீசும்பொழுது, வளர்ந்து புகைந்து கனன்று பொங்கும் ஊழிக் காலத்துத் தீயை ஆற்றும் அஞ்சனமேகம் போன்று இராமன் இலக்குவன் எதிரே ஒப்பற்ற சொற்கள் என்னும் துளியை வழங்கி வந்தான்.

> வீறுக்கிய பொற்கவன் வில்லிட ஆம் மின்ன
> மாறுத்தனிச் சொல்துளி - மாரி வழங்கி வந்தான்
> கால்தாக்க விமிர்ந்து புகைந்து கனன்று பொங்கும்
> ஆறுக்கன லாற்றுமோர் அஞ்சன மேக மென்ன.

இச்சிறிய செய்யுளில் வெகுளி நிறைந்த இலக்குவனுக்கு, ஊழிக் காலத் தீயையும், இராமனுக்கு நீல மேகத்தையும், இராமன் வார்த்தைகட்கு மழைத் துளியையும் உவமையாகக் காட்டியது, கருத்துக்குப் பொருத்தமாக இருப்பதோடு மனத்தகத்தே என்றும் உறையும் பெற்றியதாயுள்ளது. இராமன் திருமேனிக்குக் கார்மேகம், நிறத்தில் உவமையாவதோடு, வெம்மையை ஆற்றும் தொழிலிலும் உவமையாவது, கற்றோர்க்குக் களி பேருவகையை ஊட்டும் தகையது.

நீலமேகம் போன்று வந்த நிமலன், தம்பியைத் தண்ணளியோடு நோக்கி, "என் அத்த, ஒரு மாத்திரைப் பொழுதும் சினங்கொள்ளாதவனாகிய நீ, யுத்த சன்னத்தனாய் வில் ஏந்தற்குரிய காரணம் யாது?" என வினவினன். வெகுண்டோர் வினவப்படுங்கால், கோப மனப்புழுக்கம் வார்த்தைகளாக வெளிப்பட்டபின் சினம் மேலிட்டு, அடங்கப் பெறுவர் என்பது மானிட இயற்கை. இதைக் கம்பர் இலக்குவன்பால் வைத்துக் காட்டுகின்றார்.

இலக்குவன் இராமனை நோக்கி, "உனக்கு முடி சூட்டுவேன் என்று கூறிய அரசனின் மெய்யைப் பொய்யாக்கி, உனக்குரிய அரசுரிமையைக் கெடுத்த, மை

போலும் கரிய மனமுடைக் கைகேயியின் முன்னே, அம் மௌலியை உனக்குச் சூட்டத் துணிந்தேன். அச்செயலைத் தடுக்குனர் அமரரே யாயினும் அழிப்பேன். அன்றியும், வலிய வில் என் கையகத் திருக்க, அவ்வாறுளோரும் விலக்கார். விலக்கின் அவரை அழித்துப் பதினான்கு உலக ஆட்சியையும் உனக்குத் தருவேன். அதைப் பெறுக.

மெய்யைச் சிதைவித்துநின் மேன்முறை நீத்த நெஞ்சம்
மையிற் கரியாளெதிர் நின்னையம் மௌலி சூட்டல்
செய்யக் கருதித் தடைசெய்குனர் தேவ ரேனும்
துய்யைச் சுடுவெங் கனலிற்சுடு வான்து ணிந்தேன்.
வலக்கார் முகம்என் கையதாக அவ் வாறு ளோரும்
விலக்கார் ; அவர் வந்து விலக்கினும் என்கை வாளிக்கு
இலக்கா எரிவித்து உலகு ஏழினொடு ஏழும் மன்னர்
குலக்காவலும் இன்று உனக்கு யான்தரக் கோடி'' என்றான்.

இளையான் இது கூற இராமன், "ஐய, உனது கூரிய அறிவு நீதி முறை தவறாத நெறியிற் செல்லவல்லது. நீதிக்கு மாறாக ஒருபோதும் கோபம உண்டாகாத உனது மனம் என்னும் நிலத்தில், இச்சினவித்து எப்படி முளைத்தது?" என்றான். இது கேட்ட இலக்குவன், நகைத்து "உன் தந்தை, இராஜ்ஜியம் உன்னுடையது என்று கூற அதனை அங்கீகரித்தாய். பின் பகைவராய் இழந்து காட்டிற்குச் செல்வாய் என்றால் இப்பொழுதன்றிப் பின் எப்பொழுது கோபம் கொள்வது?" என்றான்.

நின்டான் அது உரைத்தலும் நித்திலம் தோன்ற நக்குச்
சேண்டான் தொடர் மாநிலம் நின்னதென்று உந்தை செப்பப்
பூண்டாய் ; பகையால் இழந்தேவனம் போதியென்றால்
யாண்டோ அடியேற்கு இனிச் சீற்றம் அடுப்ப தென்றான்.

இச் செய்யுளின் இரண்டாம் அடியில் உள்ள 'உந்தை' என்னும் சொல் இலக்குவனின் மனநிலையைச் சித்திரித்துக் காட்டுகிறது. தயரதன் இருவருக்கும் தந்தையாயிருக்க, நம் தந்தை என்று கூறாது, உன் தந்தை என்று கூறுவது, நீதியினின்றும் வழுவியவன் தயரதன் ஆனமையின், சிறுமை கண்டு பொங்கும் மனமுடைய இலக்குவன், தயரதனை, தன் தந்தை என்று கூறவும் கூசு

கின்றான் என்பது விளங்கும். தயரதனைப் பற்றி இலக்குவனின் எண்ணம் இதுவே என்பதை அடுத்த செய்யுளே கூறுகின்றது.

இலக்குவன் இராமனை நோக்கி, "அண்ணா, எனது கண்முன்னே உனக்கு அரசுரிமையை நல்கி, பின்னர் இல்லையென்று கூறி, உன்னை வனத்துக்கு அனுப்பிப் பார்த்துக்கொண்டிருக்கின்ற கொடுமை வாய்ந்த தயரதனைப் போல, உன் பக்கல் அன்பில்லாத சிற்றன்னை வனத்துக்கு உன்னை அனுப்ப அதனைக் கண்டும் இவ்வுடலைத் தாங்கி எனது உயிரைக் காப்பாற்றுவேனோ?" என்று கூறுமுன், இராமன், "இளையோய், இராச்சியபாரம் துன்பந் தரும் என்பதை யான் உணர்ந்தும், ஒப்பியது என் குற்றம் அன்றோ? ஆகையால், நீ, முதலில் என்னை ஒறுத்தல் வேண்டும். அன்றியும், இளைஞ, நீ ஆராயாது பேசுகின்றாய். நதிகளில், சில காலங்களில் நீரின்றி வற்றிவிடுவது அந் நதியின் குற்றமன்று; வான் வழங்காத குற்றம். அது போல் யான் அரசுரிமை பெறாது காட்டிற்கு ஏகுவது, நமது தந்தையின் குற்றம் அன்று. இன்றுவரை நம்மை வளர்த்துப் போற்றி வந்தவளாகிய சிற்றன்னையின் குற்றமும் அன்று. அவ்வன்னையின் குமாரனாகிய அண்ணல் பரதனின் குற்றமும் அல்ல. இது ஊழ்வினையின் குற்றமாகும். இதற்காக நீ வெகுள்வானேன்?" என்றான்.

> நதியின் பிழையன்று நறும்புன லின்மை; அற்றே
> பதியின் பிழையன்று; பயந்து நமைப்பு ரந்தாள்
> மதியின் பிழையன்று; மகன்பிழை யன்று; மைந்த
> விதியின் பிழை; நீயிதற்கு என்னை வெகுண்ட தென்றான்.

இதுகேட்ட இலக்குவன், ஊதுலைக் குருகின் உயிர்த்து, "அண்ணால், கொதிக்கும் எனது மனத்தை எங்ஙனம் ஆற்றுவேன்! முடிபுனைதற்கு இடையூறு செய்த கைகேயியின் அறிவிற்கும் அறிவூட்டுவதாய், மும்மூர்த்திகளின் வலிமைக்கும் அடங்காது மிக்க வலிமையுடையதாய், எல்லோரையும் வெல்லும் ஊழ்வினைக்கும் வலியதாய் நின்ற எனது வில்திறமையைக் காண்க" என விரிட்டான்.

> உதிக்கும் உலையுள்உறு தீயென ஊதை பொங்க
> கொதிக்கும்மனம் எங்கனம் ஆற்றுகேன்; கோள்இழைத்தாள்

மதிக்கும் மதியாய், முதல்வானவர்க்கும் வலியிதாம்
விதிக்கும் விதியாகும்என் வில்தொழில் காண்டி யென்றான்.

இங்கு இராமனின் மனநிலையும், இலக்குவனின் இயல்பும் வேறுபட்டிருக்கக் காண்கின்றோம். இராமன்,

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்

என்ற குறட்கு இலக்கியமானவன். இலக்குவனோ,

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்

என்ற குறட்குச் சான்றாய் அமைந்தவன்.

இளவல் இது கூற இராமன், "ஐய, வேதங்களை ஓதி உணரும் உனது வாயினால், வந்தவைகளை எல்லாம் பேசுகின்றாயோ! நீ இப்பொழுது கூறியது, நன் மக்களிடம் காணக்கூடாத பண்பன்றோ? பெற்ற தாய் தந்தையர்களிடம் வெகுளலாமோ? வரம் பெற்ற கைகேயி இவ்விராச்சியத்தைக் கேட்டுப் பெறுதற்கு உரிமையுடையவள். என் தந்தை கொடுத்த அரசுரிமையைப் பரதன் பெறுவான். இனி, யான் பெறும் செல்வம், தவம் ஒன்றுதான். நீதி மார்க்கத்தில் வாழ்கின்ற உடன்பிறந்தவனைப் போரில் வென்ற பின்போ, அல்லது பெரியோர் புகழும் சிறப்பினையுடைய தந்தையைப் போரில் வென்றோ, அல்லது, பெற்ற தாயை வென்ற பின்போ உனது சினம் தணியப்போகின்றது?" என்று இடித்துக் கூறினான்.

ஆன்றான் பகர்வான் பினுமைய இவ்வையம் மையல்
தோன்றா நெறிவாழ் துணைத்தம்பியைப் போர்தொலைத்தோ
சான்றோர் புகழும் தவத்தாதையை வாகைகொண்டோ
ஈன்றாளை வென்றோ இனிஇக்கதம் தீர்வ தென்றான்.

நீலமேகம் பெய்த இன் சொல்மழை, இலக்குவனின் சீற்றத் தீயை ஆற்றிற்று. இது கேட்ட இலக்குவன், சீற்றம் துறந்தான். இராமனுக்கு எதிர் நின்று செப்பும் மாற்றம் துறந்தான். இலக்குவன் வெம்மை, இராமனின் தண்மையால் அடங்கிற்று. இராம இலக்குமணர்களின் இவ்வுரையாடல், சாந்தச் சுவைக்கும், வெகுளிச் சுவைக்கும் எடுத்துக்காட்டாயிருக்கின்றது.

ஈதன்றியும் இன்னும் ஓரிடத்திலும் இராமன் தன்மையையும் இலக்குவன் வெம்மையையும் அறிகின்றோம். நீதியின் நிலையமாகிய பரதன், நாற்பெரும் படையுடன், கருணையின் நிலையமாகிய காகுத்தனை அழைத்துவரக் கங்கையைக் கடந்து சித்திரகூடத்தை நோக்கிச் செல்வானாயினான். மண்ணிடை நடந்து செல்லும் படைத்தூளி விண்ணினை மறைத்தது. நாற்பெரும் படைகளின் ஆரவாரம் நம்பியாகிய இலக்குவன் செவியில் விழுந்தது.

இலக்குவன் சித்திரகூடத்தின் சிகரத்தின் மேல் நின்று பார்த்தான். தாய் பெற்ற வரத்தால் தான்பெற்ற பதினான்கு ஆண்டின் ஆட்சி போதாதென்று நினைந்த பரதன், இராமனைப் படையெடுத்து வென்று, அவன் அரசுரிமையைக் கொண்டு என்றும் ஆள நினைந்து படை வெள்ளத்தை அழைத்து வந்தான்போலும் என்று திரிபுணர்ச்சிகொண்டான் இலக்குவன்; மனம் புழுங்கினான். ஓங்குசினம் உள்ளம் கவர்ந்து எழுந்தது. பொருப்புப் பொடிபடப் பூமியிற் குதித்தான். விரைந்து இராமனை அடைந்து, "அண்ணால், பரதன் உன்மீது படையெடுத்து வந்தான்" என்று கூறிச் சுரிகையும் கழலும்கட்டி, அம்புப் புட்டிலையும் கவசத்தையும் பூட்டி, வில்லைக் கையில் ஏந்தி அண்ணனது அடியினைத் தொட்டு நின்று கூறுவான். "ஐய, இருமையும் ஒருங்கே இழந்த பரதனது தோளின் பருமையையும், அவன் படைகளின் பெருமையையும் எனது ஒருமையையும் இப்பொழுது கண்டு களிப்பாய். யான் ஒருவனே அவனையும் அவன் படைகளையும் அழிப்பேன். இன்னும், இறக்கின்ற யானைத்திடர்களையும், உடைபடும் தேர்களையும், குடர்களை அலைத்துத் தள்ளும் இரத்த ஆறுகளையும் நீ காண். பரிபூண்ட தேர்களின் பொற்றட்டின்மேல் பேய்கள் ஏறி நின்று வீரர்களின் கேடகம் ஏந்திய அறுந்துபட்ட கரங்களை ஏந்திக்கொண்டு அவற்றால் தாளமிட்ட வண்ணம், இசை பாடுதலோடு கூத்தாடுவனவற்றை இன்னும் சிறிது பொழுதிற் காண்பாய். வெங்களத்தே வீரர்கள் அழியவும், தேர்கள் சிதையவும், ஆயுதங்கள் துணிபடவும், வில் ஒடியவும், கரிபரிகளின் கால்கள் அற்று விழவும், அவற்றின்மீது ஆரோகணித்துள்ள வீரர்களின் தாளும் தோளும் அறுபட்டு விழவும் கூரிய கொடுங் கணைகளை யான் செலுத்தக் காண்பாய்.

"ஆழிய, கைகேயிடம் கொண்ட மோகத்தால் உலக முழுதையும் வருத்திய தயரதனது கட்டளையால் தான் பெற்ற பெருநிலத்தை ஆளுதல் விடுத்து, பரதன் அருநரகாள்வதைக் காண்பாய். நீ, நாடாட்சியைத் துறந்து, காடாட்சிபுரிய நேர்ந்ததை எண்ணி உன் அன்னை வருந்துதலைப் பார்த்து மகிழ்ந்த கைகேயி அம்மகிழ்வொழிந்து, புத்திர சோகத்தால் நிலமிசை வீழ்ந்து கதறுவதைக் காண்பாய். இச்சேனா சமுத்திரத்தை எனது வடிக்கணை ஒன்றால் வற்றச் செய்வேன்" என்று வெம்மை நிறைந்த மொழிகளை வீசினான்.

இங்ஙனம், வெஞ்சினம் விஞ்சிப் போர்க்கு அ[illegible] வேண்டும் இலக்குவனைப் பார்த்து இராமன், "இல[illegible]வ, நீ, பதினான்கு உலகங்களையும் கலக்குவேன் என எண்ணினால் அச்செயலை விலக்குதல் எவர்க்கும் அரிது. ஆயினும் அறிவுக்கு உரித்தான செய்தியொன்று யான் கூறக் கேட்பாய். இன்றுவரை நம்குலத்திற் பிறந்தவர் பலர். அவர்களில் ஒருவரேனும் நன்னெறியினின்றும் திறம்பி நடந்தவர்கள் இல்லை. அக்குலத்திற் பிறந்த பரதனின் நற்குணங்கள் வேதங்கள் எடுத்துக் கூறும் உயர்வுபெற்றவை. பரதன் நீதியின் நிலையமானவன். இவ்வுண்மையை என் மாட்டுவைத்த அன்பால் நீ எண்ணவில்லை. பிறழ உணர்ந்தனை. பரதன், என்பால் வைத்த அன்பால் என்னைக் காணவருகின்றான் என நினைப்பதும், இராச்சியத்தை எனக்குக் கொடுக்கவருகின்றான் என எண்ணுவதும் ஒழிந்து சேனைகளோடு போர்செய்ய வருகின்றான் என எண்ணுதல் அறிவின் பாற்பட்டதாகுமோ?

> பெருமகன் என்வயிற் பிறந்த காதலின்
> வருமென நினைவையும், மண்ணை யென்வயின்
> தருமென நினைவையும் தவிரத் தானையால்
> பொருமென நினைவையும் புலமைப் பாலதோ.

தருமதேவதையை, நன்னெறியின் அச்சாணியாகிய பரதனை நீ அவ்வாறு நினைத்தல் தகுதி உடையதாகுமா? என்னைக் காண்பதற்கே இங்கு வருகின்றான். அதனைப் பின்பு காண்பாய்.

சேணுயர் தருமத்தின் தேவைச் செம்மையின்
ஆணியை அன்னது நினைக்க லாகுமோ
பூணியன் மொய்ம்பினாய் போர்த நீண்டெனக்
காணிய நீ இது பின்னும் காண்டியால்"

என்று இராமன் படிப்படியாகத் தண்மை நிறைந்த இன்சொற்களால் இலக்குவன் சீற்றத்தை ஆற்றியபொழுது, பரதனும் தனது சேனையைப் பின் நிற்கச் செய்து, சிரமேற் குவித்த கரமுடையனாய், அழுது பொலிவிழந்த விழிகளை உடையவனாய், அவலமே உருக்கொண்டதுபோல முன் வந்தனன். பரதனைக் கண்ட பரந்தாமன் இலக்குவனை யழைத்து, "தம்பி, நம்மேற் படையெடுத்து நாற்பெரும் படையுடன் வந்த பரதனது போர்க்கோலத்தைக் காண்" என்று இடித்துக் கூறலைக் கேட்ட இலக்குவன் தலை தாழ்ந்தது. முகம் பொலிவிழந்தது. வில் கையினின்றும் வீழ்ந்தது. விழிகள் நீரைச் சொரிந்தன. இலக்குவன் கொண்ட வெகுளியாம் வெம்மை இராமனின் சாந்தமாம் தண்மையில் அடங்கி ஆறுதல் பெற்றது.

இராமன் தண்மைக்கும் இலக்குவன் வெம்மைக்கும் இன்னுமோர் உதாரணங் காட்டி இக்கட்டுரையை முடிப்போம்.

கருணையின் நிலயமாகிய காகுத்தன் தேவியை மீட்கச் சேதுவைக்கடந்து இலங்காபுரியின் வடக்குவாயிலை அடைந்தான். இராமன், அருகில் நின்ற விபீடணனை நோக்கி, "அன்ப, இராவணனிடம், தேவியை விடுதியோ அல்லது ஆவியை விடுதியோ என்று கேட்டுத் தூதனுப்புவோம். அதுதான் போர்முறை. அவன் தேவியை விட மறுத்தால், அவனைச் செகுத்தல் நமது கடன். உங்கள் யோசனை என்ன?" என்று கேட்க, அரக்கர்கோன், "அழகிற்று" என்றான். குரக்கினத்தலைவன், "இது அரசர்க்குரிய அறம்" என்றான். இலக்குவன் வெகுளி மேற்கொண்டு, "ஐய, பகைவனுக்கு இரங்குதல் தவறு. மாற்றான்மீது போர் தொடுத்தல்தான் உரிய செயல். சமாதானம் உரிய செயலன்று. அறந்திறம்பிய அரக்கன் தேவர்கட்கு இடுக்கண் செய்தான்; உயிர்களைக் கொன்று தின்றான்; எல்லா உலகங்களையும் தானே ஆளக் கருதி இந்திரனுடைய செல்வத்தையும் கவர்ந்துகொண்டான்.

தேசருக்கு இடுக்கண் செய்தான் தேவியைச் சிறையில் வைத்தான்
பூசுரர்க்கு அலக்கண் ஈந்தான் மன்னுயிர் புடைத்துத் தின்றான்
ஆசையின் அளவும் எல்லா உலகமும் தானே யாள்வான்
வாசவன் திருவும் கொண்டான் வழியலா வழிமேற் செல்வான்.

ஆழிய, இராவணன் உனக்கு அஞ்சிச் சீதையை விட்டு விடின் அவனிடம் இரக்கங்கொண்டு அவனைக் கொல்ல மாட்டாய். அப்போது சிரஞ்சீவியாகிய விபீடணன்பால், 'என்னுடைய பெயர் உலகில் நிற்கும்வரையில் இவ்விலங்கைக்கு நீயே மன்னன்' என்று சொன்ன சொல்லும் தண்டகாரண்ய இருடிகள் அபயம் வேண்டித் தம் குறை யிரந்தபோது 'அரக்கரை அழித்து நும் துயர் களைவேன்' என்று கூறியதும் தவறிவிடுமே. ஆகையால், இப்போது 'தேவியை விட்டால் உன்னைக் கொல்லாது விடுவேன்' என்று தூதனுப்புவது தகுதியன்று. உனக்கு இயற்கையா யுள்ள கருணையாலும் பொறுமையாலும் மறந்தனை போலும்! வளமார்ந்த இலங்கையழியுமே என்று இரக்கங் கொண்டனை யென்றாலும் தூதனுப்புதல் சிறந்ததன்று. போர்புரிவதே தகுதி" என்றான்.

இதனைக் கேட்ட இராமன் புன்முறுவல் பூத்தான். அம் முறுவல், இலக்குவனின பாதி வெகுளியைப் போக்கிற்று. "ஐய, அரக்கர் செய்த தீமையையும், அரக்கர்கோனுக்கு அளித்த ஆட்சியையும், முனிவருக்கு நல்கிய வரத்தையும் மறந்தேனில்லை. இறுதியாக நடக்கப்போவது நீ கூறிய போர்தான் எனினும் அறநூல்களின் வழியே நாம் ஒழுகல் நன்றன்றோ? பெருவலி படைத்தோராயினும், போரில் பொறுமையுடன் இருப்பதே வெற்றிக்குரிய வழியாகும். ஆகையால் ஆறுதல் அடைக."

அயர்த்திலன்; முடிவும் அஃதே; ஆயினும் அறிஞர் ஆய்ந்த
நயத்துறை நூலின் நீதி நாம்துறந்து அமைதல் நன்றே?
புயத்துறை வலிய ரேனும் பொறையொடும் பொருந்தி வாழ்தல்,
சயத்துறை; அறனும் அஃதே என்றிவை சமையச் சொன்னான்.

இலக்குவன் வெம்மை இராமனின் தண்மையில் அடங்கிற்று. கம்பன் பாத்திரங்களுக்கு ஏற்ற குண நலன்களைப் பொருத்தமாக அமைத்துக்காட்டும் வனப்பை மூன்று எடுத்துக்காட்டுகளாற் காட்டினோம்.

தமிழ் மக்கள்,

திருத்தகு மாமுனி சிந்தா மணிகம்பன்
விருத்தக் கவித்தொகையும் வேண்டேம்-உருத்தக்க
கொங்குவேள் மாக்கதையைக் கேளோம் குறளறுகேம்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கு

என்று அலட்சியம் செய்து, பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு வாழாது உண்மைத் தமிழராய் வாழ்ந்து கம்பன் கவிகளைப் படித்துச் சுவைப்பார்களாக.

7. கம்பர் கவித்திறம்

[பண்டித வித்துவான் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்
தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.]

அமிழ்தினும் இனிய நம் தமிழ் மொழியிற் பல்லோராலும் பயிலப்பெறும் நூல்களிற் கம்பராமாயணமும் ஒன்றாகும். இந்நூலைப் பலரும் பயில்வதற்குக் காரணம் இதன் பாடல்கள் சொற்சுவை பொருட்சுவை நிறையப் பெற்றுத் தெளிவுற்றுக் காணப்படுவதே ஆகும். இத்தகைய பாடல்களை விரும்பும் இயல்புடையவர் கம்பர் என்பதைப் பிற ஆன்றோர் பாடல்களை அவர் பாராட்டிக் கூறுவனவாக அமைந்துள்ள, "ஆன்ற பொருள் தந்து புலத்திற்றாகி", "சவியுறத் தெளிந்து" என்னும் பகுதிகளாலும்,

உரிக்கின்ற கோடலின் உந்துகள் தம்மென வொன்றுமின்றி
விரிக்குந் தொறும்வெறும் பாழாய் விடும்பிறர் புன்கவிமெய்
தெரிக்கின்ற கோச்சட கோபன்றன் தெய்வக் கவிபுவியிற்
சுரிக்கின்ற நுண்மணல் ஊற்றொக்குந் தொட்டுச் சுரத்தலினே.

என்னும் பாடலாலும் அறியலாம். இவ்வாறு பாடல் இயற்றும் வீறுடைமையையும், இவற்றை இயற்றி உலகிற்கு வழங்கிய பெருதவியையும் நினைத்தே 'கவிச்சக்கரவர்த்தி' எனவும் 'கம்பநாடுடைய வள்ளல்' எனவும் கம்பரை ஆன்றோர் பாராட்டுவாராயினர். இவர் பாடல்கள் பல திறப்பட்ட சுவையுடையன. அவற்றுள் ஒரு சிலவற்றைக் காண்போம்.

தோள்கண்டார் தோளே கண்டார் தொடுகழற் கமலம் அன்ன
தாள்கண்டார் தாளே கண்டார் தடக்கைகண் டாரும் அஃதே
வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்.

இப்பாடற் பகுதி, இராமன் வில்லை முறித்தபின், தன் திருமணத்திற்கு வரும் தசரதன் முதலியோரை எதிர்கொள்ளச் சென்று திரும்பி உலா வரும்போது, தெருவில் அவனை மகளிர் கண்டவாற்றைக் கூறுவதாகும். இப்பகுதி சொல்லினிமையும் பொருள் தெளிவும் உடையதாய்க் காணப்படுகின்றது. இராமனுடைய தோள், தாள், கை என்னும்

உறுப்புக்களின் அழகைக் கண்ட மகளிருடைய கண்கள் அவ்வவ்வுறுப்புக்களிலே ஈடுபட்டன என்னும் பொருள் விளங்குகின்றது. விளங்கியவுடன் 'இராமனுடைய உறுப்புக்களுள் கண் முதலியவற்றையும் கூருது இம் மூன்று உறுப்புக்களையே கூறுதற்குக் காரணம் என்ன ?' என்று ஆராய்ந்தால் இப்பாடலின் ஆழ்ந்த உட்கோள் புலப்பட்டு நம்மை இன்புறுத்துவதாகும். ஆராய்ந்து பார்ப் போம்.

எப்பொழுதும் மகளிர் பேசுங்கால் மற்றை மகளிரை நினைத்துப் பேசுதல் இயல்பு. இவ்வியல்பை உடன்போய தலைமகளைத் தேடும் செவிலித்தாய், வழியில் வரும் முனி வரைக் கேட்பதாகக் கலித்தொகையில் உள்ள,

> " என்மகள் ஒருத்தியும் பிறன்மகன் ஒருவனும்
> தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சியர்
> அன்னர் இருவரைக் காணிரோ பெரும "

என்று வரும் பாடற்பகுதியில் பிறன்மகன் என்னது, பிறன்மகன் எனக் கூறுவதாலும் அறியலாம். அவ்வாறே இங்கும் இராமனைக் கண்ட மகளிர்க்கு அவன் ஒரு தீய வனை அழித்த செயலும், இரண்டு நன்மகளிர்க்கு அருள் செய்த செயலும் நினைவில் வந்தன. அந்நினைவுகள் அச் செயல்களுக்குத் துணையாய உறுப்புக்களைக் காணும்போது தோன்றின. ஆதலின் அச்செயல்களை நினைத்து அவ்வவ் வுறுப்புக்களிலே மகளிர் ஈடுபட்டார்கள் என்பதைப் புலவர் குறிப்பிடுகின்ருர். தாடகை என்னும் தீய அரக் கியை இராமன் கொன்ற நற்செய்தியை மகளிர் கேள்வி யுற்றிருக்கின்ருர்கள். ஆதலின், இராமனைக் கண்டவுடன் அச் செய்தி நினைவில் வர, அதற்கு உதவிய அவன் தோள் களைக் கண்டு, தாடகையைக்கொல்ல உதவிய தோள்களா இவை என வியந்து அத்தோள்களையே அவர்கள் கண் டார்கள். கல்லாய்க் கிடந்த அகலிகையின் சாபத்தை இராமன் தன் திருவடி தீண்டுதலால் நீக்கியருளினமை சில மகளிர் நினைவில் வந்தமையால், அவர்கள் அகலி கையை எழுப்ப உதவிய திருவடிகளா இவை என அத்திரு வடிகளையே கண்டார்கள். சில மகளிர், வில் முறித்துச் சீதைக்கு அருளியதை நினைக்கிருர்கள். ஆதலின், வில்

முறிக்க உதவிய கைகளா இவை என அக்கைகளையே அவர்கள் கண்டார்கள். இதுவே இப்பாடற் பகுதியின் உட்கோளாம்.

இவற்றுள் இராமன் தாடகையைக் கொன்றதைக் குறித்தபோது அவன் தோளையும், சிதைக்கு அருள வில் முறித்ததைக் குறித்தபோது அவன் கையையும் கூறியது பொருத்தமே. தாடகையோடு செய்த போரில் அவள்மேல் அம்பைத் தொடுத்தும், அவள் விடுத்தவற்றைத் தடுத்தும் தன் தோள்வலியைக் காட்ட நேர்ந்தமையின் அங்கே தோள் கூறப்பட்டது.

அலையுருவக் கடலுருவத் தாண்டகைதன் நீண்டுயர்ந்த
நிலையுருவப் புயவலியை நீயுருவ நோக்கையா
உலையுருவக் கனலுமிழ்கண் தாடகைதன் உரமுருவி
மலையுருவி மரமுருவி மண்ணுருவிற் றொருவாளி

எனக் கூறப்பட்டிருத்தலையும் காணலாம்.

வில் முறித்தபோது ஒருவராலும் எடுக்க இயலாத பெரிய வில்லை எடுத்து முறித்தற்கு உதவிய அவன் கைவலியே சிறப்பாகக் கருதப்பட்டமையின் அங்கே கை கூறப்பட்டது. "கையால், எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்" என ஆண்டுக் கூறப்பட்டிருத்தலையும் காணலாம். சில இடங்களில் தோளின் செயலும் கையின் செயலும் மாற்றிக் கூறப்பட்டிருப்பினும் ஈண்டுக் கம்பர் உட்கோள் இதுவே என்பது பொருந்துவதாகும். தோள் கை இவ்விரண்டனுள் ஒன்றைக் கூறவேண்டிய இடத்து இயைபு பற்றி மற்றொன்றைக் கூறுகின்ற மரபும் புலவர்பால் உண்டு. மேலும் இம்மூன்றும் வரலாறு நடந்த முறைப்படியே பாடலில் அமைந்திருத்தலும் நோக்கத்தக்கது. இவ்வாறு மக்கள் மனநிலைக்கு ஏற்ப அழகுறக் கூறும் திறத்தைப் பல இடங்களில் காணலாம்.

இனி, ஓரிடத்தில் கூறப்பட்ட செய்தியைப் பல பாடல்கள் கழிந்தபின்னும் நினைவு கூர்ந்து தொடர்பு படுத்திக் கூறும் இயல்பு கம்பர் பாடலில் காணப்படும் மற்றொரு திறமாகும். அதனையும் காண்போம். இராமனும், இலக்குமணனும் தசரதனைப் பிரிந்து விசுவாமித்திர முனிவருடன் சென்றதைக் கம்பர்,

அன்ன தம்பியுந் தானும் ஐயனும்
மன்னன் இன்உயிர் வழிக்கொண் டாலெனச்
சொன்ன மாதவற் றொடர்ந்த சாயைபோற்
பொன்னின் மாநகர்ப் புரிசை நீங்கினன்

எனக் கூறினர். இவ்வாறு கூறியவர் பன்னூறு பாடல் கட்குப் பின், திருமணத்திற்காக மிதிலை நகருக்கு வரும் தசரதனை எதிர்கொள்ள வந்த இராமன் அவனை அணுகு வதைக் கூறும்போது நினைவு தவறாமல்,

தேவருந் தொழுகழற் சிறுவன்முன் பிரிவதோர்
ஆவிவந் தென்னவந்து அரசன்மாடு அணுகினன்

எனக் கூறியது நமக்கு வியப்பைத் தருவதாகும். இராமன் தசரதனுடைய உயிர் பிரிவது போலப் பிரிந்து போனன் எனக் கூறியது அமங்கலமாமென்று கருதி, திருமணக் காலத்தில் மங்கலமாக முன்பிரிந்த உயிர்வருவதுபோல வந்தான் எனக் கூறி முடித்தார். முன் என்பது இக் கருத்தை வலியுறுத்துவதாகும். இத்தகைய மற்றொரு சிறந்த பகுதியும் உள்ளது.

மாரீசனைக் கொன்று பன்னசாலைக்குத் திரும்பும் இராமன், இராவணன் கவர்ந்து சென்றமையால் அங்கே சீதையைக்காணாமல் வருந்துதலைக் கூறும்போது,

தோடி வர்ந்தபூஞ் சுரிகுழ லாள்தனைக் காணான்
கூடு தன்னுடை யதுபிரிந்து ஆருயிர் குறியாத்
தேடி வந்தது கண்டில தாமென நின்றான்

எனவும், பின் மீட்சிப் படலத்தில் சீதை இராமனைக் கண்டமையைக் கூறும்போது,

மானமீது அரம்பையர் சூழ வந்துளாள்
போனபே ருயிரினைக் கண்ட பொய்யுடல்
தானது கவர்வுறுந் தன்மைத் தாமென
ஆனனங் காட்டற அவனி எய்தினள்

எனவும் கூறப்பட்டுள்ளது. சீதையை உடலாகவும் இரா மனை உயிராகவும் குறித்து, தன் உடலைப் பிரிந்த உயிர் மீண்டு வந்து அதனைக் காணாமைபோலச் சீதையைப் பிரிந்த இராமன் மீண்டு வந்து அவளைக் காணாது வருந்தி னன் எனச் சீதையும் இராமனும் பிரிந்தகாலத்துக் கூறிய

கம்பர், அவ்வாறே உடலையும் உயிரையும் பிரித்து அமங்கலமாக நிறுத்திவிடாமல், ஆயிரக்கணக்கான பாடல்களுக்குப்பின் நினைவு கூர்கிறார்; போரில் வெற்றிபெற்றபின் சீதை மீட்கப்பட்டு இராமனும் சீதையும் கூடுவதைக் கூறும்போது, போன உயிரைக் கண்ட உடல் அதனைக் கவர்வதுபோன்ற முகத்தோற்றத்துடன் சீதை இராமனைச் கண்டாள் என, அவ்வுடலையும் உயிரையும் கூட்டி மங்கலமாக முடிக்கின்றனர். இவற்றுள் இராமன் தசரதனைப் பிரிந்து கூடியபோது பிரிந்ததும் கூடியதும் இராமன் செயலாதலின் அதற்கேற்ப மன்னன் உயிர்வழிக் கொண்டாலென்னப் போனான் எனவும், முன்பிரிவதோர் ஆவி வந்தாற்போல வந்து அரசனை அணுகினான் எனவும் இரண்டிடத்தும் உயிரின் செயலாகக் கூறப்பட்டிருத்தலும், இராமன் சீதையைப் பிரிந்து கூடியபோது பிரிந்துவந்தது இராமன செயலாதலின் அதற்கேற்ப, உடலைப் பிரிந்த உயிர் பின் அதனைத் தேடி வந்ததுபோல வந்தான் என உயிரின் செயலாகவும், கூடுங்காலத்து வருதல், சீதையின் செயலாகலின் அதற்கேற்ப, உடல் உயிரைக் கவர்வது போன்ற முகத்தோற்றத்துடன் சீதை இராமனைக் கண்டாள் என உடலின் செயலாகவும் கூறப்பட்டிருத்தலும் கம்பருடைய நுண்ணறிவைக் காட்டுவனவாம். இவ்வாறு பொருள் நயம் வழுவாது நினைவாற்றலுடன் பாடும் தெய்வப் புலவர்களைக் காணுதல் அரிது.

சீதையும் இராமனும் மிதிலையில் ஒருவரை ஒருவர் கண்டபோது,

> கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கிப் போய்ப்
> பிரிந்தவர் கூடினாற் பேசல் வேண்டுமோ

எனக் கூறுவதும், இராமனுக்குச் சொல்லுமாறு அநுமனிடம் சீதை கூறும் பகுதியில்,

> ஈண்டு நானிருந் தின்னுயிர் மாயினும்
> மீண்டு வந்து பிறந்துதன் மேனியைத்
> தீண்ட லாவதோர் தீவினை தீர்வரம்
> வேண்டி னன்தொழு தென்று விளம்புவாய்

எனக் கூறுவதும் ஈண்டு நினைக்கத்தக்கனவாம்.

மற்றொரு திறத்தைக் காண்போம். பொதுவாகப் பல தொன்னூற் கருத்துக்கள் கம்பர் பாடலில் காணப்படுகின்றன. ஆயினும் சிறப்பாகத் திருக்குறள், சிந்தாமணி என்னும் இரண்டு நூல்களிலும் உள்ள பற்பல கருத்துக்கள் அழகுற அமைந்து திகழ்கின்றன. அவற்றுள் ஒவ்வொன்று காட்டுவேன்.

அன்பு முதிர்ந்த தலைவன் தலைவியருள் ஒருவர் மற்றொருவரிடம், பிரிந்த காலத்து உன்னை நினைத்தேன் எனக் கூறுவது உண்டு. நினைந்தேன் என்று கூறவே அவர்களால் விரும்பப்படாத மறந்த ஒரு நிலை உண்டு என்பது பெறப்படுதலின், நினைத்தேன் என்று கூறுவதும் அவர்க்குத் துன்பம் தரும். இக் கருத்து, திருக்குறளில்

உள்ளுவன் மன்யான் மறப்பின் மறந்தறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம்
உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீ ரென்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்

என்னும் இடங்களிற் புலப்படுகின்றது. இவற்றை உணர்ந்த கம்பர், மண்டோதரிக்கு இராவணன்பால் உள்ள பேரன்பைக் கூறுமிடத்து, அவள், உள்ளம் அவன் வடிவாகவே அமையப்பெற்ற கற்பரசி ஆதலால், "நினைந்ததும் மறந்ததும் இலாத நெஞ்சினள்" எனச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருக்கும் அழகு மகிழ்வளிப்பதாகும்.

மந்திர வலியால் வாள் வேல் முதலியவற்றுடன் தெய்வங்களை வருவித்துச் சீவகனுக்குக் கட்டியங்காரனால் நேரும் சிறையை நீக்கக் கருதிய குணமாலை, அவ்வாறு தன் வலிமையால் அவன் துன்பத்தை நீக்கினால் அவனால் இயலாமையைக் கருதி அவனுடைய ஆற்றலையும் கல்வியையும் உலகம் பழிக்கும் என நினைக்கின்றாள். இதனைக் குறிக்கும் பாடல்:

மன்னன்செய் தசிறை மாகட லாட்குளித் தாழ்வழித்
தன்னையெய் திச்சிறை மீட்டனள் தன்மனை யாமெனின்
என்னையா வறிவன் ஆற்றலுங் கல்வியு மென்றுடன்
சொன்னும்மவை யங்கொழிக் கும்பழிக் கென்செய்கோ
[தெய்வமே

என்பதாம். இக் கருத்தைக் கம்பர் தக்க இடத்திற் பயன் படுத்துகின்ருர். சீதை தன்னைக் கற்பழிக்க முயன்ற இராவணனைத் தன் கற்பாற்றலால் ஒரு சொல்லாற் சுட்டு எரித்திருக்கலாமே, ஏன் அவ்வாறு செய்யாது வருந்தினுள் எனக் கருதுவோர்க்கு விடையாக,

அல்லன் மாக்கள் இலங்கைய தாகுமோ
எல்லை நீத்த உலகங்கள் யாவும்என்
சொல்லி னற்சுடு வேன்அது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசென்று வீசினேன்

எனக் கூறுவதைக் காணலாம்.

சில பண்புகளை அணிநலந் தோன்றக் கூறும் திறமும் கம்பர்பால் உண்டு. இரணியன் ஒருவருக்கும் வணங்கமாட்டான் என்பதைக் குறிப்பிட, "வணங்குதல் மகளிர் ஊடல் நாளினும் உளதோ" எனவும், இராவண னுடைய மனைவியர் துன்பத்தை அறியாதவர் என்பதைக் குறிப்பிட, "வருத்தம் எது எனின் அது புலவி" எனவும் கூறுதல் காண்க.

கம்பர் காவியத்திற் சில ஓவியங்கள் உள்ளன; சில செய்திகளை நாம் நேரிற் காண்பதுபோல அறியுமாறு கூறுவர். இராமனுடைய முடிசூட்டு விழாவைக் காண் போம். அரசியல் மரபுக்கேற்ப இராமன் சிங்காதனத்தில் வீற்றிருக்கின்ருன். ஆதலின், அவனைச் சுமத்தலே தன் பணி எனக்கொண்ட அநுமன் இப்போது அவன் வீற்றிருந்த சிங்காதனத்தைச் சுமக்கின்ருன். அங்கதன் இராமனுடைய உடைவாளை ஏந்தி நிற்கின்ருன். இலக்கு மணனும் சத்துருக்கனும் இராமனுக்குக் கவரி வீசுகிருர் கள். சீதை பக்கத்திலே வீற்றிருக்கின்ருள். சடையப்ப வள்ளலுடைய மரபினர் முடியை எடுத்துக் கொடுக்க வசிட்டன் அதனை வாங்கிச் சூட்டினன். இக் கருத்துக்களை அடக்கிய பாடல்,

அரியணை அநுமன் தாங்க அங்கதன் உடைவாள் ஏந்தப்
பரதன்வெண் குடைக விக்க இருவருங் கவரி வீச

விரைசெறி குழலி ஒங்க வெண்ணெயூர்ச் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான்
[மௌலி

என்பதாம். இவ்வாறே சில ஓவியங்கள் எழுதப்பட்டிருத்தலை இன்றும் காணலாம்.

இத்துணையும் கூறியவாற்றால், ஆழ்ந்த கருத்துக்களைத் தெளிவான நடையிற் கூறுதலும், ஆயிரக் கணக்கான பாடல்கட்குப் பின்னும் நினைவாற்றல் தவறுமற் கருத்துக்களைக் கூட்டி முடித்தலும், திருக்குறள் சிந்தாமணி என்னும் நூற் கருத்துக்களை அழகுற அமைத்தலும், சில பண்புகளை அணிநலந்தோன்றக் கூறுதலும், சில நிகழ்ச்சிகளை நேரில் நிகழ்வதுபோல் அறியக் கூறுதலும் ஆகிய திறங்கள் கம்பர் கவிகளில் அமைந்திருத்தல் புலனாகும்.

8. சேக்கிழாரும் கம்பரும்

[வித்துவான் மா. இராசமாணிக்கம் பிள்ளை, M. O. L., L. T.]

முன்னுரை : ஏறக்குறைய, கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு முதல் சங்க காலம் முடிவுற்றுத் தமிழ்நாடு பல்லவர் - களப்பிரர் - பாண்டியர் ஆட்சிக்குட்பட்டுச் சமண - பௌத்த - சைவ - வைணவ சமயப் போராட்டங்கட்கு நிலைக்களமாகி, ஏறக்குறைய ஐந்து நூற்றாண்டுகள் தடுமாறியது. இந்தக் காலத்தில் எழுந்தவையே சமண காப்பியமாகிய சிலப்பதிகாரமும் பௌத்த காப்பியமாகிய மணிமேகலையுமாகும் என்பது அறிஞர் கருத்து. பிற்காலச் சோழர் காலத்தில், கி. பி. பத்தாம் நூற்றாண்டளவில் உண்டானது 'சிந்தாமணி' என்ற மற்றொரு சமண காவியம். பிற்காலச் சோழர் காலத்தில் சைவமும் வைணமும் சோழமன்னர்களால் பெரிதும் வளர்க்கப் பட்டன; யாண்டும் சைவ வைணவக் கோவில்கள், மடங்கள், பள்ளிகள் கடனுற்றின. வடமொழிக் கல்லூரிகள் வைணவக் கோவில்களில் மிகுதியாகக் குடிகொண்டிருந்தன. நாயன்மார் பாடல்களும் ஆழ்வார் பாடல்களும் கோவில்களில் ஓதப்பெற்றன; வைணவ ஆசிரியர் வியாக்கியானங்கள் தலையெடுத்தன. நாயன்மார்க்கும் ஆழ்வார்கட்கும் கோவில்களில் விழாக்களும் பூசனைகளும் சிறப்புற நடைபெற்றன. இங்ஙனம் இந்நாட்டிற்கே உரிய சைவ வைணவ சமயங்கள் சிறப்புற்ற சோழர் காலத்தேதான் 'சைவக் காப்பியம்' ஆகிய பெரிய புராணம் பாடச் சேக்கிழாரும், 'வைணவக் காப்பியம்' ஆகிய இராம காதையை இயற்றக் கம்பரும் தோன்றினர்.

சேக்கிழார், கம்பர் காலங்கள் : "கம்பர் காலம், சயங்கொண்டார், சேக்கிழார் நாயனார், புகழேந்தியார், ஒட்டக்கூத்தர் முதலிய கவிவேந்தர்கள் எல்லாம் பெரிய பெரிய நூல்கள் பாடி அழியாப் புகழ் நிறுத்திய காலமாம். கம்பர் இவர்கள் அறிவை எல்லாமும் அளந்தறிந்து கொண்டவரும் ஆவர். அளக்கலாகா இயற்கை அறிவின் மாட்சி நன்று பெற்ற ஒருவர்க்குப் பல பெரிய புலவர்களின் புலமையையும் அளந்துகொண்ட செயற்கை அறிவும் நன்கு கூடுமாயின்

அவருக்கு அரியவாவன யாவை?"[1] என்று பெரும்புலவராய ரா. இராகவையங்கார் அவர்கள் கூறியுள்ளதை நோக்கக் கம்பர், சேக்கிழார்க்குப் பிற்பட்டவர் என்பது போதரும். இதுவே உண்மை என்பதை வரலாற்று ஆசிரியரும் ஒப்புக்கொள்கின்றனர்.[2] கம்பர் மூன்றும் குலோத்துங்க சோழன் காலத்தவர் (கி.பி. 1178-1218) என்பது அவர் முடிவு. அஃதாயின், சேக்கிழார் காலம் என்ன? சேக்கிழார், 'பேரம்பலம் பொன் வேய்ந்த' இரண்டாம் குலோத்துங்கன் (கி. பி. 1133-1150) காலத்தவர் என்பது அறிஞர் அனைவரும் ஒப்புக்கொண்ட முடிபாகும்.[3] ஆகவே கம்பர், சேக்கிழாருக்கு ஏறத்தாழ 25, 30 ஆண்டுகள் பிற்பட்டவர் எனலாம்.

ஒற்றுமை வேற்றுமைகள் : சேக்கிழார் தொண்டை நாட்டினர்; வேளாளர்; சோழனுடைய முதல் அமைச்சர். கம்பர் சோழநாட்டினர்; மரபு தெளிவாகவில்லை; சோழனது அவைக்களப் புலவர். சேக்கிழார் பாடிய நூல் நாயன்மார் வரலாறுபற்றியது; கம்பர்பாடியது இராமபிரான் வரலாறு பற்றியது. ஒன்று சைவம்; மற்றது வைணவம். புலவர் இருவரும் சோழரால் பாதுகாக்கப் பெற்றவர்; எனவே, சோணாட்டின் மீதும் சோழர் மீதும் பற்றும் மதிப்பும் உடையவர்.

சேக்கிழாரும் பெரிய புராணமும் : சேக்கிழார் 63 தனியடியார் வரலாறுகளைத் தொகுத்து விளக்கிப் பாடிய பெரிய புராணத்திற்கு மூவர் தேவாரம், பிற திருமுறைகள், சுந்தரரது திருத்தொண்டத்தொகை, நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திரு அந்தாதி என்பன மூலங்களாக அமைந்தவை என்பது எளிதிற்பெறப்படும். ஆயின் பெரிய புராணத்தை ஊன்றிப் படிப்பவர், "சேக்கிழார் மேற்சொன்ன மூலங்களோடு அமைந்தார் அல்லர்; பாடல் பெற்ற தலங்கட்கு அவர் நேரே சென்றவர்; பல இடங்களையும் கோவில்களையும் கண்டவர்; தல வரலாறுகளை விசாரித்து அறிந்தவர்; பௌத்த சமண நூல்களை நன்றாகப் படித்துச் செய்திகளை உணர்ந்தவர். சுருங்கக் கூறின்,

1 Sentamil. Vol. IV, pp. 6-9
2 V. R. Ramachandra Dikshitar, 'Kulottunga Chola III', pp. 66-70.
3 A. R. E. 1912. II. 27; 1918. p. 150.

கி. பி. 19-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய வரலாறு எழுத ஐரோப்பா முழுவதும் சுற்றிச் சுவடிகளையும் பிறவற்றை யும் ஆய்ந்து சாத்திரிய முறையில் (Scientific method) வரலாறு எழுதிய ஜெர்மன் வரலாற்றாசிரியரான வான் ராங்கே (Van Rankay) என்பாரைப் போலச் சேக்கிழார் கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் தமிழ் நாடு சுற்றி நாயன் மார் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களைக் கேட்டும் படித் தும் பார்த்தும் ஒப்பற்ற பெரிய புராணம் எழுதினார்'' என்பதை எளிதில் அறிதல் கூடும்.[4]

சேக்கிழார் உழைப்புக்குக் காரணம் யாது? சேக் கிழார் பொறுப்புள்ள பேரரசின் முதல் அமைச்சர். அவர் பாடப் புகுந்த வரலாறுகள் தமிழ்நாட்டில் பிறந்து வாழ்ந்த பெரியார்களுடையன; ஆதலால், தம் மனம் போனவாறு பாடித் தம் பெருமையை இழக்க அவர் விரும்பவில்லை. மேலும் 63 நாயன்மாருள் ஏறத்தாழ 12 பேர் வரலாற்றுத் தொடர்புடைய சேரசோழ பாண்டிய பல்லவ களப்பிர குலத்தலைவர்கள்; சிலர் சேதிராயர், முனையதரையர் என்ற குறுநில மன்னர் மர பினர். இவர்கள் மரபினர் சேக்கிழார் காலத்தில் வாழ்ந்து வந்தனர். அவர்களைக் கேட்டு அவ்வந் நாயனார் பற்றிய குறிப்புக்களைச் சேக்கிழார் சேர்த்திருக்கலாமென நினைக்க இடம்உண்டு. வரலாற்றுப் புகழ்பெற்ற பல்லவர்-சாளுக்கி யர் போர், பல்லவர்-இரட்டர் போர், பல்லவர்-பாண்டியர் போர், பாண்டியர்-சாளுக்கியர் போர் என்பன தெளிவாக வும் குறிப்பாகவும் சேக்கிழார் கூறிச் செல்லலைக் காணும் போது, அப்பெரும்புலவர் பல்லவர்கால(நாயன்மார்கால)த் தமிழக வரலாற்றை நன்கு உணர்ந்த சிறந்த வரலாற்றுப் புலவர் என்பதும் நன்கறியலாம்.

கம்பராமாயணம்: கம்பரது இராமாயணம் வான்மீகர் வரைந்துள்ள இராமாயணம், பால ராமாயணம், காளி தாசன் வரைந்த இரகு வம்சம் முதலியவற்றைச் சிறப்பா கக்கொண்டு, ஆசிரியர் விருப்பம்போல ஆங்காங்கு விரித் துப் பாடப்பெற்ற பெருங் காவியம் ஆகும் என்று அறிஞர்

[4] இதுபற்றிய விரிவான ஆராய்ச்சிநூல் விரைவில் வெளியிடப் பெறும்.

அறைவர். இவ்வரலாறு எந்தக் காலத்தில் எந்த நாட்டில் நடந்தது என்று திட்டமாகக் கூறக் கூடவில்லை.[5] இவ்வரலாறு பல திரிபுகள் அடைந்துள்ளன; பல மொழிகளில் பல வேறு மாறுபாடுகள் உற்றுள்ளன; ஒரே மொழியில் வரையப் பெற்ற பல நூல்களிலும் பல மாறுதல்கள் காண்கின்றன. புத்தஜாதகக் கதைகள், சமண ராமாயண நூல்கள், வடமொழியில் உள்ள பலவகை இராமாயண நூல்கள் ஆகிய இவற்றுள் ஒன்றுக்கொன்று வேறுபாடு காணலாம்.[6] இன்றுள்ள வால்மீகி ராமாயணமும் பல்வேறு காலங்களில் பெருக்கப்பட்டு இன்றைய நிலையை அடைந்துள்ளது என்று ஆராய்ச்சியாளர் பலர் குறித்து, அத்தகைய பிற் சேர்க்கைகளைப் பலபடியாகச் சுட்டி விளக்கிச் செல்லலைப் பல நூல்களிற் காணலாம்.[7] வால்மீகி ராமாயணத்துள் சுக்கிரீவன் வானர வீரர்க்குக் குறிப்பதாக உள்ள நாற்றிசை விளக்கங்களை (அவ்வரலாறு இந்தியாவில் நடந்ததெனக் கொண்டு) இந்தியாவில் உள்ள இடங்களைப் பற்றியன என்றெண்ணிச் சுட்டிக்காட்ட முனைந்து, 'பாரியத்ரா' மலைத்தொடர்கள் முதலியவற்றைச் சுட்டிக் காட்ட முடியாமல் தவித்த ஆராய்ச்சியாளர் சிலர்[8] "அயோத்தி என்பது பூவுலகில் இருப்பது அன்று; அது தேவர் வாழும் தேவநகரம். இராசிமண்டலக் கணக்கை இங்ஙனம் இராமன் வரலாறாக முன்னையோர் உருவகப் படுத்தினர் என்பதை அறிதல் வேண்டும்" என்று அண்மையில் ஆராய்ச்சியாளர் ஒருவர் வரைந்தமையும் ஈண்டு நினைக்கத்தகும்.[9]

---

5 Vedam Venkataramayya's 'Aryavarta and Bharatavarsha'.

6 Pampa Ramayanam, Lankavatara Sutram, Ravisena's Ramayana etc.

7 Valmiki Ramayana, translated by C. R. Srinivasa Aiyangar, preface, pp. 11-12; 'John Muir's 'Original Sanskrit Texts' Vol. IV, pp. 441-491.

8 (1) "Ancient Geography of Asia compiled from Valmiki Ramayana" by Nobinchandra Das.

(2) "Ancient Geography of Asia" by Nandalal Dey.

9 "The story of the Ramayana appears to be a development of early Zodical myth".

—Vide Shama Sastry's article, Acharya Pushpanjali, p.17—19.

இங்ஙனம் அறிஞர் பலவாறு கூறினும், இராமகாதை நாட்டில் மக்களிடைச் செல்வாக்குப் பெற்றுவிட்டது. தசரதராமன் திருமால் அவதாரமாக்கப்பட்டான்; சீதை இலக்குமியின் அவதாரமாகக் கருதப்பட்டாள்.[10] இந்நிலை நன்கு பரவிய காலம் கம்பர் காலம்.

கதையின் மெய்த்தன்மை எந்த அளவினது என்பதைக் கம்பர் நன்கு அறிந்தவரே ஆவர். 'அஃது உண்மையில் நடந்த கதைதான்' என்று அவர் யாண்டும் கூறவில்லை. அதனுற்றான் அவர் தம் காலமக்கள் மனப்போக்கை மதித்து, அக்காலத்தில் வழங்கிய கதைக் குறிப்புகளைக் கொண்டார்; தமிழ்நாட்டு மக்கட்கு நூல் செய்யவேண்டிய நிலையில் இருந்த அவர் தமிழ் இலக்கண முறைக்கு ஏற்பப் பல புதிய செய்திகளைச் சேர்த்தார்;[11] தமிழ் நாகரிக நிலைக்கு ஏற்பச் சில மாறுதல்களைச் செய்தார்;[12] தம் தமிழ் நாட்டுப் பற்றையும் தக்க இடங்களில் விளக்கியுள்ளார்; செய்ந்நன்றியறிதலையும் தெளிவாகத் தெளிந்துள்ளார்; தம் உயரிய அநுபவங்களையும் சமயத்தைப் பற்றிய தம் உயரிய கருத்துக்களையும் ஆங்காங்கு உவமைகள், பிறிது மொழிதல் முதலியவற்றின் வாயிலாக விளக்கிச் சென்றுள்ளார். இங்ஙனம் பெரியதோர் காவியம் பாட விரும்பிய புலவர் தமக்கு முன்பிருந்த காவியங்களைப் பார்த்திருத்தல் இயல்பே. மகாவித்துவான் ரா. இராகவையங்கார் அவர்கள் சொன்னவாறு, கம்பர் தமது இயற்கை அறிவுடன் சேக்கிழார் போன்ற கவியரசர் அறிவையும் அளந்து, கொள்ளவேண்டியதைக் கொண்டனர் என்பதில் ஐயமே இல்லை. முற்பட்ட அக்காவியங்களுள்ளும் கம்பர் உள்ளத்தை மிகுதியும் ஈர்த்தது பெரிய புராணமாக இருத்தல் கூடும் என்று நாம் எண்ணுதல் தவறாகாது. என்னை? பெரிய புராணம் சோழ அரசன் தூண்டுதலால் அவனது அமைச்சராற் பாடப்பெற்றது; கம்பர் சோழனது அவைப் புலவர்; ஆதலின், தமக்கு முற்பட்ட புலவர் ஒருவர் சோழர் அவையிற் செய்துகாட்டிய

---

[10] Macdonel's 'History of Sanskrit Literature

[11] 'மிதிலைக் காட்சிப் படலம்' முதலியன

[12] தாரையைப் பத்தினிக் கடவுளாக மாற்றினமை முதலியன

காவியம் தமக்கு முதல் துணை என அவர் கருதுதல் இயல்பே. மேலும், தமிழ் நாட்டைப்பற்றிய சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற காவியங்களில் விளக்கமாக இராத நானிலத்து ஐந்திணை வளமும் தெரித்துக் காட்டும் நூல் பெரிய புராணம் ஒன்றே ஆதலால், அவ்வளத்தை விரிக்கும் விருப்பங்கொண்ட கம்பர் பெருமானுக்குப் பெரிய புராணம் பெருவிருந்தாக இருந்ததெனல் மிகையாகாது.

இனிக் கம்பர் பெருமான் பெரிய புராண அமுதத்தை எங்ஙனம் உண்டு களித்தார் என்பதைச் சுருங்கக் காண்போம்.

1. "உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்."

என்ற பெரிய புராண முதற் பாசுரத்தை அடியொற்றி,

"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே."

என்ற கம்பரது பாட்டு, அதன் பிரதிபிம்பம்போல விளங்குதல் காணலாம்.

2. "அளவி லாத அடியார் புகழ்களை
அளவில் ஆசை துரப்ப அறைகுவேன்"

என்று தொடங்கி ஆசிரியர் சேக்கிழார் அவை யடக்கம் கூறுவாராய்,

"பெருகு தண்கடல் உற்றான் பெருநசை
ஒருசு ணங்களை ஒக்குந் தகைமையேன்"

என முடித்தார். அக்கருத்தையே அனுவதித்துக் கம்பர்,

"ஆசைபற்றி......இராமன் கதையினை
"ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்றொரு
பூசை முற்றவு நக்குபு புக்கெனெ"

நான் அறையலுற்றேன்' என்று கூறி முடித்தார்.

3 "முந்தை யோம்பெருந் தவத்தினு லேகொல்
முனிவர் இங்கெழுந் தருளிய தென்றார்"
—இயற்பகை நாயனார் புராணம், 5

என்ற பாட்டின் கருத்தைக் கையடைப் படலத்திலே,

"நிலஞ்செய்தவ மென்றுணரின் அன்றுசெடி யோயென்
வலஞ்செய்வினை யுண்டெனினும் அன்றுநகர் நீயான்
வலஞ்செய்து வணங்கவெளி வந்தஇது முந்தென்
குலஞ்செய்தவ மென்றினிது கூறமுனி கூறும்"

என்ற கம்பரது பாட்டு விரிவுரை செய்கின்றது என்று சொன்னால் அது தவறாகாது.[13]

"முட்டி லன்பர்த மன்பிடுந் தட்டுக்கு முதல்வர்
மட்டு நின்றதட் டருளொடுந் தாழ்வுறும் வழக்கால்
பட்டொ டுந்துகில் அநேககோ டிகளிடும் பத்தர்
தட்டு மேற்படத் தாழ்ந்தது கோவணத் தட்டு."
—அமர்நீதியார் புராணம், 35

இப்பாட்டில்முதல்இரண்டடிகளில்ஒருநியதி-நீதி-உண்மை -ஆகிய ஒரு வழக்கினை நிறுவிப் பின்னிரண்டடிகளில் அவ்வுண்மை இந்நிகழ்ச்சியால் உதகரிக்கப் பெற்றது என்று எடுத்துக் காட்டுகின்றார் ஆசிரியர். இஃது ஆசிரியரின் மரபு. இவ்வாறு ஒரு நியதியாகிய வழக்கினைக் கூறிச் சரிதத்தை உதகரிக்கும் இவ்வாசிரியரது அரிய மரபினைக் கம்பரும்,

"தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினும் அவர்தம்
மருண்ட சிந்தையை மாற்றுவ ரெனுமிது வழக்கே;
உருண்ட வாய்தொறும் பொன்னுரு ளுரைத்துரைத் தோடி
இருண்ட கல்லையும் பொன்னிற மாக்கிய விரதம்"
—வரைக்காட்சிப் படலம், 8

என்ற பாட்டிலே சொல், பொருள், யாப்பு என்னும் பல வகையிலும் அடியொற்றிப் பின்பற்றி நின்றது காண்க.[14]

---

13 C. K. Subramania Mudaliar's 'Sekkilar', pp. 202-203.

14, Periyapuranam, (C. K. S. Commentary), Vol. I, p. 669

“ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத்தமிழ்”
—மூர்த்திநாயனார் புராணம்-3.

என்ற சேக்கிழார் வாக்கின் கருத்தும்,

“நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கண்
தழற்பொலி சுடர்க்கடவுள் தந்ததமிழ்”

என்ற கம்பர் கவியின் கருத்தும் ஒன்றுதல் காண்க.[15]

“கற்பகப்பூந் தளிரடிபோங் காமருசா ரிகைசெய்ய
உற்பலமென் முகிழ்விரல்வட் டணையோடுங் கைபெயரப்
பொற்புறுமக் கையின்வழிப் பொருகயற்கண் புடைபெயர
அற்புதப்பொற் கொடிநுடங்கி ஆடுவபோல் ஆடுவார்”
—திருநாவுக்கரசர் புராணம், 420

என்ற பாவின் கருத்து,

“கைவழி நயனம் செல்லக் கண்வழி மனமும் செல்ல
ஐயநுண் இடையார் ஆடும் நாடக அரங்கு கண்டார்”
—மிதிலைக் காட்சிப் படலம்

என்ற கம்பரது பாட்டடிகளில் கலந்து இனித்தல் காணலாம்.

மிதிலைக் காட்சிப் படலம்: வான்மீகத்தில் இல்லாத இப் பகுதி கம்பரால் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் தமிழ் அகப்பொருள் இலக்கணமேயாகும். உள்ளப் புணர்ச்சி உண்டாய பிறகே கற்பு மணம் நடத்தல் தமிழ்முறை ஆதலின், பிறநாட்டுக் கதையெனினும் தமிழ்நாட்டு மக்கள் படிப்பதற்காகத் தமிழிற் பாடப்படுதலின், இராமன் சீதை மணத்தைத் தமிழ் முறையில் அமைத்துக் காட்டல் தக்கது என்றெண்ணிய கம்பர் இப்பகுதியைப் புதிதாகச் சேர்த்தார். இத்தகைய காட்சி ஒன்று பெரிய புராணத்துள்ளும் சேக்கிழாரால் நுழைக்கப்பட்டுள்ளது. அது சுந்தரர் பரவையார் உள்ளப் புணர்ச்சி பற்றியதாகும். காட்சி, ஐயம், தெளிதல் என்ற படிகள் அங்கு விளக்கப்பட்டுள்ளன. அன்றிரவு இருவரும் தத்தம் இடங்களில் தனித்திருந்து மாரன் மலர்க்கணைக்கு இலக்காகி மயங்கு

15 Ibid. Vol. II, p. 1256

இன்றனர்; மறுநாள் மணம் முடித்து மகிழ்கின்றனர்.[16] இந்நிலைகள் அனைத்தையும் கம்பர் பெருமான் தமது மிதிலைக் காட்சிப் படலத்தில் அழகாக அமைத்துப் பாடியுள்ளமை நோக்க, முன்னூல்களில் இல்லாத இப்புதிய பகுதிக்கு மேற்சொன்ன பெரிய புராணப் பகுதி பெருந்துணை புரிந்ததாதல் வேண்டும் எனக் கோடல் பொருத்தமாகும்.

தொடர்களை ஆளுதல்: இங்ஙனம் கம்பர் பெருமான் சேக்கிழார் பெருமானிடம் கொண்ட கருத்துக்கள் பல; விரிப்பிற் பெருகும். இவ்வளவோடு அக்கவியரசர் அமைந்திலர்; பல இடங்களில் சேக்கிழார் வழங்கியுள்ள தொடர்களைப் பொருட் பொலிவு பழுது படாதவாறு எடுத்தாண்டுள்ளமை படித்து இன்புறற்பாலது. சான்றாகச் சில காண்க.

1. "உயிர் ஒன்றும் தாங்கி நின்றாள்"
—தடுத்தாட்கொண்ட புராணம், 172
"துகில் ஒன்றும் தாங்கி நின்றாள்" —உலாவியற் படலம்
2. "உள் நிலாவிய காதலினால்" —சம்பந்தர் புராணம், 431
"உள் நிலாவிய துயரம்" —கையடைப் படலம்
3. "செய்தவத்தீர்" —சம்பந்தர் புராணம், 118
"செய்தவம் பயந்த வீரர்"
—விபீடணன் அடைக்கலப் படலம்.
4. "தண்டலை மயிலாடு துறை" —சம்பந்தர் புராணம், 428
"தண்டலை மயில்கள் ஆட" —நாட்டுப் படலம்

சொற்களை ஆளுதல்:

1. "நோக்கிய" அமர்நீதியார் புராணம்-40;
நோக்கு-கூர்ந்த பார்வை. "அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்."[17] —மிதிலைக் காட்சிப் படலம்.

---

16 தடுத்தாட் கொண்ட புராணம், 138-181.
17 Periyapuranam (C. K. S. Commentary), Vol. I, p. 677.

2. " சிலையினைக் காப்புக் கட்டுந் திண்புலி நரம்பிற் செய்த
நலமிகு காப்பு நன்னாள் நாகனார் பயந்த நாகர்
குலம்விளங் கரிய குன்றின் கோலமுன் கையிற் சேர்த்தி
மலையுறை மாக்கள் எல்லாம் வாழ்த்தெடுத்தியம்பினார்கள்."

—கண்ணப்பர் புராணம், 33

வேடர்கள் வாழ்த்தியபடி உலகநிலைத் தாழ்வுக்குறியின் வாராது இவ்வில் வித்தை உயர்ந்த தெய்வக் குறியின் முற்றியதாதலின் இவ்வேடர்களது அறிவுக் குறைவு காட்ட 'மாக்கள்' என்றார்.

இராமன் முடி சூட்டுதற்கு நாள் வைத்த கணித நூல் வல்லோரை, அந்நாளே அவன் முடி துறந்து காடு செல்ல அமைந்த பின் விளைவு நோக்கிக் கம்பர் பெருமான் "கணித மாக்கள்" என்றமை மேற்சொன்னதுடன் ஒப்பு நோக்கத்தக்கது.[18]

3. " காடு கொண்டெடு முந்த வேடு கைவளைந்து சென்றதே"

—கண்ணப்பர் புராணம், 72

வேடு - வேடர் கூட்டம்.

"வேடு கொடுத்தது பாரெனு மிப்புகழ் மேவீரோ?"

—குகப் படலம்

வேடு - வேடர் கூட்டம்.[19]

முடிவுரை : சேதுசமஸ்தான மகாவித்துவான் ரா. இராகவையங்கார் அவர்கள் கூறியவாறு கம்பர் பெருமான் தமக்கு முற்பட இருந்த சேக்கிழார் போன்ற கவியரசர் காவிய அமுதினை எல்லாம் சுவையுற நுகர்ந்த பின்னரே தமது பெருங்காவியத்தைப் பாடினாராவர் என்பது இதுகாறும் காட்டிய சான்றுகளால் நன்கு விளங்கும். கம்பரைப் போன்றே தமக்கு முற்பட்ட சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி முதலிய புறச்சமய காவியங்களை அழுந்தக் கற்றவர் சைவப் புலவராகிய சேக்கிழார் என்பதற்குப் பல சான்றுகள் காட்டலாம். சேக்கிழார், கம்பர் போன்ற மகாகவிகள் கேவலம் சமய வேறு

18 Ibid. Vol. II, p. 870.
19 Ibid. ,, , p. 912-913.

பாட்டால் பெறற்கரிய கவியமுதைக் கைவிடும் இழ்மக்கள் அல்லர் என்பதை அறிஞர் அறிவர். சேக்கிழார் சிந்தாமணி படித்தவர் என்பது அவரது வரலாறே கூறும் செய்தி; அன்றி அவரது பெரிய புராணப்பாக்களிலிருந்தும் பல காட்டுகள் காட்டலாம். இதில் இழுக்கென்னை?

இவ்வாறே பின்வந்த கம்பர் பெருமான் பெரிய புராணம், சிந்தாமணி, மணிமேகலை முதலிய செந்தமிழ்க் காவியங்களைக் கற்றுக் களித்தனர்; தமக்கு வேண்டியன வேண்டியாங்குக் கொண்டனர். இங்ஙனம் முன்னுயிரியர்கட்கு மதிப்பளித்த சிறப்பாற்றான், காவியமுறை, சொல்லாட்சி, தொடராட்சி, வருணனை இன்ன பிற காவியப் பண்புகள் தொல்லாசிரியர் மரபுபற்றிச் சிறந்திருக்கச் செய்திருப்பதாற்றான் கம்பரை நாம் போற்றுகின்றோம். கம்பர் திருநாளைக் கொண்டாடிக் களிக்கின்றோம். தமிழ் அறிஞர் கம்பர் கூறும் கதைக்காகவா அவர் காவியத்தைப் படிக்கின்றனர்? அன்று! அன்று!! அவர் புலமை வழியே வெளிவரும் நமது பண்டைத் தமிழ்ச் செல்வத்தை, கவிநயத்தை, புலவர் புலமையை, தமிழ்ப் பாவின் பண்பை, தமிழ்ப் புலவரேறாகிய கம்பருடையகனிந்த உலக அநுபவத்தை ஒருங்கே அறிந்து மகிழ - கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் இத்தகைய பேரறிவு படைத்த பெரும் புலவர் இருந்தமையை எண்ணி எண்ணி இறும்பூது கொள்ளக் கம்பராமாயணத்தைக் கற்கின்றனர்; விழாக் கொண்டாடுகின்றனர்.

9. கம்பனது கதாநாயகி

[வித்துவான் மு. சண்முகம் பிள்ளை]

பூமியிலே சிறந்த அறத்தை நிலைநாட்ட இராமன் தோன்றினான் என்பர். அங்ஙனம் அறத்தை நிலைநாட்டு தற்கு ஏற்ற வாழ்க்கைத்துணை அமைதல் இன்றியமையாத தொன்று. அவ்வற நெறியிலே இராமன் சென்று வெற்றி பெறப் பெருந்துணை செய்தது சீதையின் ஆற்றலேயாகும். பாற்கடலினின்று திருவும்சீதாதேவியாக அவதாரம்செய்து இராமனை அடைந்தது அவனை அறவழியிலே நிறுத்து தற்கே என்கிறார் கவியரசர்.

> துறந்து போமெனச் சொன்னசொல் தேறமோ
> உறைந்த பாற்கடற் சேக்கை யுடனேநீ இ
> அறந்தி றம்புமென் றையன் அயோத்தியில்
> பிறந்த பின்பும் பிரிவில ளாயினாள்

அயோத்தி. நகர்நீங்கு. 223

என்பது கம்பர் வாக்கு. சிறையிருந்த செல்வியின் ஏற்றம் கூறுவது ஸ்ரீராமாயணம் என ஆன்றோர் கூறுகின்றனர். எனவே, இராமாயணம் சீதையின் பெருமையை விளக்கு கிறது என்று ஏற்படுகின்றது.

சீதை இராமனது தகுதிக்கு ஒத்த குணமும் அழகும் வாய்ந்து விளங்குகிறாள். 'இவள் பிறந்த பின் மற்றை யோர் அழகுகள் பொலிவிழந்தன; நற்குணங்களெல் லாம் இவளை நாடி வந்து அடைந்துள்ளன; அழகோ இவ ளைத் தவஞ்செய்து பெற்றது' என்று சதானந்த முனிவர் சீதையின் குணநலத்தை வருணிக்கின்றார்.

> குணங்களையென் கூறுவது கொம்பினைச்சேர்ந் தவையுய்யப்
> பிணக்குவன அழகிவளைத் தவஞ்செய்து பெற்றதுகாண்
> கணக்குழையாள் எழுந்ததற்பின் கதிர்வானிற் கங்கையெனும்
> அணங்கிழியப் பொலிவிழந்த வாறெத்தார் வேறுற்றார்

—பால. குலமுறை. 18

என்பது சதானந்தர் வாக்கு. இவளது அழகின் ஏற்றத்தை யும் குணத்தின் மேன்மையையும் வேறு சில இடத்தும் கம்பர் நமக்குக் காட்டுகின்றார். ஆரணியத்திலே சூர்ப்

பணகை சீதையைக் கண்ட காலத்து, 'திருமகள் தாமரையினின்றும் நீங்கி இங்கே வந்துவிட்டனளோ' என்று திகைத்தாள். சீதையின் சௌந்தரியம் சூர்ப்பணகையைத் திகைக்கச் செய்துவிட்டது. அந்நிலையிலே சூர்ப்பணகை,

பண்புற நெடிது நோக்கிப் படைக்குநர் சிறுமை யல்லால்
எண்பிறங் கழகிற் கெல்லை இல்லையா மென்று நின்றாள்
கண்பிற பொருளிற் செல்லா கருத்தெனின் அஃதே கண்ட
பெண்பிறர்க் கேனுக் கென்றால் என்படும் பிறருக் கென்றாள்

—ஆரணி. சூர்ப். 60

என்று கம்பர் அவளது நிலையை நமக்கு உணர்த்துகின்றார். சீதையின் சௌந்தரியம் சூர்ப்பணகையாகிய பெண்ணின் மனத்தையே நிலைகலங்கச் செய்துவிட்டதாம். இலங்கையிலே அசோகவனத்திடையே சீதையைக் கண்ட அநுமன் அவளது இற்பிறப்பிற்கு ஏற்ற ஒழுக்க நலனையும் பொறுமைக் குணத்தையும் கண்டு அளவிலா ஆனந்தமுற்றான். இராமனிடத்தே தான் சீதையைக் கண்டுவந்த செய்தியைத் தெரிவிக்குமிடத்து அவளது குணநலத்தையே தான் கண்டதாகப் பன்னி உரைக்கின்றான்.

விற்பெருந் தடந்தோள் வீர வீங்குநீர் இலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்த ளாய நங்கையைக் கண்டே னல்லேன்
இற்பிறப் பென்ப தொன்றும் இரும்பொறை யென்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும் களிநடம் புரியக் கண்டேன்

—சுந்தர. திருவடிதொழு. 62

என்கின்றான் அநுமன். அநுமன் காட்சியிலே பிராட்டி குணக்குன்றாய் இலங்குகின்றாள்.

இங்ஙனம் அழகும் குணமும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற சீதை குணமும் அழகும் நிரம்பிய இராகவனை அடைந்தது ஒரு தெய்விகக் காதலே யாகும். இராமனோ ஆடவரும் விரும்பும்படியான அழகு படைத்திருந்தான்; யாவரும் விரும்பும்படியான குணநலம் வாய்க்கப்பெற்றுத் திகழ்ந்தான். 'தெரிவரும் குணங்கொடன்றோ இராமன் மேல் நிமிர்ந்த காதல்' என்கிறார் கம்பர். இத்தகைய நம்பியும் நங்கையும் எல்லா வகையாலும் ஒத்திருந்தனர். இவ்விருவரது அழகையும் குணத்தையும் கண்ட மிதிலை நகரமக்கள்,

நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்
கொம்பினைக் காணுந் தோறும் குரிசிற்கும் அன்ன தேயாம்
—பால. கார்முக. 43

என்று போற்றினர். சீதையும் இராமனும் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொண்டனர். 'இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தினர்' என்று கம்பர் கூறியவாறு இருவரும் உளத்தால் ஒருவராயினர். தெய்விகக் காதலால் இராமன் சிவனது வில்லினை ஒடித்துச் சீதையை மணந்தான். சீதையும் நாயகன் சொல்வழி நின்று இல்லறம் நடத்தினள்.

குணநலம் வாய்க்கப்பெற்ற நங்கை பெண்களுக்குரிய இயற்கையான விளையாட்டுக்களிலும் பெரும் பற்றுள்ள வளாயிருந்தாள். கிளி, பூவை முதலியவற்றை மிகவும் போற்றி வளர்த்தாள். இத்தகைய விளையாட்டில் மிக்க பிரியம் வைத்த தன்மையினால்தான் ஆரணியத்தில் சுமந்திரனிடம் தன் கிளியையும் பூவையையும் போற்று மாறு தன் தங்கையர்க்குச் சொல்லிவிடுகின்றாள். மாயமானாக மாரீசன் வந்தபோது அந்த மானைப் பிடித்துத் தரவேண்டும் என்று வற்புறுத்துகின்றாள். இதனைப் பிடித்துத் தருவாயாயின் என்னுடைய துன்பம் நீங்கு வதற்கு ஒரு வழியாம் என்று வேண்டுகின்றாள். மானையும் விரைவில் பிடித்துத் தரவேண்டும் என்கிறாள். இச்சொற் கள் பெண்களுக்கு இயல்பான குணத்தால் ஏற்பட்டன வன்றி வேறன்று.

'கற்புடைய மங்கையர்க்குக் கணவனே தெய்வம்' என்ற உயர்ந்த கொள்கையைச் சீதை மனத்துட் கொண்ட வள். இன்பத்திலும் துன்பத்திலும் கணவனைப் பிரியாது அவற்றில் தானும் பங்கு கொள்ளவேண்டும் என்பதைச் சீதை தன்னுடைய வாழ்க்கையிலேயே காட்டியுள்ளாள். இராமன் தன் பெற்றோர் ஏவலால் தம்பி பரதனுக்கு அரசுரிமையை ஈந்து தான் கானகம் புக ஒருப்பட்டான். "தாயும் தந்தையும் இட்ட ஆணையால் அரசைத் துறந்து கானகம் சென்று மீள்வேன்; நீ வருந்தாதே" என்று சீதையை நோக்கி மொழிந்தான். நீ வருந்தல என்ற நாயகனுடைய சொல் சீதையின் செவியையே சுட்டு விட்டது.

நாய கன்வனம் நண்ணு லுற்று னென்றும்
மேய மண்ணிழந் தானென் றும் விம்மலள்
நீவ ருந்தலை நீங்குவென் யானென்ற
தீய வெஞ்சொல் செவிசுடத் தேம்புவாள்

—அயோத். நகர்நீங்கு. 222

என்று சீதாதேவியின் மனநிலையைத் தெரிவிக்கிறார் கம்பர். "வெம்மையான கானகத்தில் உன் பாதம் நடந்து செல்லப் பெறாது; நீ இங்கிருத்தலே தக்கது'' என்று இராமன் சொன்னபோது நங்கை, "உம்மைப் பிரிந்திருத்தலினும் வெம்மையான காடு ஒன்று உண்டா? உம் பிரிவை விடவும் அந்தக் காடு சுடுமோ?'' என்று வினவுகின்றாள்.

பரிவி கந்த மனத்தொடு பற்றி லாது
ஒருவு கின்றனை ஊழி யருக்கனும்
எரியு மென்ப தியாண்டைய தீண்டுநின்
பிரிவி னும்சுடு மோபெருங் காடென்றாள்.

—அயோத். நகர்நீங்கு. 226

இங்ஙனம் உரைத்து விட்டு உள் சென்று இராமனது கட்டளை யின்றியே தன் கணவனைப்போலத் தானும் மரவுரி அணிந்து கணவன் பக்கம் வந்து நின்றாள். சீதையின் அசையாத மனத்தைக் கண்ட இராமன் அவளையும் உடனழைத்துச் செல்ல ஒருப்பட்டான். ஆரணிய வாழ்க்கையில் தன் கணவனுக்குத் தொண்டு செய்து அவனை மகிழ்வித்தாள். அரண்மனையிலேயே உயரிய வாழ்க்கை வாழ்ந்துவந்த சீதை கணவனது துன்பக் காலத்திலும் பங்குகொண்டு மங்கையர்க்கு ஒரு கட்டளைக்கல் எனத் திகழ்ந்தாள்.

கருணாமூர்த்தியான இராகவனுக்கும் மேலான கருணை படைத்தவளாயுள்ளாள் சீதை. இராம இராவணயுத்தத் தின்பின் சீதையைச் சிறையினின்றும் அழைத்துவரச் சென்ற அநுமன் பிராட்டியிடம், "அன்னையே, உனக்கு இவ்வரக்கியர் எவ்வளவு துன்பம் இழைத்தனர். திரிசடை ஒழிந்த அரக்கியரை என் வள்ளுகிரால் பிளப்பேன். ஆணை அளித்தருள்க'' என்று வேண்டினான். அரக்கியர் அனைவரும் அஞ்சி அன்னை பாதமே சரணமென்றனர். அப்பொழுது அன்னை மாருதியை நோக்கி, "இவர் எனக்குத்

தீமை செய்தார் என்று எண்ணாதே. இராவணன் ஏவலை யன்றோ இவர் செய்தனர்? இவ்வரக்கியர்க்குத் துன்பம் செய்யாதே" என்றாள். தனக்குத் துன்பம் இழைத்தார்க்கும் இன்பம் செய்யும் அருள் நிறைந்த உள்ளம் நமக்கு இங்கே புலனாகிறது.

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு

என வள்ளுவர் கூறிய சால்புக்கு லக்ஷ்யமாக அன்னை சீதை விளங்குகிறாள்.

அருள் பொதிந்த உள்ளம் படைத்த நங்கை தன்னை எதிர்த்து வந்த பகையைக் கண்டு அஞ்சி ஒடுங்காது எதிர்த்து நின்று தாக்க வல்ல வீரவுள்ளமும் படைத்திருந்தாள். மாயத்துறவு வேடங்கொண்ட இராவணன், இலங்கை நகரில் சிலபகல் உறைய விரும்பினேன் என்றான். இராவணன் முதலிய தீவினையரக்கர்பால் மாதவராகிய நீர் உறைதற்கு ஏது என்ன என்று நங்கை வினவினாள். 'அரக்கரே எமக்குத் துணைவர்' என்று மாயவேடம் பூண்ட இராவணன் அவரை உயர்த்துக் கூறியபோது, சீதை 'அறந்தரு வள்ளல் இராமன் இக்கானகத்தில் தவஞ்செய்யும் நாட்களுக்குள் அரக்கர் அனைவரும் முடிவர்; உலகத்திற்கு இடர் இல்லை' என்று மொழிந்தாள். அப்பொழுது இராவணன் கோபம் பொங்க, 'மானிடர் அரக்கரை வெல்வரோ?' என்றான். அது கேட்ட சீதை, 'நீர் சிலபகல் உறைந்ததாகக் கூறிய அவ்விலங்கையரக்கரும் நாளையே ஒழிவதைக் காண்பீர்' என்றாள்.

பின், இராவணன் தன் இயற்கை உருவங்கொண்டு சீதைபால் தகாத மொழிபல பகர்ந்தான். உணர்ந்த சீதை இராவணன் வஞ்சத்தை நினைந்து மனங்குலைந்தாள். மனங் குலைந்து அஞ்சினாளில்லை. அரக்கனை எதிர்த்து, 'இத்தகாத சொல்லைச் சொன்ன நீ இராகவன் கணை விரவுமுன் ஓடு' என்று சீறி மொழிந்தாள்.

செவிகளைத் தளிர்க்கை யாலே சிக்குறச் சேமஞ் செய்தாள்
கவினும்வெஞ் சிலைக்கை வென்றிக் காகுத்தன் கற்பி னேனைப்
புவியிடை ஒழுக்கம் நோக்காப் பொக்கெறிப் புனித நீயும்
அவியையாய் வேட்ட தென்ன என்சொனாய் அரக்க என்னா,

புன்றுனை நீரி ஜெய்தாய்ப் போதலே புரிந்து நின்ற
இன்னுயிர் இழத்த லஞ்சி யிற்பிறப் பழித லுண்டே
மின்னுயிர்த் தருமிற் சீறும் வெங்கணை விரவா முன்னம்
உன்னுயிர்க் குறுதி நோக்கின் ஒளித்தியா லோடியென்றாள்.

—ஆரணிய - சடாயு.

நிலத்தோடு இராவணன் அகழ்ந்து தன்னைத் தேர்மீது எடுத்துச் செல்லும்போதும் அவனை எதிர்த்து நின்று பேசினாள். 'வீரனானால் இராகவன் முன்னிலையில் எதிர்த்து நின்று யுத்தம் செய்யவேண்டும். அரக்கரைக் குலநாசம் செய்யும் வள்ளலின் பெருமையைக் கேட்டே நீ இந்த வஞ்சம் செய்தாய்; இது உன் அச்சத்தையல்லவா காட்டுகிறது? வீரனானால் இராமன் இருக்கும்போது நேரே வராதது என்ன?' என்று எதிர்த்து மொழிந்தாள்.

வாக்கினா லன்னான் சொல்ல மாயையால் வஞ்ச மானென்று
ஆக்கினா யாக்கி யுன்னை ஆருயி ருண்ணுங் கூற்றைப்
போக்கினாய் புகுந்து கொண்டு போகின்றாய் பொருது நின்னைக்
காக்குமா காண்டி யாயிற் கடவலுன் தேரை என்றாள்.

மீட்டுமொன் றுரைசெய் வாள்நீ வீரனேல் விரைவின் மற்றுன்
கூட்டராம் அரக்கர் தம்மைக் கொன்றுங்கை கொங்கை மூக்கும்
வாட்டினார் வனத்தி லுள்ளார் மானுடர் என்ற வார்த்தை
கேட்டுமிம் மாயஞ் செய்தது அச்சத்தின் கிளர்ச்சி யன்றோ

—ஆரணிய. சடாயு. 83, 84

என்று மொழிந்தாள். பகையை எதிர்த்து நின்று தாக்க வல்ல ஆற்றல் படைத்த அவளது வீரநெஞ்சம் இச்செய்யுட்களிலே நமக்குப் புலனாகின்றது.

பின் இராவணன் அசோகவனத்தில் அன்னை சீதையைச் சிறைவைத்தான். பல இரக்கமற்ற அரக்கியரைக் காவல் வைத்து அவளுக்கு மிகுந்த துன்பத்தை உண்டாக்கினான், சிறையிருந்த சீதையிடம் இராவணன் தன் குறை கூறி அவள்முன் வணங்கிவேண்டவும் செய்தான். அவனது தீய சொற்களைக் கேட்ட சீதை, 'நீ குலமங்கையர்க்கு அடாத சொற்களைச் சொன்னாய்' என்று கனன்று அவனைப் பலவாறு நிந்தித்தாள். சீதை கூறிய நிந்தனை மொழி ஒவ்வொன்றும் அவளது அசையாத வீர உள்ளத்தை நமக்குக் காட்டுகின்றது.

பேரிடர் வந்த காலத்தும் தன்னிலையில் தாழாதிருத்தலே மிகச் சிறந்த செய்கை. சீதைக்கு வந்த பேரிடர்களோ பலப்பல. இராவணன் சீதையை அச்சுறுத்த எண்ணி அயோத்தியிலுள்ள பரதன் முதலியவர்களையும், மிதிலை மன்னனாகிய ஜனகனையும் கொன்று வஞ்சினம் தீர்ப்பதாக அவள்முன் கூறிச் சென்றான். அன்றியும் மாயையால் ஓரரக்கனை ஜனகன் போல உருச் செய்து ஜனகனைச் சிறைப்பிடித்து, அவனைப் பாசத்தாற் கட்டி வந்ததாகச் சொல்லி அவள் கண்ணெதிரே கொண்டு வந்து நிறுத்தினான். தன் தந்தைக்கு நேர்ந்த பேரிடர் கண்டு சீதை மனமிக வருந்தினாள். மாயா ஜனகன் இராவணனை விரும்பித் தன்னைச் சிறையினின்றும் விடுவித்து எல்லோருக்கும் நன்மை செய்வாய் என்றபோது சீதை தந்தையை நோக்கி 'முறைகெட வாழ்தல் தகாது; மானமே பெரிது' எனத் தெருட்டி அவனை இகழ்ந்துரைத்தாள்.

> அறங்கெட வழக்கு நீங்க அரசர்தம் மரபுக் சான்ற
> மறங்கெட மெய்ம்மை தேய வசையுற மறைக ளோதும்
> திறங்கெட ஒழுக்கங் குன்றத் தேவரும் பேணத் தக்க
> நிறங்கெட இனைய சொன்னாய் சனகன்கொல் நினையி னைய.
>
> நீயுநின் நிலையு மற்றிந் நெடுநில வரைப்பும் நேரே
> மாயினும் முறைமை குன்ற வாழ்வெனோ வயிரத் திண்டோள்
> ஆயிர நாமத் தாழி அரியினுக் கடிமை செய்வேன்
> நாயினை நோக்கு வேனோ நாண்துறந் தாவி நச்சி.
>
> வரிசிலை யொருவ னல்லால் மைந்தரென் மருங்கு வந்தார்
> எரியிடை வீழ்ந்த விட்டி லல்லரோ வரசுக் கேற்ற
> அரியொடும் வாழ்ந்த பேடை யங்கணத் தழுக்குத் தின்னும்
> நரியொடும் வாழ்வ துண்டோ நாயினுங் கடைப்பட் டோனே.

—யுத்த. மாயாசனக. 65, 67, 69

இச்செய்யுட்களிலே பிராட்டியின் உள்ளம் நன்கு விளங்குகின்றது. மேலும் இராவணன் ஜனகனைக் கொன்று உயிர் குடிப்பேன் என்று குமுறினான். அப்பொழுதும் சீதை தன்னிலையில் தாழ்ந்தாளில்லை. 'ஜனகனை அல்ல; என்னை வேண்டுமானாலும் கொல். நான் உயிர் நீங்கிக் கெடாப் புகழே எய்துவேன். யார் இறந்தாலும் இருந்தாலும் நீயும்

உன்சுற்றமும் இராமன் அம்பிற்குப்பிழைக்கமாட்டீர்கள்' என்று கூறினள்.

என்னையுங் கொல்லா யின்னே இவனையுங் கொல்லா யின்னும்
உன்னையுங் கொல்லாய் மற்றிவ் வுலகையுங் கொல்லாய் யாறும்
இன்னுயிர் நீங்கி யென்றுங் கெடாப்புக ழெய்த நின்றேன்
பின்னையு மெங்கோ னம்பிற் கிளையொடும் பிழையா யென்றாள்.

—யுத்த. மாயாசனகப். 71

இச்செய்யுளிலே பெருந் துன்பத்திலும் அசையாத சீதையின் உள்ளம் புலனாதல் காணலாம்.

இராமன் முதலியோர் பிரமாத்திரத்தால் மயங்கிக் கிடந்தனர். 'இராமன் முதலியோர் அனைவரும் மாண்டார்; நாம் வென்றோம்' என்று இராவணன் மனங் களித்தான். சீதையை அழைத்துச் சென்று இராமன் முதலியோர் மயங்கிக் கிடந்த களத்தைக் காட்டுமாறு அரக்கியர்க்கு இராவணன் பணித்தான். களத்திலே மயங் கிக்கிடந்த நாயகனையும் மற்றையோரையும் கண்ட சீதை அனைவரும் இறந்தார் என்றெண்ணி அழுதரற்றினள். தனது விதியை நினைந்து நொந்தாள். தனது நாயகன்மேல் விழுந்து உயிர் துறக்கத் துணிந்தாள்.

மழுவாள் வரினும் பிளவா மன்னுண்டு
அழுவே னினியின் றிடரா றிடயான்
விழுவேன் அவன்மே னியின் மீதில்

—யுத்த. பிராட்டி களங் காண். 21

என்று எழுந்தாள். இங்கே சீதை தன் மனவுறுதியைக் கூறுவதாகக் கம்பர் கூறும் பகுதி அவளது அசையாத உள்ளத்தையே நமக்குத் தெளிவுறுத்துகின்றது.

எத்தகைய துன்பம் வந்தபோதிலும் தன் நிலையில் தாழ்தல் தகாது என்ற உயரிய தன்மையைச் சீதை உலகத்திற்குக் காட்டினள். இதுபோன்றே மங்கையர் தம் கணவரது புகழ் கெட வரும் செயல்களைச் செய்தல் கூடாது என்பதும் சீதையின் சரித்திரப் பகுதியிலே காணக் கிடக்கின்றது. கணவனது புகழை விரும்பிய பெண் டிரை அடையாத ஆடவர் உலகத்திலே தலைநிமிர்ந்து நடக்க இயலாதென்கிறார் வள்ளுவர்.

புகழ்புரிந்த இல்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை —குறள், 59.

என்பது வள்ளுவர் திருக்குறள். அசோகவனத்திலே பிராட்டியைக் கண்டு செய்தி உரைத்த அநுமன் தன்னுடைய தோளில் சீதாதேவியை ஏற்றி இராமனிடத்திற்குச் கொண்டு செல்வதாகச் சொல்லி, பிராட்டியைத்தோளின் மேல் ஏறுக என்று வேண்டினான். அப்பொழுது பிராட்டி அநுமனது மனம் வருந்தாவகை கூறி இது இராமன் புகழ்க்கு மாசுண்டாக்கும் என்று மறுமொழி பகர்ந்தாள்.

அரிய தன்றுநின் னாற்றலுக் கேற்றதே
தெரிய எண்ணினை செய்வதுஞ் செய்தியே
உரிய தன்றென ஓர்கின்ற துண்டதென்
பெரிய பேதைமைச் சின்மதிப் பெண்மையால்.

அன்றி யும்பிறி துள்ளதொன் றுரியன்
வென்றி வெஞ்சிலை மாசுறும் வேறினி
நன்றி யென்பதென் வஞ்சித்த நாய்களின்
நின்ற வஞ்சனை நீயும் நினைத்தியோ

—சுந்தர. சூடாமணி 12,14

என்று கூறும் வாசகங்கள் பிராட்டியின் மன நிலையைத் தெள்ளத் தெளியக் காட்டுகின்றன.

இராம இராவண யுத்தம் முடிந்தபின் இராகவன் சீதையைச் சிறையினின்று அழைத்துவர அநுமனை ஏவிப் பின் விடணனிடமும் தேவியைச் சீரொடும் அழைத்து வருக என்றான். விடணன் அன்னை சீதையை வணங்கி, 'அன்னையே வருத்தம் நீங்கிக் கோலம்பூண்டு இராமனிடத்திற்கு எழுந்தருள்க' என்று வேண்டினான். அது கேட்ட அன்னை,

யானிவ ணிருந்த தன்மை யிமையவர் குழுவு மெங்கள்
கோனுமம் முனிவர் தங்கள் கூட்டமுங் குலத்துச் சேர்ந்த
வானுயர் கற்பின் மாத ரீட்டமுங் காண்டல் மாட்சி
மேனினை கோலங் கோடல் விழுமிய தன்று வீர

—யுத்த. மீட்சி. 40

என்று மறுத்துரைத்தாள். விடணன் இராமன் பணியின் குறிப்பு இது என்று சொன்னபின்புதான் அன்னை

கோலம் புனைதற்கு ஒருப்பட்டாள். களத்தில் இராமனைச் சென்று கண்டாள்.

இங்கே, ஒரு பெருஞ்சோதனை அன்னைக்கு ஏற்பட்டது. இராகவன் அன்னைபால் சீற்றங்கொண்டு பலப்பல மொழிந்தான். 'உன்னை மீட்பதற்கல்ல நான் கடல் கடந்து வந்தது; என் பிழையை மீட்பதற்கே வந்தேன். பெண்மை, பெருமை, கற்பு முதலியன யாவும் நீ தோன்றியதால் மாய்ந்தொழிந்தன. பழிவரின் தோகைமார் உயிரொடு துடைப்பர். நீ இன்னும் உயிர்தாங்கி நிற்பது என்ன?' என்று சீறினான். தேவர்களும் மற்றவர்களும் இராமனது கோபங் கண்டு திகைத்தார்கள். சீதா பிராட்டி வெந்த புண்ணில் வேல் நுழைந்தாற்போல வருந்தினாள். 'என் குற்றமற்ற தவத்தை எங்ஙனம் கூறிக் காட்டுவேன்! இறத்தலே தக்கது' என்று துணிந்து கூறினாள். இராகவன் பணியால் பிராட்டி தீயில் முழுகி எழுந்தாள். சீதையின் கற்புத் தீக்காற்றாது தீயானது தீய்ந்தது. அக்கினிதேவனே இராமனிடம் வந்து,

அங்கியா னெனையிவ் வன்னை கற்பெனும்
பொங்குவெந் தீச்சுடப் பொறுக்கி லாமையால்
இங்கணேர் தேனுற வியற்கை நோக்கியும்
சங்கியா நிற்றியோ எவற்குஞ் சான்றுளாய்

—யுத்த. மீட்சி. 91

என்று மொழிந்தான். தேவர்களும் இராமனது சீற்றத்தைத் தணித்தனர். சீதை தன் மாசிலாக் கற்பை உலகத்தாருக்குக் காட்டினாள்.

இங்ஙனம் பொற்பும் கற்பும் பொருந்தி மாசற்ற வாழ்க்கை வாழ்ந்து மங்கையர்க்குத் திலகம் போன்று சீதை விளங்கினாள். சீதையின் வாழ்க்கை முழுவதும்,

கற்பினுக் கரசினைப் பெண்மைக் காப்பினைப்
பொற்பினுக் கழகினைப் புகழின் வாழ்க்கையைத்
தற்பிரிந் தருள்புரி தரும மூர்த்தியை
அற்பினத் தலைவனும் அமைய நோக்கினான்.

—யுத்த. மீட்சி. 60

என்ற கம்பர் கவியிலே பிரதிபலித்தல் காணலாம்.

பிராட்டி கற்பினுக்கு அரசியாய் விளங்கினாள்; பெண்மையைக் காத்தாள்; அழகினுக்கு அழகு செய்தாள்; அருள் நிறை செல்வியாய்த் தருமம் தாங்கினாள்; புகழின் வாழ்க்கை வாழ்ந்தாள். இத்தகைய ஓர் லட்சியப் பெண்ணைக் கம்பனது கதாநாயகி நமக்குக் காட்சி தருகின்றாள். சீதாபிராட்டியின் வாழ்க்கை மங்கையர்க்கு ஓர் எடுத்துக் காட்டு எனக் கூறவும் வேண்டுமோ?

10. பாடற் பண்பு

[ஏ. எஸ். ஞானசம்பந்தம், எம். ஏ.,
விரியுரையாளர், பச்சையப்பன் கலாசாலை]

உலகின்கண் வாழும் உயிர்களுள்ளே சிறந்து விளங்குகிற மனிதன் தனது மனத்தில் தோன்றும் எல்லையற்ற உணர்ச்சி வெள்ளத்திற்கு ஒரு வடிவு தருகையில் அது கலையாக முகிழ்க்கிறது. மனிதனுக்கு இயற்கையில் அமைந்துள்ள பல உணர்ச்சிகளுள் முருகுணர்ச்சியும் (Aesthetic feeling) ஒன்று. அழகைக் கண்டு அதன்கண் ஈடுபடாதார் ஒருவரும் இலர். அழகென்பது எல்லையிட்டுக் குறிப்பிட முடியாத தொன்ருகலின் அதன் பல்வேறு தன்மைகளில் பல்வேறு மனப்பண்புடையார் ஈடுபடுகின்றனர். இனி இத்தகைய அழகு, பொருள்கள்மாட்டு இயற்கையாக உள்ளதா, காண்பான் மனத்துள் இருப்பதா என்ற வினு எளிதில் விடையிறுக்கக் கூடிய தொன்றன்று. எனினும் ஒன்று கூறலாம்: முருகுணர்ச்சி யென்பது மனத்துள்ளிருப்பதொன்று என்ற அளவில் ஐயமின்று. அத்தகைய முருகுணர்ச்சி பொருள்கள்மாட்டுச் சென்று அங்கு அழகாகப் பரிணமிக்கின்றது. மேலும் அப்பொருள்கள் மாட்டு மனத்தின்கண் ஒரு தொடர்பும் விருப்பமும் உண்டாகுமாறு செய்கிறது. எந்த ஒரு பொருளிடத்தும் விருப்பம் ஏற்பட்டால் அந்தப் பொருளோடு சேர்ந்து வாழவும் மேலும் சேர்ந்து தொழிற்படவும் விரும்புவது மன இயற்கை. அஃதே போல் இங்கும் முருகுணர்ச்சி யானது விருப்பந் தோன்றிய அப்பொருளினிடத்துத் தொழிற்பட முயலுகிறது. சாந்தமாக இருக்கின்ற இவ்வுணர்ச்சி ஆக்கத் தொழிற்பாடாக (Creative activity) மாறுகிறது. அங்ஙனம் மாறுபட்ட நிலையில் இத் தொழிற்பாட்டின் பரிணாமமாகத் தோன்றுவது நுண்கலை (Fine art) யாம்.

கலையையே இரண்டு வகையாகப் பிரிக்கலாம். முதலாவது சாதாரணக்கலை எனப்படும். சமையற்றொழில் முதலான பலவும் கலையென்ற பொதுப் பெயரின்கண் அடங்கும். ஆனால் கலையின் தோற்றமும் முடிபும் எங்கே

சிறக்கின்றனவோ அங்கே அது 'நுண்கலை' எனப்படும். இந்த நுண்கலையும் பல வகைப்படும். எவ்வளவுக் கெவ்வளவு கலை நுண்மையுடையதாகிறதோ, எவ்வளவுக் கெவ்வளவு அது குறிக்கோளியல்பை (Ideal nature) அடைகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு அது சிறந்த நுண்கலை யெனப்படும். எனவே, மனிதன் ஒன்றிய தன்மையை (Harmonised self) அடைய வேண்டிச் செய்த முயற்சிகள் பல. அங்ஙனஞ் செய்த முயற்சிகளின் பயனாகத் தோன்றியனவெல்லாம் நுண்கலைகளே. அந்நுண்கலைகள் மிகத் தாழ்ந்ததென்று கருதப்படும் கட்டிடக் கலையிலிருந்து மிக உயர்ந்ததென்று கருதப்படும் பாடற்கலைவரை செல்கின்றன. இவற்றினிடையே சிற்பம், ஓவியம், இசை யென்பவை நிற்கின்றன.

இவ்வளவு சிறந்துள்ள பாடற்கலையும், ஆக்கும் கலைஞன் திட்பத்திற்கு ஏற்ற முறையில் தானும் நுட்பம் பெறுகிறது. ஒரே பொருளைக் காணும் இருவரது மன நிலைக்கு ஏற்ப அப்பொருளின்கண் சிறப்புத் தோன்றும். அதே முறையில் ஒரே பொருளைக் கண்ட இரு புலவர்கள் பாடுவார்களேயானால் அவர்கள் மன நிலைமைக்கு ஏற்ற முறையில் அவர்கள் பாடல்கள் வேறுபட்டுத் தோன்றும். உயிர்போன உடலை நம்மில் பலரும் கண்டிருக்கிறோம். மிகுந்து தோன்றும் உணர்ச்சி அவலமாக இருக்கும். இவ்வுணர்ச்சிக்குப் பலரும் ஆட்பட்டு அதனை வெளிப்படுத்துகின்றனர். இதனையே ஒரு புலவர் காணுவாராகில் அவர் அந்த அவலத்தை வெளிப்படுத்தும் முறையே வேறாக இருக்கும்.

அத்தகைய ஒரு காட்சியைப் புலவன் நேராகக் காண வேண்டும் என்ற அவசியமே இல்லை. மனக்கண் கொண்டு காணும் ஆற்றல் சிலருக்கே அமைந்துள்ளது. அங்ஙனம தான் கற்பனைக் கண்களால் காணும் ஒன்றைப் பிறர் காணுமாறு செய்வது அருமையினும் அருமை. அதினும் தான் கண்டவாறே பிறர் காணுமாறு செய்வது மிகச் சிறந்தது. அங்ஙனம் பார்க்கின்ற பிறரும் காண்கின்ற தம்மை மறந்து, காட்டும் புலவனை மறந்து, அவன் காட்டுதற்கு எடுத்துக்கொண்ட துணைக் கருவியாகிய பாடலையும்

மறந்து, கற்பனை உலகில் சஞ்சரிப்பார்களேயானால் அதுவே புலவர் கலையின் சிகரத்தை எட்டிப் பிடித்தற்கு அறிகுறியாகும். இத்தகைய முறையில் பாடற்கலையை ஆக்கும் கலைஞர் ஒரு சிலரே. அவருள் கம்ப நாடரும் ஒருவர் என்பது கூறவேண்டுவதின்று.

இக் கருத்துக்களை மனத்துட் கொண்டு ஒரு பாடலைக் காண்போம். பாடல் தோன்றும் இடம் மிகச் சிறந்தது. உம்பரும் பிறரும் போற்ற ஒருவனாய் மூவுலகாண்ட இராவணன் தரையில் மாண்டு கிடக்கின்றான். அவனுடைய முகம் பொலிவு பெற்று விளங்குகிறதாம். அதினும் இறந்துபோன ஒருவனுடைய முகம் மும்மடங்கு பொலிந்து விளங்குகிறது என்று புலவர் கூறுகிறார். இது இயலுமா? இறந்தவன் முகம் பொலிவுற்றது என்று கூறுதலோடு மும்மடங்கு பொலிவுற்றது என்று புலவர் கூறுகிறார். ஒரு சிறிது நின்று ஆராயவேண்டிய இடம் இது. அவருடைய கருத்தை முழுவதும் வாங்கிக்கொண்டாலொழிய அவரது பாடலில் ஒன்ற முடியாது. எனவே பாடலைப் பார்ப்போம். பாடல் முழுதும் கவிஞன் கூற்று.

> வெம்மடங்கல் வெகுண்டனைய சினமடங்க, மனமடங்க,
>   வினையம் வீயத்
> தெம்மடங்கப் பொருதடக்கைச் செயலடங்க, மயலடங்க,
>   ஆற்றல் தேயத்
> தம்மடங்கு முனிவரையும் தலையடங்க, நிலையடங்கச்
>   சாய்த்த நாளின்
> மும்மடங்கு பொலிந்தன, அம் முறைதுறந்தான் உயிர்துறந்த
>   முகங்கள் அம்மா.

பாடலின் பொருள் எளிதாகவே உளது. இனி இவ்வொரு பாடலினிடத்துப் புலவர் அமைத்த ஓவியத்தைக் காண்போம்.

'அடங்க' என்ற சொல் ஏழு இடங்களிற் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரே பொருளில் இங்ஙனம் ஒரே சொல்லைக் கூறுவதற்கு யாது காரணம்? சாதாரணமாகப் புலவர்கள் பாடுவதுபோல் சொற்பின் வரு நிலையணி அமையுமாறு கம்பர் பாடினுர் என்பது அத்துணைச் சிறந்த

தன்று. ஆகவே ஒரு கருத்தை உள்ளடக்கியே இவ்வாறு ஒரு சொல்லையே மீண்டும் மீண்டும் பயன் படுத்தியிருத்தல் வேண்டும். அது என் கருதி என்று பார்ப்போம்.

வீழ்ந்து கிடப்பவன் சாதாரணமானவனல்லன். "முக்கோடி வாணாளும் முயன்றுடைய பெருந்தவமும் முதல்வன் முன்னாள், எக்கோடியாராலும் வெலப்படாய் எனக் கொடுத்த வரமும், ஏனைத் திக்கோடு முலகனைத்தும் செருக்கடந்த புயவலியும்" உடையவன் அல்லனா இப்பொழுது அவற்றையெல்லாம் இழந்து கிடக்கிறான்! கனவினும் நினைத்தற்கரிய ஒரு செயல் நிகழ்ந்திருக்கிறது. கேட்டாரெல்லாம் முதலில் உறுதியுடன் நம்பமுடியாமல் திகைக்கின்றனர். எத்துணைக் காழ்ப்புடையாரும் இத்தகைய ஒரு பெருவீரன் இறந்ததில் வருத்தங் கொள்ளாதிரார். ஆகவே அவர்கள் மனத்தில் தோன்றும் அவலத்தையெல்லாம் ஆசிரியர் வெளியிட்டுத் தீரல் வேண்டும்.

அவலத்தை வெளியிடப் பல வழிகள் உண்டு. இங்கே கலைஞர் கையாள்வது ஒரு முறை. 'அடங்க' என்ற ஒவ்வொரு சொல்லினும் இறத்தல் தன்மை பல்குகிறது. முதல் 'அடங்க' என்ற சொல்லிற்கும் இரண்டாவது 'அடங்க' என்ற சொல்லிற்கும் இடையே அவலச்சுவை பெருகுகிறது. அதே சொல்லை மீண்டும் மீண்டும் பயன் படுத்துவதால் அவலத்தை அள்ளிக் கொட்டுகிறார் கலைஞர். இங்ஙனம் சொல்லை ஆய்ந்து பயன்படுத்துவதை மேலை நாட்டார் 'டிக்ஷன்' (Diction) என்று கூறுவர்.

இம்மட்டோ! ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு கருத்தைத்தொடர்ந்து வருதலைக் காணலாம். யாரேனும் ஒருவன் இறந்தபின்னர் அதனைக் கேள்வியுற்றார் முதலில் அவனிடத்துள்ள சிறந்த இயல்பு ஒன்றைப்பற்றி நினைத்தல் உலகியற்கை. இறந்தவன் தன்னுடைய வாழ்வில் பல்வேறு இயல்புகள் உடையவனாயினும் ஒரு சிறப்பியல்பு அவனுக்கு உரித்தாக இருந்திருக்கும். அதேபோல் இராவணனுடைய வாழ்க்கை முழுவதையும் எடுத்துப் பார்ப்போமானால் அதில் சிறப்பாகத் தோன்றுவது அவனது சினம். இதனை முன்னர் ஒரு பாடலில் அவன் வாயிலாகவே

ஆசிரியர் கூறுகிறார். இந்திரஜித்து இறந்தபொழுது தன்னை நொந்து புலம்பும் இராவணன், "சினத்தொடுங் கொற்றம் முற்றி இந்திரன் செல்வம் மேவி நினைத்தது முடித்து நின்றேன்" என வருந்துகிறான். இராவணன் என்று யாராவது நினைத்தால் அவனது சினந்தான் முன்னர் நினைவிற்கு வரும். ஆகவே இராவணன் வீழ்ந்தான் என்று சொல்லவந்த ஆசிரியருடைய மனத்தில் அவனது சினந்தான் முதலில் தோன்றுகிறது. இராவணன் வீழ்ந்தது வியப்பன்று; அவன் சினமும் வீழ்ந்ததோ என வினவுவார்க்கு விடை தருவதுபோல, ஆசிரியர் முன்னர் அதனைக் கூறினர். அதினும் வீழ்தல், ஒழிதல் முதலிய பல சொற்கள் இருக்க 'அடங்க' என்ற சொல்லை ஆள்கிறார். அச்சினம் சிறிது சிறிதாக ஒழிவதற்கு மாறுத்து இறுதியில் இறங்கி இறங்கி ஒடுங்கிற்று என்ற கருத்தில் 'அடங்க' என்றார். மேலும் அச்சினத்திற்கு உவமை தருவான் வேண்டி மிருகேந்திரனது சினத்தை உவமித்தார். அதினும் சினங்கொள்ள வேண்டிய சந்தர்ப்பத்தில் எத்துணைக் கோபத்தை மடங்கல் கைக்கொள்ளுமோ அத்தகைய சினத்தை ஆசிரியர் உவமை கூறியிருப்பது போற்றற்குரியது.

இனி அடுத்துவருவது 'மன மடங்க' என்பதாகும். சினத்தின் பின்னர் இதனை வைத்த கலைஞனது நுட்பமே நுட்பம். சினம் என்பது ஓர் உணர்ச்சி. ஆனால் மனமென்பது உணர்ச்சிகளெல்லாம் தோன்றும் நிலைக்களனாயுள்ளது. 'ஆகவே சினந்தான் அடங்கிற்று; அச்சினந் தோன்றற்குரிய நிலைக்களனான மனம் என்னவாயிற்று?' என்பார்க்கு விடை யிறுப்பார்போல அம்மனமும் செயலின்றி அடங்கிற்று என்றார். முன்னர்க்கூறிய 'அடங்க' என்ற சொல்லுக்கும் இப்பொழுது கூறும் 'அடங்க' என்ற சொல்லுக்கும் அவலச் சுவையில் மிகுதிப்பாடு இருப்பதைக் காணலாம். இது பின்னர் வருஞ் சொற்களுக்கும் ஒக்கும்.

மூன்றாவது வருவது 'தெம்மடங்கப் பொரு தடக்கைச் செயல் அடங்க' என்பதாகும். பகைவர் அடங்கும்படி பொருத நீண்ட கைகளும் செயலொடுங்க என்பது இவ்வடியின் பொருள். தெவ் + அடங்கஎன்பது தெம்மடங்க

என மருவிற்று. இங்குப் பகைவரை அடக்கப் பொருந்த கை என்பது பொருளாதலால் அடக்க என்ற சொல் எதுகை நோக்கி அடங்க என வந்தது என்று சொல்லுதல் தவறு. வேண்டுமென்றே ஆசிரியர் அடங்க என்ற சொல்லை ஈண்டுப் பயன்படுத்துகிறார். ஊற்று நோக்கின் பொருட் சிறப்புப் புலனுகாது போகாது. இராவணனது தடக்கையின் ஆற்றலைக் கண்ட தெவ்வர் தாமே அடங்கினர் என்பதைக் காட்டவே ஆசிரியர் 'அடங்க' என்றார். அத்தகைய தடக்கை செயலடங்க என்றார். இறந்த ஒருவனுடைய கை செயலடங்கிற்று என்று கூறுதல் இன்றியமையாததோ? எனினும், மிக நுட்பமாகக் கலைஞர் வேண்டுமென்றே இங்ஙனம் கூறுகின்றார். வாழ்நாள் முழுதும் போரே செய்து வாழ்ந்த இராவணனை ஒத்த பெரு வீரனுக்கு வாளோச்சுதல் முதலிய கைச்செயல்கள் பழக்கத்தால் படிந்துவிட்டன (Reflex action); ஆகவே அவன் தலை அறுபட்ட காலத்திலும் கைகள் தாமே போர் செய்திருத்தல் கூடும். இங்ஙனம் தலை அறுபட்ட முண்டங்கள் போர் செய்வதாகப் பரணி நூல்களிற் காணலாம். இன்றைய போரிலுங்கூட இத்தகைய செயல்கள் ஒரோ வழி நிகழ்வதைக் கேட்கலாம். ஆகவே, இராவணனன் இறந்தான்; அவன் கைகள்? வெள்ளியங்கிரியினை விடையின் பாகனொடு அள்ளி விண்தொட எடுத்த அந்தக் கைகள்? அவைகளுமா தொழிலற்றன எனத் தோன்றும் வியப்பின் வினவிற்கு, "ஆம்! அவைகளுங்கூடப் போயின" என்பார் போன்று கைகளினுடைய செயல்களும் அடங்கின என்றார்.

இவையெல்லாம் அடங்கினது ஒருபுறம் இருக்க, 'மீதெழும் மொக்கு என்ன யாக்கையை விடுவதல்லால் சீதையை விடுவதுண்டோ!' என்று இந்திரஜித்தினிடம் கூறினனே, அந்த மையல் என்னவாயிற்று? அங்கதனுங்கூட, "முற்ற ஓதியென்? முடித்தலை யற்ற போதன்றி ஆசையறுன்" என்று கூறினனே; அத்தகைய மையல்! அதுவும் வீழ்ந்ததோ என்பார்க்கு, "ஆம் அதுவும் அடங்கிற்று" என்றார்.

எனவே, சினமும், அச்சினந்தோன்றும் மனமும், தடக்கைச் செயலும், மயலும் அடங்கின என்று ஒன்றன்

பின் ஒன்றாய் அடுக்கிக் கூறி அவலச்சுவையை அள்ளிக் கொட்டினார். இத்தகைய அழகைக் கூறுங்கால், ஒன்றை விட ஒன்று வலிமையுடையதாக உள்ளவற்றை நிரலே நிறுத்தலை மேல் நாட்டார் 'க்ளைமாக்ஸ்' (Climax) என்று கூறுவர்.

இதுகாறும் கேட்டவற்றால், இராவணன் கேவலம் உடல்வீரம் ஒன்றே உடையான் போலும் என்ற எண்ணம் தோன்றுவது இயல்பே. ஆகவே, ஆசிரியர் மூன்றாம் அடியில் அக்கருத்தைப் போக்குகிறார். இராவணனது பலம் உடலோடு நின்றுவிடவில்லை. ஆன்மபலத்திலும் அவன் எல்லையற்றவன் என்பதைக் காட்டவேண்டி, 'தம்மடங்கு முனிவரையும் தலையடங்க நிலையடங்கச் சாய்த்த நாள்' என்றார். முனிவர்களையெல்லாம் அடக்கினான். இலங்கை வேந்தன் மனவடக்கம் இல்லாமல் கேவலம் மூக்கைப் பிடித்து மூச்சை நிறுத்தி உயிரை விடும் அத்தகை யோரையா அவன் வென்றான்? இல்லை. புலன்கள் தாமாகவே அடங்கின தலைசிறந்த இருடிகளை, முற்கூறிய கூட்டத்தினின்று பிரிப்பதற்காகத் 'தம்மடக்கு முனிவர்' என்று கூறாது 'தம்அடங்கு முனிவர் என்று கூறினார். அங்ஙனம் அடங்கின முனிவரை உடல்வன்மையால் வெல்லுதல் ஒல்லாதன்றோ? அவரையும் தலை வணங்கித் தருக்குத் தாழ்ந்து நிலை குன்றச் செய்தவன் என்று கூறும் முகத்தால், அவன் ஆன்ம முன்னேற்றத்தையுங் கூறினா ரென்க.

இறுதியாக உள்ள அடி 'மும்மடங்கு பொலிந் தன அம் முறை துறந்தான் உயிர் துறந்த முகங்கள் அம்மா' என்பதாகும். இஃதென்ன விந்தை! உயிர்துறந்த முகங்கள் பொலிவுறுதல் கூடுமோ? சிறிது சிந்தித்துப் பார்க்கவேண்டிய இடம். கவிஞர் கற்பனைக் கண்ணால் வீழ்ந்து கிடக்கும் இராவணனைக் காண்கிறார். அவனது பழமையை நினைந்து மீண்டும் அம்முகத்தை நோக்குகிறார். இடைக்காலத்து இராவணனது முகத்தை நினைவு கூறு கிறார். உண்மை விளங்குகிறது. மும்மடங்கு பொலிந் திருப்பதாகக் காண்கிறார். நம்மையும் காணுமாறு செய் கிறார். மனஸ்தத்துவம் நன்குணர்ந்தவர் கவிஞர். மனத் தின்கண் நிரம்பியுள்ள உணர்ச்சிகள் முகத்தில் வெளிப்

படாது போவதில்லை. "முயன்றுடைய பெருந்தவமும்", "உலகனைத்தும் செருக்கடந்த புயவலியும்", "நாரத முனிவர்க்கேற்ப நயம் படப்" பாடும் வன்மையும், "என்னையே நோக்கி நான் இந்நெடும் பகை தேடிக் கொண்டேன்" என்று சொல்லும் இமயத்தை ஒத்த தன்னம்பிக்கையும், "இன்றுளார் நாளை மாள்வர், புகழுக்கும் இறுதியுண்டோ" என்று கூறும் மெய்யுணர்வும் பெற்ற ஒருவன் முகங்கள் பொலிவு பெற்றிருந்தனவெனக் கூறவும் வேண்டுமோ? இது பழைய இராவணனது தோற்றம். இதை ஒரு முறை காண்கிறார் கவிஞர்.

இடைக்காலத்தே 'மயிலிளஞ் சாயலாளை வஞ்சியா முன்னம் இதயமாம் சிறையில் வைத்தான்' அன்றோ? வேறொருவன் மனைவியை நயந்து சிறைவைத்த ஒருவன் களங்கமுடையவன் அன்றோ? பிறர் மனை நயத்தலாகிய தவறு செய்த அவன் மனத்தில் மாசு படிதல் இயல்பன்றோ? ஆகவே அவனது பொலிவையெல்லாம் மறைத்தது இம் மாசு. இனிப் போர் செய்கின்ற காலத்துச் சீதையை அறவே மறக்க நேரிட்டதன்றோ? மேலும் இராமனுடைய அம்பு 'கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை மனச்சிறையில் கரந்த காதல் உள்ளிருக்கும் எனக் கருதி உட்புகுந்து தடவி' அம்மாசை முற்றும் நீக்கிவிட்டதல்லவா?

ஆகவே, இப்பொழுது அம்மாசு முற்றும் நீங்கிவிட்டது. மேலும் சுத்த வீரனான இராவணன் போர்க்களத்தில் இறுதிவரையில் போரிட்டு மாண்டிருக்கிறான். எனவே, பழைய பொலிவிற்குக் காரணமாயிருந்த வீரம், தவம் முதலியனவெல்லாம் மீண்டும் அவனது முகத்தில் பொலிவைத் தரலாயின. அது ஒரு மடங்கு பொலிவாயிற்று.

'மும்மடங்கு பொலிந்தன' என்று கூறினமைக்கும் ஆசிரியர் காரணங் காட்டுகிறார். இத்துணைப் பேராற்றலிருந்தும் ஆணவம் என்ற மாயையால் மூடப்பட்ட இராவணன் மெய்யுணர்வு அற்றவனாக இருந்தான். போரின் இறுதியில் பகைவனைச் சூலமும் ஒன்றும் செய்யவில்லை என்பதுணர்ந்து இராவணனுக்கு மெய்யுணர்வு ஒரு சிறிது தோன்றுகிறது. வாழ்வில் முதல் முறையாக "இவனோ தான் அவ்வேத முதற்காரணன் என்பான்?" என்று

நினைக்கின்றான். இம்மெய்யுணர்வு காரணமாக இருமடங்கு பொலிவு ஏற்பட்டது.

போரென்று மூண்ட பின்னர்ப் பகைவன் கடவுளே யாயினும் எண்ணித் துணிந்த கருமத்தை இடையே விட்டு உயிருக்கஞ்சி மீளல் பேடியர் செயலாகும். எனவே இராவணன் இவ்வுணர்வு தோன்றிய பின்னரும், "யாரேனும் தானாகுக; யான் என் தனியாண்மைப்பேரே நின்ற வென்றி முடிப்பேன் ; புகழ்பெற்றேன்" என்று இறுதிவரையில் போரிட முயலுகிறான். இனி நடைபெறும் போர் சீதையின் பொருட்டன்று; கடமையின் பொருட்டு. தான் இறப்பது உறுதி என்று தெரிந்த பின்னரும் புகழ் நிறுத்துவான் வேண்டிச் செய்கின்றதாகலின் கடமையைச் செலுத்தும் ஒப்பற்ற வீரனுடைய முகத்தில் தோன்றும் ஒரு பொலிவு தோன்றலாயிற்று.

எனவே மும்மடங்கு பொலிந்தனவென்ற ஆசிரியர் அவ்வாறு பொலிவதற்குரிய காரணத்தையும் ஆய்ந்தறிவார் அறியுமாறு கூறினமை கண்டு மகிழ்தற்குரியது.

ஆகவே, சிறந்த பாடல் என்பது படித்து உணர்ந்தால் படிக்கின்றவனைத் தன்னை மறந்து ஒன்றச்செய்வது என்ற இலக்கணத்திற்கு இங்கு ஒரு பாடலைச் சான்று காட்டினோம். இத்தகைய பாடற் கலைப் பண்புக்கு உறைவிடம் கலைஞர் உள்ளமே.

11. மாய மான்

[பெ. நா. அப்புஸ்வாமி, பி. ஏ., பி. எல்.]

தண்டகாரணியத்திலே சுயேச்சையாய்த் திரிந்துவந்த சூர்ப்பணகை கோதாவரிக் கரையிலே பஞ்சவடியிலே இராமனைக் கண்டு, அவன்மீது காதல்கொண்டு, வரம்புமீறி நடந்து, லக்ஷ்மணனால் அவமானம் அடைகிறாள். அவளுடைய காதலானது வெறுப்பாக மாறுகிறது. கரன் முதலியோரிடம் அவள் சென்று முறையிடுகிறாள். அவர்கள் இராமனைத் தாக்கி அவனுடைய அம்பால் உயிரிழக்கிறார்கள்.

பிறகு, சூர்ப்பணகை அலங்கோல உருவத்தோடும் துயர் ததும்பும் மனத்தோடும் இலங்கை செல்கிறாள். அங்கே தேவர் முதலாயினோர் அடிபணிய, மிகவும் கம்பீரமாகவும் அழகாகவும் கொலுவிற்றிருந்த தன் தமையனான இராவணனைக் காண்கிறாள். அவனையும் அவனுடைய ஆட்சியையும் பழித்துக் குறைகூறுகிறாள். தான் அடைந்த அவமானத்தைச் சுட்டிக்காட்டி, சீதையின் அழகை மீண்டும் மீண்டும் வர்ணிக்கிறாள். இராவணனுடைய மனத்திலே சீதையின்மீது அளவற்ற காதல் எழுகின்றது. வஞ்சத்தால் சீதையைக் கவர எண்ணிய இராவணன், தன் எண்ணத்தை நிறைவேற்றும்பொருட்டு மாமனாகிய மாரீசனிடம் செல்கிறான்.

இந்திரியங்களை அடக்கித் தவம்செய்துகொண்டிருந்த மாரீசன் இராவணன் வரக்கண்டு, அச்சத்தோடு அவனை உபசரித்து வரவேற்கிறான்; வந்த காரியம் என்ன என்று வினவுகிறான். இராவணன் தன் கருத்தைச் சொல்ல, அதன் அநீதியை உணர்ந்த மாரீசன், தான் கொண்ட அச்சத்தையும் மறந்து கோபத்தோடு, "இச்செயலைச் செய்ய முயன்றால், உன் வாழ்வு இப்பொழுதே முடிவது உறுதி. நீ எண்ணுவது மதியற்ற காரியம். நீ அருந்தவம் செய்து அனைவர்க்கும் மேலான உயர்ந்த நிலையை அடைந்திருக்கிறாய். இத்தகைய செயலைச் செய்யாதே. மேலும், உன் காரியம் நிறைவேறாது. அது நிறைவேறினாலோ, உன் குல முழுவதையும் இராமன் அழித்து விடுவான். நான் உனக்கு மாமன். வயதில் மூத்தவன். உன்னுடைய

கெட்ட எண்ணத்தை விட்டுவிடு" என்று கூறி இராவணனைத் தடுக்க முயல்கிறான்.

இராவணன் மிக்க கோபங்கொண்டு, "நீ சுற்றும் மானம் இல்லாதவன். உன்னுடைய தாயைக் கொன்றவனை அஞ்சி, நீ இங்கே ஒளித்து வாழ்கிறாய். தேவர்களை வென்று யாவர்க்கும் அரசனாய் விளங்கும் என்னை அவர்களா கொன்றுவிடுவார்கள்? நான் அரசன். நீ அமைச்சன். என் சொற்படி நீ நடக்கவில்லையானால், என் வாளுக்கு உன்னை இப்பொழுதே இரையாக்கிவிடுவேன்" என்று கூறுகிறான்.

அப்பொழுது மாரீசன், வேறு வழியில்லை என்று தெரிந்து, "உனது நன்மையின் பொருட்டு நான் கூறினேனேயன்றி என் உயிருக்குப் பயந்து கூறவில்லை. இனி நான் செய்யவேண்டியது என்ன? சொல்" என்றான். அதைக் கேட்ட இராவணன் மாரீசனை அன்போடு தழுவி, "சீதையைப் பெறாமல் மன்மதனுடைய பாணத்தால் இறப்பதைக் காட்டிலும் நீ கூறியவாறு, இராமனுடைய பாணத்தால் இறப்பது மேன்மையல்லவா?" என்று கேட்க, இராமன் அம்புக்கு முன்னர் இருமுறை தப்பிய மாரீசன் - விசுவாமித்திர முனிவனுடைய யாகத்தை அழிக்க முயன்றபோது ஒரு முறையும், பின்னர்த் தானும் வேறிரண்டு அரக்கர்களுமாகக் கோரவடிவமான பெரிய மானுருக்கொண்டு தவவனம் புக்கு அங்குள்ள முனிவர்களைக் கொன்று தின்று வந்தபோது ஒரு முறையும் தப்பிய மாரீசன்-தான் செய்ய வேண்டியது என்ன என்று மீண்டும் கேட்கிறான்.

அதற்கு இராவணன், "உன் தாயைக் கொன்றவனைக் கொல்லுவதும், மாயையால் வஞ்சித்துச் சீதையைக் கவர்வதும் நான்கொண்ட எண்ணங்கள்" என்கிறான். அப்போது மாரீசன், "படை வலியாலன்றி வஞ்சத்தால் இவ்வாறு செய்தல் சிறுமை; அறமும் அன்று" என்று மறுக்க, "அவர்களைக் கொல்லுவதற்குப் படையும் வேண்டுமோ? என் வாளால் அவர்களைக் கொல்வது எளிது. ஆனால் அவர்கள் இறந்தால், மான்போன்ற சீதை தன் தனிமையை எண்ணி எண்ணி மனமுருகி இறந்துவிடுவாள். ஆதலாலேதான் அவர்களைக் கொல்லாமல் வஞ்சத்தால்

அவளைக் கவர்ந்துவர எண்ணங்கொண்டேன். பொன் மானாகி அவர்களை வஞ்சிப்பது உன் கடமை" என்று வற்புறுத்த, மாரீசனும் வருத்தத்தோடு அவ்வாறு செய்ய உடன்படுகிறான்,

நிகரற்ற காந்தி பொருந்திய மின்னல்களை வீசும், ஆகாயமும் பூமியும் ஒருங்கே விளங்கும்படியான இணையற்ற பொன்மானின் உருவங்கொண்ட மாரீசன் சீதை இருக்கும் இடத்தைத் தேடிச் செல்லுகிறான். காட்டிலுள்ள மான்கள் பலவும் அந்த மானைத் தொடர்ந்து பின் செல்லுகின்றன.

தன்மானம் இலாத தயங்கொளிசால்
மின்வானமும் மண்ணும் விளங்குவதோர்
பொன்மான்உரு வங்கொடு போயினனால்
நன்மான்அனை யாள்தனை நாடுறுவான். (மா. 213)

கலைமான்முத லாயின கண்டவெலாம்
அலைமான்உறும் ஆசையின் வந்தனவால்.

[மானம் - அளவு. தயங்கு - பிரகாசிக்கின்ற. ஒளிசால் - காந்தி மிக்க. நன் மான் அனையாள் - நல்ல மானைப் போன்றவள்; சீதை. அலைமான் - (தேடி) அலையும் மான்; மாரீசன். உறும் - அடையும்.]

அப்போது சீதையானவள் தன்னுடைய மெல்லிய இடை நோவ நடந்து, ஒளிவீசும் வளைகளை அணிந்த, மலரினும் மெல்லிய தன் கரத்தால் மலர்களைக் கொய்து கொண்டிருக்கிறாள்.

மையாஇடை நோவ நடந்தனளால்
வைதேகிதன் வால்வளை மென்கைஎனும்
கொய்யாமல ரால்மலர் கொய்துறுவாள். (மா. 215)

அந்த மான் அங்கே வரக்கண்ட சீதை அதன் அழகால் மதிமயங்கி, இராமனிடம் சென்று, "இங்கே ஒரு மான் வந்திருக்கிறது. அது பொன்மயமானது. அதன் காந்தி நாலுபக்கமும் வீசுகிறது. வளமையான அதன் செவியும் கால்களும் மாணிக்கத்தால் அமைந்தவைபோலத் தோன்றுகின்றன. அதை வந்து பார்" என்று வணங்கி அழைக்க, இராமனும் புறப்படுகிறான்.

அணிப்பொனின் ஆகியது ஆய்கதிரால்
சேணிற்சுடர் கின்றது நின்செவிகால்
மாணிக்க மயத்தொரு மான்உளதால்
காணத்தகும் என்றனள் கைதொழுவாள். (மா. 219)

[அணிப்பொன் - உயர்ந்த மாற்றுப் பொன். ஆய்கதிர் - (அதற்றம்பொருட்டு இருளைத்) தேடும் காந்தி அல்லது அழகிய காந்தி. சேணில் - வெகுதூரம்வரை.]

அப்போது லக்ஷ்மணன், "உண்மையான இயற்கை மான்களுக்குப் பொன் உடலும் இரத்தின மயமான திண்ணிய காலும் செவியும் வாலும் ஒளி வீசும் உடலும் கிடையா. ஆகையால் இது மாய மான்" என்று எச்சரிக்கிறான். ஆனால் இராமன், "இவ்வுலகத்தின் நிலை ஒரே தன்மையானதன்று. ஆகையால் இதிலுள்ள விசித்திரங்களையெல்லாம அறிந்தவர் ஒருவரும் இலர். உயிரினங்கள் பல்லாயிர கோடிக் கணக்காய் உலகெங்கும் பரந்து கிடப்பதால் இப்பேர்ப்பட்ட மானும் இயற்கையாகவே இருத்தல் கூடும்" என்று கூறுகிறான்.

நில்லாஉல கின்நிலை நேர்மையினால்
வல்லாரும் உணர்ந்திலர் மன்னுயிர்தாம்
பல்லாயிர கோடி பரந்துளவால்
இல்லாதன இல்லை இளங்குமரா.

[வல்லார் - (அறிவிலும் ஆராய்ச்சியிலும்) சிறந்தவர்.]

இதைக் கேட்ட சீதை, "மான் உண்டா இல்லையா தா என்று நீங்கள் தர்க்கம் செய்துகொண்டேயிருக்கிறீர்கள். அந்த மான் ஓடிப்போய்விடப் போகிறதே!" என்று கூறி, இராமன் அவளோடு சென்று அந்த மானைப் பார்க்கிறான். அதன் அழகில் ஈடுபட்டு, அதன் அழகை லக்ஷ்மணனிடம் வர்ணிக்கிறான். "இந்த மானைப் பார். இதற்கு ஈடான மான் ஓரிடத்தும் இல்லை. இதன் பற்கள் ஒளிவீசும் காந்தியோடு கூடிய முத்துக்களைப் போலப் பிரகாசிக்கின்றன. மெல்லியதாயும் செந்நிறமுள்ளதாயுமுள்ள இதன் நாவானது பசும்புல்லை மெல்லெனத் தடவும்போது வானத்திலே தோன்றி மறையும் மின்னலைப்போல் விட்டுவிட்டு ஒளிர்கின்றது. இதன் உடலின் காந்தி சிவந்த பொன்னைப்

போன்றது. அவ்வுடலின் மீதுள்ள புள்ளிகள் வெள்ளியைக் காட்டிலும் பிரகாசமாய் விளங்கின்றன."

பல்நக்க தாளம் ஒக்கும் பசும்புல்மேல் படரும் மெல்கா
மின்ஒக்கும் செம்பொன்மேனி வெள்ளியின் விளங்கும் புள்ளி.
(மா. 228)

[நக்க - சிரிக்கின்ற; அதாவது மிக்க ஒளிவீசுகின்ற. தாளம் - முத்து. படரும் - செல்லுகின்ற. வெள்ளியின் - வெள்ளியைக் காட்டிலும்.]*

---

* வால்மீகி ராமாயணத்திலே ஆரணிய காண்டத்திலே 42, 43 -ஆம் சருக்கங்களிலே மாயமான் வர்ணனை காணப்படுகிறது. அது பின்வருமாறு.

"மாரீசன் மிகவும் அற்புதமான மானுருவங்கொண்டு இராமனுடைய ஆசிரமத்தின் முன்புறத்தில் சென்று உலாவிக்கொண்டிருந்தான். அந்த மானின் கொம்பின் நுனிகள் இந்திரநீலக் கற்களைப் போல் விளங்கின. அதன் முகத்தின் தோற்றம் வெளுத்தும் கறுத்தும் இருந்தது. அதன் வதனம் சிவந்த தாமரை மலர்போலவும், அதன் செவிகள் கரிய நீலோற்பலங்கள் போலவும் விளங்கின. அதன் கழுத்து சற்றே நிமிர்ந்து உயர்ந்திருந்தது. அதன் உதடுகள் இந்திரநீலக்கற்களுக்கு ஒப்பாக விளங்கின. ஒளிவீசிக் கொண்டிருந்த அதன் வயிறு முல்லை மலரையும் சந்திரனையும் வைரக்கல்லையும்போல் விளங்கிற்று. அதன் விலாப்புறங்கள் இரண்டும் இருப்பைப் பூவைப் போலவும தாமரைப்பூவின் பூந்தாதைப் போலவும் விளங்கின. அதன் கால்குளம்புகள் வைடூரியக் கற்களைப்போல் இருந்தன. நடைகள் மெல்லியவையாயும் சந்துகள் திண்ணியவையாயும் இருந்தன. உயர்த்தப்பட்டிருந்த அதன் வால் இந்திரனுடைய வில்லைப்போல் (வானவில்லைப்போல்) பல வர்ணங்கள் பொருந்தியதாய் ஒளி வீசிக்கொண்டிருந்தது. மனத்தைக் கவர வல்லதாயும், இசைந்த நிறங்களையுடையதாயும், அநேகவிதமான அழகிய இரத்தினங்களால் அலங்கரிக்கப் பட்டாற்போன்ற புள்ளிகளையுடையதாயும், மிகவும் வசீகரமான காந்தியையுடையதாயும் உள்ள ஒரு பொன்மானின் உருவத்தை ஒரு கணப்பொழுதிற்குள் மாரீசன் எடுத்துக் கொண்டான்...சீதை தன்னைப் பார்க்கவேண்டும் என்ற கருத்தினால் அவ்விடத்தில் சுற்றித் திரிந்தான்...அத்தருணத்தில் அழகிய கண்களையுடைய சீதை மலர் கொய்யும்பொருட்டு அக் காட்டுக்கு வந்தாள். மதர்த்த நோக்கையும் மனோரம்மியமான வதனத்தையும் உடைய அவ்வுத்தமி அங்குமிங்கும்

"இது மாயமான்; இதைப் பின்தொடராமல் இருப்பதே நன்று" என்று லக்ஷ்மணன் மீண்டும் மீண்டும் எச்சரிக்கிறான்; "நானே அதைப் பிடித்துக் கொண்டு வருகிறேன்" என்கிறான். ஆனால் சீதை இராமனை நோக்கி, "நீயே அந்த மானைப் பிடித்துத் தரமாட்டாயா?" என்று செவ்வரி படர்ந்த குவளை மலர்களைப் போன்ற தன் கண்களினின்றும் முத்துக்கள் சொரிவதைப் போல் கண்ணீர் சிந்திக் கூறக் கேட்ட இராமன், தன் வில்லை ஏந்தி அம்புகளையும் எடுத்துக் கொண்டு, சீதைக்குக் காவலாக லக்ஷ்மணனை இருக்கச் செய்துவிட்டு, அந்த மானைப் பின் தொடர்ந்து செல்கிறான்.

அந்த மான் இராமன் கையில் அகப்படாமல், ஒதுங்கி ஒதுங்கி அப்பால் சென்றுகொண்டே யிருந்தது. ஒரு சமயம் அது மெல்ல நடக்கும்; நாலு பக்கமும் வெறித்துப் பார்க்கும்; திடீரென அச்சங் கொண்டு துள்ளிக் குதிக்கும்; காதுகளை நிமிர்த்துக்கொண்டு, குளம்புகள் மார்பில் படும்படியாக நாலுகால் பாய்ச்சலில் மிக விரைவாக ஓடும். அதன் விரைவானது திடீரென்று கிளம்பும் புயற்காற்றைக் காட்டிலும் மிக்கது; மனோ வேகத்தைக் காட்டிலும் மேலானது; வேகம் என்பதற்கே அது ஒரு வழிகாட்டியாக இருந்தது.

மிதித்தது மெல்ல மெல்ல வெறித்தது வெருவி மீதில்
குதித்தது செவியை நீட்டிக் குரபதம் உரத்தைக் கூட்டி
உதித்தெழும் ஊதை உள்ளம் என்றிவை உருவச் செல்லும்
கதிக்கொரு கல்வி வேறே காட்டிய தொத்த தன்றே. (மா.241)

சென்று, புஷ்பங்களைக் கொய்துகொண்டிருந்தாள்...பொன்போன்ற மயிரும், இரத்தினங்களால் செய்யப்பட்டாற்போன்ற கொம்புகளும், இளஞ்சூரியன்போன்ற நிறமும், நக்ஷத்திரங்களுக்கு ஒப்பான புள்ளிகளுமுடைய அம் மானைக் கண்டு இராமன் வியப்புற்றான்...அவன் லக்ஷ்மணனைப் பார்த்துச் சொல்லலானான்: 'இந்த மானினும் சிறந்தது ஓரிடத்தும் இல்லை. இவ்வுலகத்தில் இதற்கொப்பான மான் இருக்கப்போகிறதா? குறுக்கும் நெடுக்குமாக இதன் உடலின்மேலுள்ள உரோமமும் அதன் மேலுள்ள பொற்புள்ளிகளும் வெகு நேர்த்தியாக விளங்குகின்றன! அது தன் வாயைத் திறக்கும்போதெல்லாம் வாயிலிருந்து வெளிப்படும் அக்கினிச் சுவாலைக் கொப்பான அதன் நாக்கு மேகத்தில் தோன்றும் மின்னல்போன்றிருக்கிறது."

[வெருவி - அச்சமுற்று. மீதில் - உயர. குரபதம் - குளம்பு களை உடைய பாதங்கள். உரம் - மார்பு. ஊதை - காற்று. கதி - (வேகமான) ஓட்டம். கல்வி - (வழிகாட்டியாக உள்ள) படிப்பு அல்லது பயிற்சி.]

மலையின்மேலே ஏறியும், மேகக் கூட்டங்களின் ஊடே தாவிக் குதித்தும், இராமன் தன் அண்டையில் நெருங்கினால் அப்புறமாக அகன்று சென்றும், அவன் தன்னை அணுகாமல் தள்ளி யிருந்தால் அவன் கைக்கு அகப்படுவதுபோல் அருகில் வந்தும், ஒரே இடத்தில் நிற்பது போலவே மெல்ல மெல்ல நீங்கிச் சென்று நெடுந் தூரம் அவனைத் தன் பின்னே வரும்படி செய்து விட்டது.

குன்றிடை இவரும் மேகக் குழுவிடைக் குதிக்கும் கூடச்
சென்றிடின் அகலும் தாழின் தீண்டலாந் தகைமைத் தாகும்
நின்றதே போல நீங்கும். (மா. 243)

[இவரும் - ஏறும். குழு - கூட்டம். அகலும் - ஒதுங்கிப் போகும். தாழின் - (பின்தொடராமல்) தாமதித்தால். தீண்டலாம் - தொடுவதற்கேற்ற.]*

* வால்மீகி ராமாயணத்திலுள்ள பகுதி இதோடு ஒப்பிடத் தக்கது.

அப்போது அந்த மான் அவரைப் பார்த்து வெருண்டு தனது உருவத்தால் அக் காடு முழுவதையும் பிரகாசிக்கச் செய்துகொண்டு ஓடியது. அம் மான் ஒருகால் பாணம் பாயும் தூரத்துக்கப்பால் ஓடிச்செல்லும்; ஒருகால் கிட்டிவந்து ஆசைகாட்டும்; ஒருகால் தன் உயிருக்கு அபாயம் வந்ததாகப் பயந்து வெகு கலக்கம் எய்தி ஆகாயத்தில் எழும்பிக் குதித்தோடும்; ஒருகால் காட்டில் வந்து கண்ணுக்குப் புலனாகும்; ஒருகால் புலனாகாது மறைந்துவிடும்; அது கண்டங் கண்டமான மேகக் குழுவில் மறைகின்ற சரத்கால சந்திரனைப்போல் தோன்றி மறையும்; உடனே தூரத்தில் போய்க் காணப்படும். இவ்வாறு மானுருவம் கொண்ட மாரீசன் இராமர் கண்களுக்கு எதிர்ப் பட்டும் எதிர்ப்படாது ஓடி மறைந்தும் அவரை ஆசிரமத்திலிருந்து வெகுதூரம் கொண்டு சென்றான்.

[வால்மீகி ராமாயணம் ஆரணியகாண்டம் 44-ஆம் சருக்கம், 4-8 சுலோகங்கள்.]

இதனோடு காளிதாசன் எழுதிய சாகுந்தல நாடகத்தில் காணும் ஓடும் மானின் வர்ணனையும் ஒப்பிடத்தக்கது.

அப்போது இராமன் அது மாய மானே என்பதை உணர்கிறான். அதை எய்து கொல்ல எண்ணுகிறான். மானும் அவனிடமிருந்து தப்பியோட முயல்கிறது; ஆனால் அந்த அம்பு அந்த மாய மானின் வஞ்சம் நிரம்பிய நெஞ்சிலே தைத்தபோது, மாரீசன் இராமன் குரலால் எட்டுத் திக்குகளுக்கு அப்பாலும் கேட்கும்படி உரத்துக் கதறிக்கொண்டு விழுந்து இறக்கிறான். இறந்தவன் மாரீசன் என்பதைக் கண்ட இராமன் மிக்க கவலையோடு ஆசிரமத்தை நோக்கி விரைந்து செல்கிறான்.

அக்குரலைக் கேட்ட சீதை, "அரக்கனுடைய மாயையினால் என் கணவனான இராமன் இறந்த பின்பும் நீ என்னை விட்டு அகலாது, இவ்விடமே நின்றுகொண்டிருப்பது நீதியன்று" என்று லக்ஷ்மணனை நோக்கிக் கூறுகிறாள். அதற்கு லக்ஷ்மணன், "இராமனுடைய கோபத்தின்முன் எவராலும் நிற்க இயலாது. இது நம்மை ஏமாற்ற அரக்கன் செய்த வஞ்சனை" என்று மறுத்துச் சொல்லுகிறான். சீதை மீண்டும் லக்ஷ்மணனைப் பழித்துக் கூறி, "நீ இப்பொழுதே இராமனைத் தேடிச் செல்லாவிட்டால், நான் நெருப்பில் விழுந்து இறப்பேன்" என்று கூற, லக்ஷ்மணன் வருத்தத்தோடு அங்குவிட்டு அகல்கிறான். அச்சமயம் மாயத் துறவிவேடம் பூண்டு வந்த இராவணன் சீதையைக் கவர்ந்து செல்கிறான்.

* * * *

மாய மான் தோன்றியதன் காரணமும், அம்மானின் செயலும், இடையே நிகழ்ந்த நிகழ்ச்சிகளும், வஞ்சனையின் விளைவும் கம்ப ராமாயணத்தில் உள்ளவாறு சுருக்கமாக மேலே கூறப்பட்டன.

இவ்விருத்தாந்தத்தைப் படிக்கும் சிலர், "இது மாய மான் என்று சீதை ஏன் உணரவில்லை? இராமன் ஏன் உணரவில்லை? பொன்னாற் செய்து, இரத்தினங்கள் பதித்த மான் உண்மையாய் உயிர் வாழும் மானாக இருக்க முடியுமா?" என்று லக்ஷ்மணன் கேட்பதுபோல் கேட்கிறார்கள்.

ஆனால் சீதை மட்டுமன்று, இராமன் மட்டுமன்று, கம்பனும் வால்மீகியும் அந்தப் பொன் மானின் அழகிற்

குத் தங்கள் மனத்தை முற்றும் பறிகொடுத்து விட்டார்கள். இருவரும் அதை மீண்டும் மீண்டும் வர்ணிக்கிறார்கள். தங்கள் கதாநாயகனையும் கதாநாயகியையும் கொண்டு மீண்டும் அதை வர்ணிக்கச் செய்கிறார்கள். ஏன்?

இவ்வுலகத்திலுள்ள அற்புதங்களுக்குக் கணக்கு ஏது? அவற்றை முற்றும் உணர்ந்தவர் யார்? ஓங்கி உயர்ந்த மலையும், மலையினின்று துள்ளிக் குதிக்கும் அருவியும், ஓய்வே இல்லாது அலைமோதும் கடலும், கடலினின்று வானை நோக்கி எழும் மேகமும், கரிய மேகத்தினின்று பொழியும் மழையும், அம்மேகத்தினிடையே ஒளிரும் மின்னலும், பனியாறும், எரிமலையும், மரகதம்போன்ற நீல வானமும், அவ்வானத்தினின்று பொன் தகட்டைப்போல் மின்னி ஒளிவீசும் சூரியனும், அவ்வானத்தினூடே வெள்ளித் தகட்டைப்போல் விளங்கிச் செல்லும் சந்திரனும், அதன் நடுவே வைரம் பதித்தாற் போன்று காட்சியளிக்கும் எண்ணிறந்த நக்ஷத்திரங்களும், பல நிறங் கொண்டு திகழும் வானவில்லும், ரோஜா தாமரை ஆம்பல் மல்லிகை போன்ற நிற நிறமானவையும் மணம் வீசுபவையுமான புஷ்பங்களும், பல வர்ணம் பொருந்திய இலைகள் செறிந்த குரோடன் முதலிய செடிகளும் கொடிகளும், மாந்தளிரும், பசும் புல்லும் - இவையும் இவைபோன்ற பிறவும் என்றும் தீரா அற்புதங்கள் அன்றோ?

உலகத்தில் வாழும் 'பல்லாயிர கோடி மன்னுயிர்களுள் இல்லாதன இல்லை' என்று கூறுமாறு எத்தனை அற்புதமான விசித்திர சிருஷ்டிகளை நாம் காண்கிறோம்! பாயும் வரிப் புலியும், ஓடும் கலைமானும், கொம்பன் யானையும், மீனைத் தூண்டில் போட்டுப் பிடிக்கும் மீனும், இரையை எய்து கவரும் துப்பாக்கி மீனும், நீந்தி நெளியும் போது ஒளி வீசும் பொன்மீனும், பட்டுச் சிறகால் காற்றில் மெல்லென மிதக்கும் வண்ணாத்திப் பூச்சியும், பல நிறமாய் மிளிரும் பொன் வண்டும், வண்ணக் கிளியும், தோகை மயிலும், இவை போன்ற பல்லாயிரக் கணக்கான பிற பிராணிகளும் என்றென்றும் நமக்கு அற்புதத்தை அளித்துக்கொண்டே இருக்கின்றன. சிற்சில பிராணி

களைக் காணும்போது, நாம் இவற்றை மெய்யாகவே காண்கிறோமா, அல்லது நாம் காண்பது வெறும் கனவேதானா என்று நினைத்து ஐயுறும் வண்ணம் அத்தனை வியப்பும் திகைப்பும் அவற்றின் அற்புத அமைப்பின் காரணமாக நமக்கு உண்டாகின்றன.

இயற்கை உலகத்திலே உள்ள நிலைமை இதுவானால், கவிகளின் கற்பனை யுலகத்திலே உயிர் பெற்று வாழும் உயிரினங்களைப் பற்றிக் கேட்க வேண்டியதில்லை. ஆதலால், பத்துத் தலைகளையுடைய இராவணனையும், வயிற்றில் வாயையுடைய கவந்தனையும், யானைகள் யாளிகள் முதலியவற்றைச் சிற்றுண்டியாக உண்டு மகிழும் விராதனையும், நினைத்தபடி யெல்லாம் உருவெடுக்கவல்ல பல அரக்கர்களையும், மனிதரைப் போலவே நடித்துப் பேசி வாழும் விலங்குகளையும் பறவைகளையும் கவியின் கற்பனை யுலகத்திலே மீண்டும் மீண்டும் நாம் காண்கிறோம். இவ்வாறான அற்புத சிருஷ்டிகளில் ஒன்று மாய மான்.

12. உள்ளம் குளிர்ந்தது?

[மு. வரதராசனர், எம். ஒ. எல்.,
தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி]

ஒரு குழந்தை கொதிக்கும் நீரிலே கை வைத்து அலறியது; பதைத்தது. பெற்றோர் ஓடி வந்து சேர்ந்தனர்; செய்வன செய்தனர். ஒரு மணி நேரம் கழித்துக் குழந்தையின் அழுகை ஓய்ந்தது; இன்னும் சிறிது நேரம் கழித்து விம்மலும் நின்றது. அன்று ஆடவேண்டிய ஆடல்களும் பாடவேண்டிய பாடல்களும் குறித்த நேரத்தில் தொடங்கவில்லை. ஆனால் குழந்தையின் ஆடலும் பாடலும் நிற்றலும் கூடுமோ? அழுகையும் விம்மலும் நின்ற பின்னர், சிறிது நேரம் கழித்து ஆடல் பாடல் நிகழ்ந்தன. குழந்தையின் விளையாட்டில் ஒழுங்கு உண்டு; காரண காரியத் தொடர்ச்சி உண்டு; உலகை ஓம்பும் ஒப்புரவு உண்டு. ஆனால் ஆடம்பரம் இல்லை; அச்சம் இல்லை; அல்லல் இல்லை. அன்று அந்தக் குழந்தை விளையாடிய போது முந்தின நாள் விளையாட்டை நினைத்தது. அதனைத் தொடர்ந்து ஆட எண்ணியது. அது என்ன விளையாட்டு? தண்ணீர்ப் பானையிலிருந்து தண்ணீரை மொண்டு மொண்டு அங்கும் இங்கும் எங்குமாக ஒழுங்காக நிரப்புதலாகும். அதன் பொருட்டுக் குழந்தை கையாண்ட கருவி தேங்காய் ஓடு (கொட்டாங்கச்சி). அந்த ஆட்டத்தை நினைந்த குழந்தை அந்தக் கருவியைத் தேடிக் கையில் எடுத்துக்கொண்டது; தண்ணீர்ப் பானையருகே சென்றது; தண்ணீரைக் கண்டது. கண் அஞ்ச, கை பின் வாங்கிற்று. வருத்தத்தோடு வந்தது. கொதித்த நீரால் பதைத்த துன்பம் குழந்தையின் உள்ளத்தில் அல்லலைப் புகுத்தியது. நீரின் இயல்பு தண்மை என்ற இயற்கை யமைப்பைச் செயற்கை வகையால் மாற்றியது உலகம்; நீர்க்கு வெம்மை ஏற்றிக் குழந்தை மனத்தில் அச்சத்தைப் புகுத்தியது.

அந்த இளஞ் செல்வத்தை அணுகிக் கேட்கும் துணிவு நம்மிடம் இருந்து, அதற்கு ஏற்றவாறு விடை பகரும் தெளிவு அக் குழந்தையினிடம் இருந்தால், நாம் என்ன

கேட்போம்? அது என்ன சொல்லும்? 'தண்ணீரைக் கண்டு ஏன் வருந்துகிறாய்?' என்று கேட்டால், 'தண்ணீரா? அதனை நம்பவே முடியாது; அது கையைச் சுடும்' என்ற கருத்தை, அகராதியும் இலக்கணமும் இன்னும் எழுதப் பெறாத அழகிய மழலை மொழியினால் வெளிப்படுத்தும்.

குழந்தையின் மனத்தைத் தாயினிடத்தும் காண்கின்றோம். "தலைவரா? அவரை நம்பவே முடியாது; அவர் நம்மைப் பிரிவார்" என்று அந்தத் தாய் உரைக்கின்றாள். தலைவனைத் தலைவி நம்பவில்லை. குடும்பத் தலைவர்க்கிடையே இந்த நிலை ஏற்படுகின்றது. "உன்னை விட்டுப் பிரியேன்; பிரிந்தால் உயிர் வாழேன்" என்று அன்பின் மிகுதியால் ஒரு காலத்திற் பிறந்த சொற்கள் வாழ்க்கையில் உண்மையாகவே நின்றன. ஆனால் பொருளீட்டல் காரணமாக, அரசியல் காரணமாக, தலைவன் பிரிய நேர்ந்தது; பிரிந்தான். பிரிந்து செல்ல அவன் மனமும் இடந்தரவில்லை; தலைவியும் இசையவில்லை. ஆயினும் பிரிவு நேர்ந்தது. தலைவியின் நம்பிக்கை குலைந்தது. தலைவன் அன்பு மிக்கவன் என்று வாழ்ந்த தலைவியின் நெஞ்சு வெம்பியது. நீரின் தன்மையை நம்பி விளையாடிய குழந்தை ஒருநாள் கொதிப்பை உணர்ந்து வாடியதன்றோ? தண்ணீரின் தன்மையில் நம்பிக்கை இழந்ததன்றோ? "இனி எவ்வாறு நம்புவது" என்று சோர்கின்றாள் தலைவி.

அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்
பிரி(வு) ஓர் இடத்துண்மை யான்

(திருக்குறள், 1153)

என்று திருவள்ளுவர் அத்தலைவியின் மனநிலையைப் புலப்படுத்துகின்றார். ஒருமுறை நிகழ்ந்த பிரிவு அவள் நெஞ்சை நடுக்குறச் செய்கின்றது. "அறிவுடையர் தாம்! ஆயினும் நம்புவது, தேறுவது, எங்ஙனம்?" என்று பெருமூச்செறிகின்றாள்.

இளங் குழந்தை இனி உறுதியோடிருந்து தண்ணீர்ப் பானை விளையாட்டைக் கைவிடப் போவதில்லை. ஆனால் அன்று உற்ற துன்பமோ கொடிது! தலைவியும் தலைவனைத் தேறாமல் வாழ்நாளெல்லாம் கவலையுறப் போவதில்லை; தலைவன் மீண்டதும் குடும்பத் தலைமைப் பொறுப்பைப்

பெருமகிழ்ச்சியுடன் ஏற்பாள். ஆனால், அன்று தலைவன் பிரிந்தபோது அவள் உற்ற துன்பம் மறக்க முடியாதது? அன்று இருந்த மனநிலையே திருவள்ளுவர் விளக்குவது. அதனை விளக்குவதற்கே அகநானூற்றில் இருநூறு பாட்டு இடம்பெற்றுள்ளன. அவற்றில் உள்ள முதற் பொருளும் கருப்பொருளும் எளிதில் படித்தறியலாம்; ஆனால், அவற்றைக் கடந்து மனநிலையை உணர்தல் அருமையே. அதுதான் பாட்டின் உரிமையாய் வாழ்க்கை யின் பொருளாக உள்ள உரிப்பொருள். அதனைக் கலைஞரே உணரவல்லவர். கல்வியிற் பெரியவராய கம்பர் அதனை நன்கு உணர்ந்தவர்.

நெடுந்தொகை குறுந்தொகை முதலாய வாழ்க்கை
நூல்களில் பிரிவு பாலை என வழங்கப்படும். தமிழ்ச்
சான்றோர் வாழ்க்கையால் நிலம் பகுத்தனரோ, நிலத்
தால் வாழ்க்கை வகுத்தனரோ, அறியோம். நிலத்திற்கும்
வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பை நன்கு தெளிந்த அக்
காலக் கலைஞர் பிரிவைப் பாலை என்றனர். கதிரவன்
வெம்மையால் இயல்பு இழந்த காடும் மலையும், கடுவேனி
லும் பாலையின் நிலமும் காலமுமாவன. இயற்கை திரிந்த
விலங்கு மரம் முதலியன பாலைநிலத்தன. இவையே
முதற்பொருளும் கருப்பொருளும் என்பன. கம்பர் கருத்
தில் பாலை என்றதும் பிரிந்து வருந்தும் மனமே முன்னிற்
கின்றது; உரிப்பொருளே உருக்கொள்கின்றது. வெம்
மையால் வேறுபட்ட நிலத்தை எடுத்துக் கூறப்புகும்
கம்பரின் கற்பனை யுலகில் நிலம் சுடுவதன் முன்னம்
நெஞ்சம் சுடுகின்றது.

பிரியலென் என்ற சொல்தாம்
மறந்தனர் கொல்லோ
(அகநானூறு,-1)

அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்
பிரிவோர் இடத்துண்மை யான்
(திருக்குறள், 1153)

என்று வருந்தும் மனத்தின் வெப்பமே அவர் தம் பாலைப் பாடலில் சிறந்து விளங்குவது.

கம்பர் காட்டும் பாலைநிலம் ஒன்று. அதில் மரங்கள் இருந்தன. ஆனால் அவை எந்நிலையில் இருந்தன? கிளைகள

வெந்திருந்தன என்கிறார் புலவர். கதிரவன் வெம்மையைக் காட்ட அது போதாது. அந்நிலத்தின் மேற்புறத்திருந்தவை காய்ந்தழிந்த நிலையோடு, நிலத்தின் உட்புறத்திருந்த கிழங்குகளும் வெந்தன என்கின்றார். மரத்தின் உறுப்புக்களில் முதலில் வாடுவது தளிர்; இறுதிவரையில் தாங்கி நின்று முடிவாக வாடுவது வேர். வேர்களும் வெந்திருந்தனவாம். மேலும் வெம்மையின் மிகுதி புலப்படுத்துகின்றார். கிழங்கும் வேரும் அழிதற்குக் காரணமாகச் சூரியன் வெப்பத்தை வாங்கிக் காத்த நிலமும் தீய்ந்ததாம். இவ்வளவிலும் புலவர் முயற்சி நிற்கவில்லை. நெஞ்சின் நிலையினையே எல்லையாக்கிக் காட்டுகின்றார். நினைக்கும் நெஞ்சும் தீய்ந்துபோம் என்கின்றார்.

சினையும் மூலமும் வேரும்வெந் திருநிலம் தீய்ந்து
நினையும் நெஞ்சமும் சுடுவதோர் நெடுஞ்சுரம்.

(கம்ப. அயோத்தியா. சித்திர.)

கம்பர் கண்ட தலைவர் சென்று சேரும் பாலையைக் குறித்து வரும் பாடற் பகுதி இது. இந்தப் பாலையைப் பற்றி இதற்கு முன்னரே பேச்சு நிகழ்ந்துள்ளது. இராமன் பிரியத் துணிந்தான்; அதைத் தன் துணைவிக்கு உரைத்தான்; "நீ வருந்தலை நீங்குவென் யான்" என்றான். அச்சொல் தலைவிக்குத் தீய வெஞ்சொல்லாக இருந்தது. அச்சொல் முன்னர்ச் செவியை எட்டிற்று. பின்னர் நெஞ்சைச் சுடும். நெஞ்சினுள் புகாமல் செவியை எட்டிய அளவிலேயே பாலையைப்பற்றிய சொல் செவியைச் சுட்டதாம்.

நீவ ருந்தலை நீங்குவென் யானென்ற
தீய வெஞ்சொல் செவிசுடத் தேம்புவாள்.

(அயோத்தியா. நகர் நீங்கு.)

சீதை மனநிலை என்ன? அந்தத் தலைவியின் மனம் சினையும் மூலமும் வேரும் வேகும் வெம்மையைப் பொருட்படுத்தவில்லை; நிலமும் தீய்ந்துபோம் கொடுமையைப் பொருட்படுத்தவில்லை. "ஊழி அருக்கனும் எரியும் என்பது யாண்டையது?" என்று கேள்வி வருகின்றது. பிரிவு என்பதன் வெம்மையின் முன்னே இவையெல்லாம் தண்மை பெறுகின்றனவாம்!

நின், பிரிவினும் சுடுமோ பெருங்காடு?

என்ற மறுமொழியே அவள் மனநிலையை விளக்குகின்றது. கம்பர் சீதையாக இருந்து கண்ட நிலை இது. பாலை நிலத்தைவிடப் பாலைவாழ்க்கை சுடுமாம்; மிகச் சுடுமாம்.

அந்தப் பாலைநிலத்தையே புலவர் தம் நிலையில் இருந்தும் காண்கின்றார். அப்போது அவர் கூறுவது என்ன? பாலைநிலம் பாலைவாழ்க்கைபோல் கொதிக்கின்றதாம். அரசியல் காரணமாகச் சென்ற தலைவரைப் பிரிந்து வருந்தும் மகளிர் மனம்போல் கொதிக்கின்றதாம்.

பந்தருட்புரை பாசறைப் பொருள்வயின் பருவம்
தந்த கேள்வரை உயிருறத் தழுவினர் பிரிந்த
கந்த ஓதியர் சிந்தையிற் கொதிப்பது அவ் வனமே.

(அயோத்தியா. சித்திர.)

அந்தக் கொடிய பாலை குளிர்ச்சிபெற்று மாறும் நிலையைப் பாடும் வாய்ப்பும் பெறுகின்றார் கம்பர். அப்போதும் மனநிலையையே நோக்குகின்றார். கொதிக்கும் மனம் குளிரும் நிலையைக் காட்டுகின்றார். தலைவரைப் பிரிந்த தலைவியர் அவர் மீண்டபோது உள்ளம் குளிர்வர் அல்லரோ? அப்போது குளிர்ந்த உள்ளம்போல் வனம் குளிர்ந்தது என்கின்றார். உரிப்பொருள் உணர்ந்த உணர்வின் பயனே இப்பாட்டு.

கந்த ஓதியர் சிந்தையின் கொதிப்ப(து)அக் கழலோர்
வந்த போ(து)அவர் மனம்எனக் குளிர்ந்த(து)அவ் வனமே!

13. காவியத்தில் கண்ட கம்பர்

[ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.]

இம்பர் நாட்டிற் செல்வமெலா மெய்தி யரசாண் டிருந்தாலும்
உம்பர் நாட்டிற் கற்பகக்கா வோங்கு நீழ லிருந்தாலும்
செம்பொன் மேரு வனையபுயத் திறல்சேர் இராமன் றிருக்கதையிற்
கம்ப நாடன் கவிதையிற்போற் கற்றோர்க் கிதயங் களியாதே

என்று இப்படி வாயாரப் புகழப்பட்ட கம்பருடைய வாழ்க்கையின் வரலாற்றைப்பற்றி நமக்கு அநேகமாய் ஒன்றுமே கிடைக்கவில்லை என்று சொல்லிவிடலாம். அவருடைய மனப்பண்பு, வாழ்க்கை நிலை இவைகளைப் புறச்சான்றுகள் மூலம் அறிவது இயலாத காரியம். இச்சாபம் நம் தமிழ் நாட்டிற்கு மட்டும் ஏற்பட்டதன்று. யவனமஹா கவி ஹோமரைப்பற்றி நமக்கு ஒரு செய்தியும் கிடைக்கவில்லை. நான்கு நூற்றாண்டுகளுக்கு முன் இருந்த ஷேக்ஸ்பியரைப் பற்றிக் கன அந்தகாரத்தில்தான் இன்றும் இருக்கிறோம். ஷேக்ஸ்பியர் ஒருவர் இருந்தாரா என்ற ஒரு சர்ச்சைகூட எழுப்புவார் உளர்.

பெருங் காவியத்தை இயற்றிய நம்நாட்டு வால்மீகி பகவானுடைய வரலாறுதான் நமக்குக் கிடைத்திருக்கிறதா? நம் ஆழ்வார்கள், நாயன்மார்கள், சமயாசாரியர்கள் - இவர்களைச் சுற்றிப் புராணக் கதைகள் எழுந்துவிட்டன. உண்மை கலந்த பதங்களைச் சலித்துப் பார்ப்பது நமது கடமையாகும்.

நம் நாட்டுப் பெரியோர்களிடத்தில் தங்களைப் பற்றி உலகங் கேட்கப் பறைசாற்றுகிற தன்மை இல்லை. தங்களை ஆண்டவன் கையில் உள்ள கருவிகளாகக் கருதினார்கள். உண்மைகளெல்லாம் தங்களுக்குச் சொந்தமல்ல, தங்கள் மூலம் வழிந்தனவே யொழியப் பிறிதில்லை என்று எண்ணியிருந்தனர். எல்லா உரிமைகளும் எங்களுக்கே என்று விளம்பரம் செய்யும் நவீன நாகரிகம் படைத்தவர்கள் அல்ல அவர்கள். எங்களுக்கு யாதோர் உரிமையும் இல்லை என்று தேர்ந்தனர். உண்மை நாடுகிற நிலையில் தங்களை மறந்தனர் போலும்! பிற்காலத்தில் அவர்களைப் பற்றி எழுந்த பொய் புதைந்த வரலாறுகளை ஆதாரமாகக்

கொள்ளாமல், அவர்கள் இயற்றிய நூல்களிலிருந்து அவர்களைப் பற்றித் தெரிகிற குறிப்புகளைத் திரட்ட முயல வேண்டும். எனவே காவியத்தில் கண்ட கம்பரைப்பற்றி இங்கே ஆராய்வோம்.

கம்பர் சோழநாட்டுத் திருவழுந்தூரில் பிறந்தவரென்றும், திருவெண்ணெய்நல்லூர்ச் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டவரென்றும் சில செய்யுட்களினால் அறிகிறோம்.

நாரணன் விளையாட் டெல்லாம் நாரத முனிவன் கூற
ஆரணக் கவிதை செய்தா னறிந்தவான் மீகி யென்பான்
சீரணி சோழ நாட்டுத் திருவழுந் தூருள் வாழ்வோன்
காரணக் கோடையான் கம்பன் தமிழினாற் கவிசெய் தானே.

வாழ்வார் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பன் வாழ்த்துப்பெறத்
தாழ்வா ருபரப் புலவோ ரகவிருள் தானகைப்
போழ்வார் கதிரி னுதித்ததெய் வப்புல மைக்கம்பநாட்
டாழ்வார் பதத்தைச் சிந்திப்பார்க் கியாது மரியதன்றே.

தாம் காட்டவேண்டிய செய்ந்நன்றியைச் சிகரமான இடங்களில் காண்பித்து விடுகின்றனர். செய்ந்நன்றியின் மகுடம் பின்வரும் பாட்டில் விளங்குகின்றது:

அரியணை யனுமன் தாங்க வங்கத னுடைவாள் பற்றப்
பரதன்வெண் குடைக விக்க இருவரும் கவரி வீச
விரைசெறி கமலத் தாள்சேர் வெண்ணெய்மன் சடையன் றங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி.

தம்மைப் போற்றிய வள்ளல்களைப் பாடுவது அக்காலத்து இயல்புபோலும். சந்திரன் சுவர்க்கியைப் பற்றிப் புகழேந்தியும் பாடுகிறார். நளனிடமிருந்து கலி நீங்கின நிலையைச் சித்திரிக்கிற விஷயம் இங்கு நோக்கத் தகுந்தது.

வண்டார் வளவயல்சூழ் மல்குவநாட் டெங்கோமான்
தண்டார் புனைசந் திரன்சுவர்க்கி—கொண்டாடும்
பாவலன்பா னின்ற பசிபோல நீங்கிற்றே
காவலன்பா னின்ற கலி.

சோழநாட்டை வளம்பெறச் செய்யும் காவிரி நதியில் கம்பருக்கு ஈடுபாடு உண்டு. தெய்வப் பொன்னி யென்று

அதை வர்ணிக்கிறார். 'கங்கையிற் புனிதமாய காவிரி' என்று தொண்டரடிப்பொடி யாழ்வார் தைரியமாகக் கூறிய சொல் கம்பர் உள்ளத்தில் சுடர் விட்டெழுந்திருக்கலாம். அகத்தியர் அருமையாகக் கூறும் பாடல் நம் உள்ளத்தைக் கவராமற் போகாது.

> கன்னியிள வாழைகனி யீவகதிர் வாளின்
> செந்நெலுள தேனெழுகு போதுமுள தெய்வப்
> பொன்னியெனு லாயபுன லாறுமுள போதா
> அன்னமுள பொன்னிவளொ டன்பின்விளை யாட.

> வையக முழுவதும் வறிஞ னோம்புமோர்
> செய்யெனக் காத்தினி தரசு செய்கின்றான்

என்ற தொடரில் சிறை செய்யப்பட்ட குடியானவன் சோழ தேசத்துக் குடியானவன்தான். கம்பர் சித்திரிக்கிற கோசல நாடு, சோழநாடுதான். சோழ நாட்டுப் பல ஒலிகளை அது எழுப்புகிறது.

> ஆறுபா யரவம் மள்ளர் ஆலைபா யமலை யாலைச்
> சாறுபா யோசை வேலைச் சங்குவாய் பொங்கு மோதை
> ஏறுபாய் தமரம் நீரில் எருமைபாய் துழனி யின்ன
> மாறுமா றாகித் தம்மின் மயங்குமா மருத வேலி.

கல்வியிற் பெரியன் கம்பன் என்று பரம்பரையாக வழங்கிவரும் சொல்லின் உண்மை அவருடைய இராமாயணத்தை ஆராய்ந்தால் நன்கு புலனாகும். கம்பராமாயணம் படித்தால் கம்பருக்கு முன் இருந்த நூல்களையும் நாம் படித்ததாக முடியும். சங்க காலத்து இலக்கியம் முதற்கொண்டு தம் காலத்தில் வழங்கி வந்தவைவரை உள்ள நூற்கடலுக்கு எல்லை தேர்ந்தவர் கம்பர் என்பதில் ஐயமில்லை. தமிழ் நூல்களோடு நில்லாமல் வடமொழி நூல்களிலும் கம்பர் திளைத்தவர். வடமொழிப் புலவர்களோடு அவர் சேர்ந்து ஆராயவேண்டிய அவசியமில்லை. அவருக்கே நிரம்பிய வடநூற் பயிற்சி இருந்ததாகத் தெரிகிறது.

வால்மீகி ராமாயணத்தைப்பற்றி நாம் கூற வேண்டியதில்லை. அவரே வால்மீகியின் பெருமையை வாயாரப் புகழ்ந்திருக்கிறார். கம்பர் வால்மீகியினிடத்தில்

காட்டிய கௌரவத்திற்குக் கீழ்வரும் பாட்டு ஒரு பெரிய சான்றாக இருக்கிறது.

வையமென்னை யிகழவும் மாசெனக்
கெய்த வும்மி தியம்புவ தியாதெனிற்
பொய்யில் கேள்விப் புலமையி னோர்புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே.

காளிதாசனை நன்கு சுவைத்திருக்கிறார். அகலிகை கல்லான விஷயம் வால்மீகத்தில் இல்லை. காளிதாசனில் தான் காண்கின்றோம்.

மிதிலையில் சீதையும் இராமனும் ஒருவரையொருவர் நோக்குகின்றனர். கண்கள் தூது செல்கின்றன. தம் மனத்தே நிகழ்ந்த காதல் அறந்தானா என்ற சந்தேகம் இராகவன் உள்ளத்தே நிகழ்கின்றது. இச்சந்தேகம் காளிதாசன் தந்த துஷ்யந்தன் மனத்தில் எழுந்த ஐயத்தின் மூலம் சுரந்த சுலோகத்தை ஞாபகப்படுத்துகிறது.

ஸதாம்ஹி ஸந்தேஹ பதேஷு வஸ்துஷு
ப்ரமாணமந்த: கரணப்ரவ்ருத்தய:

இச் சுலோகத்தின் மொழிபெயர்ப்புத்தான் கம்பர் தந்த பாட்டு.

ஆகு நல்வழி யல்வழி யென்மனம்
ஆகு மோவதற் காகிய காரணம்
பாகு போன்மொழிப் பைந்தொடி கன்னியே
ஆகும் வேறிதற் கையுற வில்லையே.

தாரகையின் புலம்பல் குமாரசம்பவத்தில் காணப்படும் ரதியின் புலம்பலை நினைவூட்டுகின்றது. கம்பர் உபயோகித்த விருத்தங்கள் என்ற கட்டுரையில் திரு. ம. ரா. இராஜகோபால ஐயங்கார் அவர்கள் இக்கருத்தை நன்றாகக் காட்டியுள்ளார். கம்பருடைய ஒரு பாட்டுக் காளிதாசனுடைய ஒரு சுலோகத்திற்கு மொழிபெயர்ப்பா யிருக்கிறது.

இரவி தன்குலத் தெண்ணில்பல் வேந்தர்தம்
புரவு நல்லொழுக் கின்படி பூண்டது
சரயு வென்பது தாய்முலை யன்னதிவ்
வுரவு நீர்நிலத் தோங்கு முயிர்க்கெலாம்.

இப்படிச் சரயு நதியைக் கம்பர் சிறப்பித்துக் கூறுகிற இப்பாட்டிற்கு மூலம் ரகுவம்சத்தில் காண்கின்றோம். ராமனும் சீதையும் புஷ்பக விமானத்தில் செல்லும் பொழுது தூரத்தில் சரயு நதி காட்சி அளிக்கிறது. "எங்களுக்குப் பாலூட்டிய அன்னை சரயுவைப் பாராய்" என்று இராமன் சீதையினிடம் சொல்லுகிறான். புறநானூற்றில் காணப்படும்,

புனிறுதீர் குழவிக் கிலிற்றுமுலை போலச்
சுரந்த காவிரி

என்ற வரிகளின் எதிரொலியாகவும் கம்பர் கருத்து இருக்கலாம்.

உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலு நீக்கலு நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே

என்று தொடங்குகின்ற பாட்டு இராமானுஜர் எழுதிய சூத்திர பாஷ்யத்தில் காணப்படுகிற மங்கள சுலோகத்தின் மொழிபெயர்ப்பே தவிரப் பிறிதில்லை.

கம்ப ராமாயணத்தில் பாலகாண்டத்தில் வரைக் காட்சிப் படலம், பூக்கொய் படலம் முதலிய படலங்கள் உள்ளன. இவைகளில் மாக கவி இயற்றிய சிசுபால வத காவியத்தின் மணம் நன்றாக வீசுகிறது.

வல்லியை யுயிர்த்தகில மங்கையிவள் பாதம்
மெல்லிய வுறைக்குமென வஞ்சிவெளி யெங்கும்
பல்லவ மலர்த்தொகை பரப்பின ளனத்தன்
கல்லணி மணிச்சுடர் தவழ்ந்திட நடந்தாள்.

இப்பாட்டில் சொல்நயமும் பொருள் நயமும் இருக்கின்றன. சீதை அடி பெயர்ப்பதைச் செஞ்சொற்களால் அமைத்துக் காட்டியிருக்கிறார். காதம்பரியில் இப்பாட்டிற்கு மூலம் இருக்கிறது. * அதிலுள்ள கருத்தைத்தான் கம்பர் தமிழிலே வெளியிட்டுள்ளார்.

* க்ஷிதிதலே பல்லவ பங்கானிவ நிதாய ஸஞ்சரந்தீம் (பூர்வபாகம்.)

கம்பர் குகனை நன்றாய்ச் சித்திரித்திருக்கிறார். சீற்றமில்லாமலேயே குகன் தீயெழ நோக்குகின்றான்.

ஊற்ற மேமிக வூனொடு மீனுகர்
நாற்ற மேய நவையின் முகத்தினன்
சீற்ற மின்றியுந் தீயெழ நோக்குவான்
கூற்ற மஞ்சக் குமிறுங் குரலினன்

என்ற சித்திரம் நம்மனத்தகத்தே நிற்கின்றது. பாணன் காதம்பரியில் இதே சித்திரத்தைத் தந்திருக்கிறான்.* அதில் காணப்படும் பம்பையின் வர்ணனை கம்பரின் வர்ணனைக்கு மூலமாயிருக்கலாம்.

வடமொழிப் புலவர்கள் இயற்றிய நூல்களின் பொருள் நயத்தையும் சொல் நயத்தையும் கண்டு வியந்து அவைகளைப் பருகிப் பருகிக் கம்பர் களித்திருக்கிறார்.

தமிழ் நூல்களிலுள்ள அருமையான கருத்துக்களையெல்லாம் தம் காவியத்தில் கொணர்ந்திருக்கிறார். சீவக சிந்தாமணியின் வாசனை பல இடங்களில் வீசுகிறது.

அள்ளிமீ துலகை வீசு மரிக்குலச் சேனை நாப்பண்
தெள்ளுதண் டிரையிற் றோகிப் பிறிதொரு நிறனுஞ் சாரா
வெள்ளிவெண் கடலின் மேனாள் விண்ணவர் தொழுத வேண்டப்
பள்ளிநீர்த் திருந்தா னென்னப் பொலிதரு பண்பி னானே.

"வெள்ளி வெண் கடலின் என்ற பகுதியைக் கேட்ட புலவரொருவர் 'இது சிந்தாமணிப் பிரயோகமா யிருக்கிறது' என்று சொல்லியபோது கம்பர், 'சிந்தாமணியிலிருந்து ஓரகப்பை முகந்துகொண்டேன்' என்று விடை பகர்ந்தனரென்று பழைய பிரதி யொன்றில் எழுதிய குறிப்பால் தெரியவருகிறது."

(மகாமகோபாத்தியாய சாமிநாதையரவர்கள் - சீவக சிந்தாமணி மூன்றாம் பதிப்பின் முகவுரை.)

சீவக சிந்தாமணியிலிருந்து பல சொற்றொடர்களையும் கருத்துக்களையும் எடுத்துத் தம் காவியத்தில் வைத்து இழைத்திருக்கிறார் கம்பர் என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. வெள்ளி வெண்கோல், வள்ளற் கைத்தலம்

* அகாரணேபி குரூரதயா (பூர்வபாகம்)

முதலிய சீவகசிந்தாமணியில் காணப்படும் தொடர்கள், "வெள்ளி விழிடை", "வள்ளியோரிள" என்ற கம்ப ராமாயணத் தொடர்களை நினைவூட்டுகின்றன. உழத்தியரின் கண் கை கால் முகம் வாய் இவைகளைக் காட்டுகிற களைகளைத் தவிர வேறில்லாமையால், உழவர்கள் அவற்றைப் பிடுங்காமல் திரிகின்றனர் என்ற கருத்தை வைத்துக் கம்பர் பாடியிருக்கிறார்.

பண்கள்வாய் மிழற்று மின்சொற் கடைசியர் பரந்து நீண்ட
கண்கைகால் முகம்வா யொக்கும் களையலாற் களையி லாமை
உண்கள்வார் கடைவாய் மள்ளர் களைகலா துலாவி நிற்பார்
பெண்கள்பால் வைத்த நேயம் பிழைப்பரோ சிறியார் பெற்றால்.

இதே கருத்து, சீவக சிந்தாமணியில் இருக்கிறது.

கண்ணெனக் குவளையுங் கட்ட லோம்பினார்
வண்ணவான் முகமென மரையி னுள்புகார்
பண்ணெழுத் தியல்படப் பரப்பி யிட்டனர்
தண்வய லுழவர்தந் தன்மை யின்னதே.

இவ்விரு கவிக்கும் மூலம் திருமங்கை ஆழ்வாரென்றே சொல்லிவிடலாம்.

மையணைத்த குவளைகள்தம் கண்க ளென்றும்
மலர்க்குமுதம் வாயென்றும் கடைசி மார்கள்
செய்யணைந்து களைகளையா தேறும் காழிச்
சீராம விண்ணகரே சேர்மி னீரே.

சீவக சிந்தாமணியின் பொருள் நயத்திலும் சொல் நயத்திலும் கம்பர் திளைத்தவர். விருத்தம், கருத்துக்களை வெளியிட முன் ஒரு கருவியாயிருந்த போதிலும், விருத்தப் பாக்களை வைத்துக்கொண்டு முதல் முதல் ஒரு காவியம் சமைத்தவர், சீவக சிந்தாமணி பாடிய திருத்தக்க தேவரே. கம்பர் கையில் விருத்தம் பல ரசங்களைக் காட்டக்கூடிய வீணையாக அமைந்துவிட்டது.

வள்ளுவர் குறளில் தோய்ந்தவர் கம்பர். குறள் வரிகளை அப்படியே பெயர்த்துத் தம் காவியத்தில் வைத்திருக்கிறார். "இராமனுக்கு முடி சூட்டப் போகின்றேன். உங்களுடைய கருத்து யாதோ" என்று அங்குச் சபையில் கூடியுள்ள வேந்தர்களைப் பார்த்துக் கூறுகின்றான் மன்னன்.

அதற்குப் பதில் அவர்கள் உரைக்கின்றனர். "உதவு கின்ற குளம் நிறைந்தால் வேண்டாம் என்று யார் சொல்லுவார்கள்? பயனைத் தருகின்ற மரம் பழுத்தால் அதை வேண்டாம் என்று யார் மறுப்பார்கள்?" என்ற கருத்தை அவர்கள் கூற்றில் காணலாம்.

ஊருணி நிறையவு முதவு மாடுயர்
பார்கெழு பயன்மரம் பழுத்தற் றாகவும்
கார்மழை பொழியவுங் கழனி வாய்நதி
வார்புனல் பெருகவு மறுக்கின் றார்கள்யார்?

இப்பாட்டிலே கம்பர் இரண்டு குறள்களைத் திணித்துவிட்டார்.

ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திரு.
பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம்
நயனுடை யான்கட் படின்.

சங்க இலக்கியத்தைப்பற்றி நாம் கூறவேண்டியதல்லை. திணை, திணை மயக்கம், தலைவன் தலைவியைச் சந்திப்பதிலே தோன்றும் காம நிகழ்ச்சிகள், முதலிய கவிமரபுகளை உபயோகிக்கிறார். மிதிலையில் இராமனைச் சீதை சந்திக்கிற காட்சி வால்மீகத்தில் இல்லை. கம்பர் தருகிறது ஆரியக்காதலன்று; தமிழர் முறையில்தான் அது சமைந்து கிடக்கிறது. மிதிலைக் காதற் காட்சிகள் தொல்காப்பியப் பொருளதிகார இலக்கணத்திற்கு உதாரணங்களாய் விளங்குகின்றன. சீதை இராமனைச் சந்திப்பது பெருங்கதையில் வாசவதத்தை உதயணனைச் சந்திக்கிற காட்சியை நம் மனத்தகத்தே எழுப்புகின்றது.

சங்க நூல்களில் தோய்ந்த நாயன்மார்கள் ஆழ்வார்கள் இவர்கள் பாசுரங்களை அள்ளிப் பருகியவர் கம்பர். ஆழ்வார்கள் வாக்கில் உபநிஷத்தின் கருத்துக்கள் மிளிர்கின்றன. உபநிஷத்துக்கள், கீதை, ஆழ்வார்களின் அருளிச் செயல்கள்—இவைகளை நன்கு உணர்ந்து அவைகளில் பொதிந்து கிடக்கின்ற கருத்துக்களைத் தம் காவியத்தில் கம்பர் அலரவைத்திருக்கிறார்.

விராதன் தோத்திரம், இந்திரன் கருடன் இவர்கள் துதிகள் ஆகிய இவைகளைப் படிக்குந்தோறும் ஆழ்வார்க

வின் நடுவிலே நிற்கிற உணர்ச்சிதான் நமக்கு வருகிறது. கம்ப நாட்டாழ்வார் என்று அவரை அழைப்பது பொருந்தும். "வாராதே வரவல்லாய்" என்று கம்பர் கூறியிருக்கிற அடி நம்மாழ்வாரின், "வந்தாய் போலே வாராதாய் வாராதாய்போல் வருவானே" என்ற அமுத வாக்கை நம் சிந்தையில் பாயும்படி செய்கின்றது. பக்தி பரவசத்தில் நாம் கதை யெழுதுகிறோம் என்ற நினைவுகூட அவருக்கு மறந்துவிடுகிறது. "என்னையாளுடைய வையன்" என்று பாட ஆரம்பித்துவிடுகிறார்.

முத்த மிழ்த்துறை யின்முறை போகிய
உத்த மக்கவி கட்கொன் றுணர்த்துவன்
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ

என்று அவரே கூறும் பாட்டு இங்கே நோக்கத்தகுந்தது.

"தென்சொற் கடந்தான் வடசொற்கடற் கெல்லை தேர்ந்தான்" என்று கம்பர் இராமனைப்பற்றிக் கூறும் பாடல் அவருக்கே பொருந்துமெனத் தோன்றுகிறது.

கல்விகேள்விகளில் நிரம்பிய அவர் உள்ளம் வேதாந்த விசாரங்களிலும், கவிதை நயங்களிலும் தோய்ந்திருந்தபடியினால், அருவ உவமைகள் அடிக்கடி அவர் வாக்கிலே வந்துவிடுகின்றன. "சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரியினை", "நல்லியற் கவிஞர் நாவிற் பொருள் குறித்தமர்ந்த நாமச்சொல்", "கல்லாப் புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள்", "செல்லுறு கதியிற் செல்லும் வினையென", 'பல் பெருஞ் சமயஞ் சொல்லும் பொருளும் போல்", "ஒரிய உடம்பு தோறுமுயிரென" என்ற உவமைகள் நம்முன் எழுதுகின்றன.

கல்வி எல்லா அறங்களுக்கும் வித்தென்று அவர் தேர்ந்தார். அதில்தான் அன்பு அரும்புகின்றது; அதில்தான் அறம் மலர்கின்றது; அதில்தான் போகக்கனி பழுக்கின்றது.

ஈசும் முதற்கல்வி முளைத்தெழுந் தெண்ணில் கேள்வி
ஆசும் முதற்றின் பணைபோக்கி யருந்த வத்தின்
சாகர் தழைத்தன் பரும்பித் தருமம் மலர்ந்து
போகக் கனியொன்று பழுத்தது போலு மன்றே.

இக்கல்வி ஆடவர்களுக்கு மட்டுமன்று; பெண்களுக்கும் வேண்டுமென்று வற்புறுத்துகிறார். கோசல நாட்டில் பெண்கள் கல்வி கேள்விகளில் தேர்ச்சியுள்ளவர்கள்.

> பெருந்த டங்கட் பிறைநுத லார்க்கெலாம்
> பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
> வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
> விருந்து மன்றி விளைவன யாவையே ?

கல்வி நிரம்பிய பெண்களின் நாகரிகத்தின்மீது ஒரு நாட்டின் சிறப்புத் தங்கியிருக்கிறது.

பெண்களிடத்தில் கம்பர் மிக்க கௌரவம் காட்டியுள்ளார். பெண்களின் தாய்மையைப் பாராட்டுகின்றார். ஒரு சோலையை, "தங்களுயகரிற் றெய்வந் தான் பிறிதில்லென் றுன்னும், மங்கைமார் சிந்தைபோலத் தூயது" என்று சித்திரிக்கிறார். இராவணன் சீதையைத் தொட்டு இழுத்துச் செல்லுகிறான் என்று வால்மீகி வர்ணிக்கிறார். கம்பருக்கு அது உடன்பாடன்று. தரையோடு எடுத்துச் சென்றான் என்றே கூறுகிறார். தாரை சுக்கிரீவனோடு இன்புறுகின்றாள் என்ற காட்சிதான் வால்மீகத்தில் கிடைக்கிறது. சுமித்திரையைப் போலவும் கோசலையைப் போலவும் நாலிழந்த தாய்மை நிலையில் தாரை நிற்கிறாள். லக்ஷ்மணன் கண்டு தாயென நைந்து நிற்கிறான். இந்தச் சித்திரத்தைத்தான் கம்பர் நமக்களிக்கிறார்.

> மங்கல வணியை நீக்கி மணியணி துறந்து வாசக்
> கொங்கலர் கோதை மாற்றிக் குங்குமம் சாந்தம் கொட்டாப்
> பொங்குவெம் முலைகள் பூசக் கழுத்தொடு மறையப் போர்த்த
> நங்கையைக் கண்ட வள்ள னயனங்கள் பனிப்ப நின்றான்.

உண்மையான காதலில்தான் வீரம் தழைக்கிறது, அறம் வளர்கிறது என்ற தத்துவத்தைக் கண்ட கம்பர் தம்முடைய காவிய முதலிலேயே அதற்கு வேண்டிய அஸ்திவாரத்தை அமைத்துவிடுகிறார். அறத்திலிருந்து விலகாத மாதர் நிறைந்த கோசலநாட்டு ஆற்றைப்பற்றிப் பேசுகிறேன் என்கிறார்.

> ஆசலம்புரி யைம்பொறி வாளியும்
> காசலம்பு முலையவர் கண்ணெனும்

பூச லம்பும் நெறியின் புறஞ்செலாக்
கோச லம்புனை யாற்றணி கூறுவாம்.

உண்மைக் காதல் ஒளி வீசுகிற அறக்கோயிலாக அயோத்தி விளங்குகின்றது. காமத்திற்கு இரையான பாவ பண்டாரமாய்க் காட்சி அளிக்கிறது இலங்கை. ராம ராஜ்யத்தில் அன்பு தழைத்தோங்கி அனைவரும் சகோதரர்களாய் வாழ்கின்றனர். ஆண்டவன் அருள் ஒளியை நாடுகின்ற அனைவரும் சகோதரர்கள் தாம். இக் கருத்தை ஆழ்வார்களும், நாயன்மார்களும் வெளியிட்டிருக்கின்றனர்.

பழுதிலா வொழுக லாற்றுப் பலசதுப் பேதி மார்கள்
இழிகுலத் தவர்க ளேலும் எம்மடி யார்க ளாகில்
தொழுமினீர் கொடுமின் கொண்மின் என்றுநின் னேடும் ஒக்க
வழிபட அருளி னாய்போன்ம் மதிள்திரு வரங்கத் தானே

என்று தொண்டரடிப் பொடி ஆழ்வாரும்,

குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழிழிந்து எத்தனை
நலந்தானிலாத சண்டாளர்க ளாகிலும்
வலந்தாங்கு சக்கரத் தண்ணல் மணிவண்ணற் காளென்றுஉள்
கலந்தார் அடியார்தம் அடியார் எம் மடிகளே

என்று நம்மாழ்வாரும்.

அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம் வணங்குங் கடவு ளாரே

என்று அப்பரும் கூறுகின்றனர்.

தொண்டக் குலத்திலுள்ளீர் வந்தடி
தொழுது ஆயிர நாமம் சொல்லி
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து
பல்லாண்டு பல்லாயிரத் தாண்டென்மினே

என்று பெரியாழ்வார் முரசடிக்கிறார்.

ஆழ்வார்களின் பக்தி வெள்ளம் ஆசாரியர்களின் மடுவிலே தேங்கிற்று. அம்மடுவிலே திளைத்த கம்பர் சகோதரபாவத்தைக் காவியத்தில் வைத்துக் காண்பித்து விட்டார். ராம லக்ஷ்யத்தைத் தொடர்கின்றவர்கள்

யாவரும் சகோதரர்கள்தாம், வேடரா யிருந்தாலும் சரி, குரங்ினமா யிருந்தாலும் சரி, அரக்கரா யிருந்தாலும் சரி, அனைவரும் அன்பிலே பிணைக்கப்பட்ட சகோதரர் களே. இரண்டாயிர வருஷத்திற்கு முன் ஏசுநாதர் செய்த உபதேசம் நம் கம்பரின் காவியத்தில் மலர்ந்து விட்டது.

குகனொடு மைவ ரானேம் முன்புபின் குன்று சூழ்வான்
மகனொடு மறுவ ரானே மெம்முழை யன்பின் வந்த
அகனமர் காத லைய நின்னொடு மெழுவ ரானேம்
புகலருங் கானந் தந்து புதல்வராற் பொலிந்தா னுந்தை.

அசோக வனத்தில் சீதையின் அகக்கண்முன் அநேக நினைவுப் படங்கள் விரிகின்றன. குகனோடு தோழமை கொண்டதை உன்னுகின்றாள்.

ஆழ நீர்க்கங்கை யம்பி கடாவிய
ஏழைக வேடனுக் கெம்பிநின் றம்பிநீ
தோழன் மங்கை கொழுந்தி யெனச்சொன்ன
வாழி நண்பினை யுன்னி மயங்குவாள்.

கம்பர் பாடிய இப்பாட்டிலே திரு மங்கை ஆழ்வார் கருத்தை அப்படியே பார்க்கலாம்.

ஏழை ஏதலன் கீழ்மக னென்னாது
இரங்கி மற்றவற்கு இன்னருள் சுரந்து
மாழை மான்மட நோக்கிஉன் தோழி
உம்பி எம்பியென் றொழிந்திலை உகந்து
தோழன் நீஎனக்கு இங்கொழி யென்ற
சொற்கள் வந்துஅடி யேன்மனத் திருந்திட
ஆழிவண்ணா! நின் னடியிணை யடைந்தேன்
அணிபொழில் திருவரங் கத்தம்மானே.

சித்திரித்த ஆழ்வார் தொண்டர் கூட்டத்தில் கம்பரும் ஒருவர் என்பதற்கு இதைவிட வேறு சான்று வேண்டுமோ?

இச்சகோதர பாவம் அன்பிலேதான் எழும். இவ் வன்பிலேதான் அரசியல் வேரூன்றி நிற்கவேண்டும். ராம லக்ஷ்யத்திற்கு மூன்று அங்கங்கள் உண்டு. நல்லறமும், மனச் செம்மையும், அருளுந்தான் சமுதாயத்தைத்

தாங்குகின்ற தூண்கள். இவைகள் அழிந்தால் மும் மூர்த்திகளாலும் ஒன்றும் செய்வதற்கில்லை.

உருளு நேமியு மொண்கவ ரெ.:கமும்
மருளில் வாணியும் வல்லவர் மூவர்க்கும்
தெருளு நல்லற மும்மனச் செம்மையும்
அருளு நீத்தபி ளுவதுண் டாகுமோ?

அன்பு நெறி மனிதனுக்கு மட்டுமன்று; அரசியலிலும் அது அரசு செலுத்த வேண்டும். திருவள்ளுவர் மனித தர்மத்தையும் அரசியல் நெறியையும் பிரித்துக் கூறினர். அவருடைய பொருட்பாலில் சாணக்கிய தந்திரத்தின் மணம் வீசுகின்றது. கம்பர் இவ்விரு நெறிகளும் ஒன்றே என்று அழகு பெறக் கூறிவிட்டார். எங்கும் அன்பு தான் ஆளவேண்டும். தம் லக்ஷ்யத்தில் வள்ளுவரைக் கம்பர் வென்றுவிட்டார் என்று சொன்னுல் அது மிகை ஆகாது.

யாரொ டும்பகை கொள்ளில தென்றபின்
போரொ டுங்கும் புகழொடுங் காதுதன்
தாரொ டுங்கல்செய் யாதது தக்கபின்
வேரொ டுங்கெடல் வேண்டலுண் டாகுமோ.

அரசியலில் மற்ருெரு புதிய கருத்தை அவர் தந்திருக் கிருர். முன்னேர்கள் அரசனை உயிரென்று சிறப்பித்துக் கூறினர்கள்.

நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனுல், யானுயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே. (புறநா.)

இம்முறையை மாற்றினுர் கம்பர். ஜீவநாடி ஜனசமுதாயத் தில்தான் பேசுகிறது. அவ் வுயிரைத் தாங்கும் உடலாக அரசன் இருக்கிருன். ஓரிடத்தில் சேதித்து ஜீவனுக்குக் குறை ஏற்படும்போது, உடலைச் சேதித்து விடலா மென்று அவர் கருதினுர் போலும்;

வைய மன்னுயி ராகவம் மன்னுயிர்
உய்யத் தாங்கு முடலன்ன மன்னனுக்
கைய மின்றி யறங்கட வாதருள்
மெய்யி னின்றபின் வேள்வியும் வேண்டுமோ?

கம்பர் கனவு கண்ட அன்பரசியல் திட்டத்திலேதான் உலகம் உய்ய ஒரு பெரு நெறி விரிகின்றது. அதைப் பின்பற்றினால் எல்லோரும் எல்லாச் செல்வமும் எய்தலாம் என்ற லக்ஷ்யத்தை அவர் தந்திருக்கிறார். கல்வி கேள்விகளினால் பண்பட்ட மனம், அறத்திலே ஊன்றிய உள்ளம், அன்பிலே கனிந்த உணர்ச்சி - இப்பெருங் குணங்களெல்லாம் உருவெடுத்து நிற்கிற மகா புருஷர் தாம் கம்பர். மண்ணையும் விண்ணையும் அளக்கிறது அவருடைய உன்னத நோக்கம். அதைப் பின்பற்றினால், கம்பருக்கு முன் விளங்கிய நம்மாழ்வாரோடு நாமும் சேர்ந்து உள்ளங் கரைந்து பாடலாம்:

பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம்
நலியும் நரகமும் நைந்த நமனுக்கு இங்கு யாதொன்று மில்லை!

14. நாம் வெறுக்கும் பாத்திரம்

[நி. சோமயாஜுலு]

மேற்கும் கிழக்கும் ஒன்று சேரா என்று எல்லோரும் வழக்கமாகச் சொல்லுகிறார்கள். அரசியல் வாதிகளோ அதைவிட ஒரு படி மேலே போகிறார்கள். திசைகளைப் பொறுத்த விஷயம் அல்ல இது. கலை, நாகரிகம், கவிதை, பண்பாடு, இன்னும் எத்தனையோ விஷயங்களிலுந்தான் இந்த முரண்பாடுகள். கவிதையைப் பற்றிப் பேசிவிட்டால், போதும் போதும் என்று மேல்நாட்டாருக்கு ஆகிவிடும். குபீர் பாய்ச்சலில் அவர்களை எங்கே தள்ளிவிடுமோ என்று நமக்குப் பயமாக இருக்கின்றது. நமக்குக் கவிஞர்கள், கவிதைகள் என்ற விஷயம் வேறு.

"கவிஞனைப் போற்றி மதிக்கின்றோமே யன்றி அவன் சிருஷ்டித்த உணர்ச்சி வயமான பாத்திரங்களைப் போற்றுவதில்லை" என மேல் நாட்டு ஆசிரியர் ஒருவர் தம் நாட்டு மக்களைக் கடிந்துகொள்கிறார். இந்த விஷயத்தில் நாம் அலாதியாக இருக்கிறோம். ஷேக்ஸ்பியருக்கும், பைரனுக்கும், மில்டனுக்கும், தாங்தேக்கும் பிரமாதமான கட்டிடங்கள் கட்டி, அவர்களது கைப் பிரதிகளையும் உடைமைகளையும் போற்றுகிறார்கள். நாம் அப்படியல்ல. கம்பனுக்கும், வால்மீகிக்கும் நாம் கோவில்கள் கட்டவில்லை. ஆனால் அவர்கள் சிருஷ்டித்த பாத்திரங்களான ராகவனுக்கும், சீதைக்கும், அனுமானுக்கும் கோவில்கள் கட்டிப் பூசைகள், நைவேத்தியங்கள், ஊர்வலங்கள், மேளதாளங்களோடு நடைபெறச் செய்கிறோம். பாத்திரங்களைத் தெய்வமாகப் போற்றி அப்பணியில் ஈடுபடுகிறோம். பாத்திரங்களோடு இணைக்கப்பட்ட உணர்ச்சியில் அமிழ்ந்து விடுகிறோம். தெய்வ சாந்நித்திய திக்ஷையைக் கவிஞர்கள் நமக்குத் தந்து உதவி இருக்கிறார்கள்.

கம்பரின் சிருஷ்டி பாத்திரங்கள் அபூர்வமானவை. வீரத்தைப் பற்றி அவர் பேச ஆரம்பித்தாரானால், நமக்குத் திரண்ட தோள்களும், யானை வலுவும் வந்துவிடுகின்றன. பார்வையில் கூடப் புரட்சி ஏற்பட்டுவிடுகின்றது. காதலைப் பற்றிப் பேசினாலோ, நம் கண்களுக்குமுன் நிலா

வும், தென்றல் காற்றும், கடலும், அழகுத் தெய்வமும் காட்சி அளிக்கின்றன; என்னவெல்லாமோ நம்மைச் செய்து விடுகின்றன. நவரசங்கள் நம்மை ஒரே குலுக் காகக் குலுக்கிவிடுகின்றன.

சிற்பி, மொட்டைப் பாறையில் ஜீவ கலை ததும்பும் சிலைகளைப் படைத்துவிடுகிறான். உதவாக்காகிதத்திரையில் சித்திரகாரன், பல வர்ணங்களால் நின்று பேசும் உணர்ச் சிப் பிரவாக ஓவியத்தைத் தீட்டிவிடுகிறான். கவிஞன் வார்த்தைகளைக் கொண்டு எழுதுகிறான். அந்த வார்த் தைகள், தனியே கிடந்தால், இடம்மாறி இருந்தால், நாம் அவற்றைத் தீண்டுவதில்லை. இன்னும் அவை இலக்கணக் கட்டுப்பாடுகளுக்குள்ளே அமிழ்ந்துவிட்டால் நமக்கு ஒரே தலைவலியும் மயக்கமும் வந்துவிடுகின்றன. ஆனால், கவிஞ னின் உணர்ச்சிக் கவிதையில், இந்த வார்த்தைகள் அந்த அந்த ஸ்தானங்களில் நிலை தவறாது விழுந்துவிட்டால், அவை நம்மை ஆனந்த பரவச உலகத்திற்கு ரசனை ரதத் தில் ஏற்றிக்கொண்டு போய்விடுகிறது. அவ்வரிகளையோ, வார்த்தைகளையோ பாடிப் பாடிப் பல்லாயிர முறை அனுபவிக்கிறோம். அத்தனை இன்பத்தை நமக்கு அவை அளிக்கின்றன.

* * *

நல்ல நிலா; மேகத்தைக் கிழித்துக்கொண்டு முத்தம் தந்து பரவசப் படுத்தி ஒய்யாரமாகப் பவனி வருகிறது சந்திரன். சிறு கிராமம்; கோவில் பக்கம். திறந்த நாடக மண்டபம். கட்டுச் சோறு கட்டி, கட்டை வண்டியில் கலாக்ஷேத்திரத்தைக் காண வந்தவர்கள் பலர். கட்டி யக்காரன் கட்டியம் கூறியபின், பஞ்ச கச்சம் கட்டி, கழுத்தில் உருத்திராக்க மாலைகள் தொங்க, திருநீறு சாம்பசிவ மூர்த்தியை இனம் காட்ட, கையில் விசிறியுடன் கடின முகத்துடனும் காட்சி அளித்தான் காலகண்டன். இவன் வருகை ஜனங்களிடையே ஒரே உற்சாகத்தைத் தந் தது. அரிச்சந்திரனை இவன் படுத்திய பாடு அனந்தம். கொலைக் களத்தில், அரிச்சந்திரனைப் படுத்திய பாடு (நடிப் புத்தான்) நாடக ரஸிகர்களுக்கு பிரமாதமான கோபத்தை உண்டாக்கிவிட்டது. சண்டாளனின் விடாக்கண்டத்தன்மை,

காலகண்டனுக்குப் பாதரக்ஷை சன்மானம் பெறும்படி செய்தது. அத்தனை ஜோரான நடிப்பு. சந்தோஷ சல சலப்புகளுக்கிடையே ஆரம்பித்த நாடகம் உணர்ச்சிப் பிரவாகத்தில் கொண்டு தள்ளிவிட்டது.

உணர்ச்சி என்பது சர்வ சாதாரண விஷயமல்ல. உணர்ச்சி அலைகளின் மோதுதல் நம்மை மெய் மறக்கச் செய்கின்றது. வாழ்க்கையில் அன்றாடம் நாம் இவைகளைக் காண்கிறோம். கம்பர், உணர்ச்சியுள்ள பாத்திரங்களைச் சிருஷ்டிக்கும்போது, தாமும் அந்தப் பாத்திரங்களோடு ஒன்றி விடுகிறார். அப்போது நாம் அபூர்வமான கவிகளை எல்லாம் பார்த்துவிடுகிறோம்.

ஏதோ, எங்கிருந்தோ, ஒருத்தி வருகிறாள் நடிக்கிறாள். காரண காரியங்களுடன் நடிக்கிறாள். காரணமில்லாமல் சிறிய அபவாதத்தை அம்பலத்துக்குக் கொண்டு வர முடியாது. இக்காரணங்கள் (தர்க்கத்திற்கு நிற்க முடியாத) ஒரு காவ்யத்தைப் பிரமாதமாக அழகுபடுத்து கின்றன என்றால், அது கவிஞனின் அபூர்வ சிருஷ்டியாகத் தானே இருக்கமுடியும்?

ஒரு சிறு சம்பவம், ஒரு காலத்தில் கூனிக்கு எவ்வளவோ ஆனந்தத்தை அளித்தது. தனது தோழிகளுடன், அவள் கைவளைகள் குலுங்க, ஒய்யாரமாக வம்பு பேசி, இடுப்பில் குடமெடுத்துப் போனபோது, இராகவன் அன்புடன் எறிந்த களி மண் உருண்டைகளைச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டு, இராகவனின் அன்பைப் பிரமாதமாக ஆனந்த வெறியில் பேசினாள். மற்றவர்களுக்கோ இராகவன் அன்பைக் கண்டு கூனியிடத்தில் பயம். இச் சிறு உருண்டை - களிமண் உருண்டை - கதையின் கட்டுக் கோப்பை என்ன பாடு படுத்திவிட்டது! முன் இன்பத்தையும் உற்சாகத்தையும் பெற்ற கூனி அவைகளை மறந்து குயுக்திகளைச் செய்கிறாள். காரணத்தோடே நீதியும், தர்மோப தேசங்களும் அடுக்கடுக்காக வருவது விசித்திரமான தல்லவா? கவிஞர் இதை மிகவும் லாகவமாகக் கையாளுகிறார்.

தசரதனுக்கு உயிர் இராகவன். கூனிக்கு உயிர் கைகேயி; அவளுடைய செவிலித்தாய். கேகயன் கைகேயிக்கு அன்புடன் அளித்த உயிர்ப் பரிசு கூனி. அரசரில் பிறந்து வளர்ந்து புகுந்த கைகேயிக்கு, கூனி அன்புக் களஞ்சியமாய் விளங்கினாள். தசரதன் இராகவன் தந்தை. கூனி கைகேயின் வளர்ப்புத் தாய். இராகவனிடத்தில் தசரதனுக்கு அன்பும், கேகயன் மகள்மீது மந்தரைக்கு அன்பும் இருப்பது இயல்பு.

அயோத்தியில் முடிசூட்டு வைபவத்திற்குப் பிரமாதமான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. யாருக்கு? இராகவனுக்கு. வானவர் திகைக்கிறார்கள். அலங்கரிப்பவர்கள் இடும் ஆரவாரம் அந்தப்புரத்தில் ஒலிக்கின்றது. ஒரே கும்மாளம்! இத்தனை கும்மாளங்களுக் கிடையில் கூனி தோன்றுகிறாள். கவிஞர் அவளது வருகையை விரும்பவில்லை. ஆம்! இராகவனின் பட்டாபிஷேக அலங்காரத்தில் ஈடுபட்டுள்ள கவிஞருக்கு கூனி வருகை விகல்பமாகத் தோன்றிற்று. கூனியின் திருஷ்டி, கவிஞரின் நினைப்பைப் பாவக்களஞ்சியமான இராவணனை நினைக்கும்படி செய்துவிட்டது. நிமிராத கூனியின் கூனல் எங்கே? இராவணனின் தீமை ஸ்வரூபம் எங்கே? ஒவ்வாத உவமைகள். அநியாயமாக வைபவம் நடக்காமல் போய்விடப் போகிறதே என்ற திகில் கவிஞருக்கு. விழுகின்றன வார்த்தைகள் :

> இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
> துன்னரும் கொடுமனக் கூனி தோன்றினாள்.

தோன்றினால் போதுமா? எப்பொழுதோ, எங்கேயோ, நடந்த சம்பவம் ஞாபகத்திற்கு வந்துவிடுகிறது அவளுக்கு. இன்பத்தை அளித்த அப்பழைய சம்பவம், இன்று விஷமாகத் தெரிகிறது. காரணங்களுக்குப் போதிய காரியங்கள் வேண்டுமே; அதை நினைக்கிறாள். அச்சிறு சம்பவம் தன்னைக் கேவலப் படுத்தியதாக மாறுகிறது. பழிக்குப் பழி வாங்க நினைக்கிறாள்.

> பண்டைநாள் இராகவன் பாணி வில்உமிழ்
> உண்டைஉண் டதனைத்தன் உள்ளத் துள்ளுவாள்.

"உன்டை உண் டதனைத்தன் - உள்ளத் துள்ளுவாள்" என்பதில், மனத்தில் புழுங்கி வரும் கோபக் கனல் வீசு வதைப் பார்க்கிறோம். ரோமாபுரியில் ட்ரோஜன் காளை களைக் கொண்டு (Trojan bulls) உழுத காலத்தில், அக் காளைகள் சுவாசக் கனலை வீசியது போல் "உள்ளத் துள்ளுவாள்" என்ற சொற்களில் மனத்தில் அழுத்திப் பெருமூச்சு விடும் பாவம் தொனிக்கின்றது.

பாற்கடலில் பவளக்கொடி தாமரைகளை ஈன்றது போல், அருள் வழியும் கண்களை மூடி அயர்ந்து துயிலும் கைகேயி கோவிலுக்குச் சென்று, எழுப்பிக் கூனி பேசு கிருள்; இல்லை, ஏசுகிருள்; கூவுகிருள்; அதட்டுகிருள்; சபிக்கிருள்; கிண்டல் புரிகிருள்; நிலத்தைக் குழிக்கி ருள்; பரிவுடன், "பரதா! எங்கேயடா! இருக்கிருய்" என்கிருள்; "பிறந்தும் இறந்தனையே!" என்று அலறுகி ருள். இன்னும் என்ன என்னவோ செய்கிருள். சிறு சம்பவத்தைப் பயங்கரமாக மாற்றும் கூனியின் ஜால வித்தைகளை அடுக்கடுக்காக விறுவிறுப்புடன் ஏற்றிக் கொண்டு போகிருர் கவிஞர்.

கைகேயி தாழ்ந்து பேசுகிருள், நிஷ்காமகர்ம யோகி போல். கிளப்பப்படும் பிரச்னைகளுக்கு ஒன்று ஒன்ருகப் பதில் இறுக்கிருள். சாம தான பேதத்தைக் கையாளு கிருள். தண்டிப்பதாக வேறு மிரட்டுகிருள். கூனி தாழ்வதாகத் தெரியவில்லை. கடுமையாகப் பேசினுலும், தன் இருதயத்தில் கூனிக்கு அளித்த ஸ்தானத்தை அவளால் மறக்க முடியவில்லை.

எதை உபயோகித்தால் கைகேயி தளர்வாள் என்று கடைசி ஆயுதத்தைக் கூனி வாதப் பிரதிவாதத்தில் மறந்து விடவில்லை. சாதாரணமான அஸ்திரங்களில் கைகேயி விழவில்லை என்பதைத் தெரிந்ததும், கடைசி ஆயுதமான தாராள தர்ம சாஸ்திர அஸ்திரத்தை உபயோகிக்கிருள் கூனி. கைகேயி தலை இறங்குகிறது. கண்களில் அனு தாபக் கசிவுகள் ஏற்படுகின்றன. கூனி என்ன சொல்கி ருள் பார்ப்போம்:

"எப்பேர்ப்பட்ட ஞானிகளின் மனங்கூடச் செல் வம் பெற்றதும் மாறிவிடுகிறது. கோசலை வீட்டார்

கொடுமை செய்யமாட்டார்கள். உன் மனம் தானே நலியும்படி காரியங்கள் நடக்கும்.''

இன்னும்,

"இராகவனுக்கு அரசு எனில், கோசலைக்குத் தான் எல்லாம் சொந்தம். உனக்கு உரிமை இந்த நாட்டில் எதுவும் இல்லை; அவள் கொடுத்து நீ எதையும் செய்யவேண்டும்!"

இறுதியாக, "ஒரு வார்த்தை" என்று மோகனாஸ்திரத்தை வீசுகிருள்.

"நீ மகா தயாள ஸ்வரூபம். வரையறாது கொடுக்கும் வள்ளன்மையுடையவள். உன்னைச் சேர்ந்தவர்களை, வறுமை மென்னியைப் பிடித்துத் தள்ளி உன்னிடம் சேர்ப்பிக்கின்றது என்று வைத்துக்கொள்ளுவோம்.

தாண்டும் இன்னலும் வறுமையும் தொடர்தரத் தயரால்
ஈண்டு வந்தனை இரந்தவர்க்(கு).

உன்னிடத்தில் யாசிக்க வருகிருர்கள் தங்களது வறுமைப் பிணியைத் தீர்த்துக் கொள்ள, நீயோ பாப்பராகி விட்டாய்!

—இருநிதி அவனை வேண்டி ஈதியோ!

பிச்சை எடுத்துப் பிச்சை கொடுக்கவேண்டுமோ? தர இயலாதவர்கள் மறைந்து கொள்வதுண்டு. அது போல் வெட்கத்தால் மறைந்து கொள்வாயா? வெள்குதியோ!—

கொடுக்க இயலவில்லையே என்ற ஏக்கத்தால் விம்மி இறப்பாயோ?

— விம்மல் நோயால் மாண்டு போதியோ?

குல தர்மத்திற்கும், பரம்பரைத் தர்மத்திற்கும் விரோதமாக இல்லை என்பாயோ! சொல்லடி யம்மா? சொல்லடி! எப்படி வாழ்வாய்?"

என்று ஆதரவோடு கேட்கிருள்.

மறுத்தியோ! எங்ஙனம் வாழ்தி!

இனிப் பாட்டை முழுதும் பார்ப்போம்.

தாண்டும் இன்னலும் வறுமையும் தொடர்தரத் துயரால்
ஈண்டு வந்தனை இரந்தவர்க்கு இருநிதி அவனை
வேண்டி ஈறியோ? வெள்குதி யோவிம்மல் நோயால்
மாண்டு போதியோ, மறுத்தியோ, எங்ஙனம் வாழ்தி!

நாம் வெறுக்கும் பாத்திரம் கூனிதான். இராகவன் களிமன் உருண்டையால் இன்பத்தை நுகர்ந்த கூனி, கைகேயிக்காகச் சிறு சம்பவத்தைப் பெரிதாக்கி, தூய தேவியின் சிந்தையைத் தர்ம உபதேசம் செய்து திரிய வைக்கும் ஆற்றல் படைத்தவள் என்று நினைக்கும்போது நாம் வெறுக்கும் பாத்திரந்தானு என்று சந்தேகம் ஏற்படுகிறது.

சிப்பியிலே நல்ல முத்து விளைவது போல், கூனியின் அடாத அதிகப் பிரசங்கங்களுக்கிடையே, இத்தேசத்தின் தர்ம சிந்தனையையும், தாராளத் தன்மைகளையும் லாகவமாக காட்டும் கவிச் சக்கரவர்த்தி கம்பர் நம்மை உணர்ச்சியில் அமிழ வைக்கிருர் என்பதற்கு வேறு அத்தாக்ஷி தேவையில்லை.

15. தருமத் தம்பி

[அ. முத்துசிவன், பி. ஏ., ஆனர்ஸ்.
தமிழாசிரியர், இந்து கலாசாலை, திருநெல்வேலி.]

மக்களில் அதிருஷ்டசாலிகளும் துரதிருஷ்டசாலிகளும் காணப்படுகிறார்கள். அம்மாதிரியேதான் இலக்கியங்களிலும் அதிருஷ்டம் வாய்ந்த பாத்திரங்களும் உண்டு; துரதிருஷ்டம் வாய்ந்த பாத்திரங்களும் உண்டு. தருமத் தம்பி, தருமத் தம்பி என்று நல்லவர்கள் பாராட்டுவதற்குரிய பண்புகள் நிறையப்பெற்ற விபீஷணன், பாவம், ஒரு துரதிருஷ்டசாலி! எத்தனையோ உயர்ந்தவனாக விளங்கியும், தயவுடையோர் சிந்தையிலும் சென்னியிலும் வீற்றிருக்கக்கூடிய கீர்த்தியினைப் பெற்றும், இன்னும் அவனை ஓர் ஐந்தாம் படை அன்னால் என்பதாகக் கூறிக் கொடும்பாவி கட்டி இழுகின்ற ரஸிகர்கள் இருக்கத்தான் இருக்கின்றார்கள். இப்படியெல்லாம் கொடும்பாவி கட்டி இழுக்கப்படுவது அவனுடைய துரதிருஷ்டந்தானே?

துரதிருஷ்டந்தான் என்றாலும் அதற்கு ஒரு வகையில் பல்லாண்டு பாடவேண்டும். அது நமக்கு அன்னவனுடைய உத்தம இயல்புகளை எத்தனையோ அளவில் உணரும்படி செய்கிறது. வாழ்க்கையிலே பிரிவோ, பிரிவு உபசாரமோ நடைபெறும்போது, பொதுவாக அன்பர்களெல்லாம் ஒரே பல்லவியைத்தான் பாடுவது வழக்கம். அந்தப் பிரிவு நிகழ்ச்சியை ஒரு விருந்தாக மதித்து, பலாமரத்தைக்கண்ட அளவிலே, கிளைகளையெல்லாம் வேதப் பிரிவுகளாகவும், பிஞ்சுகளையும் கனிகளையும் சுளைகளையும் வித்துக்களையும் சிவலிங்க சொருபமாகவும் கவிஞன் காணுவதுபோன்று, பிரிகின்ற பாத்திரத்தைக் கவித்துக் கிடக்கும் பழக்கம் என்ற திரையைக் கிழித்து, அவரிடத்திலே படிந்து மிளிர்கின்ற மனிதப் பண்புகளையெல்லாம் கண்டு மகிழவும், சொல்லி மகிழவும் இந்தப் பிரிவு நமக்கு எவ்வளவு துணை செய்துள்ளது என்று நினைக்கிறவர்கள் எத்தனைபேர்? அப்படி நினைத்தால் பிரிவும் ஒரு விருந்தாகி விடும். விபீஷணனுக்கு நேர்ந்த துர்ப்பாக்கியத்தையும் அவ்வாறு பார்த்துவிட்டால் விருந்தாகவே தோன்றும்.

தகராறு எல்லாம் வேறு ஒன்றும் இல்லை. கூடப் பிறந்த தம்பி கும்பகர்ணன், "நீரில் இட்ட கோலம் போன்ற மாய வாழ்வை விரும்பி, நெடிய வீரனைத் திரட்டி விட்ட அண்ணனுக்கு உயிர் கொடாது போவேனோ?" என்று சொல்லித் தனது உயிரையே தியாகம் செய்தான். அம்மாதிரியே விபீஷணனும் செய்யாமல் எதிரியினிடம் சென்றது ஒரு துரோகச் செயல் என்பதே அவன்மீதுள்ள குற்றச்சாட்டு.

இக்குற்றச்சாட்டினை மறுத்து விபிஷணனுடைய ஒப்பு உயர்வற்ற பெருமையை இனி நோக்கவேண்டும். அவ்வாறு நோக்கும்போது சில வரம்புகளை வகுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. நாம் காணப்போவது கம்பருடைய விபிஷணனை. கம்பருடைய விபீஷணனைக் காண்பது கம்பரைத் துணைக்கொண்டே; அவர் எழுதிய பாடல்களைத் துணைகொண்டே. அவர் சிருஷ்டித்துள்ள கட்டங்களின் நீர்மை, அவருடைய பாத்திரங்களின் மனக்கருத்து, வெளிப் பேச்சு ஆகிய இவைகளைக் கொண்டே. இவைகள் வரம்புகளேயன்றி எச்சரிக்கையும் கூட. இந்த எச்சரிக்கையை மறந்துவிடக்கூடாது.

கம்பருடைய பாத்திரங்கள் மதிப்பதையும் செய்வதையும் பார்க்குமுன் கம்பரே அவனை எப்படி மதிக்கின்றார் என்பதைப் பார்க்க வேண்டும்.

ஜானகியைத் தேடி இலங்கை சென்ற அனுமான் மாடங்கள்தோறும் மனைகளதோறும் ஏறி இறங்கி வருகின்றான். அப்படி வரும்பொழுது விபிஷணன் வாழ்கின்ற பொன்மனையையும் பார்வையிடுகின்றான். இந்தக் கட்டத்தை கம்பர் வர்ணிப்பதைக் கொண்டே அவர் எவ்வாறு மதித்திருக்கின்றார் என்பது தெரியும். வேந்தர்களென்ன, வேதியர்களென்ன, விண்ணகத்தார் என்ன, மண்ணகத்தார் என்ன, இன்னும் யாரேதான் என்ன, எல்லோருடைய விருப்பத்தையும் திறையாகப் பெறும் தீது தீர்ந்த செம்மலே விபீஷணன் என்பது அவருடைய கொள்கை. அக்கொள்கையை அம்மட்டோடு விட்டு விடாது இன்னும் அதற்கு அற்புதமான கற்பனை கலந்த சொற்கலவையின் மூலம் அழுத்தம் கொடுக்கின்றார்.

அரக்கருடைய அகம் கறுத்தது போன்று புறமும் கறுத்திருக்கும். ஆனால் விபீஷணனிடம் அவனுடைய அகம் வெளுத்ததுபோன்று புறமும் வெளுத்திருக்கவேண்டும், அப்போதுதான் பிறப்பளவிலே அரக்கனாயினும் மனத்தளவில் முற்றும் வேறுபட்டவன் என்பது தெள்ளத் தெளிவாகும். ஆயினும் அப்படியான வெளி மாறுபாட்டோடு அரக்கரிடை வாழ்வது அரிய காரியம் என்றே, அவர்களோடு, அவர்களாக, அவர்களுள் ஒருவனாக, வாழ்ந்து கருநிறம் வாய்ந்த உடம்பினுள்ளே அதி உன்னதமான ஓர் உள்ளத்தை ஒளித்துப் பாதுகாத்த உரவோன் என்றார் கம்பர்,

கம்பருடைய உள்ளத்தை வெளியிடும் அடிகள் இதோ வருகின்றன:

வேந்தர் வேதியர் மேலுளோர் கீழுளோர் விரும்பப்
போந்த புண்ணியன் கண்ணகன் கோயிலுள் புக்கான்.

வெளித்து வைகுவ(து) அருமையென்(று) அவர்உரு மேவி
ஒளித்து வாழ்கின்ற தருமமன் னான்தனை உற்றான்.

[கண்ணகன் - இடம் அகன்ற. கோயில் - அரண்மனை.]

இன்னும் கம்பரோடு போட்டியிட்டுக்கொண்டு அவருடைய பாத்திரங்கள் விபீஷணனை எவ்வாறு புகழ்கின்றார்கள் என்பதைப் பார்க்கவேண்டும்.

சிதையைத் தேடிச் செல்கின்ற அனுமன் விபீஷணனைப் பார்க்கின்றான். குறிப்பறிவதிலும், சொல்லுவனவற்றை நிரம்பிய ஞானம் தெரிக்கச் சொல்வதிலும், அதிலும் வணங்கிய வாயினோடு சொல்வதிலும் பேராற்றல் பெற்றவன் அவன். பார்த்த அளவிலேயே மதித்து விடுகின்றான். தேவர்கள் குற்றேவல் புரிவதையும், அரம்பையர் அரக்கியரை மஞ்சன நீராட்டுவதையும், விதியெல்லாம் கள்ளும் கறியும் உண்டு ஆடுவதும் பாடுவதுமாகிய களியாட்டத்தையும் கண்ட கண்கொண்டு இப்பொழுது விபீஷணனைக் காண்கின்றான். "குற்றம் இல்லதோர் குணமுளன் இவனெனக்" கொள்கின்றான்.

அதே விபீஷணன் இராமனை வந்து அடைக்கலம் புகுகின்றான். அவனைப்பற்றி இராமனிடம் தனது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும்பொழுது இலங்கையில்

கண்ட கண்கொள்ளாக் காட்சியை மனத்தில் படிந்தவாறே விடுத்துச் சொல்கின்றான் மாருதி. "நான் இலங்கையில் பழிசெறிந்த காட்சிகளையே மிகுதியாகக் கண்டேன். அவைகளுக்கிடையிலே அபூர்வக் காட்சிகளையும் கண்டேன். கண்டவற்றுள் இவனுடைய பொன்மனை ஒன்று. அங்கு மதுவைக் கண்டிலேன். மாமிசம் கண்டிலேன். நீதியைக் கண்டேன். தர்ம நியமங்கள் கண்டேன். அந்தணர் வாழும் அணிமனையாகவே விளங்கிற்று, அவனுடைய பொன்மனை" என்கின்றான்.

நிந்தனை நறவமும் நெறியில் ஊன்களும்
தந்தனைக் கண்டிலேன் தரும தானமும்
வந்தனை நீதியும் பிறவும் மாண்பமைந்து
அந்தணர் இல்லெனப் பொலிந்த தாமரோ.

[நிந்தனை நறவம் - பழிக்கப்படுங் கள். ஊன் - மாமிசம். வந்தனை - வணக்கம்.]

இது அநுமனுடைய பாராட்டு.

இனி ஜானகி எவ்வாறு பாராட்டுகின்றாள் என்பதைப் பார்ப்போம். குண அருமைகளைப் பாராட்டுவதில் ஜானகி அழுத்தமான ஆர்வம் கொண்டவள். தான் இன்னும் உயிர் தாங்கிநிற்பதே,

நவையறு குணங்களென்னும்
பூணெலாம் பொறுத்த மேனிப் புண்ணிய மூர்த்தி தன்னைக்
காணலாம் இன்னும் என்னும் காதலால்

என்றே இராவணனிடம் கூறுகின்றாள். அத்தனை தூரம் ஆர்வம் கொண்டவளாகிய அவள் விபீஷணனது அருமையைப் பாராட்டுகின்றாள் என்றால், அவ்வளவு அளவில் அவனுடைய அரிய பண்புகளின் மேம்பாட்டை மதித்திருக்கின்றாள் என்பதை உணரலாம். தன்னைத் தேடிவந்த தூதுவனிடம் 'ஆண்மையன்' என்றும், 'மின்னும் மௌலியன் வீடணன்' என்றும் புகழ்ந்து பேசுகின்றாள். பத்துத் தலைகளிலும் சூட்டிய கிரீடங்கள் கோடிவெயில் எறிக்க, மதயானையின் நடையும் பின்னடைய நடந்த இராவணனிடம், அவனுடைய கிரீடம் தாங்கிய பத்துத்தலைகளும் இராமனுடைய அம்புக்கேற்ற சித்திர இலக்கு என்று சொன்ன அதே

வாயால், விபீஷணனைக் குறித்து 'மின்னும் மௌலியன்' என்று கூறுவாளாயின், அக்கூற்றை இனிய பொருள் நிறைந்த கூற்றாகவே கொள்ளவேண்டும்.

இனி இராமனே என்ன கூறுகின்றான் என்பதைப் பார்ப்போம். அடைக்கலம் கேட்டு அருகே நிற்கின்றான் விபீஷணன். அண்ணல் பார்த்துவிட்டு, இவன் தவத்தால் உயர்ந்தவன், எவ்விதக் குற்றமும் அற்றவன் என்று தெளிந்து,

பெருத்துயர் தவத்தினால் பிழைப்பிலன்

என்று முடிவு செய்கின்றான். குறிப்புணர்வதில் தேர்ந்தவன் இராமன்.

'அடுத்தது காட்டும் பளிங்குபோல்' விபீஷணனது நெஞ்சம் 'கடுத்தது (மிகுந்தது) காட்டுகின்றது'. உணர்ந்தவனாகத் தனது உள்ளத்தில் எழுந்ததையே ஓதுகின்றான் இராமன்.

இதுகாறும் இராமன் கூறியதையும், ஜானகி கூறியதையும், அனுமான் கூறியதையும், கவிக் கூற்றாகக் கம்பர் கூறியதையும் கொண்டு தருமத் தம்பியை மதிப்பிட்டோம். இவர்களுடைய வாக்கினுக்குக்கூட அவ்வளவு விலை இல்லை. இனி அவனுடைய உடன் பிறப்பானவனும் அதிருஷ்டசாலியாக விளங்குபவனும் ஆகிய கும்பகர்ணனே என்ன கூறுகின்றான், தம்பியை எவ்வாறு மதித்திருக்கின்றான் என்பதைப் பார்ப்போம்.

கும்பகர்ணன் அண்ணனுக்காக வேண்டிப் போர்புரிகின்றான்; வீரப் போர் புரிகின்றான். கை போய்விட்டது. கால் போய்விட்டது. முண்ட நிலையில் கிடக்கின்றான். அப்பொழுதும் அண்ணனுக்காக வேண்டிப் பக்கத்தில் அகப்பட்ட பாறைகளை நாவால் பறித்து எறிந்து போர் புரிகின்றானேயொழிய நின்றுவிடவில்லை. இனிச் சாகப் போகின்றான். அந்த நிலையில் இராமனிடம் என்ன கூறுகின்றான்?

"அரக்கர்களுக்குள்ள ஜாதிப் புத்தி என் தம்பியிடம் கிடையாது. நீதி படிந்த தரும நெறியே அவனுடைய கண்; அவனுடைய வாழ்வின் லக்ஷ்யம். இராமா, உன்னைக் கேட்கிறேன். உன் தம்பியைக் கேட்கிறேன். அனுமனையும்

கேட்டுக்கொள்கின்றேன். எனக்கு வேண்டுவது ஒரு வரம். எந்தவிதத்தும் என் தம்பி உங்களைப் பிரியாதிருக்கவேண்டும். அவ்வளவுதான்.

உம்பியைத்தான் உன்னைத்தான் அனுமனைத்தான் ஒருபொழுதும்
எம்பிரி யானுக்கருளுதியால் வேண்டினேன்.

எந்தத் தம்பிக்காக வேண்டி இப்படிக் கேட்கின்றான்?

நீதியால் வந்ததொரு நெடுந்தரும நெறியல்லால்
ஜாதியால் வந்தசிறு நெறியறியான் என்தம்பி ?

என்று பாராட்டுகின்ற தம்பிக்காகவே இவ்வாறு வரம் கேட்கின்றான்.

இனி அவனும் தம்பியும் தனியாகச் சந்தித்தகாலத்தில் என்ன பேசுகின்றான் என்பதைப் பார்ப்போம்.

கும்பகர்ணன் அண்ணனுக்காகவேண்டி யுத்த சந்நத்தனாக வந்து போர்க்களத்தில் நிற்கின்றான். அவனை இராமன் பக்கம் இழுத்துக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு விபீஷணன் அவனை நாடிச் செல்கின்றான். தம்பியைப் பார்த்ததும் கும்பகர்ணனுக்கு அடங்காத வருத்தமே உண்டாகிறது. விபீஷணனைத் துரோகியாக மதித்திருந்தால் முதலில் அவனைக் கொன்றுவிட்டே இராமனுடன் போர் தொடுத்திருப்பான். ஏனென்றால் அவன் மூலம் எதிரிக்கு இரகசியங்கள் தெரியாமல் போய்விடுமல்லவா? அப்படிச் செய்தானா? இல்லையே! உள்ளம் குழைய, ஊனுருக, நெஞ்சுடைந்து நெக்குவிட்டுக் கண்ணீர் சொரிகின்றான். அறத்தின் ஆணிவேரான இராமனை விட்டு அகன்றதற்கு நிந்திக்கின்றான்.

இறப்பெனும் பயத்தை விட்டாய் இராமன்என் பானைப் பற்றிப்
பிறப்பெனும் புன்மை நீர்த்தாய் நினைச்சென்சொல் பெயர்ந்த
[வண்ணம் ?

"குளிக்கப்போயும் சேற்றைப் பூசின கதையாகிவிட்டதடா, தம்பி; நீ எக்காரணம்பற்றி இங்கு வந்தாய்? பிறவித் துன்பத்தின் மருந்தைக் கண்டுமா இந்தப் பேதைமை?" இப்படிச் சொன்னதோடு நிறுத்திவிட்டானா? கிடையாது. இதுவே கடைசி முறையாகத் தம்பியைப் பார்க்கின்றான். "இன்றோடும் போந்ததன்றே உடன் பிறப்பென்பது"

என்று ஏங்கி அழுகின்றான். தம்பியினுடைய அருங்குணச் செவ்வியெல்லாம் மடைதிறந்த வெள்ளம்போல் மனத்திடையே பொங்குகின்றன. "ஐயனே, நீயாவது அயோத்தி வேந்தனுக்கு அடிமையாகிப் பிழைக்காவிட்டால், ஒரு சேர அழிந்துபோகின்ற எங்களுக்கு எள்ளும் தண்ணீரும் இறைப்பவர் யாரடா? பிறர் மனைவியை விரும்புகின்ற எங்களை உறவென்று மதித்தா வந்துவிட்டாய்? பைத்தியக்காரா, ஜாதிப் புத்தி உன்னை விட்டுப் போகவில்லையடா!

ஐயநீ அயோத்தி வேந்திற் கடைக்கல மாகி ஆங்கே
உய்கிலை என்னின் மற்றிவ் வரக்கராய் உள்ளே மெல்லாம்
மொய்களை மாரி யாலே இறந்துபாழ் முழுதும் பட்டால்
கையினால் எள்நீர் நல்கிக் கடன்கழிப் பதனைக் காட்டாய்.

பிறர்மனை நோக்கு வாரை உறவெனப் பெறுதி போலும்
சாதியின் புன்மை இன்னும் தவிர்ந்திலைபோலும் தக்கோய்!

இம்மட்டோடு நிறுத்திவிடுகின்றானா கும்பகர்ணன்! எவ்வளவோ பாராட்டுகின்றான் தம்பியை. அவனுக்கு வழங்குகின்ற பட்டங்களைப் பார்ப்பதன்மூலம் அது தெரியும். 'உத்தமன்'; 'நீதி அறத்தொடும் தழுவுகின்றாய்; 'ஆள்வினை உடையை'; 'கவிஞரின் அறிவுமிக்காய்' - இவை போன்றன அவன் வழங்கும் பட்டங்கள்.

"வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்" மாயப்போகின்றது; புலஸ்தியன் மரபு மீளாத புன்மைக்கு இரையாகப் போகின்றது. புண்ணியம் பெற இருக்கின்றது; நீ நல்வழிப்பட்டாய், இராமன்பால் சென்றாய் என்று எண்ணி மகிழ்ந்த எனது நெஞ்சம் புண்ணடைய மீண்டும் வந்துவிட்டாயே; என் உள்ளம் உளைகின்றதே! வாய் புலர்கின்றதே" என்று ஏங்குகின்றான்.

குலத்தியல்பு அழிந்த தேனும் குமரமற் றுன்னைக் கொண்டே
புலத்தியன் மரபு மாயாப் புண்ணியம் பொருந்திற் றென்ன
வலத்தியல் தோளை நோக்கி மகிழ்கின்றேன் மன்ன வாயை
உலர்த்தினை திரிய வந்தாய் உளைகின்ற துள்ளம் அந்தோ!

இவ்வாறெல்லாம் கூறி ஏங்குகின்றான். தம்பியின் அறநெறிச் சீலத்தை எத்தனையோ அளவில் பாராட்டுகின்றான்.

இனி இந்தக் கும்பகர்ணனையும் விட்டுவிடுவோம். தெய்விகமான சாட்சி ஏதாவது கிடைக்கிறதா என்று பார்ப்போம். தெய்வம் பாரபக்ஷம் அற்றதுதானே? தெய்வ வாக்கு என்ன தொனியில் எழுகின்றது என்பதைக் கவனிப்போம்.

விபீஷணன் இராமனிடம் அடைக்கலம் புகுந்ததும் பிரமதேவனுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி உண்டாகிறது, "என்குலத்து உதித்த இராவணனால் குலத்திற்கே பெரும் பழி வந்துவிட்டது. இந்த விபீஷணன் செயலால் அப் புன்மை தீர்ந்தது" என்று மகிழ்கின்றான். தருமமும் மகிழ் கின்றது.

மொழிந்தசொல் அமிழ்த மன்னான் திறத்தினில் முறையை நீங்கி
இழிந்ததன் மாபும் இன்றே உயர்ந்ததென்று இடரில் தீர்ந்தான்
செழுந்தனி மலரோன் பின்னர் இராவணன் திமைச் செல்வம்
அழிந்ததென்று அறனுந் தன்வாய் ஆவலங் கொட்டிற் றன்றே.

இந்தக் கட்டத்தைக் கவிஞனே படைத்துச் சொன்ன தாக வைத்துக்கொள்வோம். எப்படியென்றாலும் விபீஷ ணன் செயல் பாராட்டவே படுகின்றது என்பது வெளிப் படை.

இனி விபீஷணனுடைய மன நிலை எத்தகையது, அத னுடைய இயற்கைக்கு ஒத்த செயல்தானா இது என்ற விஷயங்களை ஆராய்வோம்.

விபீஷணன் நீதியையும் அறத்தையும் பெரிதாக விரும் புபவன். பிரமனிடம் பெற்ற வரங்களைப் பார்த்தால் மேலே கூறியதன் பொருள் நன்றாக விளங்கும். விபீஷண னுடன் போந்த அனலன் வாய்மொழியே அதைத் தெளிவு படுத்தும்.

அறநிலை வழாமையும் ஆதி மூர்த்திபால்
நிறைவுறு நேயமும் நின்ற வாய்மையும்
மறையவர்க்கு அன்பும்என் றினைய மாமலர்
இறையவன் தாநெடுந் தவத்தின் எய்தினான்.

விபீஷணன் எத்தகையவன் என்பதை எடுத்துக் காட்ட இது ஒன்றே போதுமானது. இனி அவன் வாய் மொழியாக வெளிவருவனவற்றைப் பார்ப்போம்.

பலர் மனத்தில் ஒரு சந்தேகம் ஊடாடிக் கொண்டிருக்கிறது. அந்தச் சந்தேகம் அவனுடைய மனப்பான்மையைப் பற்றியதே. அவனுக்கு அரசின்மேல் ஆசை இருந்ததனுலேதான் இவ்வாறெல்லாம், அதாவது அண்ணனை விட்டுவருதல், எதிரிகளுக்கு அண்ணனுடைய மர்மஸ்தானங்கள் இன்ன இன்ன என்பவற்றை எடுத்துச் சொல்லுதல் ஆகிய காரியங்களை, செய்திருக்கிறுன் என்று உள்ளூற நம்புகிறுர்கள். இவ்வாறு சந்தேகிப்பதில் ஏதாவது நியாயம் இருக்கிறதா என்பதைப் பார்ப்போம்.

விபீஷணனை ஒரு நிலையில் நின்று பார்த்தால் அவன் மகா ஞானியாகவே காணப்படுகிறுன். அவனுக்கு அரசாட்சியின்மீது எவ்வித மோகமும் இல்லை என்பது மிக நன்ருகத் தெரிகிறது. அதோடுகூட யாராளுலும் சரி, உற்ருராக இருக்கட்டும் அயலாராக இருக்கட்டும், தருமநெறியிலிருந்து தவறிவிட்டால் அவர்கள் வேறு, தான் வேறு, அவர்களுக்கும் தனக்கும் எவ்விதமான தொடர்பு கொள்ளவும் நியாயமில்லை, வேண்டவும் வேண்டாம் என்றே கருதும் இயல்புடையவன்.

உலகத்திலே நீதியும் இருக்கிறது. கடமையும் இருக்கிறது. கருமத்தைச் செய்கின்றவன் இரண்டையும் தழுவித்தான் செய்யவேண்டும். அப்படிச் செய்யும் பொழுது சமயங்களில் முரண்பாடு ஏற்படுகின்றது. மனைவி புருஷனைக் கொல்கின்ருள். இருவருக்கும் பிறந்த பிள்ளை யோசனை செய்கின்றுன். புருஷனைக் கொன்றதனுல் மனைவியைத் தண்டிக்கவேண்டியது நியாயமே. மனைவியைத் தண்டிப்பது தாயைத் தண்டிப்பதாகும். அங்கே பார்த்தால் மனைவி. இங்கே பார்த்தால் தாய். சங்கடம் ஏற்படுகிறது. அதே மாதிரிதான் விபீஷணனுக்கும், ஒரு பக்கம் அண்ணன்; ஒரு பக்கம் நீதி. அண்ணன் உயர்ந்தவனு, நீதி உயர்ந்ததா என்ருல் நீதியே சிறந்தது என்பது அவனுடைய துணிபு. அண்ணன் அநீதியான செயலைச் செய்கிருன். நீதியின்மேல் கொண்ட மோகத்தினுல் அவனை எத்தனையோ நல்லுபதேசங்கள் கூறி நீதி வழியே திருப்பப் பார்க்கிருன். ஆனமட்டும் முயல்கின்ருன். அவன் மறுக்கின்ருன். ஆகவே

அண்ணனை விட்டு விலகுகின்ருன். கும்பகர்ணனும் அநீதி என்பதை உணர்கின்ருன். அண்ணனிடம் எடுத்தும் ஓதுகின்ருன். அண்ணன் மறுத்தாலும் அவனுக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்வதே கருமம் என்று அமைந்துவிடுகின்ருன்.

நீதியை அபிமானிப்பதில் உலகவரம்பில் நிற்கின்ருன் கும்பகர்ணன். இந்த உலகத்தில் இருந்து கொண்டே நீதியை அபிமானிப்பதில் லக்ஷ்ய வடிவிலே நின்றுவிடுகிருன் விபீஷணன். உலகத்திலே கும்பகர்ணர்கள் பலரைக் காணலாம். விபீஷணர்களை விரல்விட்டுத்தான் எண்ண முடியும். நீதியும் நெடுந்தரும நேசமுமே அவனுடைய ஜீவாதாரம். பல இடங்களில் அதைப் பார்க்கலாம்.

அண்ணனைப் பிரிந்து இராமனிடம் அடைக்கலம் புக வந்த காலத்தில் தன்ருேடு வந்தவர்களிடம் பேசுகின்ருன். அது ஒன்றுமே போதுமான சாட்சியாகும். "அறவழி நின்றவர்களுக்கு அன்பு பூண்டொழுகும் இயல்பே எனது இயல்பு. அறவழி நின்றதால் வரக்கூடிய சிறப்பு ஒன்று தான் எனக்கு வேண்டுமே தவிர வேறு வாழ்வெல்லாம் எனக்கு வேண்டாம். 'தம்பி என்ற முறையில் நான் நியாயத்தை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டவன். எனது வார்த்தையை நீ கேட்கவில்லை. இனி உன்ருேடு எனக்கென்ன' என்று சொல்லி அண்ணனை விட்டுவந்த நான் இனியாது செய்யவேண்டும் என்பதை எடுத்துச் சொல்லுங்கள்" என்று கேட்கின்ருன்.

அறந்தலை நின்றவர்க்கு அன்பு பூண்டனன்
மறந்துமன் புகழலால் வாழ்வு வேண்டலன்
பிறந்தஎன் உறுதிநீ பிடிக்க லாய்எனத்
துறந்தனன் இனிச்செயல் சொல்லு வீரென்ருன்.

கூடவந்தவர்கள் வேறு ஒன்றும் பதில் சொல்லவில்லை. "தரும மூர்த்தியைக் காட்சியே இனிக்கடன்" என்றே சொல்கின்ருர்கள். அதைக் கேட்டதும் விபீஷணன் சொல்லுகின்ற பதில் அவனுடைய உள்ள இயல்பை எவ்வளவோ அழகாக எடுத்துக் காட்டுகின்றது. "நல்லவேளை! நான் விரும்பியதையே நீங்களும் சொன்னீர்கள். அதைச் செய்யாது வேறு எதனையும் செய்திருந்தால்

அரக்கர்களுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம் தெரியப் போகிறது?'' என்று சொல்வதன் மூலம், குணநீர்மையாலும் நீதி காரணமாகவும் எவ்வளவு தூரம் அரக்கரினின்றும் விலகியவன் என்பதை நன்ருக எடுத்துக் காட்டுகின்ருன்.

நல்லது சொல்லினிர் நாமும் வேறினி
அல்லது செய்துமேல் அரக்க ராதுமால்
எல்லையில் பெருங்குணத்து இராமன் தாளினைப்
புல்லுதும் புல்லியிப் பிறவி போக்குதும்.

இப்படிப் பேசுகின்ற உத்தமனைச் சில ரஸிகர்கள் சௌடால்தனமாகக் கொடும்பாவி கட்டி இழுப்பதென்ருல், அவனுடைய உள்ளத்தை உணரத் தவறியதுதானே காரணமாக வேண்டும்? அவன் ஞானி. துறவிக்கு வேந்தன் துரும்பு என்பது போலத்தான் நீதிக்கு முன்னுலே இராவணன். தன் அண்ணன் கும்பகர்ணனை இராமன் பக்கம் கொண்டுவருவதற்காகச் சென்று பேசும் பொழுது, தயங்குகின்ற கும்பகர்ணனைப் பார்த்து, "இதென்ன யோசனை உனக்கு? ஒருவன் அநீதியான காரியத்தைச் செய்துவிட்டால், ஐயோ பாவம் அவன் உற்ருஞகி விட்டானே, உறவினன் ஆகிவிட்டானே என்று அறநெறிச் செல்வர்கள் கருதவா போகிருர்கள்? மாட்டவே மாட்டார்கள். நீதியைப் பின்பற்றுகிறது என்று ஏற்பட்டு விட்டால் பின் பாவமேது பழியேது?'' என்று எடுத்துச் சொல்லி அண்ணனைத் தெளிவிக்கின்ருன்.

தீயவை செய்வ ராகில் சிறந்தவர் பிறந்த உற்ருர்
தாயவை தாதை மாரென்று உணர்வரோ தருமம் பார்ப்பார்?
நீஅவை அறிதி யன்றே, நினக்குயான் உரைப்ப தென்னே
தாயவை துணிந்த போது பழிவந்து தொடர்வ துண்டோ?

இவ்வளவு சொன்னதோடு நின்று விடவில்லை. இதற்கு மேலும் ஒரு படி போகின்ருன். "நீ அரசனுக இரு. உனக்கு நான் பணி செய்கின்றேன்'' என்கிருன். நீதியை நிலைநாட்ட வேண்டுமென்று எத்தனை தியாகத்திற்கு முற்படுகிருன் அவன்!

இன்னும் அவனுடைய நீதிமோகம் படிந்த உள்ளத்தைத் தொடர்ந்து செல்லும்போதெல்லாம் வாசத் தென்

றல் பயிலும் மலர்வனம் புகுவது போன்றே தோன்றும். இலங்கையிலே போர் நிகழுமிடத்து இந்திரசித்தன் அவனைக் காண்கின்றான். கண்டதும் அடங்காத சீற்றத் தோடும் மனக் கசப்போடும், "கேவலம் மனிதப் பயலுக்கு அடிமையாகியா இராவணன் செல்வத்தை ஆளப்போகின் றாய்?" என்று கேட்கின்றான்.

கம்பீரமான முறையில் விபீஷணன் பதில் உரைக்கின் றான். "எனக்கு மிகவும் உகந்த துணை அறமே யன்றி வேறில்லை, பாவத்தைப் பற்றி நின்று பழியொடு வாழ மாட்டேன். நான் ஒரு நாளும் மெய்யைக் கைவிடப் போவ தில்லை. நெஞ்சாரக் கழித்து ஒதுக்குவதெல்லாம் பொய் மையே. என்று இராவணன் பிறன் மனைவியை விரும்பிப் பிழை செய்தானே, அன்றே அவனுடன் நான் பிறக்க வில்லை. நான் ஒரு நாளும் அவன் தம்பியாக மாட்டேன்" என்பதே அவன் வழங்கும் பதில்.

பெண்டிரில் திறம்பி னாரைத் துறந்தது பிழையிற் றாமோ?

[பிறர்மனைவியை விரும்பும் பேதையைத் துறப்பது பிழையோ?]

அறம்துணை யாவ தல்லால் அருநரகு அமைய நல்கும்
மறந்துணை யாக மாயப் பழியொடும் வாழ மாட்டேன்
துறந்திலேன் மெய்ம்மை எய்தும் பொய்ம்மையே துறப்பதல்லால்
பிறந்திலேன் இலங்கைவேந்தன் பின்அவன்பிழைத்த போதே.

இன்னும், அவன் ஞானியே என்பதற்கும், நீதியே கண், நீதியே மூச்சு, நீதியே எல்லாமும் அவனுக்கு என் பதற்கும், அதற்கு ஆபத்து வருங்கால் அதனைக் காக்க வல்ல சக்தியை நாடி அதனை எவ்விதத்தும், எத்தனை தியாகம் செய்தும் காப்பதே கருமம் என்னும் துணிவுடை யான் என்பதற்கும் பல சான்றுகள் காணலாம். இராம னிடம் அடைக்கலம் புகும்போது, "வஞ்சனை அரக்கன் பின்னே தோன்றிய வசை தீரவேண்டும். ஆகவே இளை யானுக்குச் சூட்டிய திருவடியை எனக்கும் சூட்டு" என்கிறான்.

சவையியல் அரக்கன் பின்னே தோன்றிய கடமை தீர
இளையவற் கவித்த மோலி என்னையும் கவித்தி என்றான்.

இப்படி யெல்லாம் கேட்கின்ற ஞானி, பிறவித் துன்பத்

திற்குரிய மருந்தை நாடி நிற்கின்ற நாதன், நீதியினிடத்தும் தருமத்தினிடத்தும் நெடு நேயம் பூண்ட நிர்மலன், எந்த விதம் இராவணன் பிழைகளைப் பொறுப்பான்? அவனுடைய உள்ள இயல்பு எப்படி இடம் கொடுக்கும்? வானகத்தே சிரசும் மண்ணகத்தே பாதமும் பொருந்தப் பெற்ற நிலையில் வாழ்க்கை நடத்துகின்றவனல்லவா? இதுவே விபீஷணன் தத்துவ மர்மம்.

அவனை ஒரு துரோகி என்று மதித்துவிட்டால் அறுபதினாயிர வருஷம் ஆண்டுவந்த, "பொய்ப்பகையும் மெய்க் கணியுமான" தந்தை இறந்துவிடுவான் என்று தெரிந்தும், போதாக்குறைக்கு, உள்ளொளி பெருக்கிய முனிபுங்கவனாகிய வசிஷ்டனும் தந்தை பிழைக்கிலன் என அறிவித்தும் காடு செல்லத் துணிந்த இராமனும் துரோகிதான். அண்ணன் சொல்லைத் தட்டி அவனுடன் தானே காடு சென்ற லக்ஷ்மணனும் துரோகிதான். இல்லையா? இப்படியாக நாம் துரோகி துரோகி என்று ஜாபிதாவைப் பெருக்கிக்கொண்டே போகலாம்.

பிறவிப் பிணிக்கு மருந்தை நாடி அல்லும் பகலும் அகம் குழைகின்ற உத்தமனை, ஓர் ஒப்புயர்வற்ற ஞான தேசிகனை, வாய்கூசாமலும் நெஞ்சு பறையடியாமலும் துரோகி என்றும் சதிகாரன் என்றும் கொள்வது மகா பாவம். உண்மையிலேயே அவன் சதிகாரனாக இருந்தால், இராவணனுடைய இறந்த உடலைக் கண்டு புலம்பும் போது,

> என்னுதேன் எண்ணியசொல் இன்றினித்தான் எண்ணுதியோ

என்றும், "அசுரர்கள் தம் பிரளயமே, அமரர்கூற்றே" என்றும், தனது புருஷனைக் கொன்றதற்காகத் தனது தங்கை,

> சொல்லாத மைத்துனனைக் கொன்றானென்
> றதுகுறித்துக் கொடுமை சூழ்ந்து
> பல்லாலே இதழ்அதுக்கும் கொடும்பாவி நெடும்பாரப்
> பழிதீர்ந் தாளோ

என்றும் சந்தேகித்து இவ்வாறெல்லாம் சொல்வானா? "ஐயையோ, முதுகிலே தழும்பு படிந்த ஒருவனையா அம்பு எய்து கொன்றுவிட்டேன்! என்னுடைய ஆண்மைச்

கல்லவா மாசு வந்துவிட்டது?'' என்று வெட்கிய இராமனைப் பார்த்து, "ஐயனே, இராவணனுடைய முதுகிலுள்ள தழும்பு புறமுதுகு காட்டி ஓடியதற்காகப் பெற்ற பரிசு அன்று. திசையானையின் கொம்பு தைத்து முதுகுப் புறம் வந்த புண்ணால் ஆகிய தழும்பு. அண்ணனுடைய பேராற்றலின் முத்திரை. அவன் இறந்துபோயும் இன்னும் வெளிவர அஞ்சுகின்றார்களே தேவர்கள். அப்படியல்லவா விளங்கிக் கிடக்கிறது அவனுடைய ஆற்றல்? அவனுடைய பராக்கிரமத்திற்கு இன்னும் வேறு சான்று வேண்டும்?'' என்று இடித்துக் கூறுவானா? அதிலும் பிறவிப் பிணியின் மருந்தினைப் பார்த்துக் கூறுவானா? அண்ணனுடைய அதர்மத்தை வெறுத்தான். அநீதியை வெறுத்தான். இறந்து தீர்ந்தும் அவனுடைய ஆண்மையை வெறுக்கவில்லை. ஆற்றலை இகழவில்லை அத்தனை உத்தமன். அத்தனை நீதி படிந்த உள்ளத்தன். அவனை நெஞ்சு துணிந்து சதிகாரன் என்றோ, துரோகி என்றோ கூறுவது? கொடும்பாவி கட்டி நடுத்தெருவில் இழுப்பது அடுக்காது; மூக்காலும் அடுக்காது. அவன் தருமத் தம்பி; தருமக்கொடி தாங்கும் ஜயஸ்தம்பம்.

16. பரதன் குண நலம்

[ஸ்ரீமதி மா. சுந்தரா]

தமிழர்களின் தனிப்பெருஞ் செல்வம் கம்ப ராமாயணம். அந்தத் தெய்விகக் கவிதையிலே அழகான உண்மைகளையும் அற்புதமான கருத்துக்களையும் பொதிந்து வைத்திருக்கிறார் கம்பர். அவற்றுள் மிகச் சிறந்தது கம்பர் காட்டும் சகோதரநெறி. ஒருவரை யொருவர் குணநலத்தில் போட்டியிட்டு வெல்லுகிறார்கள், தசரதன் தனயர். அவர்களுக்குள் பரதனை அனுபவித்து அனுபவித்துக் கவிப் பண்பும், கற்பனைத் திறனும் கொண்டு தீட்டியிருக்கிறார் கம்பர்.

மிதிலையிலே வேள்வி நடக்கிறது. சுயம்வர மண்டபத்திலே, "வேள்வியொடு வில்லும்" காண வந்திருக்கின்றனர் ராம லக்ஷ்மணர், முனிபுங்கவர் விசுவாமித்திரருடனே. தசரதனுடைய அருமை மைந்தர்களை ஜனகனுக்கு அறிமுகப்படுத்துகிறார் முனிவர். பரதனைப்பற்றி அவர் என்ன கூறுகிறார், பார்க்கலாம்:

> தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்
> பள்ளமெனுந் தகையானைப் பரதனெனும் பெயரானை
> எள்ளரிய குணத்தாலும் எழிலாலும் இவ்விருந்த
> வள்ளலையே அனையானைக் கேகயர்கோன் மகள்பயந்தாள்

என்று கூறி முடிக்கிறார் விசுவாமித்திரர். இராமன் 'அறம் செய்த அறத்தால்' உதித்தவனானால் பரதன் நீதியின் உருவமாகப் பிறந்தான் என்கிறார் கம்பர். இராமன் அறத் தெய்வத்தின் பூங்கோயிலானால், பரதன் நியாய சமுத்திரம் என்கிறார். இராமாயணத்தின் கதாநாயகனுக்குச் சிறிதும் பின்வாங்கியவனல்ல பரதன் என்பதைக் கவிஞர் எவ்வளவு வசிகரமாக வற்புறுத்துகிறார்!

இது கம்பர் நமக்கு முதலில் காட்டும் பரதன். இதன் பின்னர், பள்ளியடைப்படலத்தில்தான் நாம் அவனை நேருக்கு நேர் சந்திக்கிறோம். இவ்விடத்தில் ஒரு சிறு விஷயத்தை ஞாபகப் படுத்திக்கொள்ள வேண்டும். ஒரு கதா பாத்திரத்தின் குணநலத்தை விவரிக்க வேண்டுமானால் கதையில் அவனையே நாமும் பின்பற்ற வேண்டும்.

அவனது செய்கைகளைக் கருத்தூன்றிக் கவனிக்கவேண்டும். கதையில் வரும் மற்றப் பாத்திரங்கள் அவனைப்பற்றி என்ன கூறுகிறார்கள் என்பதையும் ஆராய்ந்து தெளிய வேண்டும்.

இனி, பரதனைப் பின் தொடர்வோம். இராமனுக்குப் பட்டாபிஷேகம் என்னும் மங்களச் செய்தியைக் கூறும் ஓலையைத் தாங்கிக்கொண்டு கேகய நாட்டிற்கு விரைந்து செல்லுகின்றனர் தூதர். தன் நாட்டிலிருந்து வந்த ஆட்களைக் கண்டதும் தன் தந்தையின் நலத்திற்குப் பின்னர், "இலைகொள்பூண்முகத்து எம்பிரான் அவன் உலைவில் செல்வத்தனோ?" என்றுதான் கேட்கத் தோன்றுகிறது பரதனுக்கு. "உண்ணும் சோறும், பருகும் நீரும், தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்" என்று கூறினார் ஒரு விஷ்ணுபக்தர். "எல்லாம் ராமன்" என்பது பரதனின் சித்தாந்தம். இராமனிடத்திலுள்ள அந்த ஆசை, உடன் பிறந்த பாசத்தையும் கடந்து பன்மடங்கு பெருகி இராம பக்தியாகப் பரிணமிக்கிறது. பரதனிடத்திலே, மூத்தோனுக்குப் பட்டம் கிடைக்கப் போகிறது என்ற செய்தியைவிட வேறோர் எண்ணம் அவனுக்கு மிக்க மகிழ்ச்சியை அளிக்கிறது. அது, 'தம்முனைக் காணலாம் என்னும் ஆசைதான்!' ஓலை கிடைத்தவுடனே பிரயாணத்திற்கு ஆயத்தப்படுகிறான்.

எழுக சேனைஎன்று எழுந்தனன் ஏகினன்
தொழுது கேகயர் கோமகன் சொல்லொடும்
தழுவு தேரிடைத் தம்பியொடு ஏகினன்
பொழுதும் நாளும் குறித்திலன் போயினன்

என்று அவன் புறப்பாட்டை வருணிக்கிறார் கம்பர். ஊருக்குப் போவதில்தான் பரதனுக்கு எத்தனை பரபரப்பு! என்ன துடிதுடிப்பு! அனைத்தையும் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார் கம்பர்.

மகிழ்ச்சிக் கடல் பொங்கி எழுகிறது பரதனுடைய உள்ளத்திலே. ஆனால் தன் தாயின் சூழ்ச்சியைக் கேட்டதும் அது அப்படியே வறண்டு வற்றிவிடுகிறது. ஊழித்தீயும் அதனிடையே கிளம்பிவிடுகிறது. தந்தை இறந்தான் என்ற சொல்கூட அவனுக்கு அத்தனை துயரை

உண்டாக்கவில்லை. ஏதோ இயற்கையின் விதியை மனிதனால் மாற்ற முடியாது என்று சமாதானம் அடைந்திருப்பான். ஆனால் தன் அன்னையின் கொடுமையினால், அதுவும் தனக்காக, தன் கண்மணிபோன்ற தமையன் கொடுங்கான் அடைந்தான் என்று கேட்டதும் அவனுக்கு உலகமே சுழல்வதுபோலிருந்தது. 'தருமமே உலகத்தை விட்டு நீங்கிவிட்டதா என்ன?' என்ற ஐயப்பாடும் எழுந்தது. "இந்த வார்த்தை கேட்டபின்புகூட நான் செயலற்று நிற்கிறேனே! இதற்கு என்ன பொருள்?" என்று யோசிக்கிறான் பரதன்.

மாண்டனன் எந்தைஎன் தம்முன் மாதவம்
பூண்டனன் நின்கொடும் புணர்ப்பினால் என்றால்
கீண்டிலன் வாயது கேட்டு நின்றயான்
ஆண்டனே னென்றோ அரசை ஆசையால்

என்று தன்னையே குறை கூறுகிறான் பரதன். ஆம்! "எனக்கும் அரசாளும்மோகம் இருக்கத்தான் இருக்கிறது! என்ன இருந்தாலும் அவள் வயிற்றில் பிறந்தவன்தானே நான்?" என்று புலம்புகிறான்.

மாளவும் உளன்ஒரு மன்னன் வன்சொலால்
மீளவும் உளன்ஒரு வீரன் மேயபார்
ஆளவும் உளன்ஒரு பரதன் ஆம்எனின்
கோள்அலது அறநெறி குறையுண் டாகுமோ?

என்று நினைக்கிறான். பரதனுக்குத் தருமத்தில் அசையாத நம்பிக்கை. அநியாயம் நடந்தபோதிலும் முடிவில் "அறம் வெல்லும் பாவம் தோற்கும்" என்ற உறுதியான கொள்கையை உடையவன். அவனால் லக்ஷ்மணனைப்போல் "தருமத்தோடு உறவுமுண்டோ?" என்று தீர்மானமாகச் சொல்லிவிட முடியாது. தன்னால் தகப்பன் வான்புக்கான், தன்முன் வனம் புகுந்தான் என்று நினைக்கும்பொழுது தன் இழிதகைமையைக் கூற வார்த்தைகளும் கிடையா. "ஆளவும் உளன் ஒரு பரதன்" என்று தன் பெயரையே திருப்பிச் சொல்லுகிறான் பரதன்!

மேலும் தன்னை நிந்தித்துக்கொள்ளுகிறான். "வாய்மைக்கே பெயர்போன ரகுவம்சத்தில் நான் ஏன் பிறந்தேன்! இரதம் ஒன்று ஊர்ந்து பார் இருளை அகற்றும்

அப்பரதனின் ஒளிபெற'வளர்ந்த தொல்குலம் பரதன் என்று ஒரு பழி படைத்ததே'' என்று வருந்துகிருன். ''கடியவள் வயிற்றினில் பிறந்த கள்வனேன் முடிகிலேன்'' என்று உன்னி உன்னி உள்ளம் உருகுகிருன். பின்னர்க் கொடுமை செய்த அன்னையின் முகத்தையும் காண வெறுத்துக் கோசலையை நாடிச் செல்லுகிருன்.

தாயைப் பிரிந்த கன்றுபோல் கதறிக்கொண்டு வரும் செம்மலைக் கண்டவுடன் கோசலையின் தாயுள்ளம் கரைகிறது. வனத்திற்குச் சென்ற இராமனே திரும்பிவந்து விட்டதுபோலத் தோன்றுகிறது அவளுக்கு. தன் பாதத்தில் வந்து விழுந்த மைந்தனைத் தூக்கியெடுத்து ஆறுதல் கூறுகிருள் கோசலை. ''முன்னை நுங்குல மரபுளோர்கள் தாம் நின்னை யாவரே நிகர்க்கு நீர்மையர்'' என்று வாழ்த்துகிருள். அண்ணனைக் கண்டு எப்படியாகிலும் அழைத்து வந்து மகுடம் சூட்டுவேன் என்று தீர்மானித்துப் புறப்படுகிருன் பரதன். சேனைகளெல்லாம் ஆரவாரத்துடன் புறப்படுகின்றன. பரதனும் சென்ருன். ஆனால் எப்படி?

> தாண்டிடு தேர்களும் துரக ராசியும்
> காண்தகு கரிகளும் தொடரக் காலினே!

ஆம்! பரதன் காலால்தான் நடந்து சென்ருன்!

அண்ணனுக்கு வேண்டியவர்களெல்லாம் தனக்கும் உறவினர்தாம் என்ற கொள்கை பரதனுக்கு. குகனைப் பற்றியும் அவனுடைய சேவையின் பெருமையைப்பற்றியும் சுமந்திரன் கூறியபொழுது, அவன் எனக்கும் தமையன் என்று உறவு கொண்டாடிச் செல்லுகிருன் பரதன். மரவுரி பூண்டு, பொலிவற்ற வதனத்துடன், நகையிழந்த முகத்துடன் சோகமே உருவாக வந்த பரதனைக் கண்டதும் குகனுடைய சீற்றம் ஆறுகிறது. அவ்வாறு களையற்ற உருவோடு வந்த பரதனைக் காண்கிருன் குகன். ''என்ன இருந்தாலும் இராமன் பின்பிறந்தவர்கள் தவறிழைப்பார்களா?'' என்று தனக்குத் தானே சமாதானம் கூறிக்கொள்கிருன். இராமனை நாட்டிற்கு அழைத்துச் செல்ல வந்திருக்கிறேனென்று பரதன் கூறியவுடன் குகனுடைய ஆனந்தத்திற்கும் வியப்பிற்கும் எல்லையே காணவில்லை.

தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத்
தீவினை யென்ன நீத்துச் சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை என்ற போழ்து புகழினோய் தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியின் அம்மா!

என்று பூரண மனத்தோடு புகழ்ந்துரைக்கிருன் குகன். "இராமன் என்ன, ரகுகுலத்தில் உதித்த எல்லா மன்னர்களுங்கூட உனக்கு நிகரில்லையே!"

மன்புகழ் பெருமை நுங்கள் மரபுளோர் புகழ்கள் எல்லாம்
உன்புகழ் ஆக்கிக் கொண்டாய்!

என்று வியந்துரைக்கிருன் குகன். கங்கையைக் கடந்து இராமனைக் காணவும் உதவுகிருன்.

கல்லும் கானலும் கலந்து விளையாடும் வனத்திலே செல்வத்திற் பிறந்து சிறப்பாய் வளர்ந்த அண்ணன் வாழும்படி நேர்ந்ததே என்று நினைக்கும்பொழுது பரதனுக்குத் துன்பம் அதிகரிக்கிறது. அதற்குக் காரணமான தன்னையும், அண்ணனை நிழல்போலப் பின் தொடர்ந்து பணியாற்றும் அந்த இலக்குவனையும் நினைக்கும்பொழுது, "அடடா! என்ன வேற்றுமை! யான் துன்பத்திற்கு ஏதுவானேன்; அவன் அது துடைக்கநின்ருன்" என்று அவனை வாயார, மனமாரப் புகழ்கிருன்.

கடைசியில் அண்ணனையே நேரில் கண்டுவிட்டான்! ஆமாம்! அந்தக் காட்சி அவனுக்கு இறந்த தந்தையே உயிர் பெற்று எழுந்ததுபோலத்தான் இருந்தது. தந்தை இருக்கும்பொழுதே அவனுக்குத் தெய்வமாக இருந்தவனல்லவா இராமன்? இராமனுக்கும் பரதன் உயிருக்குயிரான தம்பி. பரதன் சேனையைக் கண்டு இளையவன் சீற்றம் கொண்டபோது, பரதனுடைய பெருமையை எவ்வளவு அன்பொழுக வசீகரமாக எடுத்துரைக்கிருன் இராமன்!

எனைத்துள மறையவை இயம்பற் பாலன
பனைத்திரள் கரக்கரிப் பரதன் செய்கையே!

என்று உறுதியாகக் கூறுகிருன் இராமன்.

சேணுயர் தருமத்தின் தேவைச் செம்மையின்
ஆணியை அன்னது கூற லாகுமே?

என்று தம்பியைக் கடிகிருன். வெகு நாளாகக் காணுத பரதனைக் கண்டதும் அன்புடன் மார்புறத் தழுவிக்கொள்ளுகிருன் இராமன். அந்தக் காட்சி "நியாயம் அத்தனைக்கும் ஓர் நிலயம் ஆயினுன், தயா முதல் அறத்தினைத் தழுவியது" போலத் தோன்றுகிறது கம்பருக்கு. அண்ணனைக் கண்டதும், "நீ இம்மாதிரி செய்தது நியாயமா? அறந்தனை நினைந்திலே, அருளைநீத்தனை" என்று அடியிசை விழுந்து கதறுகிருன் பரதன். இராமனே தன்னை நோக்கி, "அரசாளவேண்டிய நீ ஏன் இந்தக்கோலம் புனைந்தாய்?" என்று கூறியபொழுது, "நீயன்றி யாவரே அறத்துளார்? அதில் பின்றுவாய் கொலாம்!" என்றுதான் கேட்கத் தோன்றுகிறது பரதனுக்கு. கடைசியாக அயோத்திக்குத் திரும்பச் சம்மதிக்கிருன். அதுவும் எதனுல்? தந்தையின் வாய்மையும், மூத்தோனுக்கு இடப்பட்ட கட்டளையும் நிறைவேறவேண்டுமே என்ற எண்ணத்தினுல்தான்.

இத்துடன் கொஞ்ச காலம் நம் கண் முன்னிருந்து மறைந்திருக்கிருன் பரதன். ஆனுல் நம் மனக் கண்ணினின்றும் மறையவில்லை. பரதனைப்பற்றிய புகழுரைகள் பன்முறை நம் செவிகளில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. பரதனுடைய மதிப்பு, காண்டத்துக்குக் காண்டம் உயர்கிறது. தந்தை வாக்கை நிறைவேற்ற மனைவியுடன் கானகம் செல்வதற்கு மனவன்மை வேண்டியிருக்கலாம். அண்ணனுக்காக மனைவியைத் துறந்து உடன் செல்வதற்கும் மனத் திட்பம் அவசியமாயிருக்கலாம். ஆனுல், தந்தை, தம்முன் இருவருடைய விருப்பமும் நிறைவேற வேண்டி, உயிரினுமினிய அண்ணனைப் பிரிந்து, காட்டிற்குச் செல்லாமல், நாட்டிலேயே தங்குவதற்கு எத்தனையோ மடங்கு மனேதிடமும் வைராக்கியமும் வேண்டியிருக்கின்றன. அந்தத் திடசித்தத்தைப் பரதனிடம் காண்கிறோம் நாம்.

வாலி சுக்கிரீவர்களைப்பற்றிப் பேசும்பொழுது ஓரிடத்தில் பரதனைப்பற்றியும் கூறுகிருன் இராமன்.

பித்தாய விலங்கின் ஒழுக்கினைப் பேச லாமோ
எத்தாயர் வயிற்றினும் பின்பிறந் தார்க ளெல்லாம்
ஒத்தாற் பரதன் பெரிதுத்தமன் ஆதலுண்டோ!

என்கிறான். "உலகத்திலுள்ள தம்பிகளெல்லாம் பரதனாக ஆகிவிடுவார்களா? அப்படியானால் உலகமே தேவலோக மாக, இல்லை, அயோத்தியாகவே ஆகிவிடுமே!"

இந்திரசித்து மாயா சீதையைக் கொன்று, அயோத்தி மேல் எழுவதாகப் போக்குக் காட்டிவிட்டுப் போகிறான். அதுகேட்டுத் தன்னரிய தாய்க்கும் பரதனுக்கும் என்ன நேரிடுமோ என்று புழுங்கிறான் ராமன். "ஐயோ! அந்தப் பாபி இந்திரசித்து பிரம்மாஸ்திரத்தை எய்தானானால் மருந்து மலையை நல்கக் கொற்ற மாருதி அங்கில்லையே!" என்று புழுப்போல் துடிக்கிறான். அப்பொழுது பரதனை நினைவுபடுத்தி அண்ணனுக்கு ஆறுதல் அளிக்கிறான் இளையவன்.

> தீக்கொண்டு வஞ்சன் வீசத் திசைமுகன் பாசம் தீண்டி
> வீக்கொண்டு வீழ யானோ பரதனும்!

என்கிறான் லக்ஷ்மணன்.

"பிரம்மாஸ்திரத்தில் மயங்கி விழுவதற்கு நானா என்ன அவனும்? அவன் பரதனுக்கும்!" என்று நினைப்பூட்டுகிறான். பரதனுடைய தர்ம பலத்தில் அவ்வளவு நம்பிக்கை அவனுக்கு. அவனுடைய ஆத்ம பலத்திற்கும் நீதி வன்மைக்கும் முன்னே எதுவும் நிலைத்து நிற்காது என்ற எண்ணம் அவனுக்கு.

ஆனால் அயோத்திக்கு எந்த இந்திரசித்தும் வராம லிருக்கையிலேயே பரதன் இறக்கத் தீர்மானித்துவிட்டான். "வாய்மை தவறாத அண்ணனும் குறித்த நாளில் வந்திலன். அவனுக்கு ஏதோ தீங்கு நேர்ந்ததன் அறிகுறி தான் இது. 'அண்ணனைப் பிரிந்து உயிர் வாழேன்' என்று தீ வளர்க்கத் தொடங்கிவிட்டான் அவன். அன்னை கோசலை கேட்டாள். "என்ன காரியம் செய்யத் துணிந்து விட்டாய், மகனே!" என்று அலறிக்கொண்டு வந்தாள். "நீ இறந்துபடின் உன் தாயராகிய நாங்களும், இந்த அயோத்திவாசிகளும் மட்டுமா மடிவோம், தருமமே மடிந்து விடுமே! உலகம் நிலை திரியுமே!' என்று தடுக்கிறாள்.

பரதனைப்பற்றிப் பேசும்பொழுது குகனையும் ஒரு படி மிஞ்சிவிடுகிறாள் கோசலை! அவள் பரதனை ஆயிரம்

ராமருக்குத்தான் ஒப்பிட்டான். அவளோ, "கோடி ராம ரும் உனக்கு ஈடில்லை" என்று கூறுகிருள்.

எண்ணில் கோடி இராமர்கள் என்னினும்
அண்ணல் நின்னரு ளுக்கரு காவரோ
பண்ணி யம்எனும் நின்னுயிர் போயினல்
மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ?

என்று கெஞ்சுகிருள். "ஒருவன் இறந்துவிட்டானென் பதற்காகக் கல்பகோடி காலம் வரையில் நிலைத்திருக்கக் கூடிய உலகையும் அதில் வாழும் உயிர்களையும் அழிக்கப் போகிருயா?" என்று கேட்கிருள் கோசலை. கோசலையின் தாய்மைப் பண்பு இப்பொழுது பதின்மடங்கு அதிகமாகச் சோபிக்கிறது. தான்பெற்ற இராமனுக்குக்கூட பரத னுக்கு அடுத்த ஸ்தானந்தான் அவள் உள்ளத்திலே! பர தனும், அவனுடைய நீதியும் அவ்வளவு தூரம் அவளைக் கவர்ந்துவிட்டன. "தருமம் நீயலது இல்லெனுந் தன்மை யாய்" என்று அருமையாக அழைக்கிருள் கோசலை. இரா மனைப் பிரிந்த பின்பாவது தருமதேவதையும், கோசலை யும் வாழ்வார்கள் போலிருக்கிறது. ஆனல் பரதனைப் பிரிந்தால் நிச்சயமாக அவர்களால் வாழ முடியாது.

சுக்கிரீவனின் வேண்டுகோளின்படி வாலியை மறைந்து நின்று அம்பெய்து கொல்லுகிருன் ஸ்ரீராமன். வாய்மை தவருத மன்னன் மைந்தன், அதுவும் சத்தியத்தைக் காக்கவே கானம் புகுந்தவன் அவன்; அப்படிப்பட்டவன் செய்யக்கூடிய செய்கையா இது என்று நினைக்கிருன் வாலி. பின்னர், "அடடா! இத்தகையவரு அறத்தின் உருவான பரதன்முன் தோன்றவேண்டும்!" என்ற எண்ணம் உதித்த வுடன் எவ்வளவு ஆவேசத்துடன் வருகின்றன அவன் சொற்கள். "வாய்மையும் மரபுங் காத்த தூயவன் மைந் தனே நீ பரதன்முன் தோன்றினயே!" என்கிருன். உண் மைக்கு உறைவிடமான தசரதனின் மைந்தன் அநீதி செய் தானென்றாலும் வாலியால் பொறுக்கலாம்போல இருக் கிறது. ஆனல் 'பரதன்முன் தோன்றியவன் முறையல செய்தான்' என்பதை மட்டும் அவனல் நம்பவே முடிய வில்லை! தருமம் தான் அல்லது வேறில்லை என்ற தன்மை யனல்லவா அவன்?

இந்தக் கருத்துத்தான் அனுமனின் கூற்றிலும் ஒலிக்கிறது. "மெய்யின் மெய்யன்ன நின்னுயிர் வீடினால், உய்யுமே யவன்" என்று கூறிக்கொண்டே வருகிறான் அனுமன். சொல்லின் செல்வனாகிய மாருதியாலும் போற்றப்படுகிறான் செம்மல் பரதன்.

கண்ணையிழந்து மீட்டும் பெற்றவனைப்போல மகிழ்ச்சியடைகிறான் பரதன், அண்ணன் வருகையைக் கேட்டு. அத்தகைய தருணத்திலே, அவனுடைய நிலையை ஓர் அழகான செய்யுளில் வருணிக்கிறார் கவிஞர்.

வேதியர் தமைத்தொழும் வேந்த னைத்தொழும்
தாதியர் தமைத்தொழும் தன்னைத் தான்தொழும்
ஏதுமொன் றுணர்கிலா திருக்கும் நிற்குமால்
காதலென் பதுவுமோர் கள்ளின் தோற்றமே!

என்ற வரிகளில், காதலென்னும் கள்ளை மாந்திய பரதனையே நம் கண்முன் கொண்டு நிறுத்துகிறார் கம்பர். ஆனந்த பரவசத்தில் பரதனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. "அந்தணர்களே, உங்கள் ஆசிர்வாதந்தான்" என்று அவர்கள் அடியை வணங்குகிறான். பின் சுற்றிப் பார்க்கிறான். "வேந்தர்களே, நீங்கள் நெறிதவறாது ஆட்சி புரிந்ததனால்தான்" என்று அவர்களைப் பணிகிறான். மகிழ்ச்சியின் மேலீட்டால் என்ன செய்வதென்றே தெரியவில்லை. "தாதியர்களே, நீங்கள் உங்களுடைய கடமையைச் சரிவரச் செய்தீர்கள். அதனால்தான் அண்ணன் திரும்பி வருகிறான்" என்று அவர்களைத் துதிக்கிறான். பதினான்கு வருஷம், ஆமாம் பதினான்கு நீண்ட வருஷங்கள் ஒழிந்தன! அண்ணனும் திரும்பி வருவான் என்று நினைக்கிறான். அவனுடைய மகிழ்ச்சி பிடிபடவில்லை. கள்ளின் வெறிபோல் ஏறுகிறது. கடைசியில் ஆளையே மயக்கிவிட்டது. தன் நினைவற்ற பரவச நிலையில் என்ன செய்வதென்று தெரியாமல் நிற்கிறான். மகிழ்ச்சி மீறிவிடுகிறது. தன்னையே தான் வணங்குகிறான் பரதன்! "ஆம்! நான் பாக்கியசாலியல்லவா? என்னைப்போல் புண்ணியம் செய்தவர்கள் யாரிருக்கிறார்கள்" என்று போற்றிக் கொள்ளுகிறான். கடைசியில் உணர்ச்சியின் மேலீட்டால் ஒரு கற்சிலையைப்போல நிற்கிறான்.

பரதனுடைய பரவசம், அளவுக்கடங்காத ஆனந்த வெறி, அன்பு மயக்கம் எல்லாவற்றையும் நேரில் காண் கிறோம் நாம், கவிஞரின் ஜாலக் கண்ணாடியிலே; சப்த சித்திரத்திலே. இந்தக் காட்சியைக் கண்ட பின்பும் பரத னுடைய ஒப்பற்ற குண நலத்திலே ஈடுபடாதவர்கள் யார்? உலகிலேயே, உடன்பிறப்பின் எடுத்துக் காட்டாக விளங்கும் உத்தமப் பரதனையும், இராமனையும் நினைந்து,

> செஞ்சுடரோன் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும்
> பஞ்சவரிற் பார்த்தனையும் பாராதே—விஞ்சு
> விரதமே பூண்டிர்த மேதினியை ஆண்ட
> பரதனையும் ராமனையும் பார்!

என்று அதிவீரராம பாண்டியன் புகழ்ந்து பாடியதில் வியப்பில்லை யல்லவா? பரதனுடைய இணையற்ற இராம பக்தியையும், மற்றச் சகோதரர்களிடத்துள்ள வாஞ் சையையும், தாயரிடத்துள்ள பாசத்தையும் நினைத்துப் பார்க்கும்பொழுது பரதனிடத்திலேயே நாம் ஐக்கியமாகி விடுகிறோம். இராமாயணத்திலேயே சிறந்த பாத்திரம் பரதன்தான், சகோதரர்களுக்குள்ளேயே ஒப்புயர்வற்ற வன் பரதன்தான் என்று நினைக்கவும் நாம் தயங்குவ தில்லை.

இப்படிப்பட்ட பரதன், தருமஸ்வரூபி, நீதியின் நில யம்; அவனே தன் தாயை மன்னிக்கவில்லை. "படரெலாம் படைத்தாளைப் பழிவளர்க்கும் செவிலியை" என்று கூறினன் என்பதை நினைக்கும்பொழுது, அதுவும் இராம னிடத்துள்ள பக்தியினால் என்பதைச் சிந்திக்கும்பொழுது, பரதனிடத்துள்ள மதிப்பு நமக்கு இராமனிடத்துள்ளதை விடப் பதின்மடங்கு பெருகிவிடுகிறது. நாமும் குகனை ஒட்டி, "ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ தெரிய னம்மா" என்று பாராட்டிப் பரவச மடையவேண்டி வருகிறது.

17. கம்பன் கலை வளம்

[புத்தநேரி, ரா. சுப்பிரமணியன்]

1. தெள்ளு தமிழ்மொழிப் பண்புயரக்—கம்பன்
இன்சுவைக் காவியம் செய்தளித்தான்;
உள்ளத் தெளிவுடன் கற்பவர்கள்—மனம்
உண்மைக் கலைமணம் காணுமடி.

2. தன்னை மறந்திடச் செய்யுமடி—கம்பன்
தந்த கவிதையை நாம்படித்தால்
பின்னும்பின் னும்படித் திட்டாலும்—சுவை
பெரிதும் பெருகி வழியுமடி.

3. சொல்லுக்குச் சொல்நயம் பெய்யுமடி—சுவை
தோய்ந்த தொடர்நிலைச் செய்யுளடி;
அல்லும் பகலும் படிக்குமனம்—கலை
ஆனந்த வாரியில் மூழ்குமடி.

4. முத்தமிழ் தன்னைக் கடைந்ததனில்—வந்து
முந்தும் சுவைகளைத் தேர்ந்தெடுத்துச்
சித்திர மாகநற் காப்பியத்தே—தந்து
சிந்தையில் இன்பந் திணித்தானடி.

5. மன்னவ ராட்சி நெறிமுறையைக்—குடி
மக்களின் அன்பு மலர்ச்சியினைத்
தென்மொழித் தேனில் குழைத்தழகாய்க்—கவிச்
சித்திரந் தீட்டிய தீரனடி.

6. ஒற்றுமை நட்பெழில் உண்மைகளும்—இன்ப
ஊற்றெனக் காதல் உயர்வுகளும்
கற்றவர் மாண்புயர் வீரமொடு—கற்பும்
காட்சி தருங்கம்பன் காவியமாம்.

7. தாய்மையின் அன்பொடு சேய்மனமும்—நல்ல
தம்பியர் மூத்தவர் பண்புகளும்
வாயுரை வாழ்த்தியல் நுண்பொருளும்—கம்பன்
வாரி வழங்கிய வள்ளலடி.

8. சோழநன் னாட்டருந் தோன்றலடி—எழில்
சொக்குந் திருவழுந் தூரனடி;
வாழ்வினி லேதமிழ் மன்னரொடு—கொடை
வள்ளலும் போற்றிய மாண்பனடி.

9. கம்பன் திருவிழா நாம்நடத்தி - அவன்
காவியத் தின்பம் படித்துணர்வோம்;
கம்பரா மாயணக் காவியத்தைத் - தங்கக்
கட்டிட மிட்டினிக் காப்போமடி!

முற்றும்

